# TNPSC தேர்வுப்பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் டிசம்பர் - 2017

www.tnpscthervupettagam.com













SHANKAR IAS ACADEMY™
Plot No.1742, Ist Floor, 18th Main Road, Anna Nagar, Chennai – 600 040.
Phone : 044-26216435, 64597222, 4353 3445, Mobile : 94441 66435
www.shankariasacademy.com

# பொருளடக்கம்

TNPSC துளிகள்....................................................3

தமிழ்நாடு செய்திகள்....................................................7

தேசியச் செய்திகள்....................................................9

சர்வதேசச் செய்திகள் ....................................................35

பொருளாதாரச் செய்திகள்....................................................53

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செய்திகள் ....................................................59

சுற்றுச்சூழல் செய்திகள்....................................................66

மாநிலச் செய்திகள் ....................................................72

பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்....................................................82

விளையாட்டுச் செய்திகள் ....................................................94

முக்கிய தினங்கள் ....................................................100

இதரச் செய்திகள் ....................................................108

# TNPSC துளிகள்

- ஏர் இந்தியா நிறுவனத்தின் புதிய தலைவராக மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரி பிரதீப் சிங் கரோலா நியமிக்கப்பட்டுள்ளார்.
- வங்கதேசத்தின் வடக்கில் அமைந்துள்ள இஷ்வார்டி பகுதியில் நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட ரோப்பூர் அணுமின் நிலையத்தின் கட்டுமானப் பணியை வங்கதேச அரசு துவங்கியுள்ளது. ரஷ்யாவின் அணுசக்தி நிறுவனமான ரோசாடம் (Rosatom) நிறுவனத்தின் நிதி மற்றும் தொழிற்நுட்ப உதவியோடு வங்கதேச அணு ஆற்றல் கழகத்தால் இந்த பெரும் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- கேம்பிரிட்ஜ் அகராதியின் 2017-ஆம் ஆண்டிற்கான வார்த்தையாக (word of the year) ''Populism'' என்ற வார்த்தை அறிவிக்கப்பட்டுள்ளது. தேவைகளை அறிந்து அதனை அளித்து அதன் மூலம் சாதாரண மக்களின் ஆதரவுகளை பெறுவதை நோக்கமாகக் கொண்ட செயல்பாடுகள் மற்றும் அரசியல் ஆலோசனைகளே ஜனரஞ்சகம் (Populism) எனப்படும்.
- இன்போசிஸ் நிறுவனத்தின் புதிய தலைமை செயல் அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநராக சலில் S. பரேக் நியமிக்கப்பட்டுள்ளார்.
- நாட்டைப் பொருளாதார சிக்கலிருந்து மீட்கவும், தன் நாட்டின் மீதான அமெரிக்க தலைமையிலான பொருளாதார தடையை எதிர்க்கும் விதமாகவும் வெனிசூலா அதிபர் நிகோலஸ் மதுரோ 'பெட்ரோ' (Petro) எனும் மெய் நிகர் பணத்தை (Virtual Currency) உருவாக்குவதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.
- ஐ. நா-வின் சுற்றுச்சூழலுக்கான உலகளாவிய உயிர்மூச்சு (Breathe life) பிரச்சாரத்தின் இலக்குகளை முன்னெடுத்து காட்டவும், சுற்றுச்சூழல் நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கு உதவுவதற்கும் ஐ.நா. சுற்றுச்சூழலின் தூய காற்றுக்கான புரவலராக [UN Environment's 'Patron for Clean Air'] Paytm நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரியான விஜய் சேகர் ஷர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.
- உத்திர பிரதேச மாநிலத்தின் ஷாம்லி மாவட்டம் தேசிய தலைநகர் பகுதியுடன் [NCR – National Capital Region] இணைக்கப்பட்டுள்ளது. NCR-ல் இணைக்கப்படும் 23-வது மாவட்டம் இதுவாகும். டெல்லி NCR ஆனது ஹரியானாவின் 13 மாவட்டங்களையும், எட்டு உத்திரப்பிரதேச மாவட்டங்களையும், இராஜஸ்தானின் இரு மாவட்டங்களையும் உள்ளடக்கியப் பகுதியாகும். மாநிலங்களுக்கிடையேயான பிராந்திய திட்டப்பகுதியாக 1985-ல் NCR அமைக்கப்பட்டது.
- Kwaussie – எனும் வார்த்தை ஆஸ்திரேலியாவின் ஆண்டிற்கான வார்த்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியனாகவும், நியூஸிலாந்தைச் சேர்ந்தவராகவும் உள்ள நபரை இந்த வார்த்தை குறிக்கின்றது. இரட்டைக் குடியுரிமை ஆஸ்திரேலிய அரசியலில் பெரும் பிரச்சினையாக உள்ள இவ்வேளையில் இவ்வார்த்தை பெரிதும் பயன்பாட்டில் உள்ளது.
- மிகவும் கடுமையான 'ஒக்கி' சுழற் புயலால் பாதிப்படைந்த தென்கிழக்கு அரபிக்கடல் பகுதி, லட்சத்தீவுகள் மற்றும் மினிக்காய் தீவுகளில் மனிதாபிமான உதவிகள் மற்றும் பேரிடர் மீட்பு நடவடிக்கைகளை (Humanitarian Assistance and Disaster Relief-HADR) மேற்கொள்ளவும், பொருள் உதவிகளையும், தேடல் மற்றும் மீட்பு செயல்பாடுகளை மேற்கொள்ளவும் "ஆப்ரேஷன் சஹாயம்"

எனும் பயிற்சியை இந்திய கப்பற்படை மேற்கொண்டுள்ளது.

- 'அப்புசாமி, சீதாப்பாட்டி' என்ற சித்திர கதாபாத்திரங்களை உருவாக்கிய எழுத்தாளர் பாக்கியம் ராமசாமி மறைந்தார். பாக்கியம் ராமசாமியின் இயற்பெயர் ஜ.ரா. சுந்தரேசன் (ஜலகண்டபுரம் ராமசாமி சுந்தரேசன்) என்பதாகும். இவர் 40 ஆண்டுகாலம் 'குமுதம்' தமிழ் வார இதழில் பணியாற்றி 1990-இல் இணை ஆசிரியராக இருந்து ஒய்வு பெற்றவர்.
- ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் தன்பாலின திருமண மசோதா நிறைவேற்றப்பட்டது. தன் பாலின திருமணத்தை அங்கீகரித்த நாடுகளில் ஆஸ்திரேலியா 26வது நாடாகும். இந்த சட்ட முன்வரைவினை லிபரல் உறுப்பினர் தீன் ஸ்மித் உருவாக்கினார்.
- 1977 ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணியாளர் பிரிவினைச் சேர்ந்த ஒய்வு பெற்ற எம். ஷீலா ப்ரியா தமிழகத்தின் தலைமை தகவல் ஆணையராக பொறுப்பேற்றுள்ளார்.
- பழைய பல்லாவரம் பகுதியில் களிமண்ணால் செய்யப்பட்ட 6 அடி உயரம் உடைய புதை முதுமக்கள் தாழி மற்றும் பானை ஓடுகளின் துண்டுகள் அகழாய்வில் கிடைத்துள்ளன. இவை 2000 வருடங்களுக்கு முந்தைய காலத்திற்குட்பட்ட தொல் பொருட்கள் என மதிப்பிடப்பட்டுள்ளன. முதுமக்கள் தாழியைப் பயன்படுத்தி இறந்த மக்களை பெரும் மட்பானைகளில் புதைப்பது தமிழகத்தின் பண்டைய பழக்க வழக்கமாகும்.
- உலகின் மிகப்பெரிய தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை (Free Trade Agreement) உருவாக்குவதற்கான தடையற்ற வர்த்தக உடன்படிக்கை மீதான பேச்சுவார்த்தையை ஐரோப்பிய யூனியனும், ஜப்பானும் இறுதி செய்துள்ளன. இவ்வொப்பந்தத்தின் மூலம் ஐரோப்பிய யூனியன் ஜப்பானிய கார்களின் மேல் 10% வரிகளை குறைக்கும். மேலும் பொதுவாக அனைத்து கார் பாகங்களிலும் 3% வரியிடப்படும்.
- கால இடைவெளியற்ற உடனடி முத்தலாக்கை தண்டனைக்குரிய மற்றும் பிணையில் வெளிவர முடியாத குற்றமாக உருவாக்க மத்திய அரசு கொண்டு வந்துள்ள வரைவு மசோதாவை நாட்டில் முதல் மாநிலமாக உத்திரப்பிரதேச மாநிலம் ஆமோதித்துள்ளது. மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையிலான அமைச்சர்களிடையேயான குழு இந்த வரைவு மசோதாவை தயார் செய்துள்ளது.
- காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரான ராகுல்காந்தி போட்டியின்றி ஒரு மனதாக காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராகத் தேர்வு செய்யப்பட்டு உள்ளார். இவர் சுதந்திரத்திற்கு பின்னான காங்கிரஸின் 16 வது தலைவராவார். மேலும் காங்கிரஸ் கட்சியின் தலைவராகும் நேரு – காந்தி குடும்பத்தின் 6-வது நபராவார்.2013-ஆம் ஆண்டிலிருந்து ராகுல் காந்தி காங்கிரஸின் துணைத் தலைவராக பணிபுரிந்து வருகிறார்.
- இந்திய தொலைக்காட்சி தரமதிப்பீட்டு நிறுவனமான இந்திய ஒளிபரப்பு பார்வையாளர் ஆராய்ச்சி கவுன்சிலின் (Barc – Broadcast Audience Research Council India) புதிய தலைவராக நகுல் சோப்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.
- 35 ஆண்டுகால தடையை நீக்கி, 2018-ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே திரையரங்குகளை திறப்பதற்கு சவூதி அரேபியா அரசு திட்டமிட்டு வருகின்றது.
- மாநிலம் முழுவதும் பாலியல் தொல்லைகள் மற்றும் குற்றங்களை தடுப்பதற்காக "பாதுகாப்பான நகர கண்காணிப்பு "அமைப்பை பீகார் அரசு வெளியிட்டுள்ளது.
- 2014-ஆம் ஆண்டு மக்களவை தேர்தல் மற்றும் அதன் பிறகு தற்போது வரை நடந்த தேர்தல்களில் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற மக்கள் பிரதிநிதிகள் மீது நிலுவையிலுள்ள 1518 கிரிமினல் வழக்குகளை விசாரிக்க 12 சிறப்பு விரைவு நீதிமன்றங்களை அமைக்க மத்திய அரசு திட்டம் வகுத்துள்ளது.
- ஜம்மு மற்றும் காஷ்மீர் வங்கியானது மாநிலத்தில் உள்ள ஊடகச் சகோதரர்களுக்காக "ஜம்மு-காஷ்மீர் வங்கி சஹாத்ஃபட் நிதித் திட்டம் (J-K Bank sahafat finance scheme) "என்ற நிதித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் மாநிலத்தில் உள்ள பத்திரிக்கையாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் ஊழியர்கள் 3 இலட்சம் வரை கடனுதவி பெற்றுக் கொள்ள முடியும்.

   - நிதி அடிப்படையிலான கடன் விகிதத்துடன் 3.4 சதவிகிதத்தையும் சேர்த்து பெறப்படும் வட்டி விகிதத்தில் இந்தக் கடனைப் பெற்றுக் கொள்ளலாம். இதை 60 மாதத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். இதில் முன் பணம் செலுத்துவதற்கான கட்டணங்கள் ஏதுமில்லை.

- வெளியிலிருந்து வந்து இந்திய சுற்றுசூழலில் ஊடுருவி இருக்கும் விலங்குகளின் பட்டியலை (முதன் முறையாக) இந்திய விலங்கியல் ஆய்வுத்துறை வெளியிட்டுள்ளது. அதன்படி இந்திய விலங்கினங்களுக்கு அச்சுறுத்தல் அளிக்கும் விலங்குகளாக 157 விலங்கினங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கையில், ஊடுருவியுள்ள நுண்ணுயிர் இனங்கள் கணக்கிடப்படவில்லை.
- பிலிப்பைன்ஸ் நாட்டின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள பிலிரான் பகுதியில் கை-டாக் என்ற புயல் கடுமையாக தாக்கியது. பெரும் சேதங்களை ஏற்படுத்திய இப்புயலின்போது அந்தப் பகுதியில் 80 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசியது.
- ஏ. என்.ஐ டெக்னாலஜிஸால் இயக்கப்படும் ஓலா நிறுவனமானது நிகழ்நிலை உணவு விநியோக தொடக்க நிறுவனமான ஃபுட் பாண்டா இந்தியா நிறுவனத்தை அதன் தாய் நிறுவனமான ஜெர்மனியைச் சார்ந்த டெலிவரி ஹீரோ குரூப்பிடமிருந்து அனைத்து பங்கு ஒப்பந்தத்தின் மூலம் அறிவிக்கப்படாத தொகைக்கு கையகப்படுத்தியது. மேலும் ஃபுட்பாண்டா நிறுவனத்தின் இந்திய வணிகத்தில் 200 மில்லியன் டாலர்களை அது உட்செலுத்த உள்ளது.
- வாகன தொழிலில் திறன் இந்தியா இலக்கை (Skill India Mission) ஆதரிக்கும் பொருட்டு மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு அமைச்சகமும் மாருதி சுசூகி இந்தியா லிட் நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
   - இந்த தளர் தன்மை கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது திறன் இந்தியா இலக்கின் கீழ் வாகனங்கள் மற்றும் உற்பத்தி தொழில் சார்ந்த வர்த்தகங்களில் அதிக வேலை வாய்ப்பினை வழங்கும் நோக்கம் கொண்டதாகும்.
- உணவுப் பாதுகாப்பு மற்றும் பிற பிரச்சனைகளுக்கான ஆதரவை திரட்டுவதற்கு 2018ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் உலக வர்த்தக அமைப்பின் (WTO) உறுப்பு நாடுகளின் சந்திப்பை இந்தியா நடத்தும் என்று வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் சுரேஷ் பிரபு அறிவித்தார்.
- சத்திஸ்கர் மாநிலத்தின் பாலாம்பூர் மாவட்டத்தில் உள்ள பழங்குடியின கிராமமான ஜோகாபாத் நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து தற்போது தான் முதன்முறையாக மின் இணைப்பை பெற்றுள்ளது.
- தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தலைவராக இருந்த நீதிபதி சுவதந்தர் குமார் ஓய்வு பெற்றதை அடுத்து இத்தீர்ப்பாயத்தின் தலைவராக (பொறுப்பு) நீதிபதி உமேஷ் தட்டாட்ரியா நியமிக்கப்பட்டுள்ளார். தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் புதிய தலைவர் நியமிக்கப்படும் வரை உமேஷ் தட்டாட்ரியா இப்பதவியில் இருப்பார்.
- 2022ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்த இங்கிலாந்தின் பர்மிங்காம் நகரம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரை அடுத்து இங்கிலாந்தின் ஓர் நகரில் மிகப்பெரும் விளையாட்டுப் போட்டி நடத்தப்படுவது இதுவே முதன்முறையாகும்.
- அதிபர் பதவிக்கான அதிகபட்ச வயது வரம்பினை நீக்குவதற்கு உகாண்டா நாட்டின் மக்கள் பிரதிநிதிகள் பெருவாரியான அளவில் வாக்களித்துள்ளதால் தற்போதைய அதிபரான யோவேரி முசெவேனி 6-வது முறையாக அதிபர் பதவியை கைக் கொள்வதற்கான வழி ஏற்பட்டுள்ளது. 75 வயதுக்கு மேற்பட்டோர் அதிபர் பதவிக்கு போட்டியிட இயலாது என்ற பழைய சட்டம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் எதிர்வரும் 2021ஆம் ஆண்டின் அதிபர் தேர்தலில் போட்டியிட முசெவேனி தகுதி பெற்றுள்ளார்.
- தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார குழுவின் (National Assessment and Accreditation Council) இயக்குநராக பணியாற்றி வரும் பேராசிரியர் திரேந்திர பால் சிங் பல்கலைக்கழக மானியக்

குழுவின் (University Grants Commissions) தலைவராக அடுத்த ஐந்தாண்டு கால பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவியில் முன்பிருந்த பேராசிரியர் வேத பிரகாஷ் ஓய்வு பெற்றதை அடுத்து 2017ன் ஏப்ரல் மாதத்திலிருந்து இப்பதவி நிரப்பப்படாமல் இருந்தது.

- ❖ இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினரைத் துணை வகைப்படுத்துதல் தொடர்பாக ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் செயற்காலத்தை 12 வார காலங்கள் நீட்டித்து 2018 ஏப்ரல் 2 வரை செயல்பட மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ❖ தற்போது மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் கூடுதல் செயலாளராக பணியாற்றி வரும் இந்திய வெளியுறவுத்துறை பணி அதிகாரியான M.சுப்பாராயுடு பெரு குடியரசுக்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ மறைந்த பத்திரிக்கையாளரான கௌரி லங்கேஷ் அவர்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளை தொகுத்து "த வே ஐ ஸி இட்; எ கௌரி லங்கேஷ் ரீடர் "(The way I see it A Gauri Lankesh Reader) எனும் புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது. எழுத்தாளர் மற்றும் சமூகவியலாளரான சந்தன் கௌடா தொகுத்தமைக்க மும்பை அச்சக சங்கம் இதனை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் விக்கெட் கீப்பரும், பீகார் மற்றும் மேற்கு வங்க மாநிலத்திற்காக விளையாடியவருமான சபா கரிம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (பிசிசிஐ) கிரிக்கெட் செயல்பாடுகளுக்கான புதிய பொது மேலாளராக (ஜெனரல் மேனேஜர்) நியமிக்கப்பட்டுள்ளார். பிசிசிஐ அமைப்பின் தலைமை செயல் அதிகாரியான ராகுல் ஜோஹ்ரியிடம் இவர் நேரடியாக அறிக்கை சமர்ப்பிப்பார். கடந்த செப்டம்பரில் இப்பதவியில் இருந்த M.V.ஸ்ரீதர் ராஜினாமா செய்ததை அடுத்து இப்பதவி இதுவரை நிரப்பப்படாமல் இருந்தது.
- ❖ பெரும் எண்ணிக்கையிலான மனித இழப்புகளையும், கடலோரப் பகுதிகளில் பேரழிவுகளையும் உண்டாக்கிய 2004-ஆம் ஆண்டின் டிசம்பர் மாத சுனாமி ஆழிப் பேரலைகளின் 13வது வருட அனுசரிப்பு தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது.
- ❖ 2016-2017 ஆம் ஆண்டு கால கட்டத்தில் அதிகப் படியான ஏற்றுமதி வளர்ச்சியை கொண்டுள்ள முதல் மாநிலமாக (Champion State) ஒடிஸா மாநிலத்தை மத்திய அரசு அங்கீகரித்துள்ளது. அனைத்து மாநிலங்களுள் ஒடிஸா மாநிலம் அதிகபட்சமாக 114% சதவீத சரக்கு வியாபாரத்தின் ஏற்றுமதி வளர்ச்சியை கொண்டுள்ளது.
- ❖ தற்போது மத்திய ரிசர்வ் காவற் படையின் (CRPF-Central Reserve Police Force) அதிகாரிகள் பிரிவில் பணிபுரிந்து வரும் மூத்த ஐ.பி.எஸ் அதிகாரியான அப்ஹே (Abhay)-வை தேசிய போதைப் பொருட்கள் தடுப்பு ஆணையத்தின் (Narcotics Control Bureau) புதிய இயக்குநர் ஜெனரலாக நியமனங்களுக்கான அமைச்சரவை குழு நியமித்துள்ளது. 2017ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் இந்த ஆணையத்தின் தலைவராக இருந்த R.R.பட்நாகர் CRPF-ன் இயக்குநர் ஜெனரலாக நியமிக்கப்பட்டதிலிருந்து இதுவரை இப்பதவி நிரப்பப்படாமல் இருந்தது.
- ❖ ஜிம்பாவேயில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி புரிந்து வந்த இராபர்ட் முகாபே அதிபர் பதவியிலிருந்து விலகியதை அடுத்து ஜிம்பாவேயின் புதிய அதிபராக பதவியேற்றுள்ள எம்மர்சன் நங்கக்வா தனக்காக இரு துணை அதிபர் பதவிகளில் நாட்டின் முன்னாள் இராணுவ தளபதியான கான்ஸ்டான்டினோ சிவெங்காவையும், முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சரான கெம்போ மொஹாதியையும் நியமித்துள்ளார்.
- ❖ தெலுங்கானா அரசு வருகின்ற ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து தன்னுடைய விவசாய சமூகத்திற்கு 24 மணி நேர இலவச மின் வசதி அளிப்பை வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- ❖ சீனாவின் மிகப்பெரிய சமூக ஊடகமான We Chat சீனாவின் அதிகாரப்பூர்வ மின்னணு தனி நபர் அடையாள அமைப்பாக (Electronic Personal Information System) உருவெடுக்கவுள்ளது. சீன அரசால் வழங்கப்படும் வழக்கமான அடையாள அட்டைகளைப் போல் இனி இந்த சமூக ஊடகம் செயல்படும்.
- ❖ அஸாம் மாநில அரசு தன்னுடைய 10 AM முதல் 5 PM வரையிலான அலுவலக வேலை நேரத்தை 9.30 AM to 5 PM என மாற்றியுள்ளது. இப்புதிய நேர அட்டவணை வரவிருக்கும் 2018-ன் ஜனவரி முதல்

தேதியிலிருந்து அமலுக்கு வர உள்ளது.

- சானிட்டரி நாப்கின்கள் இலவசமாக மாநிலம் முழுவதுமுள்ள மருத்துவமனைகளிலும், மகளிர் சிறைச் சாலைகளிலும் கிடைப்பதை உறுதி செய்ய தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓர் சுய உதவிக்குழு "தமிழ்நாடு சானிட்டர் நாப்கின் உற்பத்தியாளர் கூட்டமைப்பை " உருவாக்கியுள்ளது.
- ஆப்பிரிக்க கண்டத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கென ஏற்படுத்தப்பட்டு ஆப்பிரிக்கா முழுவதும் பன்னிரு வனஉயிர் வாழ் பகுதிகளை பாதுகாத்து நிர்வகித்து வரும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பான "ஆப்பிரிக்கா பூங்கா" (African Park) – வின் தலைவராக இங்கிலாந்து இளவரசர் ஹாரி நியமிக்கப்பட்டுள்ளார்.
- 1990 ஆம் ஆண்டின் ஹரியானா பணிப்பிரிவைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ் அதிகாரியான சுமித்ரா மிஸ்ரா பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவில் ஐந்து ஆண்டு பதவிக்காலத்திற்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

### புதிய நெல் ரகம் - MGR 100

- தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு கொண்டாட்டத்தோடு ஒத்திசையும் வகையில் அவரின் நினைவாக தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தால் கண்டுபிடிக்கப்பட்ட "MGR 100" எனும் புதிய நெல் ரகத்தை தமிழக முதல்வர் தஞ்சாவூரில் வெளியிட்டார்.
- CO(R)50 மற்றும் BPT 5204 எனும் இரு இரகங்களின் கலப்பினால் (Crossing) உருவாக்கப்பட்ட CO-52 எனும் நெற் இரகமே MGR 100 என பெயரிடப்பட்டுள்ளது.
- இந்த இரகமானது அதிக உற்பத்தியை தரவல்லது. சிறந்த தானிய தரத்தையும், நோய்கள் மற்றும் பூச்சிகளின் தாக்குதலுக்கு எதிர்ப்புத் திறனும் கொண்டது.
- CO-52 இரகமானது MGR 100 என பெயரிடப்பட்டு வெளியிடப்பட்டு இருந்தாலும் மத்திய விதைகள் துணைக் குழுவின் இரக வெளியீடுகள் மற்றும் அறிவிப்பிற்கான அரசிதழில் வெளியிட TNAU எதிர்நோக்கி வருகின்றது.
- 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகமானது (TNAU – Tamil Nadu Agriculture University) MGR (COR-H1) எனும் இந்தியாவின் முதல் கலப்பு (ஹைபிரிட்) நெல் இரகத்தை வெளியிட்டது.

### இரு பிரப்ஹாரி அலுவலர்கள்

- விருதுநகர் மற்றும் இராமநாதபுரத்திற்கான "பிரப்ஹாரி" அலுவலர்களாக தமிழக பணிப்பிரிவைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணியாளர்களான பிரவின் குமார் மற்றும் S. கோபாலகிருஷ்ணன் ஆகியோரை மத்திய அரசு நியமித்துள்ளது.
- மத்திய அரசானது தமிழகத்தின் பின் தங்கிய மாவட்டங்களாக இராமநாதபுரம் மற்றும் விருதுநகரை அறிவித்துள்ளது.
- வறுமை, சுகாதாரம், கல்வி, உள்கட்டமைப்பு வசதி ஆகிய நான்கு அளவுருக்களின் அடிப்படையில் இந்த அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மாவட்டங்களின் விரைவான மாற்றத்தை சாதிப்பதில் உள்ள மத்திய மற்றும் மாநில அரசுகளின் முயற்சிகளை இந்த அலுவலர்கள் ஒருங்கிணைப்பர்.

## மலரியல் மையம்


- ❖ தமிழ்நாட்டின் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் தளி பகுதியில் இந்தியாவும் இஸ்ரேலும் கூட்டிணைந்து சிறப்பு மலரியல் மையத்தை (Centre for Excellence in Floriculture) அமைக்க உள்ளது.
- ❖ இஸ்ரேல் ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டில் அமைக்கப்படும் முதல் வேளாண் – தொழிற்நுட்ப மேம்பாட்டு மையம் இதுவாகும்.
- ❖ மலரியலுக்கான (Floriculture) இம்மையம் தளி பகுதியிலும், இதே போலான காய்கறிகளுக்கான மையம் ஒன்று தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டதிலும் அமைக்கப்பட உள்ளது.
- ❖ மஸ்ஹாவ் எனும் சர்வதேச மேம்பாட்டு ஒத்துழைப்புக்கான இஸ்ரேலிய நிறுவனம் மற்றும் இந்தியாவின் மத்திய வேளாண் அமைச்சகத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட தோட்டக்கலைக் மேம்பாட்டு திட்டம் ஆகியவற்றுக்கு இடையேயான மூன்று வருட இந்தோ-இஸ்ரேல் வேளாண் ஒத்துழைப்பு திட்டத்தின் (Mission for Integrated Development Of Horticulture) ஒரு பகுதியாக இம்மையங்கள் அமைக்கப்படுகின்றன.

## ராமநாதபுரத்தில் சூரிய மின்சக்திப் பூங்கா

- ❖ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (TANGEDCO) இராமநாதபுரம் மாவட்டத்தில் 500 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின்சக்திப் பூங்காவினை அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ நாட்டில் அரசுக்கு சொந்தமான மின்விநியோக நிறுவனம் ஆரம்பிக்கும் முதல் சூரியமின்சக்திப் பூங்கா இதுவே ஆகும்.
- ❖ இந்த திட்டமிடப்பட்டுள்ள சூரியமின்சக்திப் பூங்கா இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கடற்கரை நகரமான கடலாடியில் உள்ள நரிப்பையூர் கிராமத்தில் அமைக்கப்படவுள்ளது.
- ❖ தமிழ்நாட்டில் சூரியக் கதிர்வீச்சு அதிகம் உள்ள மாவட்டங்கள் ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் தூத்துக்குடி ஆகியவையாகும்.
- ❖ தமிழ்நாடு ஆற்றல் மேம்பாட்டு நிறுவனத்தை (Tamil Nadu Energy Development Agency - TEDA) பொறுத்த வரை இராமநாதபுரம் 5.67 என்ற அளவிற்கு உலகளாவிய கிடைமட்ட கதிரியக்கம் (Global Horizontal Irradiance - GHI) கொண்டுள்ளது. இதனால் உற்பத்தித் திறன் (Plant Load Factor - PLF) அதிகமாக இருக்கும்.

## அந்திரி நீவா சுஜாலா ஸ்ரவந்தி திட்டம்

- ❖ ஆந்திரத்தின் கர்நூல் மாவட்டத்தில் உற்பத்தியாகும் அந்திரி நதியை அனந்தபூர், கடப்பா ஆகிய மாவட்டங்களின் வழியாக சித்தூர் மாவட்டத்தில் பாயும் நீவா நதியோடு இணைப்பதுதான் "அந்திரி நீவா ' கால்வாய் திட்டம்.
- ❖ ஆந்திர முதல்வர் செயல்படுத்தி வரும் 'அந்திரி நீவா' என்ற நதிநீர் இணைப்புக் கால்வாய் திட்டத்தால் தமிழக எல்லையோர வனப் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயரும் வாய்ப்புள்ளதாக தெரிய வந்துள்ளது.
- ❖ இத்திட்டம் என்.டி. ராமாராவின் கனவு திட்டமாகும்.
- ❖ இதன் மூலம் ஆந்திர கவுண்டன்யா வனவிலங்குகள் சரணாலயக் காடுகளும், அதையொட்டியுள்ள தமிழகத்தின் எல்லையில் வேலூர் மாவட்டத்தின் பேர்ணாம்பட்டு, ஆம்பூர், திருப்பத்தூர் வனச்சரக காப்புக் காடுகளும் அந்திரி நீவா கால்வாயால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து காடுகள் மேலும் வளமாக மாறும். மேலும், தமிழக வனப்பகுதி எல்லையோரம் உள்ள விவசாய நிலங்களிலும் வளம் கொழிக்க வாய்ப்புகள் உள்ளன.




# தேசியச் செய்திகள்

### HEFA – உயர் கல்வி நிறுவனங்கள்

❖ புதிதாக அமைக்கப்பட்டுள்ள உயர்கல்வி நிறுவனங்களுக்கான நிதி நல்கும் நிறுவனமானது (HEFA – Higher Education Financial Agency) உலக தரத்திலான ஆராய்ச்சி மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை ஊக்குவிக்க 6 இந்திய கல்வி நிறுவனங்களுக்கு 2000 கோடி அளவிலான வட்டியில்லா கடனை வழங்கிட ஒப்புதல் வழங்கியுள்ளது.

### *HEFA*

❖ HEFA ஓர் வங்கியல்லாத நிதி நிறுவனமாகும் (NBFC – Non Banking Financial Company).

❖ இது நாட்டின் முன்னணி அரசு கல்வி நிறுவனங்களில் உலக தரத்திலான உள்கட்டமைப்பு மற்றும் ஆராய்ச்சி வசதிகளை ஏற்படுத்துவதற்கு நிதி அளித்து ஊக்குவிக்கும் ஓர் நிறுவனமாகும்.

❖ இந்திய நிறுவனங்கள் சட்டம் 2013-ன் பிரிவு 8-ன் கீழ் இது பதிவு செய்யப்பட்டுள்ளது.

❖ இது மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் கனரா வங்கி ஆகிய இரண்டிற்கு இடையேயான கூட்டிணைவால் உண்டாக்கப்பட்ட கூட்டு நிறுவனமாகும் (Joint Venture).

❖ புத்தாக்கங்களையும், ஆராய்ச்சிகளையும் அரசு நடத்தும் உயர் கல்வி நிறுவனங்களில் மேம்படுத்துவதற்கு பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கார்ப்பரேட்டுகளின் பெருநிறுவன சமுதாய பொறுப்புணர்வு (CSR – Corporate Social Responsibility) மற்றும் சந்தைப்பங்குகள் போன்றவற்றின் மூலம் நிதிகளை திரட்டி கடன் அளிக்கும்.

❖ இது 10 வருட காலத்திற்காக உயர் கல்வி நிறுவனங்களுக்கு நிதி அளிக்கும்.

❖ நிறுவனத்தின் தேவைக்கு ஏற்ப சந்தையில் பங்குகள் மூலம் நிதி திரட்டுவதற்கு வங்கியல்லாத நிதி நிறுவனமாக HEFA செயல்பட RBI ஆனது RBI சட்டத்தின் கீழ் HEFA-வுக்கு உரிமம் அளித்துள்ளது.

## கடற்படை ஒப்பந்தம்

- ❖ பிரச்சனைக்குரிய தென் சீனக் கடல் பகுதியில் அமைந்துள்ள சிங்கப்பூரின் சங்கி கடற்படை தளத்தில் எரிபொருள் நிரப்புதல் போன்றவை உள்ளடங்கிய தளவாட ஆதரவுகளை இந்திய கடற்படை கப்பல்களுக்கு அளிக்கும் கடற்படை ஒத்துழைப்பிற்கான இரு நாட்டு ஒப்பந்தத்தில் இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.
- ❖ மலாக்கா நீரிணைக்கு கிழக்கில் அமைந்துள்ள நாட்டுடன் இந்திய கடற்படை தளவாட ஒப்பந்தம் கொள்வது இதுவே முதல் முறையாகும்.
- ❖ இது இந்தியாவின் கிழக்கு நோக்கிய செயல்திட்டத்திற்கு (Act East Policy) உந்துதலளிக்கும். மேலும் இந்தியப் பெருங்கடலில் பாதுகாப்பு, நிலைத்தன்மை, பிராந்திய அமைதி மற்றும் கடற்வழிப்பயண சுதந்திரம் போன்றவற்றிற்கான இந்தியாவின் பங்கை வலுப்படுத்தும்.
- ❖ தில்லியில் நடைபெற்ற இந்தியா மற்றும் சிங்கப்பூரின் பாதுகாப்பு அமைச்சர்களின் இரண்டாவது பேச்சுவார்த்தையின் போது இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

## FSSAI வழிகாட்டுதல்கள்

- ❖ இந்தியாவின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையமானது (FSSAI – Food Safety and Security Authority of India) சந்தைகளில் உள்ள பாதுகாப்பு அற்றவை என கண்டறியப்படும் உணவுப் பொருட்களை திரும்ப பெறுவதற்கான செயல்முறைகள் தொடர்பான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- ❖ FSSAI இத்தகு உணவுப் பொருட்கள் திரும்ப பெறுவதற்கான பொறுப்புகளை விநியோகஸ்தர்கள் மற்றும் தயாரிப்பாளர்களுக்கே வழங்கியுள்ளது.
- ❖ FSSAI ஆனது பாதுகாப்பற்ற உணவுப் பொருட்களை சந்தைகளிலிருந்து திரும்ப பெறுதலை கண்காணிக்கும். மேலும் அத்தகு நடவடிக்கைகள் மூலம் உணவு நிறுவனங்களின் செயல்பாட்டை மதிப்பிடும்.
- ❖ மேலும் திரும்பி பெறப்பட்ட உணவுப் பொருட்களின் அழிப்பையும் FSSAI உறுதி செய்யும்.

## சுவார்ன் திட்டம்

- ❖ மத்திய இரயில்வே அமைச்சகமானது ராஜதாணி, சதாப்தி உள்ளிட்ட இந்தியாவின் உயர்தர இரயில் வண்டிகளை புதுப்பிக்க சுவார்ன் (Project Swarn) எனும் திட்டத்தை தொடங்கியுள்ளது.
- ❖ இத்திட்டத்தின் கீழ் காலந்தவறாமை, தூய்மை, பாதுகாப்பு, பொழுதுபோக்கு, தூய கழிவறைகள், ஊழியர் நடத்தை, தூய்மை பராமரிப்பு, ரயில் பெட்டி உட்பொருட்கள் போன்ற பத்து விஷயங்களில் கவனம் செலுத்தப்படும்.
- ❖ இதன் வழியிலான புதுப்பிக்கப்பட்ட முதல் ராஜதானி எக்ஸ்பிரஸ் சியால்தா மற்றும் டெல்லிக்கு இடையே அண்மையில் தொடங்கப்பட்டது.

## இந்திய உயர் இரத்த அழுத்த மேலாண்மை திட்டம்

- ❖ இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (Indian Council of Medical Research) ,மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை மற்றும் உலக சுகாதார நிறுவனம் ஆகியவற்றின் கூட்டிணைவுத் திட்டமே இந்திய உயர் இரத்த அழுத்த மேலாண்மை திட்டமாகும். (India Hyper Tension Management Initiative).
- ❖ இந்தியாவில் இறப்புகளுக்கு முன்னணி காரணமாக உள்ள இருதய கோளாறுகளினால் உண்டாகும்

நோயுற்ற தன்மை (morbidity) மற்றும் இறப்புகளை (mortality) குறைப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

- ❖ மத்திய சுகாதார அமைச்சகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 மாவட்டங்களில் படிப்படியாக முதல் இரண்டு வருடத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- ❖ இத்திட்டம் உலக சுகாதார நிறுவனத்தின் உலகளாவிய இருதய (Global Hearts initiative) திட்டம், மற்றும் தேசிய மருத்துவ வழிகாட்டுதல் போன்றவற்றோடு ஒத்திசைந்து நடப்பு சுகாதார கட்டமைப்பின் கீழ் முதன்மை சுகாதார நிலையங்கள் அளவில் உயர் இரத்த அழுத்த நோயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதலை கண்காணிக்கவும், உயர் இரத்த அழுத்த மேலாண்மையை வலுப்படுத்தவும் நோக்கம் கொண்டது.
- ❖ உயர் இரத்த அழுத்தங்களை கட்டுப்படுத்துவதை அதிகரித்தல் போன்றவற்றின் மூலம் உயர் இரத்த அழுத்தத்திற்கான தீவிரப்படுத்தப்பட்ட சிகிச்சைகள் மற்றும் செயல் தன்மையுடைய பரிசோதனைகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும்.
- ❖ இத்திட்டம் புற்றுநோய், நீரிழிவு, இருதய நோய்கள் மற்றும் பக்கவாதம் ஆகியவற்றுக்கான தேசிய கட்டுப்பாட்டுத் திட்டத்தின் (National Program for Control of Cancer, Diabetes, Cardiovascular Diseases and Stroke-NPCDCS) இருதய நோய் கட்டுப்பாட்டுக் காரணிகளை வலுப்படுத்துவற்கான நோக்கம் உடையது.

## மேம்படுத்தப்பட்ட இணையவாயில்

- ❖ மேம்படுத்தப்பட்ட மத்திய ஓய்வூதிய கணக்கீட்டு அலவலக (Central Pension Accounting Office-CPAO) இணையதளத்தை பொது கணக்கு கட்டுப்பாட்டு அலுவலகம் (Controller General of Accounts - CGA) வெளியிட்டுள்ளது.
- ❖ CPAO-வின் தேசிய தகவல் மையத்தால் (NIC- National Informatics Centre) இந்த இணையதளம் மேம்படுத்தப்பட்டுள்ளது. ஓய்வூதியம் சார்ந்த தகவல்கள் மற்றும் குறைதீர்ப்பு வசதிகள் போன்றவற்றை மத்திய அமைச்சகங்கள், வங்கிகள் மற்றும் மத்திய அரசுத்துறைகளின் ஓய்வூதியதாரர்களுக்கு ஒற்றை இணைவாயிலில் அளிக்கும் வகையில் இந்த மேம்படுத்தப்பட்ட இணையவாயில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## *பொது கணக்கு கட்டுப்பாட்டு ஆணையம்*

- ❖ பொது கணக்கு கட்டுப்பாளர் ஆணையமானது (Controller General of Accounts-CGA) மத்திய அரசின் உச்ச கணக்கீட்டு ஆணையமாகும்.
- ❖ இது இந்திய அரசின் முதன்மை கணக்கியல் ஆலோசகராகும். கணக்கீட்டு அமைப்பு முறையின் தொழிற் நுட்ப மேலாண்மையை நிறுவுதலும், பராமரித்தலும் இதன் பொறுப்பாகும்.
- ❖ CGA அலுவலகமானது மத்திய அரசிற்கு அதன் செலவுகள், வருவாய்கள், கடன்கள் மற்றும் பல்வேறு நிதி அளவுருக்கள் போன்றவற்றின் மாதாந்திர மற்றும் வருடாந்திர ஆய்வறிக்கையை தயார் செய்து அளிக்கின்றது.
- ❖ இந்திய தலைமை தணிக்கை அலுவலரின் அறிவுறுத்தலின் பேரில், அரசியலமைப்புச் சட்டம் விதி 150-ன் கீழான குடியரசுத் தலைவரின் அதிகாரத்தைப் பயன்படுத்தி மத்திய மற்றும் மாநில அரசுகளின் கணக்கீடுகளின் வடிவங்களை இது பரிந்துரை செய்கின்றது.
- ❖ இது மத்திய அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- ❖ இது அரசியல் நிறுவன (Constitution body) அமைப்புமல்ல, சட்ட அமைப்பும் (Statutory body) அல்ல.

## அஜேயா வாரியர் - 2017

- ❖ ராஜஸ்தான் மாநிலத்தின் பிகானேரில் உள்ள மாஹாஜன் சுடுதல் வரம்பு பகுதியில் இந்தியா மற்றும் இங்கிலாந்துக்கு இடையேயான அஜேயா வாரியர் 2017 எனும் 14 நாட்கள் கூட்டுப்போர் பயிற்சி தொடங்கியுள்ளது.
- ❖ இது ஆண்டிற்கு இருமுறை நடக்கும் கூட்டுப் பயிற்சியாகும்.
- ❖ இது இந்தியா மற்றும் இங்கிலாந்துக்கு இடையேயான அஜேயா வாரியர் பயிற்சியின் மூன்றாவது பதிப்பாகும். முதல் மற்றும் இரண்டாவது பதிப்பின் பயிற்சிகள் முறையே 2013 மற்றும் 2015 ஆண்டுகளில் பெல்ஜியம் மற்றும் இங்கிலாந்தில் நடைபெற்றது.
- ❖ இரு நாட்டு தரைப்படை ராணுவங்களுக்கு இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பை அதிகரிக்க வேண்டி இந்த கூட்டுப்போர் பயிற்சி நடத்தப்படுகின்றது.

## தேசிய ஊட்டச்சத்து திட்டம்

- ❖ நாட்டிலுள்ள குழந்தைகளிடையேயான வளர்ச்சி குன்றல் (stunting) மற்றும் ஊட்டச்சத்தின்மை (malnutrition) போன்ற பிரச்சினைகளை களைந்து அவற்றை ஒவ்வொரு ஆண்டும் 2 சதவீதம் குறைப்பதற்கு தேசிய ஊட்டச்சத்து திட்டத்தை கொண்டுவர மத்திய கேபினேட் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ 38.4 சதவீதம் என்ற நிலையிலுள்ள குழந்தைகளுக்கிடையேயான வளர்ச்சி குன்றலின் தற்போதைய நிலையை 2022-இல் 25 சதவீதமாக குறைத்தலே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- ❖ நிதி ஆயோக் அமைப்போடு இணைந்து மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் கூட்டிணைவால் இத்திட்டம் தொடங்கப்பட உள்ளது.
- ❖ அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு செயல்படுத்தும் வண்ணம் இத்திட்டம் தொடங்கப்பட உள்ளது.
- ❖ மகளிர், இளங்குழந்தைகள் மற்றும் இளம் பெண்கள் ஆகியோரிடையேயான இரத்த சோகையை (anaemia) ஆண்டுக்கு 3 சதவீதம் என்ற அளவில் குறைக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- ❖ இத்திட்டம் நாட்டின் அனைத்து மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களிலும் குறிப்பிட்ட கால இடைவெளியில் செயல்படுத்தப்படும்.
- ❖ ஆரம்ப கட்டமாக நடப்பு நிதி ஆண்டில் ஊட்டச்சத்து இன்மை, குழந்தை வளர்ச்சி இன்மையால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள 315 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.

## சிறு விவசாயிகள் வேளாண்-வர்த்தக கூட்டமைப்பு

- ❖ சிறு விவசாயிகள் வேளாண்-வர்த்தக கூட்டமைப்பின் (SFAC - Small Farmers Agri-Business Consortium) நிர்வாகிகள் குழுவின் 22-வது சந்திப்பு புதுதில்லியில் நடைபெற்றது. மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஸ்ரீராதா மோகன் சிங் இதற்கு தலைமை தாங்கினார்.

### *SFAC*

- ❖ SFAC ஆனது மத்திய வேளாண் அமைச்சகத்தின் வேளாண்மை மற்றும் ஒத்துழைப்பு துறையின் கீழ் செயல்படும் தன்னாட்சியுடைய சங்கமாகும்.
- ❖ இது இந்திய சங்கங்கள் பதிவுச் சட்டம் 1860-ன் (Societies Registration Act - 1860) கீழ் பதிவு செய்யப்பட்டு உள்ளது.
- ❖ மேலும் இது இந்திய ரிசர்வ் வங்கியின் கீழ் வங்கியல்லாத நிதிநிறுவனமாக (NBFC - Non Banking Financial Constitute) பதிவு செய்யப்பட்டுள்ளது.

- இது e-NAM (elctronic - National Agricultural Market) எனும் தேசிய வேளாண்மையின் வர்த்தக சந்தை திட்டத்தை செயல்படுத்தும் அமைப்பாகும்.
- உழவர்களுக்கு அவர்களின் உற்பத்திப் பொருட்களின் அதிகபட்ச விலை நிலையை கண்டறிய உதவுவதோடு, வேளாண் பொருட்களுக்கு நாட்டிலுள்ள அனைத்து சந்தைகளையும் ஒருங்கிணைத்து ஒற்றை தேசிய சந்தையை ஏற்படுத்தி தருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- செயல் மூலதனங்களின் இருப்பையும், வர்த்தக செயல்பாடுகளையும் விவசாய வேளாண் உற்பத்தி நிறுவனங்கள் அதிகரிக்க உத்திரவாத கடன் திட்டத்தை (Credit Guarantee Fund Scheme) SFAC செயல்படுத்துகிறது.
- சந்தை இணைப்புகள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் தயாரிப்புகள் போன்றவற்றிற்கு நிறுவன மூலதன உதவி திட்டம் (Venture Capital Assistance Scheme) மூலம் சிறு வேளாண் வர்த்தக நிறுவனங்களின் வளர்ச்சியை இது ஊக்குவிக்கின்றது.

### உலக தொழில்முனைவோர் மாநாடு

- தெலுங்கானா தலைநகர் ஹைதராபாத்தில் உலக தொழிற்முனைவோர் மாநாடு (Global Entrepreneurship Summit) அண்மையில் நடைபெற்றது.
- இது தெற்கு ஆசியாவில் நடைபெறும் முதல் உலக தொழிற்முனைவோர் மாநாடாகும்.
- ஆற்றல் மற்றும் உள்கட்டமைப்பு, சுகாதாரம் மற்றும் உயிரி அறிவியல், நிதியியல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம், ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு போன்ற 4 முக்கிய தொழிற்துறைகளின் மீது விவாதிப்பதற்காக இம்மாநாடு நடத்தப்படுகிறது.
- உலகம் முழுவதும் பல்வேறு வளரும் தொழில் முனைவோர்கள், முதலீட்டாளர்கள், ஆதரவாளர்கள் என பல்லாயிரம் பேர் கூடும் ஓர் வருடாந்திர தொழிற்முனைவோர்கள் பங்கேற்பு மாநாடே உலகத் தொழில்முனைவோர் மாநாடாகும்.
- 2010-ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் இம்மாநாடு நடத்தப்படுகின்றது.
- 2017- ஆம் ஆண்டிற்கான இம்மாநாட்டின் கருத்துரு” பெண்கள் முதலில்; அனைவருக்கும் வளம்” (Women first; prosperity for all).

### பகிரப்பட்ட மதிப்புகளின் மாநாடு

- டிசம்பர் 1ஆம் தேதி புதுதில்லியில் 2017ஆம் ஆண்டின் பகிரப்பட்ட மதிப்புகளின் மாநாடு (Shared value Summit) நடைபெற்றது.
- இந்த மாநாட்டின் கருத்துரு “சமபங்கு மற்றும் அதிகாரமளித்தல் ”.
- இந்திய சமூகத்தில் அதிகாரமளித்தலிலும், சமநிலையை கொண்டு வருவதிலும் உள்ள நடப்பு தடைகளை அடையாளம் கண்டு அகற்றிடுவதை நோக்கமாக கொண்டு இந்த மாநாடு நடத்தப்பட்டுள்ளது.
- வர்த்தக மாதிரிகளில் உள்ளடக்குத் தன்மையின் சாராம்சத்தை உள்ளெடுத்துக் கொள்வதன் மூலம் பகிரப்பட்ட மதிப்புகளின் நடைமுறையை ஏற்றுக் கொள்வதற்கு வர்த்தகர்களை ஊக்குவிப்பதற்காக இம்மாநாடு நடத்தப்படுகின்றது.

### தேசிய சுகாதார முக்கியத்துவ திட்டம் 2017-24

- 2030-ல் ஹெச்.ஐ. வியை அழிப்பதை நோக்கமாக கொண்ட தேசிய சுகாதார முக்கியத்துவத் திட்டம் 2017-24-ஐ மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலவாழ்வுத்துறை அமைச்சகம் துவங்கியுள்ளது.

- ❖ உலக எய்ட்ஸ் தினமான டிசம்பர் 1 அன்று இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ ஆன்டி-ரெட்ரோவைரல் சிகிச்சையின் (Anti-retroviral Therapy – ART) கீழ் கொண்டு வரப்பட வேண்டிய மற்றும் கொண்டுவரப்படத் தவறிய மக்களை பின் தொடர்வதற்காக சம்பார்க் (SAMPARK MISSION) எனும் திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது.

***முக்கிய அம்சங்கள்***

- ❖ தேசிய ஆரோக்கிய முக்கியத்துவ திட்டம் 2017-24 ஆனது 90 : 90 : 90 உத்திகளின் இலக்குகளை அடைய உதவும். மேலும் இது 2030-ல் எய்ட்ஸ் தொற்றினை அழிப்பதற்கான விரைவு வழி உத்திகளை (Fast Track Strategies) நோக்கி சுகாதாரப் பங்கெடுப்பாளர்களுடன் இணைந்தும் செயல்படும்.
- ❖ சம்பார்க் திட்டமானது எச்.ஐ.வி பாதிப்புடையவர்களை அடையாளம் காண்பதனை விரைவுபடுத்திட உதவும். அடையாளம் கண்ட பின் ART திட்டத்தினோடு இவர்கள் இணைக்கப்படுவர்.

***90 : 90 : 90 உத்திகள்***

- ஐ.நா.எய்ட்ஸ் ஒழிப்பு திட்டத்தின் (UNAIDS) புதிய ஹெச்.ஐ.வி சிகிச்சை திட்டமே 90 : 90 : 90 உத்திகளாகும்.
- 2020–ல் ஹெச்.ஐ.வி நோய் தொற்றுடையர்களில் 90 சதவீதத்தினருக்கு நோய் கண்டறி சோதனை (diagnose) செய்தலும், ஹெச்.ஐ.வி நோய் தொற்று கண்டறியப்பட்டவர்களில் 90 சதவீதத்தினருக்கு Anti-retroviral Therapy சிகிச்சை அளிப்பதையும், ART சிகிச்சை பெற்றவர்களில் 90 சதவீதத்தினருக்கு வைரல் மட்டுப்படுத்தல் சிகிச்சை அளித்தலையும் (viral suppression) 90 : 90 : 90 உத்திகள் நோக்கமாக கொண்டது.

**ஆரோக்யா – 2017**

- ❖ ஆயுஷ் மற்றும் நல்வாழ்வு மீதான முதல் சர்வதேச மாநாடு அண்மையில் புதுதில்லியில் நடத்தப்பட்டது.
- ❖ மத்திய ஆயுஷ் அமைச்சகம், வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் ஆகியவற்றோடு இணைந்து மருந்துப்பொருட்கள் ஏற்றுமதி கவுன்சில், வர்த்தகம் மற்றும் தொழில்துறை இந்திய கூட்டமைப்பு [FICCI – Federation of Indian Chambers of Commerce & Industry] இந்த மாநாட்டை நடத்தியது.
- ❖ ஆரோக்யா 2017 மாநாட்டில் ஆயுர்வேதா, யோகா, நேச்சுரோபதி, யுனானி, சித்தா, சோவ ரிக்பா, ஹோமியோபதி மற்றும் நல்வாழ்வு ஆகியவை மீது விரிவான கண்காட்சியுடன் கூடிய மாநாடு நடத்தப்பட்டது.
- ❖ ஆயுர்வேதிக் மற்றும் மாற்று மருந்துகளை ஏற்றுமதி செய்யும் இரண்டாவது பெரிய நாடு இந்தியாவாகும்.
- ❖ ஆரோக்யா 2017-ன் கருத்துரு ⇒ “ஆயுஷ்-ன் உலகளாவிய ஆற்றலை மேம்படுத்துதல்”.

**ஆகாஷ் ஏவுகணை**

- ❖ ஒடிஸாவில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை பகுதியில் உள்நாட்டுத் தொழிற்நுட்பமுடைய ரேடியோ அதிர்வெண் தேடியை கொண்ட மீயொலி வேகம் உடைய (Supersonic) நிலத்திலிருந்து வான் இலக்கிற்கு ஏவக்கூடிய [Surface to Air] ஆகாஷ் ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- ❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் [DRDO – Defence Research & Development Organisation] ஆனது ஒருங்கிணைந்த வழிகாட்டு ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் [Integrated

Guided Missile Development Programme] உள்நாட்டுத் தொழிற்நுட்பத்துடன் இதனை உருவாக்கியுள்ளது.

❖ இது உள்நாட்டு தொழிற்நுட்பமுடைய மற்றும் நடுத்தர இலக்கு வரம்புடைய [Medium Range] நிலத்திலிருந்து வானில் உள்ள இலக்கிற்கு ஏவக்கூடிய ஏவுகணையாகும்.

❖ 18,000 மீட்டர் உயரத்தில், 30 கி.மீ. தொலைவில் உள்ள இலக்கை இது அழிக்க வல்லது.

❖ இந்த ஏவுகணையில் உள்ள ரோஹினி ரேடாரானது 120 கி.மீ. வரை வரம்பில் இருக்கும் விமானங்களை கண்டறியக் கூடியது.

❖ இது போர் விமானங்கள், சீர்வேக ஏவுகணைகள் மற்றும் கண்டங்களுக்கு இடையேயான ஏவுகணைகள் போன்றவற்றை இடைமறித்து அழிக்க வல்லது.

❖ ஆகாஷ் ஏவுகணை தான் உள்நாட்டு தொழிற்நுட்பத்துடனான, ரேடார் அதிர்வெண் தேடி கொண்ட, நிலத்திலிருந்து வானில் உள்ள இலக்கிற்கு ஏவக்கூடிய (Surface to Air) பரிசோதிக்கப்பட்ட முதல் ஏவுகணை ஆகும்.

❖ இந்த ஏவுகணை ஆனது குறைதூர வரம்புடைய நிலத்திலிருந்து வான் நோக்கி ஏவக்கூடிய ஏவுகணையாக (Short Range Surface to Air Missile) இந்திய தரைப்படை இராணுவத்தில் இணைக்கப்பட உள்ளது.

## தனி நபர் அமர்வு

❖ "விதிவிலக்கான சூழ்நிலைகளின்" (Exceptional Circumstance) வழக்குகளை விசாரிப்பதற்கான தனிநபர் அமர்வினை தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தலைவர் அமைப்பதற்கு மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

❖ தேசிய பசுமைத் தீர்ப்பாய (நடைமுறை மற்றும் செயல்முறை) விதிகள் 2011-ல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு இந்த அறிவிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் "விதிவிலக்கான சூழ்நிலைகள்" எவை என்பதற்கான விளக்கம் அளிக்கப்படவில்லை.

❖ தேசிய பசுமைத் தீர்ப்பாய (நடைமுறை மற்றும் செயல்முறை) விதிகள் 2011-ன் படி தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் ஒவ்வொரு கிளைகளும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களை கொண்டிருக்க வேண்டும். அவர்களில் குறைந்த பட்சம் ஒருவர் நீதித்துறையை சேர்ந்தவராகவும் ஒருவர் நிபுணராகவும் இருத்தல் வேண்டும்.

❖ NGT-ன் தலைமை மற்றும் மண்டலக் கிளைகளில் உள்ள பணியிடத்தை நிரப்பாமல் மத்திய அரசு உள்ளதென உச்சநீதிமன்றம் விமர்சித்துள்ளதை தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டு உள்ளது.

### *தேசிய பசுமைத் தீர்ப்பாயம்*

❖ சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வனப்பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் விதிகளின் மீறுதல்களால் மக்களுக்கும், அவர்களின் சொத்துக்களுக்கும் உருவாகும் சேதங்களுக்கு இழப்பீடு பெறுதல் போன்றவை தொடர்பான வழக்குகளை விரைவாக மற்றும் திறன் விளைவோடு தீர்த்து வைப்பதற்காக தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ஏற்படுத்தப் பட்டது.

❖ இது 2010 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

❖ இதன் தலைமையிடம் டெல்லியில் அமைந்துள்ளது.

❖ போபால், புனே, கொல்கத்தா, சென்னை ஆகிய நான்கு இடங்களில் இவற்றின் மண்டல கிளைகள் உள்ளன.

❖ NGT சட்டத்தின் அட்டவணை 1-ல் பட்டியலிடப்பட்டுள்ள சட்டங்களின் கீழ் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை சிவில் நீதிமன்றங்கள் எடுத்துக் கொள்ள தடை உள்ளது.

❖ வனஉயிர் பாதுகாப்பு சட்டம்- 1972, இந்திய வனச்சட்டம்- 1927 மற்றும் வனம், மரங்களின் பாதுகாப்பு தொடர்பான மாநில அரசுகளின் பல்வேறு சட்டங்கள் தொடர்பான விவகாரங்களை

விசாரிக்க NGT- க்கு அதிகாரம் கிடையாது.

- 1908-ன் சமூகவியல் நடைமுறைச் சட்டத்தின் (Code of Civil Procedure) கீழ் வரையறுக்கப்பட்ட செயல்முறைகளோடு பிணைந்து NGT செயல்படுவதில்லை.
- இயற்கை நியதியின் கோட்பாடுகளின் படி [Principle of Natural Justice] NGT வழிநடத்தப்படுகின்றது.
- பின்வரும் சட்டங்களின் கீழ் ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்புடைய அனைத்து சிவில் வழக்குகளையும் விசாரிக்க NGT- க்கு அதிகாரம் உள்ளது.
    - தண்ணீர் (பாதுகாப்பு மற்றும் மாசு கட்டுப்பாடு) சட்டம் 1974
    - வனப்பாதுகாப்பு சட்டம் 1980
    - காற்று (பாதுகாப்பு மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு) சட்டம் 1981
    - சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986
    - பொது பொறுப்பு காப்பீட்டுச் சட்டம் 1991
    - உயிரி பல்வகைமைச் சட்டம் 2002.

### சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணி

- இந்தியாவின் உலகளாவிய தொடக்கமான சர்வதேச ஆற்றல் கூட்டணி [International Solar Alliance-ISA] ஆனது உடன்படிக்கை அடிப்படையிலான நாடுகளுக்கிடையேயான சர்வதேச நிறுவனமாக மாறியுள்ளது.
- சர்வதேச சூரியஆற்றல் கூட்டணி ஆனது இந்தியாவில் தலைமையகத்தை கொண்டுள்ள முதல் உடன்படிக்கை அடிப்படையிலான நாடுகளுக்கிடையேயான சர்வதேச நிறுவனமாகும்.
- இதுவரை ISA- ல் 46 நாடுகள் ISA -ன் கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. 19 நாடு பின்னேறப்பளித்து உள்ளன.

### *ISA*

- 2015 நவம்பரில் பாரிஸில் நடைபெற்ற COP21 பருவநிலை மாநாட்டில் பிரெஞ்ச் அதிபருடன் இணைந்து இந்தியாவால் இக்கூட்டணி ஏற்படுத்தப்பட்டது.
- சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணி ஆனது 121 நாடுகளின் கூட்டணி ஆகும். பெரும்பான்மையான இந்நாடுகள் சூரிய ஆற்றல் வளம் நிறைந்தவை. இவை கடக ரேகை மற்றும் அட்சரேகை ஆகியவற்றினுக்கிடையே முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அமைந்தவை.
- புதை படிமங்கள் அடிப்படையிலான எரிபொருள்கள் மீதான சார்பை குறைத்து, திறன்மிகு வகையில் சூரிய ஆற்றலை பயன்படுத்துவதற்கு கூட்டிணைந்து செயல்படுவதே இதன் முதன்மை நோக்கமாகும்.
- இடைக்கால செயலகத்தோடு இணைந்து இதன் தலைமையகம் இந்தியாவின் குர்கானில் உள்ளது.
- குறைந்தபட்சம் 15 நாடுகள் இதனை ஏற்றுக் கொண்டால் தான் இது செயல்முறைக்கு வரும்.
- மேலும், இக்கூட்டணியில் 2030-ல் சூரிய ஆற்றல் திட்டங்களுக்கு நிதி அளிக்க 1 டிரில்லியன் நிதியை திரட்டவும் முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ISA ஆனது அவை, கவுன்சில் மற்றும் செயலகம் என மூன்று நிறுவனக் கட்டமைப்பை கொண்டுள்ளது.

### NCM - கமிட்டி

- 50-% காட்டிலும் குறைவாக இந்து சமூகத்தினரின் மக்கள் தொகையுடைய 8 மாநிலங்களில், இந்து

சமூகத்தினருக்கு சிறுபான்மையினர் அந்தஸ்தினை தருவது தொடர்பான ஆய்வினிற்கு மூன்று பேர் கொண்ட குழுவை தேசிய சிறுபான்மையினர் ஆணையம் [NCM – National Commission for Minorities] அமைத்துள்ளது.

- இக்குழுவின் தலைவராக NCM-ன் துணை தலைவர் ஜார்ஜ் குரியன் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் உதவித்துணைக்காக NCM-ன் கூடுதல் செயலாளர் அஜய் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இக்குழு மூன்று மாதங்களில் தங்களின் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 8 மாநிலங்களில் இந்து சமூகத்தினர் சிறுபான்மையினராக உள்ளனர்.

அவையாவன:

லட்சத்தீவுகள், மிசோரம், நாகாலாந்து, மேகாலயா, ஜம்மு & காஷ்மீர், அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர் மற்றும் பஞ்சாப்.

- மாநிலத்தின் மக்கள் தொகையில் குறைந்த எண்ணிக்கையுடைய இந்து சமூகத்தினரை, தேசிய சிறுபான்மையினர் ஆணையச் சட்டம் 1992-ன் பிரிவு 2-ன் கீழ் மத்திய அரசோ அல்லது மாநில அரசோ சிறுபான்மையினராக அறிவிக்காமல் உள்ளதன் காரணமாக அரசியலமைப்பு சட்டம் விதி 25 முதல் 30 வரை உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் ஆகியவற்றை இழந்த நிலையில் இந்த 8 மாநில இந்து சமூகத்தினர் உள்ளனர்.

## 22-வது ஆசிய ஒத்திசைவுக்கான செயற்குழு மாநாடு

- மத்திய ஆரோக்கிய மற்றும் குடும்பநல இணை அமைச்சர் அண்மையில் 22-வது ஆசிய ஒத்திசைவுக்கான செயற்குழு மாநாட்டை தொடங்கி வைத்தார்.
- ஆசியாவில் மருத்துவ பொருட்களின் ஒழுங்குமுறையில் ஒருங்கிணைவு மற்றும் ஒத்திசைவைக்கான அணுகுமுறைகளை உருவாக்கவும், அவற்றினை பரிந்துரைக்கவும் இம்மாநாடு நடத்தப்படுகின்றது.
- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தோடு இணைந்து தேசிய மருந்துப் பொருட்கள் ஒழுங்குமுறை ஆணையம் மற்றும் தேசிய மருந்துப் பொருட்கள் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் ஆகியவை இம்மாநாட்டை நடத்தியுள்ளது.
- ஆசிய ஒத்திசைவுக்கான செயற்குழு ஆனது 1999 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது, இது மருத்துவ தொழிற்துறை சார்ந்த உறுப்பினர்கள், 30 நாடுகளின் தேசிய மருந்துப் பொருட்களின் ஒழுங்குமுறை ஆணையங்களை உறுப்பினராகக் கொண்ட தன்னார்வ, இலாப நோக்கமற்ற நிறுவனமாகும்.
- சர்வதேச மருத்துவ சாதனங்களின் ஒழுங்குமுறை மன்றத்தின் (by International Medical Device Regulators Forums) வழிகாட்டல்களின் வழியே ஆசியா மற்றும் பிற பிராந்திய பகுதிகளில் மருத்துவ சாதனங்களின் ஒத்திசைவு ஒழுங்குமுறையை இது ஊக்குவிக்கின்றது.

## நிலத்தடி நீர் குறித்த 7-ஆவது சர்வதேச மாநாடு

- நிலத்தடி நீர் குறித்த 7 ஆவது சர்வதேச மாநாடு புதுதில்லியில் நடைபெறவுள்ளது. இவ்வருட மாநாட்டின் கருத்துரு: "நிலத்தடி நீர் குறித்த பார்வை 2030 – நீர்வள பாதுகாப்பு, சவால்கள் மற்றும் காலநிலை மாற்றத்தை பொருத்தமாக்கிக் கொள்ளுதல்".
- இம்மாநாட்டினை ஒருங்கிணைப்போர்,
    - தேசிய நீரியல் நிறுவனம் (National Institute of Hydrology)

- மத்திய நிலத்தடிநீர் வாரியம் (Central Ground Water Board)

❖ மத்திய நிலத்தடிநீர் வாரியம் மத்திய நீர்வள அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது. இந்த மாநாட்டில் நாட்டின் நிலத்தடிநீர் மேலாண்மையின் தற்போதைய சூழல் குறித்தும், வருங்காலத்தில் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் குறித்தும் விவாதிக்கப்படும்.

❖ நாட்டில் மாறிவரும் நீர் உபயோகம் பற்றியும், பருவநிலைகள் பற்றியும் ஆராய இருக்கிறது.

## SAICON - 2017

❖ SAICON எனும் விளையாட்டுத்துறை மருந்துகள் மற்றும் விளையாட்டுத்துறை அறிவியல் மீதான முதல் சர்வதேச மாநாடு அண்மையில் டெல்லியில் நடைபெற்றது.

❖ இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை இணை அமைச்சர் ராஜ்யவர்தன் ரத்தோர் இதை துவங்கி வைத்தார்.

❖ இந்திய விளையாட்டு ஆணையத்தால் (Sports Authority of India) மூன்று நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் ஆயிரக்கணக்கான தேசிய மற்றும் சர்வதேச பிரதிநிதிகள் பங்கு பெற்றனர்.

❖ விளையாட்டு அறிவியல் மற்றும் ஆராய்ச்சியை அடுத்த நிலைக்கு கொண்டு செல்வதற்கு, கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களை ஊக்குவிப்பதற்கும், நாட்டில் அனைவரிடையேயும் அறிவியல் மனப்போக்கை ஊக்குவிப்பதற்கும் SAICON 2017 மாநாடு நடத்தப்படுகிறது.

## கண்சவ்வழற்சி இல்லா நாடு

❖ 2014-17ஆம் ஆண்டிற்கான தேசிய கண்சவ்வழற்சி (Trachoma) கணக்கெடுப்பு அறிக்கையின்படி, இந்தியா தற்போது கண்சவ்வழற்சி தொற்று இல்லா (Trachoma Free) நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ கண்சவ்வழற்சியானது ஓர் நாள்பட்ட கண் தொற்றாகும்.

❖ இளங் குழந்தைகளை தாக்கும் இது கண் விழி வெளிப்படலத் திரையின் குருட்டுத் தன்மைக்கு முக்கிய காரணமாகும்.

❖ மோசமான தனிப்பட்ட மற்றும் சுற்றுப்புற சுகாதாரமின்மை காரணமாகவும், போதாக்குறையுடைய தண்ணீர் மற்றும் சுகாதார அணுகுதல்களாலும் கண்விழித்திரை பாதிப்படைந்து கண் சவ்வழற்சி நோய் உண்டாகின்றது.

❖ இந்த அறிக்கையின் படி, உலக சுகாதார நிறுவனத்தின் தொற்று அளவு வகைப்பாட்டைக் காட்டிலும், நம் நாட்டில் வெறும் 0.7 சதவீத கண்சவ்வழற்சி தொற்றே நிலவுவதால் இந்தியா கண்சவ்வழற்சி தொற்று அற்ற நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ உலக சுகாதார நிறுவனத்தின் கருத்துப்படி, பத்து வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 5 சதவீதத்துக்கும் குறைவாக செயல்தன்மையுடைய கண்சவ்வழற்சி தொற்று நிலவினால், அந்நாட்டில் செயல்தன்மையுடைய கண் சவ்வழற்சி நோய் ஒழிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளப்படும்.

❖ கண் சவ்வழற்சியானது நாட்டில் சில பகுதிகளில் அதாவது இராஜஸ்தான், குஜராத், பஞ்சாப், ஹரியானா, உத்திரபிரதேசம், நிக்கோபர் தீவுகள் ஆகிய பகுதிகளில் வாழும் மக்களை பாதித்துள்ளதாக கண்டறியப்பட்டு உள்ளது.

❖ இந்த கணக்கெடுப்பு அறிக்கையானது, இனி செயல்தன்மையுடைய கண் சவ்வழற்சி இந்தியாவில் பொது சுகாதார பிரச்சனையல்ல என்பதைக் குறிப்பிடுகின்றது.

❖ மேலும் இதன் மூலம் தற்போது உலக சுகாதார நிறுவனத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள GET 2020 திட்டத்தின் கீழ் உள்ள கண்சவ்வழற்சிக்கான ஒழிப்பு இலக்கை இந்தியா அடைந்துள்ளது.

### போதி பர்வா

❖ புத்த பாரம்பரியத்தின் போதி பர்வா – பிம்ஸ்டெக் திருவிழாவினை இந்தியா நடத்தியது.

❖ புது தில்லியில் உள்ள இந்திரா காந்தி தேசிய கலை மையத்தில் நடைபெற்ற இவ்விழாவில் சர்வதேச மற்றும் இந்திய பௌத்த கலை மற்றும் கட்டிடக்கலை கண்காட்சி நடைபெற்றது.

❖ பௌத்த மதத்தைச் சார்ந்த அறிஞர்கள் இவ்விழாவில் உரையாற்றினர். மேலும் பௌத்த நடனம், இசை நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்படங்கள் ஆகியவை விழாவை சிறப்பித்தன.

❖ பிம்ஸ்டெக் கூட்டமைப்பின் 20-ஆவது ஆண்டு விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக “போதி பர்வா திருவிழா” ஏற்பாடு செய்யப்பட்டது.

❖ இத்திருவிழாவானது பிம்ஸ்டெக் நாடுகளின் உயரிய மற்றும் பொதுவான பாரம்பரியத்தை விளக்கும் விதமாக அமைந்தது.

#### *பிம்ஸ்டெக் (BIMSTEC)*

❖ பிம்ஸ்டெக் (BIMSTEC – Bay of Bengal Initiatives for Multi-Sectoral Technical and Economic Cooperation) என்ற துணைப் பிராந்தியக் குழுவானது தெற்கு ஆசியா மற்றும் தென் கிழக்கு ஆசியாவின் ஏழு நாடுகளை உள்ளடக்கியது.

❖ அந்நாடுகள் - பங்களாதேஷ், இந்தியா, மியான்மர், இலங்கை,தாய்லாந்து, பூடான் மற்றும் நேபாளம்.

❖ 1997 ஆம் ஆண்டு ஜூன் 6 ஆம் தேதி பாங்காக்கில் பிஸ்டெக் (BIST-EC என்ற பங்களாதேஷ், இந்தியா, இலங்கை மற்றும் தாய்லாந்து நாடுகளின் பொருளாதாரக் கூட்டிணைவு) என்கிற புதிய துணைப் பிராந்தியக் குழு தொடங்கப்பெற்றது. பின்னர் இதில் மியான்மரும்,நேபாளமும் இணைந்து பிம்ஸ்டெக் என்று ஆயிற்று.

❖ இந்த பிம்ஸ்டெக் (BIMSTEC) அமைப்பிற்கு நேபாளம் தற்போது தலைமை வகிக்கிறது. இதன் செயலகம் டாக்காவில் அமைந்திருக்கிறது.

### இந்தியாவின் முதல் நடமாடும் உணவு பரிசோதனை ஆய்வகம்

❖ இந்தியாவின் முதல் நடமாடும் (mobile) உணவு பரிசோதனை ஆய்வகத்தை கோவா முதலமைச்சர் மனோகர் பரிக்கர் துவக்கி வைத்துள்ளார்.

❖ இந்த ஆய்வகத்திற்கு முழு நிதியுதவியையும் வழங்கியுள்ள மத்திய அரசே, இதன் அடுத்த ஐந்தாண்டு கால பராமரிப்பு செலவையும் ஏற்க உள்ளது.

❖ ஓர் பேருந்தில் கட்டமைக்கப்பட்டுள்ள இந்த ஆய்வகமானது கோவா மாநிலம் முழுவதும் பயணம் மேற்கொண்டு பயண இடங்களில் உணவு மாதிரிகளின் தரத்தையும், தண்ணீரின் சுகாதார அளவையும் சோதனை செய்யும்.

### MSME சம்பந்த்

❖ மத்திய சிறு,குறு, நடுத்தர வர்த்தக அமைச்சகம் “MSME சம்பந்த்” எனும் பொது கொள் முதல் இணையவாயிலை தொடங்கி வைத்துள்ளது.

❖ மத்திய பொதுத்துறை நிறுவனங்களால் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களிலிருந்து மேற்கொள்ளப்படும் பொது கொள்முதல் செயல்பாடுகளின் அமலாக்கத்தை கண்காணிப்பதற்காக இந்த இணையவாயில் தொடங்கப்பட்டுள்ளது.

- மத்திய பொது கொள்முதல் கொள்கையின்படி, மத்திய அரசுத் துறைகள் அல்லது மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் தங்களின் வருடாந்திர கொள்முதலில் சிறு,குறு,நடுத்தர நிறுவனங்களிலிருந்து 20 சதவீதத்தினை கொள்முதல் செய்ய வேண்டியது கட்டாயமாகும்.
- வேளாண் துறைக்கு அடுத்து நாட்டில் MSME துறையே அதிக வேலைவாய்ப்பை அளிக்கின்றன. தொழிற்துறையில் வெறும் 20% முதலீடு உடைய MSME துறை 80 சதவீத வேலைவாய்ப்பைத் தருகின்றது.

### ஜனாதிபதி வர்ண விருது

- ஐம்பதாண்டு நிறைவை கொண்டாடும் இந்திய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல் பிரிவுக்கு இந்திய குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்த் ஜனாதிபதி வர்ண (Presidential Colour) விருதினை விசாகப்பட்டினத்தில் வழங்கினார்.
- ஜனாதிபதி வர்ண விருதானது இராணுவ படைகளுக்கு வழங்கப்படும் மிகப்பெரிய கவுரவ விருதாகும்.
- 1967ஆம் ஆண்டு டிசம்பர் 8 ஆம் தேதி இந்தியாவின் முதல் நீர்மூழ்கிக் கப்பலான INS கல்வாரி கடற்படையில் இணைக்கப்பட்டதிலிருந்து கடற்படையின் நீர்மூழ்கி கப்பல் பிரிவு தொடங்க அடித்தளம் அமைக்கப்பட்டது.
- இந்திய கடற்படையால், நீர்மூழ்கி கப்பல் பிரிவின் 50-ஆவது நிறைவு ஆண்டான 2017-ஆம் ஆண்டானது “நீரமூழ்கி கப்பல்களுக்கான ஆண்டாக” (Year of submarine) கொண்டாடப்படுகின்றது.

### RIC சந்திப்பு

- இந்தியா, இரஷ்யா, சீனா ஆகிய நாடுகளிடையேயான RIC அமைப்பின் 15வது வெளியுறவுத்துறை அமைச்சர்கள் சந்திப்பு அண்மையில் டெல்லியில் நடைபெற்றது.
- பிராந்திய பாதுகாப்பு, ஆசிய-பசுபிக் பிராந்தியத்தை பாதிக்கும் பிரச்சனைகள், பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகள் மற்றும் பல்தரப்பு மற்றும் பிராந்திய மன்றங்களில் மூன்று நாடுகளுடைய ஒருங்கிணைப்பு போன்ற பல்வேறு தலைப்புகளில் விவாதம் மேற்கொள்ளப்பட்டது.
- 2002-ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் இந்த மூன்று நாடுகளுக்கு இடையேயான முத்தரப்பு சந்திப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### முதல் NIC - CERT

- அரசு கணிணி இணையங்களின் மேல் நடத்தப்பெறும் சைபர் தாக்குதல்களை கண்காணிக்கவும், தணிப்பதற்கும், முன்கூட்டியே கண்டறிய உதவுவதற்கும் NIC-CERT எனும் அமைப்பை முதல்முறையாக மத்திய அரசு அமைத்துள்ளது.
- தேசிய தகவல் மையத்தில் (National Information Centre) நடத்தப்பெறும் இணைய தாக்குதல்களை கண்டறியவும், தடுக்கவும், தாக்குதலின் தாக்கத்தை தணிக்கவும் ஏற்படுத்தப்பட்ட பிரத்யேக அமைப்பே NIC-CERT ஆகும்.
- அனைத்து அளவிலான அரசு நிலைகளுக்கு இடையே மேற்கொள்ளப்படும் தொலைத்தொடர்பு, அரசு மற்றும் குடிமகன்களுக்கு இடையே நடைபெறும் தொலைத்தொடர்பு ஆகியவை உட்பட NIC-ன் இணையவாயிலில் உள்ள தரவுகளையும் கண்காணித்து அதன் மூலம் சைபர் தாக்குதல்களின் முன்கூட்டிய கண்டுபிடிப்பு மற்றும் உடனடித் தணிப்பு ஆகியவற்றை மேற்கொள்ளுதலை NIC-CERT உறுதி செய்யும்.

- NIC – CERT அமைப்பானது துறைவாரியான CERT அமைப்புகளுடனும், தேசிய அளவிலான CERT–IN அமைப்புடனும் நெருங்கிய கூட்டிணைவு மற்றும் ஒருங்கிணைப்பு கொண்டு செயல்படும்.

***CERT***

- CERT – (Computer Emergency Response Team) ஆனது. மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழிற்நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்படும் சைபர் பாதுகாப்பு தொடர்பான முன்னணி தேசிய நிறுவனமாகும்.
- ஹேக்கிங், பிஷ்ஷிங் (Pishing) போன்ற பல்வேறு சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை இது கையாளுகின்றது.
- சைபர் தாக்குதல் நிகழ்வுகளின் கையாளுதலுக்கான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்வது, சைபர் தாக்குதல் நிகழ்வுகளின் தகவல்களை சேகரிப்பது, ஆராய்வது மற்றும் பரப்புவது இதன் முக்கியப் பணியாகும்.

## லக்ஷயா திட்டம்

- உலகளாவிய சுகாதார பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு (Universal Health Coverage Day) மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் மகப்பேற்று அறைக்கான தர மேம்பாட்டு திட்டமான (Labour Room Quality Improvement Initiative) லக்ஷயா (LaQshya) எனும் மருத்துவ பணியாளர்களுக்கான கைபேசி செயலியை வெளியிட்டுள்ளது.
- தங்கள் மருத்துவமனையின் சுற்றுவட்டப்பகுதிகளில் இருந்து வரும் சாதாரண மற்றும் சிக்கலான பிரசவங்களை கையாளும் மருத்துவப் பணியாளர்களுக்கான கைபேசி செயலியே மகப்பேற்று அறைக்கான தர மேம்பாட்டு திட்டம் எனப்படும் LaQshya ஆகும்.
- மகப்பேற்று அறையில் (Labour Room) வழங்கப்படும் சிகிச்சைகளின் (Care) தரத்தினை உயர்த்தி அவற்றின் மூலம் தடுக்கப்படக் கூடிய தாய்-சேய் இறப்புகளை குறைத்தலும், குழந்தைகள் நோயுற்ற தன்மையோடு பிறத்தல் (morbidity) மற்றும் இறந்து பிறத்தல் (Still Birth) போன்றவற்றை குறைத்தலும் இதன் முக்கிய நோக்கங்கள் ஆகும்.
- இவை நாட்டின் அனைத்து மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளிலும், மாவட்ட மருத்துவமனைகளிலும், மாவட்ட துணை மருத்துவமனைகளிலும், சமுதாய ஆரோக்கிய மையங்களிலும் செயல்படுத்தப்படும்.
- மேலும் இத்திட்டத்தின் கீழ் மகப்பேற்று அறைகளுக்கு தரசான்றளிப்பும், இத்திட்டத்தின் இலக்குகளை அடையும் மருத்துவ பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்படும்.

## AIIB வருடாந்திர சந்திப்பு

- ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB - Asian Infrastructure Investment Bank) நிர்வாகிகள் குழுவின் 3-வது வருடாந்திர சந்திப்பை இந்தியா மும்பையில் நடத்த உள்ளது.
- 2018-ஆம் ஆண்டு நடைபெற உள்ள இந்த வருடாந்திர சந்திப்பின் கருத்துரு "உள்கட்டமைப்புக்கு நிதி திரட்டுதல், புத்தாக்கம் மற்றும் கூட்டிணைவு ".
- இச்சந்திப்பை இந்தியாவில் நடத்துவதற்காக இந்தியாவும் AIIB-யும் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன.

***AIIB***

- ஆசியா முழுவதும் போதிய ஊக்கம் இன்றி தேங்கி இருக்கும் உள்கட்டமைப்பு வசதிகளை நிறைவு செய்வதற்காக வேண்டி உலக நாடுகளை ஒருங்கிணைப்பதற்காக நிறுவப்பட்டஓர் புதிய பல்தரப்பு

நிதியியல் நிறுவனமே AIIB ஆகும்.

- 52 உறுப்பு நாடுகளைக் கொண்ட இதன் தலைமையகம் சீனாவின் பெய்ஜிங் நகரில் அமைந்துள்ளது.
- சீனா, ரஷ்யா, இந்தியா ஆகியவை AIIB-ன் மூன்று பெரும் பங்குதாரர்கள் ஆவர்.
- மேலும் அமெரிக்கா மற்றும் ஜப்பான் இவற்றின் உறுப்பினர்கள் அல்ல.
- இலண்டன் இண்டர்பேங்க் கடன் விகிதத்தோடு (LIBOR-London Inter Bank Offered Rate) கூடுதலாக 1.5 சதவீத வட்டி விகிதத்தினைக் கொண்டு 25 ஆண்டுகால திருப்பி செலுத்தும் கால வரம்போடு, கூடுதலாக 5 ஆண்டு கால கூடுதல் அவகாசத்தோடு (grace period) AIIB வங்கியானது sovereign மற்றும் non-sovereign நிதியுதவியை உறுப்பு நாடுகளின் பல்வேறு துறைகளுக்கு வழங்கும்.

## எல்லை சாலைகள் நிறுவனம் – கிழக்கு அருணாச்சலப்பிரதேசம்

- இந்தியாவின் எல்லை சாலைகள் நிறுவனம் (BRO – Border Road Organisation) கிழக்கு அருணாச்சலப் பிரதேசத்தில் கட்டி முடித்துள்ள இரு முக்கிய பாலங்கள் நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

### *இரு பாலங்களாவன*

- இன்ஜீபானி பாலம்
- டியோபனி பாலம் (அ) எஜ் (EZE) பாலம்
- இன்ஜீபானி பாலம் 140 மீட்டர் நீளமுடையது. அருணாச்சலத்தின் முக்கிய மாவட்டங்களான ரோயிங் மற்றும் டெஜீ ஆகியவற்றிற்கு தடையில்லா போக்குவரத்து சேவையை தரும் வகையில் இப்பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

### *டியோபானி (EZE) பாலம்*

- 300 மீட்டர் நீளமுடைய நெடுங்கை பிடிமான பாலமான (Cantilever Bridge) இது அருணாச்சல பிரதேசத்தின் ரோயிங் பகுதியில் உள்ள EZE நதியில் கட்டப்பட்டுள்ளது.
- டிபாங் பள்ளத்தாக்கு மாவட்டம் ஆண்டுதோறும் பருவமழை காலங்களின் போது நாட்டின் பிற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்படும் நிலை தொடரும் நிலையில் இப்பாலம் அம்மக்களுக்கு பயன்தரக் கூடிய முக்கியமான உள்கட்டமைப்பு வசதியாகும்.

### *BRO – எல்லைகள் சாலைகள் நிறுவனம் (BRO – Border Road Organisation)*

- நாட்டின் எல்லைப் புறங்களில் அமைந்துள்ள அணுகிட இயலா, கரடுமுரடான பகுதிகளின் இணைப்புக்காக எல்லைகளில் சாலை அமைக்கும் நிறுவனமான எல்லை சாலைகள் நிறுவனம் மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- இந்திய ராணுவத்தின் பொறியாளர்கள் படை பிரிவினர், மின்னியல் மற்றும் இயந்திரவியல் பொறியாளர்கள்,ராணுவ சேவை படையினர்,ராணுவ காவல் படையினர் போன்றோர் எல்லை சாலை நிறுவனத்தில் பணிபுரிகின்றனர்.
- BRO அமைப்பானது 32,885 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளையும், மொத்தம் 12,200 மீட்டர்கள் நீளமுள்ள நிரந்தர பாலங்களையும் நிர்வகிக்கின்றது.
- தற்போது நடப்பில், BRO தன் சாலை மேம்பாட்டு செயல்பாடுகளை 21 இந்திய மாநிலங்களிலும், ஒரு யூனியன் பிரதேசத்திலும் (அந்தமான் நிகோபார்), அண்டை நாடுகளான இலங்கை, ஆப்கானிஸ்தான், பூடான், மியான்மர் ஆகியவற்றிலும் மேற்கொண்டு வருகின்றது.

## முதல் ஸ்கார்பீன் வகுப்பு நீர்முழ்கிக் கப்பல்

- ❖ இந்தியாவின் உள்நாட்டுத் தொழில் நுட்பத்தோடு தயாரிக்கப்பட்ட முதல் ஸ்கார்பீன் வகுப்பு கப்பலான ஐ.என்.எஸ் கல்வாரியை மும்பையிலுள்ள கடற்படை தளத்தில் இந்திய கடற்படைக்கு பிரதமர் அர்ப்பணித்தார்.
- ❖ டீசல்-எலக்ட்ரிக் என்ஜினால் செலுத்தப்படும் ஸ்கார்பீன் வகை கப்பல்களில் டர்பீடோ (Torpedo) எனும் நீர்மூழ்கி குண்டுகள் முதன்மை ஆயுதங்களாக பொருத்தப்பட்டு உள்ளன.
- ❖ ஸ்கார்பீன் வகுப்பு கப்பலான இக்கப்பலுக்கு ஆழ்கடல் புலி சுறாவின் (Deep Tiger Shark) பெயர் கொண்டு கல்வாரி என பெயரிடப்பட்டுள்ளது.
- ❖ மேலும் INS கல்வாரி தன்னிச்சையான காற்று உந்துவிசை (Air Independent Propultion) அமைப்பை கூடுதலாக கொண்டது.
- ❖ வழக்கமான டீசல்-எலக்ட்ரிக் என்ஜினுடைய நீர்மூழ்கிக் கப்பல்கள் குறிப்பிட்ட நாட்கள் கழித்து நீரின் மேற்பரப்பிற்கு வந்து ஆக்ஸிஜன் பெற்று தன் மின்கலன்களை (Battery) மீள்நிரப்பம் (Recharge) செய்ய வேண்டும்.
- ❖ இவ்வகையில் Project 75-ன் முதல் கப்பல் INS கல்வாரி ஆகும்.
- ❖ 1500 டன் எடையுடைய INS கல்வாரி 300 மீட்டர் ஆழம் வரை செல்லக் கூடியது.
- ❖ இந்த கப்பல் நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் நீர் மேற்பரப்பு கப்பல்கள் போன்றவற்றுக்கு எதிரான போர்த்திற தாக்குதல் வசதிகள் கொண்டது.



**In-depth look**

The Navy is set to induct *INS Kalvari*, its first modern conventional submarine into the fleet on Thursday

**What is a Scorpene?**
A conventional powered submarine weighing 1,500 tonnes that can go up to depths of 300m. Built by the Naval Group, formerly DCNS, of France

**The India connection**
In October 2005, India signed a $3.75 billion deal for six such submarines to be built by the Mazgaon Dock Limited in Mumbai with transfer of technology. Additional deals were signed with Thales and MBDA for systems and weapons

**What is the status of the deal?**
After repeated delays over four years, the first submarine began sea trials in May 2016 and is set to be commissioned on Thursday.
The second Scorpene Khanderi is undergoing sea trials and is expected to be commissioned by the year-end. All six submarines are expected to be inducted by the end of 2020

*The Navy now possesses 13 conventional submarines and one nuclear attack submarine INS Chakra on lease from Russia*

**Power point**
- *Kalvari* weighs about 1,600 tonnes
- Carries heavyweight wire guided surface and underwater target torpedoes
- For self-defence, it has mobile anti-torpedo decoys
- Has two 1,250 kW MAN diesel engines for rapid battery charging
- *Kalvari* borrows its name from India's first submarine *INS Kalvari*, which was commissioned on Dec. 8, 1967 and served till May 31, 1996

- ❖ நீர்மூழ்கி கப்பல்கள் பெரும்பாலும் எதிரிகளின் கண்காணிப்பில் அகப்பட பெரும் வாய்ப்புகள் உண்டு. ஆனால் AIP அமைப்பை உடைய நீர்மூழ்கி கப்பல்களால் பெரும் காலத்திற்கு நீரில் மூழ்கியபடியே இருக்க இயலும்.
- ❖ பிரான்ஸ் நாட்டு நிறுவனமான DCNSன் தொழில்நுட்ப பரிமாற்ற உதவியுடன் "திட்டம் 75"-ன் கீழ் (Project 75) மும்பையிலுள்ள மஸாகான் கப்பற்கட்டு தளத்தில் ஆறு ஸ்கார்பீன் வகுப்பு கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன.
- ❖ ஐ,என்.எஸ்.கல்வாரிக்கு அடுத்து ஐ,என்.எஸ் கந்தேரி 2020- ல் இந்திய கடற்படையில் இணைக்கப்பட உள்ளது. இது தற்போது முன்னோட்டங் காணல் (Sea Trial) நிலையில் உள்ளது.

### ATL சமுதாய தினம் – நிதி ஆயோக்

- நிதி ஆயோக் அமைப்பானது தன்னுடைய அடல் புத்தாக்க திட்டத்தின் (Atal Innovation Mission) கீழ் அடல் மேம்படுத்து ஆய்வக சமுதாய தினம் (Atal Tinkering Lab's Community Day) எனும் திட்டத்தை துவங்கியுள்ளது.
- நிதி ஆயோக்-கின் அடல் புத்தாக்க திட்டமானது நாட்டில் புத்தாக்கம் (Innovation) மற்றும் தொழிற்முனைவை (Entrepreneurship) ஊக்குவிப்பதற்காக கொண்டு வரப்பட்ட திட்டங்களில் முக்கியமான ஒன்றாகும்.
- இதற்காக நாடு முழுவதும் அடல் மேம்படுத்து ஆய்வகங்கள் (Atal Tinkering Labs) அமைக்கப்பட்டுள்ளன.
- நாட்டில் தொழிற்முனைவுப் போக்கின் ஊக்குவிப்பிற்கு ஓர் வினையூக்கியாகவும், புத்தாக்க சூழலை உண்டாக்கி அதற்கு கணிசமான ஊக்கம் அளிப்பதற்கும் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு மாவட்டங்களிலும், முன்மொழியப்பட்டுள்ள இந்திய பொலிவுறு நகரங்களிலும் குறைந்தபட்சம் ஒரு அடல் மேம்படுத்து ஆய்வகங்கள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- முறையான கல்வி அமைப்பில் பதிவு செய்யப்படாத 200 குழந்தைகளுக்கு அடல் மேம்படுத்து ஆய்வகங்கள் மூலம் புத்தாக்கங்களை கொண்டு செல்வதற்காக இந்த சமுதாய முன்னெடுப்புத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- சமுதாயத்தில் குழந்தைகளிடம் புத்தாங்கங்களை கொண்டு செல்வதன் மூலம் அவர்களை சமுதாய பிரச்சனைகளை தீர்ப்பவர்களாக உருவாக்க முடியும் என்ற யோசனையின் அடிப்படையில் இத்திட்டம் துவங்கப்பட்டுள்ளது.

### இந்தியா – மாலத்தீவுகள் – ஈகுவெரின் 2017

- இந்தியா மற்றும் மாலத்தீவுக்கு இடையேயான ஈகுவெரின் எனும் பெயருடைய இரு தரப்பு இராணுவக் கூட்டுப் பயிற்சியின் 9ஆம் பதிப்பு அண்மையில் கர்நாடகாவின் பெலகாவியில் நடைபெற்றது.
- இரு நாட்டு இராணுவங்களின் இணைந்து செயலாற்று தன்மையை மேம்படுத்துவதற்கும், பெலகாவியில் செயற்தன்மையுடைய கூட்டு செயல்பாட்டு மையத்தை தோற்றுவிக்க இரு நாட்டு இராணுவங்களுக்கு வாய்ப்பினை வழங்குவதற்கும் இந்த கூட்டுப்போர் பயிற்சி நடத்தப்படுகிறது.
- ஈகுவெரின் என்றால் மாலத்தீவு மொழியில் நண்பர்கள் என பொருள்படும்.
- பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகள் (Counter Insurgency and Counter Terrorism – CICT ops) மேல் முக்கியத்துவம் செலுத்தி இராணுவப் பயிற்சி மேற்கொள்வதற்காக இந்த ஈகுவெரின் கூட்டுப் பயிற்சி மேற்கொள்ளப்படுகின்றது.
- 2000 ஆம் ஆண்டு முதல் இரு நாடுகளிலும் மாறிமாறி இரு நாட்டு இராணுவங்களுக்கு இடையே இந்த கூட்டுப்போர் பயிற்சி நடத்தப்படுகிறது.

### சாகி ஒரே சேவை மையத்தின் பங்கு பற்றிய தேசிய பயிற்சிப் பட்டறை

- வன்முறைக்கான பலதரப்பட்ட தீர்வுகள் அளிப்பதை வலுப்படுத்துவதற்காக சாகி ஒரே சேவை மையத்தின் (One Stop Centres) பங்கு பற்றிய தேசிய பயிற்சிப் பட்டறை புது தில்லியில் நடத்தப்பட்டது.
- இது பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சகத்தின் சார்பாக நடத்தப்பட்டு அத்துறையின் அமைச்சர் மேனகா சஞ்சய் காந்தியால் துவக்கப்பட்டது.

- இந்த பயிற்சிப்பட்டறையில் 33 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து மாநில பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறையைச் சார்ந்த செயல்படுத்தும் அதிகாரிகளும் தோராயமாக 400க்கும் மேற்பட்ட ஒரே சேவை மைய அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

### *சாகி திட்டம்*

- இத்திட்டம் 2015ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து செயல்படுத்தப்படுகிறது.
- இத்திட்டம் மருத்துவ வசதி, காவல் உதவி, சட்ட உதவி, வழக்கு மேலாண்மை, உளவியல் ரீதியான கலந்தாய்வுகள் மற்றும் தற்காலிக உதவி போன்ற ஒருங்கிணைந்த சேவைகளை வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் அணுகிட உதவி செய்கிறது.
- இத்திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் ஒரே சேவை மையங்களை படிப்படியாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## வடகிழக்கு சிறப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

- 2017-2018ல் இருந்து வடகிழக்கு சிறப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (North East Special Infrastructure Development Scheme) என்னும் புதிய மத்திய துறைத் திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டம், மார்ச் 2020 வரை குறிப்பிட்ட துறைகளின் உட்கட்டமைப்பு உருவாக்கத்தில் உள்ள இடைவெளியை பூர்த்தி செய்வதற்காக அறிமுகப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முழு நிதியும் மத்திய அரசால் அளிக்கப்படும்.
- இந்த NESIDS திட்டமானது பின்வரும் துறைகளின் கீழ் உட்கட்டமைப்பை உருவாக்கும்.
    - நீர் வழங்கல், மின்சாரம், இணைப்பு மற்றும் குறிப்பாக சுற்றுலாவை ஊக்குவிக்கும் திட்டங்கள் தொடர்பான உட்கட்டமைப்பு,
    - கல்வி மற்றும் சுகாதாரப் பிரிவுகளின் சமூகத் துறைகளினுடைய கட்டமைப்பு.
- புதிய திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்துக்கள் இப்பகுதியில் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் கல்வி வசதிகளை வலுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் சுற்றுலாவை ஊக்குவித்து அதன் மூலம் உள்ளூர் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

### *தாமதமாகாத மத்திய வளங்களின் தொகுப்புத் திட்டம் (NLCPR)*

- 2020 ஆண்டு மார்ச் மாதம் வரை தற்போது உள்ள “தாமதமாகாத மத்திய வளங்களின் தொகுப்புத் திட்டத்தின் (Non-Lapsable Central Pool of Resources - NLCPR) தொடர்ச்சியை மத்திய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.
- திட்டத்தின் நிதியை மொத்த ஒதுக்கீடான 5300 கோடிகளில் 90:10 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகள் அளிக்கும். இந்தத் திட்டமானது தற்போது நடைபெறும் திட்டங்களை விரைவுபடுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டு அமைச்சகமானது NLCPRல் இருந்து பல்வேறு வடகிழக்கு மாநிலங்களின் உட்கட்டமைப்புத் திட்டங்களுக்காக நிதியை ஒதுக்கீடு செய்கிறது.
- அமைச்சகமானது, NLCPR (மாநிலம்) மற்றும் NLCPR (மத்தியம்) என்ற இரண்டு திட்டத்தின் கீழ் நிதியை ஒதுக்கீடு செய்கிறது. அதற்கான வருடாந்திர வரவு செலவு ஒதுக்கீடுகளானது சாதாரண வரவு செலவு செயல்முறைகளில் வழங்கப்பட்டுள்ளது.

## செயல்பாட்டு கடலியல் பயிற்சி மையம் – ஹைதராபாத்

- ஹைதராபாத் நகரில் சர்வதேச செயல்பாட்டு கடலியல் பயிற்சி மையத்தை அமைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இது யுனெஸ்கோ நிறுவனத்தின் இரண்டாம் வகை மையங்களுள் (C2C) ஒன்றாக அங்கீகரிக்கப்படும்.
- இதுவரை யுனெஸ்கோ நிறுவனம் உலகெங்கிலும் 94 சர்வதேச மற்றும் பிராந்திய அளவிலான மையங்களை இரண்டாம் வகை யுனெஸ்கோ மையங்களாக அறிவித்துள்ளது.
- இந்தியாவில் அமையவுள்ள ITCOO மையத்தின் நோக்கமானது இந்திய பெருங்கடல் விளிம்பில் (IOR) உள்ள நாடுகள், இந்தியப் பெருங்கடல் மற்றும் அட்லாண்டிக் பெருங்கடல் பகுதியில் கடற்கரை ஆப்பிரிக்க நாடுகள், யுனைஸ்கோ கட்டமைப்பின் கீழ் அடங்கும் சிறிய தீவு தேசங்கள் ஆகியவற்றில் திறனை வளர்ப்பதற்காக ஒரு பயிற்சி மையத்தை அமைப்பதாகும்.
- செயல்பாட்டு கடலியல் என்பது பல்வேறு துறைகளுக்கு தகவல் சேவைகளை வழங்குவதற்காக திட்டமிட்ட கடல்சார் படிப்புகளை மேற்கொள்வது ஆகும். இந்த ஆய்வானது மீனவர்கள், பேரிடர் மேலாண்மை பணிகள், கப்பல்துறை, கடலோரக் காவல் படை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கடல் கடந்து அமைந்திருக்கும் நிறுவனங்கள் போன்றவை தங்கள் அன்றாட பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்த உதவும்.
- இந்த மையமானது திறன்களை வளர்க்கவும், பயிற்சியளிக்கவும், துறை சார்ந்த அறிவுகளைப் பகிரவும், தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் உதவும்.
- யுனெஸ்கோ நிறுவனத்தின் இரண்டாம் வகை மையம் இந்தியாவில் அமைவது, இந்தியப் பெருங்கடலில் இந்தியா ஒரு முன்னணி நாடாக வெளிப்படுவதற்கு வாய்ப்பளிக்கும்.
- இந்த மையமானது நிலையான வளர்ச்சி இலக்கு -14 ஐ (Sustainable Development Goal-14) அடைய இந்தியாவுக்கு உதவும்.
- SDG 14: நீரில் வாழும் உயிரினங்கள்: பெருங்கடல்கள், கடல்கள் மற்றும் கடல் சார் வளங்களைப் பேணுதலும், வளங்குன்றா வளர்ச்சிக்காக அவற்றை நீடிக்கத்தக்க விதத்தில் பயன்படுத்துதலும்
- அனைத்து உயர்ரக தொழில்நுட்ப வசதிகளையும் கொண்ட இந்த மையம் தற்சமயம் ஹைதராபாத் நகரிலுள்ள கடல் தகவல் சேவைகளுக்கான இந்திய மையத்தில் இயங்கி வருகிறது.

## ஏர்டெல் நிறுவனத்துக்கு ஆதார் பதிய அளிக்கப்பட்ட உரிமம் ரத்து

- பாரதி ஏர்டெல் நிறுவனம் மற்றும் ஏர்டெல் செலுத்து வங்கியின் வாடிக்கையாளர்களின் செல்லிடப் பேசி எண்ணுடன் ஆதாரை பதிய அளிக்கப்பட்ட உரிமத்தை இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) தற்காலிகமாக ரத்து செய்துள்ளது.
- ஏர்டெல் செல்லிடப் பேசி எண்ணுடன் ஆதார் விவரத்தை வாடிக்கையாளர்கள் பதிவு செய்யும்பொழுது, அவர்களின் அனுமதியின்றி ஏர்டெல் செலுத்து வங்கிக் கணக்கை அந்நிறுவனம் தொடங்குவதாக வாடிக்கையாளர் தரப்பில் இருந்து புகார்கள் வந்தன.
- இது தொடர்பாக UIDAI ஆணையம் பிறப்பித்திருக்கும் உத்தரவில் பாரதி ஏர்டெல் மற்றும் ஏர்டெல் செலுத்து வங்கி ஆகியவற்றிற்கு அளிக்கப்பட்ட உரிமம் உடனடியாக தற்காலிக ரத்து செய்யப்படுவதாகக் கூறியுள்ளது.

## ரபேல் ஒப்பந்தம்

- 36 ரபேல் ரக போர் விமானங்களை பிரான்சு நாட்டிடம் இருந்து வாங்குவதற்கு இருநாடுகளுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தமானது இந்திய விமானப்படையின் முக்கியமான தேவையின் பொருட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- இந்த ஒப்பந்தம் பாதுகாப்பிற்கான அமைச்சரவைக் குழுவால் (Cabinet Committee on Security - CCS) அங்கீகரிக்கப்பட்டது.
- 2010 செப்டம்பர் மாதம், இந்தியாவும் பிரான்சும் போர் விமானங்கள், அதன் உதிரி பாகங்கள், ஆயுதங்கள் மற்றும் அதன் தொடர்புடைய கருவிகள், 10 வருடகால வருடாந்திர பராமரிப்பு போன்றவற்றிற்காக 7.87 பில்லியன் யூரோ மதிப்புள்ள ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- ஐரோப்பாவின் மீட்டியோர் மற்றும் மைக்கா ஏவுகணைகள் பொருத்தப்பட்ட ரபேல் போர் விமானம் இந்தியாவின் தாக்குதல் திறனுக்கு ஒரு பெரிய உத்வேகமாக அமையும்.
- மீட்டியோர் மற்றும் மைக்கா ஏவுகணைகளின் தாக்குதல் வரம்பு 100 கிலோ மீட்டர்கள் தொலைவை கொண்டதாகும்.
- இவை "பார்வைக்கெட்டும் தூரத்தைத் தாண்டி தாக்கும் ஆயுதங்கள்" (Beyond Visual Range) என்ற பிரிவில் இருப்பதால் இந்த ஏவுகணைகள் ரபேல் போர் விமானத்திற்கு மிகப்பெரிய அனுகூலத்தை கொடுக்கும்.

## தேசிய ஆயுஷ் மருத்துவ திட்டம் நீட்டிப்பு

- மத்திய அரசின் நிதியுதவியின் கீழ் செயல்படுத்தப்படும் தேசிய ஆயுஷ் மருத்துவ திட்டத்தினை (NAM) ஏப்ரல் 2017 முதல் மார்ச் 2020 வரை மூன்று ஆண்டு காலத்துக்கு தொடர்ந்து செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- தேசிய ஆயுஷ் மருத்துவ திட்டம் (NAM) மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. அனைவருக்கும் மலிவான விலையில் ஆயுஷ் மருத்துவ சேவைகள் கிடைக்கப்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் துவங்கப்பட்ட இத்திட்டத்தை, மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ள மத்திய அரசு இதற்காக 2400 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது.
- மருத்துவம் மற்றும் சுகாதார சேவைகள் கிடைப்பதில் மக்களுக்கு இருக்கும் இடைவெளிகளை குறைப்பதற்காக மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுடன் இணைந்து ஆயுஷ் மருத்துவ திட்டம் தீர்வுகளைக் கண்டு வருகிறது. பாதிப்புக்குள்ளாகக் கூடிய பகுதிகள் மற்றும் தொலை தூரத்தில் இருக்கும் மக்களிடம் ஆயுஷ் மருத்துவ சேவைகளைக் கொண்டு சேர்ப்பதும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.
- தேசிய ஆயுஷ் மருத்துவ திட்டமானது இந்தியாவின் பழம்பெரும் பாரம்பரிய மருத்துவ முறைகளான ஆயுர்வேதம், யுனானி, சித்த மருத்துவம் மற்றும் ஹோமியோபதி மருத்துவ முறைகளை பற்றிய அறிவினை நோய் தடுப்புக்கு பயன்படுத்தவும், ஊக்குவிக்கவும் முற்படுகிறது.

## புகையிலை விற்பனைப் பொருட்கள் மீதான கடுமையான எச்சரிக்கை ரத்து

- 2014 சட்டதிருத்த விதியான – புகையிலை பொருட்களின் உறைகளின் மீது 85 சதவிகித அளவில் உடல்நல எச்சரிக்கைக்கான புகைப்படங்களை அச்சிடுவது கட்டாயம் என்ற விதியை கர்நாடக உயர்நீதிமன்றம் அரசியலமைப்பு விதிமுறைகளை மீறுவதாக காரணம் காட்டி ரத்து செய்துள்ளது.
- ஆனாலும் இந்த விதியில் திருத்தம் செய்வதற்கு முன்னர், 40 சதவிகித அளவிற்கு புகைப்பட எச்சரிக்கை இருக்க வேண்டும் என்று அமல்படுத்தப்பட்ட விதி நடைமுறையில் இருக்கும் என உத்தரவிட்டுள்ளது.
- மத்திய சுகாதாரத்துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட 85 சதவிகித புகைப்பட எச்சரிக்கை விதியை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீது இந்த உத்தரவை BS படீல் மற்றும் BV நாகரத்னா ஆகிய நீதிபதிகள் அடங்கிய அமர்வு பிறப்பித்துள்ளது.
- 2016-ம் வருடம் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து சிகரெட் மற்றும் புகையிலைப் பொருட்கள்

[உறையிடல் மற்றும் பெயரிடல்] திருத்த விதிகள், 2014 [The Cigarettes and Other Tobacco Products (Packaging and Labelling) Amendment Rules, 2014 (COTPA)] என்ற விதிமுறைகள் நடைமுறைக்கு வந்தன.

- மத்திய சுகாதார அமைச்சகம், அரசியலமைப்பு விதி 19(1)(g) யின் கீழ் உள்ள வியாபாரம் செய்யும் உரிமை மீது காரணமில்லாத கட்டுப்பாடுகளை இது விதிப்பதாகவும் , இந்த உத்தரவு அரசியலமைப்பு விதிகளை மீறும் செயல் என்றும் உயர்நீதிமன்ற அமர்வு கூறியது.
- உலகளவில் புகைப்பட வடிவிலான உடல்நல எச்சரிக்கைகளுக்கான சராசரி அளவானது முதன்மையான விளம்பரத் தளத்தில் 30 சதவிகிதம் மட்டுமே ஆகும்.
- உலகின் ஒட்டுமொத்த சிகரெட் பயன்பாட்டில் 51 சதவிகிதத்தை கொண்டுள்ள உலகின் முதல் மூன்று சிகரெட் நுகர்வு நாடுகளான அமெரிக்கா, சீனா மற்றும் ஜப்பான் புகைப்பட எச்சரிக்கைகள் இன்றி, வார்த்தைகள் அடிப்படையிலான எச்சரிக்கைகளை மட்டுமே கொண்டுள்ளன.

## இந்தோ-மியான்மர் உடன்படிக்கை

- ரக்கைன் மாநிலத்தில் சகஜ நிலையை மீண்டும் கொண்டு வரவும், வளர்ச்சி மேம்பாடுகளை உண்டாக்கவும் இந்தியா மற்றும் மியான்மர் ஆகிய இரு நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டுள்ளது.
- ரக்கைன் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்திற்காகவும், அப்பகுதி மக்களின் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்காகவும் ஓர் ஒத்துழைப்பு கூட்டுறவு பங்காளருடன் இரு நாட்டு அரசுகளுக்கிடையேயான ஒப்பந்தத்தை மியான்மர் மேற்கொள்வது இதுவே முதன் முறையாகும்.
- பிற நாட்டில் அகதிகளாகி தாய் நாடான மியான்மர் திரும்பும் ரோகிங்கியா மக்களின் உடனடித் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட நிலையில் (Prefabricated) இருக்கும் வீடுகளை அமைத்தல் உட்பட பல திட்டங்களை இந்திய அரசானது இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ள உள்ளது.

## நசீம்-அல்-பஹ்ர்

- நசீம்-அல்-பஹ்ர் என்றழைக்கப்படும் இந்தியா மற்றும் ஓமன் ஆகிய நாடுகளுக்கிடையேயான கடற்படை கூட்டுப்பயிற்சியின் 11வது பதிப்பு இந்த ஆண்டு ஓமனின் உடாம் பகுதியிலுள்ள சையத் பின் சுல்தான் கடற்படை தளத்தில் துவங்கியுள்ளது.
- 1993ஆம் ஆண்டிலிருந்து இரு ஆண்டிற்கு ஒருமுறை (Biennial) நடைபெறும் இந்த கூட்டுப்போர் பயிற்சியானது, இந்தியா மற்றும் ஓமனின் இருதரப்பு கூட்டுப் போர் பயிற்சிகளின் 24வது வருடத்தை குறிக்கும் விதமாக இவ்வாண்டு மேற்கொள்ளப்பட உள்ளது.
- இந்தியாவின் இரு கடற்படை கப்பல்களான ஐ.என்.எஸ் டிரைகண்ட் மற்றும் ஐ.என்.எஸ்.டேக் ஆகியவை ஓமனில் நடைபெறவுள்ள இக்கூட்டுப் பயிற்சியில் பங்கேற்க உள்ளன.'
- மேலும் இந்தியாவின் ஓர் நீர்மூழ்கி கப்பலும் P81 என்ற நீண்ட தூர பயணத் திறனுடைய கடற்படை விமானமும் இக்கூட்டுப்போர் பயிற்சியில் முதன்முறையாக பங்கேற்க உள்ளன.
- நான்காயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியா அரபிக் கடற்கரை பகுதியில் அமைந்துள்ள நாடான ஓமனுடன் பண்டைய கடல்சார் பாரம்பரியத்தையும் கடல்சார் தொடர்பையும் கொண்டுள்ளது.
- 1953ஆம் ஆண்டு இந்தோ-ஓமன் நட்பு, வர்த்தகம், பயண வழிகாட்டல் ஒப்பந்தத்தின் மூலமாக இந்தியாவிற்கும் ஓமனிற்கும் இடையே அதிகாரப்பூர்வமாக இரு தரப்பு உறவு ஏற்படுத்தப்பட்டது.
- இதுவே இந்தியாவிற்கும், ஓர் அரபு நாட்டிற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட முதல் நட்பு, வர்த்தக, பயணப் போக்குவரத்து ஒப்பந்தமாகும்.

## இந்தியாவின் முதல் தேசிய இரயில் மற்றும் போக்குவரத்து பல்கலைக்கழகம்

- நாட்டின் பெரும் மனித வளத்தின் திறனை வளர்க்கவும், திறமுடைமையை கட்டமைக்கவும் நாட்டின் முதல் தேசிய இரயில் மற்றும் போக்குவரத்து பல்கலைக் கழகத்தை வதோதராவில் அமைக்க மத்திய இரயில்வே அமைச்சகத்தின் மாற்றுருவாக்கத் திட்டத்திற்கு (Transformative Initiative) மத்திய கேபினேட் அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.
- பல்கலைக்கழக மானிய நல்கு ஆணையத்தின் (பல்கலைக்கழகங்களாக கருதப் பெறும் நிறுவனங்களின்) ஒழுங்குமுறை விதிகள் 2016-ன் படி (UGC – Institutions deemed to be Universities - Regulations 2016) புது ஆரம்ப நிலை வகைப்பாட்டின் (De nova Category) கீழ் பல்கலைக்கழகமாக கருதத்தக்க கல்வி நிறுவனமாக இந்த தேசிய இரயில்வே மற்றும் போக்குவரத்து பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட உள்ளது.
- புதிதாகத் தொடங்கிட முன் மொழியப்பட்டுள்ள இப்பல்கலைக்கழகத்தின் நிர்வாக நிறுவனமாக செயல்பட கம்பெனிகள் சட்டம் 2013-ன் பிரிவு 8-ன் கீழ் ஓர் இலாப நோக்கற்ற நிறுவனம் தொடங்கப்பட உள்ளது.
- இந்த நிர்வாக நிறுவனமானது (Managing Company) இப்பல்கலைக்கழகத்திற்கு நிதி மற்றும் உள்கட்டமைப்பு உதவிகளை செய்யும். மேலும் இது பல்கலைக்கழகத்தின் வேந்தர் மற்றும் சார்பு வேந்தரை நியமிக்கும்.
- பெரும் அளவிலான வேலைவாய்ப்புகளை உண்டாக்குதல், தொழிற்முனைவுத் தன்மையை வளர்த்தல், தொழிற்நுட்ப வசதிகளை ஒருமுகப்படுத்தி திறன் வளர்த்தல் போன்றவற்றின் மூலம் இந்தியாவின் “ஸ்டார்ட் அப் இந்தியா” மற்றும் “திறன் இந்தியா” போன்ற திட்டங்களுக்கு இப்பல்கலைக்கழகம் ஆதரவளிக்க உள்ளது.

## சுஜய் – கடலோர காவற் ரோந்து படகு

- 105 மீட்டர் நீளமுடைய ஆறு கடலோர காவற் ரோந்து படகுகள் வரிசையின் ஆறாவது கப்பலான “சுஜய்” கப்பலை கோவாவில் இந்திய கடலோரக் காவற்படை ரோந்து காவற்பணியில் இணைத்துள்ளது.
- “பெரும் வெற்றி” எனும் பொருளுடைய சுஜய் எனும் பெயரானது இக்கப்பலிற்கு சூட்டப்பட்டுள்ளது.
- 105 மீட்டர் நீளமுடைய கடலோர ரோந்து கடற்படகுகளானது கோவாவில் உள்ள கப்பற் கட்டுதளத்தில் உள்நாட்டுத் தொழிற்நுட்பத்தோடு வடிவமைக்கப்பட்டு நவீனகால (State of Art) வழிகாட்டு மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் (Navigation and Communication), உணர்விகள் (Sensors) போன்றவை பொருத்தப்பட்டு கட்டமைக்கப்பட்டுள்ளன.
- வடகிழக்கு கடற்காவற் கட்டுப்பாட்டு செயல் மற்றும் நிர்வாகப் பிரிவின் கீழ் ஒடிஸாவின் பாரதீப் கடலோரக் காவற்படை தளத்தில் இக்கப்பல் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.
- இந்திய கடற்பரப்புகளின் பிரத்யேக பொருளாதார மண்டலங்களின் (Exclusive Economic Zone) கண்காணிப்பிற்கென ஈடுபடுத்தப்பட உள்ள இக்கப்பலானது குறிப்பாக மேற்கு வங்கம் மற்றும் ஒடிஸா ஆகிய மாநிலங்களில் கடற்சார் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்படும்.

## ஜவுளித் துறையின் திறன் கட்டுமானத் திட்டம்

- 2017-18 முதல் 2019-20 ஆண்டு காலத்திற்கான ஜவுளித் துறையின் திறன் கட்டுமானத் திட்டம் (Scheme for Capacity Building in Textile Sector) எனும் புதிய திறன் மேம்பாட்டுத் திட்டத்திற்கு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

- முறைசார் தொழிற் துறையின் (Organised Sector) நூற்பு (spinning) மற்றும் நெசவு (weaving) பிரிவைத் தவிர ஜவுளித் துறையின் பிற அனைத்து பிரிவுகளின் முழுமதிப்புச் சங்கிலியும் (Valur Chain) இத்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படும்.
- இதனால் அதிக பணியாளர்கள் செறிவுடைய ஜவுளித் துறைக்கு திறனுடைய மனித ஆற்றல் (Skilled Manpower) அளிப்பு உறுதி செய்யப்படும்.
- மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகத்தால் அறிவிக்கப் பெறும் பொது விதிகளின் படி நிதியளிக்கும் கூறுகளோடு, திறன் மேம்பாட்டு பயிற்சியுடன் ஒத்திசைந்த தேசிய திறன் மேம்பாட்டு தகுதி கட்டமைப்பை இத்திட்டம் (National Skill Qualification Frame work) கொண்டுள்ளது.

## கங்கா கிராமங்கள்

- இந்திய அரசு 'கங்கா கிராமம்' என்ற திட்டத்தை புது தில்லியில் நடைபெற்ற கங்கா கிராம் சுவச்சதா சம்மேளனம் என்ற நிகழ்ச்சியில் அறிமுகம் செய்தது.
- இத்திட்டமானது மத்திய நீர்வளத்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது.
- உத்தரகாண்ட், உத்திர பிரதேசம், பீகார், ஜார்கண்ட் மற்றும் மேற்கு வங்க மாநிலங்களில் கங்கை நதிக் கரையோரத்தில் அமைந்திருக்கும் 4470 கிராமங்களை திறந்தவெளியில் மலம் கழிக்காத [Open Defecation-Free (ODF)] கிராமங்களாக மத்திய அரசு சமீபத்தில் அறிவித்தது.
- இந்த கிராமங்களில் இருந்து 24 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றை 'கங்கா கிராமங்கள்' என்ற உயர்ந்த நிலைக்கு மாற்ற முன்முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இந்த கிராமங்களை மத்திய அரசும், மாநில அரசுகளும் இணைந்து தேர்ந்தெடுத்துள்ளன.
- 'கங்கா கிராமம்' திட்டமானது கங்கை நதிக் கரையில் அமைந்திருக்கும் கிராமங்களை பொது மக்கள் உதவியுடன் வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்துச் செல்லும் ஒருங்கிணைந்த முயற்சி ஆகும்.
- இத்திட்டத்தின் கீழ் திடக்கழிவு மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, குளங்கள் மற்றும் நீர்நிலைகள் புனரமைப்பு, நீர் மேலாண்மைத் திட்டங்கள், இயற்கை வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மருத்துவ தாவரங்கள் பயன்பாட்டை ஊக்குவிப்பது ஆகியவற்றைச் சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

## சமீப் – இந்திய வெளியுறவுக் கொள்கைகள்

- மாணவர்கள் மற்றும் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்திற்குமான கூட்டிணைவுத் திட்டம் எனும் ஆங்கிலப் பொருள்படும் சுருக்க தமிழ் வார்த்தையே சமீப் (SAMEEP – Students And Ministry of External Affairs Programme] எனப்படும்.
- இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளையும், அதன் உலகளாவிய வெளியுறவு ஈடுபாட்டையும் நாடு முழுவதுமுள்ள மாணவர்களிடத்தினில் கொண்டு செல்வதற்காக இத்திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது.
- இந்தியாவின் உலகளாவிய குறிக்கோள்களையும், அது உலக மன்றத்தில் கொண்டிருக்கும் நிலைத்தன்மை பற்றி மாணவர்களுக்கு ஆர்வமூட்டவும், அதனைப் பற்றி அறிந்தவர்களாய் அவர்களை உருவாக்கவும், தன்னுடைய வாழ்க்கை விருப்பத்தேர்வாய் இராஜ்ஜிய ரீதியான பணிகளில் மாணவர்கள் ஆர்வத்தை செலுத்திடுவதற்காகவும் இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் அனைத்து அமைச்சகங்களின் கீழ் பணிபுரியும் கீழ்நிலை செயலாளர்களும்

(Under Secreteries) தங்களுடைய சொந்த ஊர்களுக்கும், தாங்கள் பயின்ற கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்றவற்றிற்கும் சென்று அங்குள்ள மாணவர்களுடன் மத்திய வெளியுறவுத் துறை செயல்படும் விதம், அதனுடைய கொள்கைகளின் அடிப்படைக் கூறுகள், அங்கு எப்படி இராஜ்ஜிய ரீதியிலான விஷயங்கள் மேற்கொள்ளப்படுகிறது போன்றவை விவாதிப்பர்.

## நல் ஆளுகை மீதான இரு நாள் பிராந்திய மாநாடு

- நல் ஆளுகை (Good Governance) மற்றும் சிறந்த நிர்வாக நடைமுறைகளை பிரதிபலித்தல் (Replication of Best Practices) போன்றவற்றின் மீதான இரு நாள் பிராந்திய மாநாடு கவுகாத்தியில் நடைபெற்றது.
- நாட்டின் அனைத்து மாநிலங்களையும் அவற்றின் ஆளுகைச் செயல்பாட்டுகளின் அளவைப் பொறுத்து தரவரிசைப்படுத்திட ஐந்து முக்கிய அளவுருக்கள் உள்ளன என்று மாநிலங்களை தரவரிசைப்படுத்துவதற்கான நல் ஆளுகை குறியீட்டின் மீதான தொழிற்நுட்ப அமர்வில் தெரிவிக்கப்பட்டது.
- குடிமக்களுக்கான ஆளுகையை (Governance) மேம்படுத்துவதே மாநிலங்களை ஆளுகையின் அடிப்படையில் தரவரிசைப் படுத்துவதற்கான நோக்கமாகும்.
- இத்தகு தரவரிசை மாநிலங்களுக்கிடையே போட்டித்தன்மையுடைய கூட்டாட்சித்துவத்தை (Competitive Federalism) ஏற்படுத்தும்.
- இந்தியா முழுவதும் 22 மாநிலங்களைச் சேர்ந்த 150 பங்கேற்பாளர்கள் இந்த இரு நாள் மாநாட்டில் பங்கு பெற்றனர்.

## கடற்நிலப் பாலத்தின் மேல் முதல் விமான ஓடுதளம்

- கடற்கரை மற்றும் ஆழமற்ற கடல் பகுதியில் Roller-compacted concrete (RCC) கட்டுமான பொருட்கள் மூலம் விமான ஓடுதளம் அமைத்து லட்சத்தீவின் அகத்தி விமான நிலையத்தை விரிவாக்குவதற்கு இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு (Airports Authority of India) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- கடற் நீரினால் சூழப்பட்ட தொடர்பற்ற இரு தனித்தனி நிலப்பகுதிகள் RCC கட்டுமான அமைப்புகளால் நிலப்பாலம் போல் இணைக்கப்பட்டு அவற்றின்மேல் ஏற்கனவே உள்ள நீண்ட ஓடுதளம் விரிவுப்படுத்தப்படும்.
- இத்தகு நீண்ட விமான ஓடு பாதையின் மூலம் பெரும் ATR வகை விமானங்களையும் இத்தீவில் இயக்க இயலும்.
- கடற் நிலப் பாலத்தின் மீது வெற்றிகரமாக விமான ஓடு தளம் அமைக்கப்பட உள்ளது இந்தியாவில் இதுவே முதன்முறையாகும்.
- தற்போது இவ்விமான நிலையத்தில் சிறு டர்போ விமானங்கள் (Turbo Props) மட்டுமே இயங்குகின்றன.
- இந்த விமான ஓடுதளம் கட்டிமுடிக்கப்பட்டால் இவற்றில் பெரிய ATR-72 விமானங்களை இயக்க இயலும்.
- இதற்கு முன் இதே போன்ற திட்டம் மும்பையின் ஜூஹு (Juhu) விமான நிலையத்திலும், இமாச்சலப் பிரதேசத்தின் குல்லு (Kullu) விமான நிலையத்திலும் மேற்கொள்ளப்பட இருந்த நிலையில் அவை அவ்விடத்திற்கு பொருத்தமில்லாததாக இருந்ததன் காரணமாக கைவிடப்பட்டன.

### இந்தியாவின் முதல் குளிரூட்டப்பட்ட புறநகர் ரயில் சேவை

- இந்தியாவின் முதல் குளிரூட்டப்பட்ட அகலப்பாதை புற நகர் இரயில் மின்தொடர் வண்டி மகாராஷ்டிராவில் மும்பையில் மேற்கத்திய இரயில்வேயின் கீழ் போரிவிலி நிலையத்தில் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டுள்ளது..
- மேற்கத்திய இரயில்வேயால் இயக்கப்படும் இந்த இரயில் போரிவிலி இரயில் நிலையத்திலிருந்து தெற்கு மும்பையின் சர்ச்கேட் வரையில் தனது முதல் பயணத்தை தொடங்கியது.
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மூன்று கட்ட உந்துவிசை அமைப்புடைய இந்த முதல் குளிரூட்டப்பட்ட புறநகர் ரயில் வண்டியானது சென்னை ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையிலிருந்து மும்பைக்கு கொண்டு வரப்பட்டது.
- தொடர்வண்டி ஓட்டுனர் மற்றும் வண்டி காப்பாளர் ஆகியோரிடையேயான மற்றும் பயணிகளுக்கான தொலைத்தொடர்புக்கு எதிர்வரும் நிலையங்கள் பற்றிய ஒளி-ஒலி அறிவிப்பு குறியீடு காட்டிகளோடு ஜி.பி.எஸ் அடிப்படையிலான பயணிகள் தகவல் அமைப்பும் இந்த தொடர்வண்டியில் பொருத்தப்பட்டுள்ளது.

### மின்னணு – மனிதவள மேலாண்மை அமைப்பு (e-HRMS)

- மத்திய பணியாளர் குறைகள் தீர்ப்பு மற்றும் ஓய்வூதிய அமைச்சகம் நல் ஆளுகை தினத்தை (டிசம்பர் 25) முன்னிட்டு மின்னணு-மனித வள மேலாண்மை அமைப்பு ஒன்றை ஆரம்பித்துள்ளது.
- இது மத்திய அரசு பணியாளர்கள் விடுப்பு விண்ணப்பிக்கவும் தங்கள் பணி சார்ந்த தகவல்களை அணுகவும் ஏற்படுத்தப்பட்ட ஒரு நேரடி இணையவாயில் நடைமுறை அமைப்பாகும்.
- இதன்மூலம் பணியாளர்கள் தங்களின் விடுப்பு, சம்பளம், பொது சேமநல நிதி போன்ற பணி சம்பந்தப்பட்ட அனைத்து வித தகவல்களையும் பார்க்க முடியும்.
- மேலும் இந்த ஒரே இணைய தளத்தில் கடன்கள் மற்றும் முன்கூட்டியே பெறும் தொகைகள், விடுப்பு, விடுப்பு பணம், பயணம், நீண்ட தூர பயணப்படிகள் போன்றவற்றிற்கான பலதரப்பட்ட கோரிக்கைகளையும், ஈட்டுகளையும் பணியாளர்கள் அணுகிப் பெற்றிட முடியும்.
- இந்த இணைய தளம் நிர்வாகத்தை எளிதாக்கும் முயற்சியின் ஒரு படி என ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- இது அரசின் தாரக மந்திரமான குறைந்தபட்ச அரசாங்கம் அதிகபட்ச நிர்வாகம் என்பதுடன் ஒத்துப்போகிறது.
- இந்த இணையவாயிலில் ஐந்து தொகுதிகளுடன் 25 விதமான பயன்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- இந்த இணைய தள நடைமுறை அனைத்து அரசுப் பணியாளர்களையும் முழுமையான தானியங்கி மனித வள மேலாண்மை அமைப்பிலான பணியாளர் இணையதளத்திற்கு கொண்டு வரும் ஒரு நடவடிக்கையாகும்.

### உலக வங்கி – இந்தியா - தமிழ்நாடு

- தமிழ்நாட்டின் நீர்ப்பாசன வேளாண்மையின் நவீனமயமாக்கல் திட்டத்திற்கு (Tamilnadu Irrigated Agriculture Modernization Scheme) நிதியளிப்பதற்காக உலக வங்கி, இந்தியா மற்றும் தமிழ்நாடு அரசுகளுக்கு இடையே முத்தரப்பு கடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- இதன் வழியே, உலக வங்கியின் கடன் நல்கு அமைப்பான மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான சர்வதேச வங்கியானது ( International Bank for Reconstruction and Development-IBRD) 19 ஆண்டுகள் முதிர்ச்சி காலத்தோடு (Maturity period), 5 ஆண்டுகள் கூடுதல் அவகாச காலமுடைய

(Grace Period) 318 மில்லியன் டாலர்களை கடனாக வழங்க உள்ளது.

- சிறு மற்றும் குறு விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளை அதிகரிப்பதற்காகவும், தமிழ்நாட்டின் நீர் மேலாண்மை நடைமுறையை மேம்படுத்துவதற்காகவும், பருவநிலை நெகிழ்திறனுடைய (Climate Resilient) வேளாண் தொழிற்நுட்பத்தை மேம்படுத்துவதற்காகவும் இக்கடனுதவி அளிக்கப்படுகின்றது.

## உண்மை நேர அளவில் சுனாமி ஆழிப் பேரலைகளின் மூழ்கடிப்பு

- உண்மை நேர அளவில் (real time), சுனாமி ஆழிப் பேரலைகளினால் ஏற்படுத்தப்படும் மூழ்கடிப்பின் விஸ்தீரன அளவை (extent of inundation) முன்கணித்த முதல் நாடாக இந்தியா உயர்ந்துள்ளது.
- ஹைதராபாத்தில் உள்ள பெருங்கடல் தகவலியல் அறிவியலுக்கான இந்திய தேசிய மையத்தில் (Indian National Centre for Ocean information Sciences), இந்திய சுனாமி ஆழிப் பேரலைகளுக்கான முன்கூட்டிய எச்சரிக்கை மையம் (Indian Tsunami early warning centre-ITEWC) தொடங்கப்பட்ட பிறகு ஏற்படுத்தப்பட்ட முதல் முக்கியமான மைல்கல் இதுவே ஆகும்.
- பெருங்கடல் தகவலியல் அறிவியலுக்கான இந்திய தேசிய மையம் (INCOIS) மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஓர் தன்னதிகார சுயாட்சி (Autonomous) அமைப்பாகும்.
- தற்போது நடப்பில், ITEWC மையமானது சுனாமி ஆழிப்பேரலைகள் கடற்கரைகளைத் தாக்கவல்ல சாத்திய நேரத்தையும், அவற்றின் சாத்தியமான உயரத்தையும் பற்றிய தகவல்களை வழங்குகிறது.
- தற்போது தொழிற்நுட்ப ரீதியாக இம்மையம் மேம்படுத்தப்பட்டுள்ளதால், சுனாமி ஆழிப் பேரலைகளினால் உண்டாக்கப்படும் மூழ்கடிப்பின் விஸ்தீரனத்தையும், அதன் அளவையும் (Extent and level) முன்கணிப்பின் வழியாக இம்மையத்தினால் முன்கூட்டியே கூற இயலும்.
- ஆஸ்திரேலியா, இந்தோனேசியா, இந்தியப் பெருங்கடலின் கரை நாடுகள் (Indian Ocean Rim Countries) போன்ற அனைத்து இந்தியப் பெருங்கடலியல் நாடுகளுக்கும் இது பெரும் உதவியாக அமையும்.

## 2018-ன் ஐந்தாவது பெரிய பொருளாதாரமுடைய நாடு

- பிரிட்டனின் பொருளாதாரம் மற்றும் வணிக ஆராய்ச்சிக்கான மையத்தின் (Centre for Economics and Business Research) 2018-ஆம் ஆண்டிற்கான உலக பொருளாதார லீக் அட்டவணைப்படி (World Economic League Table), 2018-ஆம் ஆண்டு பொருளாதார வல்லமையில் இங்கிலாந்து மற்றும் பிரான்ஸை விஞ்சி, உலகின் 5-வது பெரிய பொருளாதாரமுடைய நாடாக இந்தியா உயர உள்ளது.
- இவ்வட்டவணையின் நடப்பாண்டிற்கான அறிவிப்பின் படி, ஏழாவது இடத்தில் உள்ள இந்தியா பொருளாதார வல்லமையில், அமெரிக்க டாலர்கள் மதிப்பின் அடிப்படையில் 2018ஆம் ஆண்டில் பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்தை பின் தள்ளி ஐந்தாவது பெரிய பொருளாதாரமுடைய நாடாகவும், 2032-ல் 3வது பெரிய பொருளாதார நாடாகவும் உயர உள்ளது.
- மேலும் இவ்வட்டவணைப்பின் அறிவிப்பின் படி, 2032-ல் அமெரிக்காவை பின்னுக்குத் தள்ளி சீனா உலகின் மிகப்பெரிய பொருளாதாரமுடைய முதல் நாடாக உயர உள்ளது.
- உலகச் சந்தையில் மலிவான ஆற்றலும், தொழிற்நுட்ப விலைகளுமே 2018-ல் உலக பொருளாதாரத்திற்கு ஊக்கமளிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- எரிபொருள் துறையின் மீது அதிகளாவிய சார்பையும், சர்வதேச எண்ணெய் சந்தையில் தன்னுடைய எண்ணெய் எரிபொருட்களுக்கு மிகக் குறைந்த சரக்கு விலையையும் (Low Oil commodity Price) கொண்டுள்ளதன் காரணமாக 2017-ல் 11வது பெரிய பொருளாதாரமுடைய நாடாக உள்ள இரஷ்யா 2032-ல் 17வது இடத்தை அடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டார்னியர் 228

- ஹிந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் லிமிடெட் (HAL- Hindustan Aeronautics Ltd) நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள டார்னியர் 228 வகை விமானங்களை குடிமை சேவைகளுக்கான (Civilian Flights) விமானங்களாகப் பயன்படுத்த மத்திய சிவில் விமான போக்குவரத்திற்கான பொது இயக்குநரகம் (Directorate General of Civil Aviation-DGCA) அனுமதியளித்துள்ளது.
- இதுவரையில் இந்த விமானம் பாதுகாப்புப் படைகளால் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது.
- மேலும் குடிமை சேவைகளுக்காக இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல் விமானம் இதுவேயாகும்.
- இந்த உத்தரவின் மூலம் HAL தனது டார்னியர் 228 விமானங்களை இந்தியாவில் விமானப்போக்குவரத்து சேவை வழங்கும் நிறுவனங்களுக்கு விற்க இயலும். அதனால் இந்த விமானங்களை மத்திய அரசின் பிராந்திய இணைப்பிற்கான விமானப் போக்குவரத்துத் திட்டமான “உடான்” (UDAN) திட்டத்திற்கு பயன்படுத்த இயலும்.
- டார்னியர் 228 விமானங்கள் மிகவும் பல்துறை (versatile) பல்நோக்கு பயன்பாடுடைய (multi-purpose) ஓர் இலகுரக (light) போக்குவரத்து விமானங்களாகும்.

## மீயொலி இடைமறிப்பு ஏவுகணை

- உள்நாட்டுத் தொழிற்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ள அதிநவீன வான் பாதுகாப்பு ஏவுகணையை வங்கக்கடலில் ஒடிஸாவின் பாலசோரில் உள்ள அப்துல் கலாம் வீலர் தீவில் இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- இது 2017ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 3 மூன்றாவது மீயொலி இடைமறிப்பு (Supersonic interceptor) ஏவுகணையாகும்.
- வளிமண்டலத்தில், தரையிலிருந்து 30 கிலோ மீட்டருக்கு உட்பட்ட உயரத்திற்குள், தாழ்வான மட்டத்தில், உள் வருகைப் புரிந்த பிரித்வி எனும் கண்டங்களுக்கிடையேயான ஏவுகணையை இந்த இடைமறிப்பு ஏவுகணை தாக்கி அழித்துள்ளது.
- 7.5 மீட்டர் நீளமுடைய இந்த ஒற்றை திட எரிபொருள் நிலைகொண்ட, உந்து வழிகாட்டு அமைப்புடைய ஏவுகணை, வழிகாட்டு அமைப்புகள், உயர் தொழில்நுட்ப கணிணி மற்றும் மின்னணு இயந்திரவியல் செயலாக்கிகளையும் (Activator) கொண்டது.
- இது இந்தியாவின் இரண்டடுக்கு கண்டங்களுக்கு இடையிலான ஏவுகணை (Two-layered ballistic missile defense) பாதுகாப்பு அமைப்பின் ஓர் பகுதியாகும்.
- இது இவ்வமைப்பின் இரண்டாம் அடுக்கு பாதுகாப்பு அமைப்பாகும்.
- உலகில் இஸ்ரேல், இரஷ்யா, அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகள் மட்டுமே இதுவரை வெற்றிகரமாக உள்நாட்டுத் தொழிற்நுட்பமுடைய, கண்டங்களுக்கு இடையிலான ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை உருவாக்கியுள்ளன.

## ஈகுவெரின்

- இந்தியா மற்றும் மாலத்தீவுகள் ஆகிய நாடுகளின் ராணுவங்களுக்கு இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி (EKUVERIN) கர்நாடகாவின் பெல்காவியில் நடத்தப்பட்டது.

- இக்கூட்டுப் பயிற்சியின் நோக்கம் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் தீவிரவாதத் தடுப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை மையமாகக் கொண்ட ராணுவப் பயிற்சி நடவடிக்கையை இரு நாட்டு ராணுவத்திற்கிடையே ஏற்படுத்துதலாகும்.
- இந்தப் பயிற்சி பெல்காமில் கூட்டு நடவடிக்கைகள் மையம் ஒன்றை ஏற்படுத்த இரு நாட்டு இராணுவத்திற்கும் வாய்ப்பைத் தந்துள்ளது.
- நண்பர்கள் என்று மாலத்தீவுகளின் மொழியில் பொருள்படும் இந்த ஈகுவெரின் ராணுவ கூட்டு பயிற்சி நடவடிக்கையானது இந்திய தரைப்படை மற்றும் மாலத்தீவுகள் தேசிய ராணுவப் படை ஆகியவற்றிற்கிடையே 2009ம் ஆண்டிலிருந்து ஒரு வருடம் விட்டு ஒரு வருடம் என்ற மாற்று வருட முறையில் இரு நாடுகளில் மாறி மாறி நடத்தப்படுகின்றது.
- இந்தியப் பெருங்கடலின் சிறிய நாடான மாலத்தீவில் உள்ள லம்மு என்ற பவளத் தீவில் காதோ என்ற பகுதியில் கடந்த ஆண்டு இந்த கூட்டுப்பயிற்சி நடத்தப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

### வசாங் - 15

- வசாங் – 15 எனும் பெயருடைய கண்டங்களுக்கு இடையிலான அணுஆயுத ஏவுகணையை வடகொரியா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- அமெரிக்காவின் அனைத்து பிரதான பகுதிகளையும் தாக்கவல்ல திறனுடைய மாபெரும் கன அணு ஆயுதங்கள் உடைய கண்டங்களுக்கிடையேயான ஏவுகணையே வசாங்-15 ஆகும்.
- அமெரிக்கா மற்றும் வடகொரியாவுக்கு இடையே பகைமூட்டம் நிலவி வரும் இவ்வேளையில் இது இந்த ஆண்டில் வடகொரியாவின் 20-வது ஏவுகணையாகும். மேலும் இது வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ள மூன்றாவது கண்டங்களுக்கு இடையிலான ஏவுகணையாகும்.
- முதல் முறையாக பியாங் யாங் மாகாணத்திலிருந்து ஏவப்பட்ட இந்த ஏவுகணை பல்லாயிரம் மைல்களை தாண்டி ஜப்பானிய கடல் பகுதியில் உள்ள பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் (EEZ-Exclusive Econimic Zone) இருந்த இலக்கைத் தாக்கி அழித்தது.

### இந்தியா-சர்வதேச கடல்சார் அமைப்பு

- சர்வதேச கடல்சார் அமைப்பினுடைய (International Maritime Organisation – IMO) கவுன்சில் தேர்தலில் இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- “பி” வகைப்பாடு பிரிவில் நடந்த உறுப்பினர் தேர்தலில் இரண்டாவது அதிகபட்ச வாக்குகள் பெற்று அடுத்த இரண்டாண்டிற்கு உறுப்பினராக இந்தியா மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- 144 வாக்குகள் பெற்று இந்தியா இரண்டாவது இடத்தையும், 146 வாக்குகள் பெற்று ஜெர்மனி முதலிடத்தையும் பெற்றது.
- IMO அமைப்பு தொடங்கப்பட்டதிலிருந்து வகைப்பாடு - ‘B’- பிரிவுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்தப்படுவது இதுவே முதன்முறை ஆகும்.
- இதற்குமுன் B பிரிவின் 10 உறுப்பினர்களும் ஒருமனதான ஆதரவு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- இந்தியா 1959ஆம் ஆண்டு முதல் IMO-வில் உறுப்பினராக இருந்து வருகின்றது.
- 1983 – 1984 ஆகிய இரண்டு ஆண்டுகளைத் தவிர IMO தொடங்கப்பட்டது முதல் அதன் கவுன்சிலுக்கு உறுப்பினராக இந்தியா தொடர்ந்து தேர்வு செய்யப்பட்டு வருகிறது.

### *சர்வதேச கடல்சார் அமைப்பு*

- IMO 1948-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.
- இது 172 உறுப்பினர்களையும், 3 துணை உறுப்பினர்களையும் கொண்டது.
- கடல்சார் விவகாரங்களுக்கென பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட உலகின் முதல் சர்வதேச அமைப்பு சர்வதேச கடல்சார் அமைப்பாகும்.
- இங்கிலாந்தை தலைமையிடமாகக் கொண்ட ஐ.நா. அவையின் ஒரே சிறப்பு நிறுவனம் சர்வதேச கடல்சார் அமைப்பாகும்.
- இது கப்பல்துறை நிறுவனங்களுக்கான ஒழுங்குமுறை கட்டமைப்புகளை உருவாக்கி அதன் மூலம் சர்வதேச போக்குவரத்துகளின் சுற்றுச்சூழல் செயல்திறன் மற்றும் கடல்சார் பாதுகாப்பு, வர்த்தகம் போன்றவற்றிற்கான தரநிலைகளை நிர்ணயிக்கும் உலக அமைப்பாகும்.
- கடல்சார் பாதுகாப்பை அதிகரித்தல் மற்றும் கடல் மாசுபாடு அடைவதை தடுத்தல் ஆகியவை இதன் முக்கிய நோக்கங்களாகும்.
- இந்த அமைப்பில் மூன்று வகைப்பிரிவின் கீழ் உறுப்பினர்கள் உள்ளனர்.
  - ✓ வகைப்பாடு A : சர்வதேச கடல் போக்குவரத்து சேவைகளை அளிப்பதில் ஆர்வமுடைய நாடுகள் இப்பிரிவில் இருக்கும். இதில் 10 உறுப்பினர்கள் உள்ளனர்.
  - ✓ வகைப்பாடு B : சர்வதேச கடல்வழி வர்த்தகத்தில் ஆர்வமுடைய நாடுகள் இவ்வகைப்பாட்டில் உள்ளன. இதில் 10 உறுப்பினர்கள் உள்ளனர்.
  - ✓ வகைப்பாடு C : கடற்வழிப் பயணத்தில் (navigation) சிறப்பு ஆர்வமுடைய நாடுகள் இவ்வகைப்பாட்டில் உள்ளன. இதில் 20 உறுப்பினர்கள் உள்ளனர்.
- B வகைப்பாட்டில் உள்ள இந்தியா A வகைப்பாட்டில் உறுப்பினராவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.
- A வகைப்பாட்டில் இந்தியா உறுப்பினரானால் IMO-வின் பல்வேறு குழுக்களில் பங்கேற்க வாய்ப்பு உண்டாகும்.
- அதன் மூலம் IMO-வின் முடிவு எடுக்கும் செயல்பாட்டில் இந்தியா பங்கெடுக்க இயலும்.

### மினமாட்டா உடன்படிக்கை

- மினமாட்டா (minamata Convention) உடன்படிக்கையின் உறுப்பு நாடுகளின் முதல் மாநாடு (CoP-1) அண்மையில் சுவிட்சர்லாந்து நாட்டின் தலைநகரான ஜெனிவாவில் நடைபெற்றது.
- மெர்குரி அமிலத்தின் பாதக விளைவுகளில் இருந்து சுற்றுச் சூழலையும், மனித ஆரோக்கியத்தையும் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட உலக ஒப்பந்தமே மினமாட்டா உடன்படிக்கை ஆகும்.
- 50 உலக நாடுகள் இந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டதன் மூலம் (ratified) 2017-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்த உடன்படிக்கை செயல்பாட்டிற்கு வந்தது.
- இதன் முதல் மாநாட்டில் "மாசு இல்லாத கிரகத்தை நோக்கி" (Towards a pollution free planet) என்ற அறிக்கை வெளியிடப்பட்டது.
- உலக சுற்றுச் சூழல் வசதி (Globla Environment Facility – GEF) ஆனது மினமாட்டா உடன்படிக்கையின் நிதியியல் அமைப்பாகும் (Financial mechanism).
- இந்தியா இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ள போதிலும் இதுவரை

பின்னேற்பளிக்கவில்லை. (ratification).

### சாபஹார் துறைமுகம்

- "ஷாஹித் பேஹெஸ்தி துறைமுகம் "என்றழைக்கப்படும் சாபஹார் துறைமுக திட்டத்தின் முதல் கட்டம் அண்மையில் தொடங்கி வைக்கப்பட்டது.
- 2016-ஆம் ஆண்டின் இந்திய-ஈரானிய-ஆப்கானிய முத்தரப்பு ஒப்பந்தத்தின் கீழ் பாகிஸ்தான் வழியேயான போக்குவரத்தைப் புறக்கணித்து இது இம்மூன்று நாடுகளிடையே புதிய புவியிட முக்கியத்துவம் வாய்ந்த போக்குவரத்து வழிப்பாதையை அளித்துள்ளது.
- பெர்ஷிய வளைகுடாவின் வெளிப்புறத்தில் இத்துறைமுகம் அமைந்துள்ளதால் இந்தியாவின் மேற்கு கடற்கரையிலிருந்து இத்துறைமுகத்தை எளிதில் அணுகலாம்.
- மேலும் சாபஹார் துறைமுகத்தை ஈரானின் பிற இரயில்வே நெட்வோர்க்குகளுடன் இணைப்பதற்காக சாபஹார் துறைமுகம் மற்றும் ஜஹேடான் இடையே இந்தியா புதிய இரயில் பாதைகளை அமைத்து வருகிறது.
- இது ஆப்கானிஸ்தானில் இந்தியா கட்டமைத்துவரும் டேலாரம் – ஜாரஞ் சாலையுடன் மேலும் இணைக்கப்படும். இது ஜஹேடான் வழியாக இரயில் மூலமாக ஆப்கன்-ஈரான் எல்லையில் இணையும்.
- இந்தியா மற்றும் ரஷியாவை இணைக்கும் வகையில் இத்துறைமுகத்தை ஜஹேடான் இரயில்வே நெட்வோர்க்கின் மூலம் சர்வதேச வட-தென் போக்குவரத்து வழிப்பாதையுடனும் (International North-South Transit Corridor) இணைத்திட இயலும்.
- ஒரு மாதத்திற்கு முன் சாபஹார் துறைமுகத்தின் மூலமாக கடல் வழியாக இந்தியா தனது முதல் கோதுமை சரக்கை ஆப்கானிற்கு அனுப்பி இருந்தது குறிப்பிடத்தக்கது.

### கூட்டு வான் பயிற்சி

- தென் கொரியத் தலைநகர் சியோலில் தென்கொரியா மற்றும் அமெரிக்கா இணைந்து 'விஜிலெண்ட் ஏஸ்' (Vigilant Ace) எனும் மிகப்பெரிய அளவிலான கூட்டு வான் பயிற்சியை மேற்கொண்டுள்ளன.
- வட கொரியா வாசங்-15 எனும் அதிநவீன மற்றும் கண்டங்களுக்கு இடையேயான ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்தததை அடுத்து இந்த கூட்டுப்போர் பயிற்சியை இரு நாடுகளும் மேற்கொண்டுள்ளன.
- கொரியத் தீபகற்பத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும், போர் தயார்நிலை மற்றும் போர் செயல்பாட்டு திறன்களை மேம்படுத்துவதற்காகவும் இக்கூட்டு போர் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.
- அமெரிக்கா மற்றும் தென் கொரியாவிற்கு இடையேயான வருடாந்திர கூட்டு வான் பயிற்சியின் பெயரே விஜிலெண்ட் ஏஸ் ஆகும்.
- கொரியத் தீபகற்பத்திலிருந்து ஜப்பானின் ஒகினாவில் அமைந்துள்ள கடேனா வான்படை தளம் வரை போர் விமானங்கள் பயிற்சி மேற்கொண்டன.

### அமெரிக்கா வெளியேற்றம்

- இடம்பெயர்தல் மீதான ஐ.நாவின் உலக உடன்படிக்கையில் இருந்து (UN's Global Compact on Migration) அமெரிக்கா வெளியேறியுள்ளது.

- கடந்த ஆண்டு ஐநா பொது அவையினால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அகதிகள் மற்றும் குடியேற்றத்துக்கான நியூயார்க் பிரகடனம் எனும் இந்த உடன்படிக்கை ஒரு சட்ட பிணைப்பற்ற (Non binding) உடன்படிக்கையாகும். அன்றிலிருந்து அமெரிக்கா இதன் உறுப்பினராக இருந்து வருகின்றது.
- இந்த அகதிகள் மற்றும் குடியேற்றத்திற்கான உடன்படிக்கையிலிருந்து வெளியேற்றம் உட்பட மொத்தம் நான்கு சர்வதேச உடன்படிக்கையிலிருந்து அமெரிக்கா இந்த ஆண்டு வெளியேறி உள்ளது.
- அகதிகள் மற்றும் இடம்பெயர்பவர்களின் உரிமைகளை காப்பதையும் அவர்கள் மறுகுடியமர்வுக்கு (resettle) உதவுவதையும் நோக்கமாகக் கொண்டு, குடியேறுதலுக்கான உலக உடன்படிக்கையின் மீது பேச்சுவார்த்தை நடத்த இப்பிரகடனம் அழைப்பு விடுக்கின்றது.
- முன்னால் அதிபர் பராக் ஒபாமா ஆட்சி காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஐநா உடன்படிக்கை ஆனது அமெரிக்காவின் குடியேற்ற அல்லது இடம்பெயர்வு, அகதிகள் கொள்கைகளுடனும், டிரம்ப் நிர்வாகத்தின் குடியேற்ற கோட்பாடுகளுடனும் முரண்பட்ட நிலையில் பல்வேறு எண்ணிக்கையிலான கூறுகளைக் கொண்டுள்ளது என காரணம் காட்டப்பட்டு இந்த வெளியேற்றம் அமெரிக்காவால் நியாயப்படுத்தப் பட்டுள்ளது.

## "Flag 4"

- ஐக்கிய அரபு எமிரகத்தின் [United Arab Emirates – UAE] ஆயுதப் படைகளானது இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் இராணுவத்துடன் இணைந்து அபுதாபியில் கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.
- "Flag 4" என இந்தக் கூட்டுப் போர் பயிற்சிக்கு பெயர் இடப்பட்டுள்ளது.
- போர் பயிற்சியில் பங்குபெறும் சகோதர மற்றும் நட்பு நாடுகளிடையே அவர்களின் இராணுவ கருத்தோட்டங்களை ஒன்றிணைப்பதற்காக செயல்படவும், போர்க்கள அனுபவங்களை அதிகம் பெறவும், இராணுவங்களின் எதிர்ப்பு திறன்களை அதிகப்படுத்தவும் இந்த இருவார கால பயிற்சி நடைபெறுகின்றது.

## பருவநிலை மாற்றம் மீதான சர்வதேச மாநாடு – நேபாளம்

- பருவநிலை மாற்றம் மீதான சர்வதேச மாநாடு நேபாளத்தில் அண்மையில் நடைபெற்றது.
- நான்கு நாள் நடைபெற்ற இம்மாநாட்டில் பருவநிலை மாநாடு மற்றும் உலக வெப்ப மயமாதலினால் இந்துகுஷ் மலைத்தொடர்களில் உண்டாகும் பாதக விளைவுகள் போன்றவற்றின் மீது கவனம் செலுத்தப்பட்டது.
- நேபாளத்தின் முதல் பெண் அதிபர் மற்றும் தற்போதைய இரண்டாவது நேபாள அதிபரான பித்யா பண்டாரி இம்மாநாட்டை தொடங்கி வைத்தார்.
- ஒருங்கிணைந்த மலைகள் மேம்பாட்டிற்கான சர்வதேச மையத்தினோடு [International Centre for Integrated Mountain Development] சேர்ந்து நேபாளத்தின் சுற்றுச்சூழல் அமைச்சகம் இம்மாநாட்டை நடத்தியுள்ளது.
- ஆப்கான் தொடங்கி மியான்மர் வரை அமைந்துள்ள மலைத்தொடரே இந்துகுஷ் இமயத் தொடராகும்.
- ஆசியாவின் 10 முக்கிய நிதி அமைப்புகளின் ஆதாரமாகவும், 210 மில்லியன் மக்களுக்கு சுற்றுச்சூழல் சேவை, தண்ணீர் மற்றும் வாழ்வாதாரம் ஆகியவற்றை அளிப்பானாகவும் இந்துகுஷ் மலைத்தொடர் உள்ளது.

## கூட்டு ஒத்துழைப்பு குழு

- ஐக்கிய அரபு எமீரகமானது சவூதி அரேபியாவுடன் இணைந்து அரபு ஒத்துழைப்பு கவுன்சிலிலிருந்து [GCC – Gulf Co-operation Council] தனியான ஓர் "கூட்டு ஒத்துழைப்பு குழுவை" [Joint Co-operation Committee] ஏற்படுத்தி உள்ளது.
- அரபு ஒத்துழைப்பு கவுன்சிலுக்கு கத்தாருடன் இராஜ்ஜிய ரீதியிலான (Diplomatic) சச்சரவு நீடிக்கும் இவ்வேளையில் இது 6 உறுப்பினர்களுடைய GCC–ன் முக்கியத்துவத்தை பலவீனப்படுத்தும் நகர்வாக கருதப்படுகின்றது.
- இராணுவம், அரசியல், பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் கலாச்சாரம் ஆகிய களங்களின் அனைத்து பிரிவுகளிலும், இரு நாடுகளின் பிற நலன்களிலும் ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்காக இப்புதிய குழு உருவாக்கப்பட்டுள்ளது.
- அபுதாபியின் முடிசூட்டு இளவரசரான ஷேக் முகமது பின் ஜயேத் அல் நஹ்யான் இக்குழுவிற்குத் தலைமைத் தாங்குவார்.

### அரபு ஒத்துழைப்பு கவுன்சில் – *GCC*

- GCC ஆனது ஈராக் தவிர்த்து பெர்சிய வளைகுடாவில் உள்ள அனைத்து அரபு நாடுகளுக்கிடையேயான பிராந்திய அரசியல் மற்றும் பொருளாதார சங்கம் ஆகும்.
- பஹ்ரைன், குவைத், ஓமன், கத்தார், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமீரகம் ஆகியவை இதன் உறுப்பினர்களாகும்.
- ஆறு நாடுகளிடையே பொருளாதாரம், பாதுகாப்பு, கலாச்சாரம் மற்றும் சமூக ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்த இது அமைக்கப்பட்டது.
- மேலும் ஒத்துழைப்பு மற்றும் பிராந்திய விவகாரங்களைப் பற்றி விவாதிக்க இக்கவுன்சிலில் வருடாந்திர மாநாடுகளும் நடத்தப்படுகின்றன.
- GCC ல் உள்ள அனைத்து நாடுகளும் முடியாட்சி (Monarchy) உடைய நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.
- அவற்றுள்,
    - குவைத், கத்தார், பஹ்ரைன் ஆகிய மூன்று நாடுகள் அரசியலமைப்பு முடியாட்சி உடைய [Constitutional Monarchy] நாடுகளாகும்.
    - ஓமன் மற்றும் சவூதி அரேபியா ஆகிய இரண்டும் முழுமையான முடியாட்சி [Absolute Monarch] உடைய நாடுகளாகும்.
    - ஐக்கிய அரபு எமிரகமானது [UAE – United Arab Emirates] கூட்டாட்சி முடியுடைய (Federal Monarchy) ஓர் நாடாகும். [UAE ஆனது ஏழு மாநிலங்களை உடையது. இவை ஒவ்வொன்றும் தனக்கென ஓர் அமிர் உடைய முழுமையான முடியாட்சி கொண்ட மாநிலங்களாகும்]

## கும்பமேளா மற்றும் நேப்பிள் பிட்சா

- யுனெஸ்கோ அமைப்பின் கீழ் உள்ள தொட்டுணர முடியாத கலாச்சார பாரம்பரியங்களின் பாதுகாப்பிற்கான அரசுகளுக்கு இடையேயான குழு தென்கொரியாவின் ஜேஜீ நகரில் நடைபெற்ற தன்னுடைய 12-வது கூட்டத்தில் மனித குலத்தின் தொட்டுணரமுடியாத கலாச்சார பாரம்பரிய பிரதிநிதித்துவ பட்டியலில் (Representative List of Intangible Cultural Heritage of Humanity) "கும்பமேளாவை" சேர்த்துள்ளது.
- ஹரித்துவார், அலகாபாத், உஜ்ஜைனி, நாசிக் ஆகிய நான்கு இடங்களில் 12 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த கும்பமேளாவை "பூமியில் உலகிலேயே அதிகமான புனித யாத்திரிகர்கள் பங்கு பெறும் அமைதியான கூடுகை" என யுனெஸ்கோ அங்கீகரித்துள்ளது.

- யோகா மற்றும் நவ்ரோஸ் ஆகிய இரண்டினிற்கு அடுத்து, இரண்டு ஆண்டுகளில் இந்தியாவிலிருந்து கும்பமேளா மூன்றாவதாக இப்பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ளது.

- தெற்கு இத்தாலியின் நேப்பிள் பகுதியில் தலைமுறை தலைமுறையாக முன்னெடுத்து கொண்டு வரப்பட்டிருக்கும் பிட்சா சுழற்றுதல் தயாரிப்பு கலையும் யுனெஸ்கோவின் தொட்டுணர முடியாத கலாச்சார பாரம்பரிய பிரதிநிதித்துவ பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

## வாசினார் கூட்டமைப்பில் இந்தியா

- பொதுமக்கள் நலத்திற்காக பயன்படுத்தப்படும் பொருட்கள் அல்லது தொழில்நுட்பங்களை இராணுவத்திலும் பயன்படுத்தப்படுவது இரட்டை பயன்பாடு தொழில்நுட்பம் (Dual use Technology) என்று அழைக்கப்படுகிறது.
- இத்தகைய இரட்டை பயன்பாட்டு தொழில்நுட்பங்கள் மற்றும் பொருட்களின் வர்த்தகம் மற்றும் பயன்பாட்டை ஒழுங்குமுறைப்படுத்தும் வாசினார் கூட்டமைப்பில் (Wassenaar Arrangement) இந்தியா இணைந்துள்ளது. இந்தியா வாசினார் கூட்டமைப்பில் சேரும் 42-ஆவது உறுப்பினர் ஆகும்.



Wassenaar Arrangement Admits India As Member

The Wassenaar Arrangement, a multilateral export control regime, has decided to admit India as a member, a development that will help it acquire critical technologies and is being seen as a significant victory for the country's non-proliferation track record. The decision was taken at the two-day plenary meeting of the grouping in Vienna on Wednesday and Thursday. India is now a member of two of the four export control regimes, the other being Missile Technology Control Regime (MTCR), which the country had joined last year.

*(Text by Dipanjan Roy Chaudhury)*

THE WASSENAAR ARRANGEMENT was established in 1996 to contribute to regional and international security and stability by promoting transparency and greater responsibility in transfers of conventional arms and dual-use goods and technologies.

INDIA WILL BECOME the 42nd member of the Wassenaar Arrangement

EVERY 6 MONTHS MEMBER COUNTRIES exchange information on deliveries of conventional arms to non-Wassenaar Arrangement members

INFORMATION SHARING FALLS UNDER EIGHT BROAD WEAPONS CATEGORIES: battle tanks, armoured fighting vehicles, large-calibre artillery, military aircraft, military helicopters, warships, missiles or missile systems, and small arms and light weapons

- வாசினார் அமைப்பில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் பங்குபெற்ற இரண்டு நாள் சந்திப்பு ஆஸ்திரியா நாட்டிலுள்ள வியன்னா நகரில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின்போது இந்தியாவை கூட்டமைப்பில் இணைக்கும் முடிவு எடுக்கப்பட்டது.
- இக்கூட்டமைப்பில் இந்தியா உறுப்பினர் தகுதியைப் பெற்றிருப்பது இந்திய தொழில் நிறுவனங்களுக்கு உயர் தொழில்நுட்பங்கள் கிடைப்பதற்கும், பாதுகாப்பு மற்றும் விண்வெளித் துறையில் உயர் தொழில்நுட்பங்களை பெறுவதற்கும் வழிவகை செய்யும்.
- 48 உறுப்பினர் நாடுகளைக் கொண்ட அணுவாற்றல் வழங்குனர் குழுவில் (Nuclear Supplier Group - NSG) இந்தியா நுழைவதற்கு வாசினார் கூட்டமைப்பு உறுப்பினர் தகுதி வலுவாக வாதிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- சமீபத்தில் 2016ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஏவுகணைத் தொழில்நுட்ப கட்டுப்பாட்டு அமைப்பில் இந்தியா இணைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா - ஜெருசலேம்

- அமெரிக்காவினுடைய நீண்டகால கொள்கையிலிருந்து மாறுபட்டு, தற்போதைய அமெரிக்க

அதிபர் டொனால்டு டிரம்ப் இஸ்ரேலின் தலைநகரமாக ஜெருசலேம் நகரை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளார்.

- ❖ மேலும் இஸ்ரேலின் டெல் அவிவ்-ல் உள்ள அமெரிக்கத் தூதரகத்தை ஜெருசலேமிற்கு மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை துவங்குமாறும் அரசுத் துறைகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.
- ❖ ஜீடாயிசம், கிறிஸ்துவம் மற்றும் இஸ்லாமியம் ஆகியவற்றின் புனிதத் தலமாக ஜெருசலேம் நகரம் உள்ளது.
- ❖ ஜெருசலேம் நகரின் தனித்துவம் மிக்க மதம் மற்றும் கலாச்சார முக்கியத்துவங்களின் காரணமாக தீர்மானம் 181(II)-ன் கீழ் 1947-ல் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்ட பாலஸ்தீனப் பகுதியானது (British Mandate of Palestine) ஆனது இரு பகுதிகளாக அரபு நாடுகளுக்கும், யூதர்களுக்கும் என பிரிப்பதற்கு ஐநாவில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது, ஜெருசலேம் இரு பிரிவினருக்கும் இல்லாமல் ஐ.நா. பொறுப்பாட்சி மன்றத்தின் கீழ் (UN Trusteeship Council) தனிப்பட்ட சர்வதேச கட்டுப்பாட்டுப் பகுதியாக (Corpus separatum) நிர்ணயிக்கப்பட்டது.
- ❖ இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளாலும் ஜெருசலேம் அவற்றின் தலைநகராக கோரப்படுகின்றது.
- ❖ 1967-இல் இஸ்ரேலிய-அரபுப் போரின்போது ஜெருசலேம் நகரமானது இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்டது. இருப்பினும் இது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்படவில்லை.
- ❖ இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேத்தை அமெரிக்கா அங்கீகரித்ததற்கு அரபு நாடுகள், ஐரோப்பிய நாடுகள், ஐநா அவை என அனைத்தும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளன.

### UAE – முதல் விண்வெளி வீரர் திட்டம்

- ❖ துபாய் ஆட்சியாளர் ஷேக் முகம்மது பின் ரஷித் அல் மக்தவ்ம் துபாயின் முதல் விண்வெளி வீரர் திட்டத்தை (Astronaut Programme) தொடங்கி வைத்தார்.
- ❖ பல்வேறு விண்வெளி ஆராய்ச்சித் திட்டங்களுக்கு, நான்கு அமீரக விண்வெளி வீரர்களுக்கு பயிற்சி அளித்து, முடிவாக அவர்களை ஐந்து ஆண்டுகளுக்குள் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பும் வண்ணம் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டு உள்ளது.
- ❖ முந்தைய ஆண்டு UAE ஆனது ஆளில்லா விண்வெளி ஆய்வுகலத்தை 2021-ல் செவ்வாய் கோளின் சுற்றுவட்டப் பாதைக்கு அனுப்புவதற்கான திட்டத்தை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

### 11-வது WTO அமைச்சர்கள் மாநாடு

- ❖ உலக வர்த்தக நிறுவனத்தின் (World Trade Organisation) 11-வது WTO அமைச்சர்கள் மாநாடு 2011-ஆம் ஆண்டின் டிசம்பர் 11 முதல் 13 வரை அர்ஜென்டினாவின் பியூனேஸ் ஏரேஸ் நகரில் நடைபெற உள்ளது.
- ❖ அர்ஜென்டீனிய அமைச்சர் சுசானா மல்கோரா இம்மாநாட்டிற்கு தலைமை தாங்க உள்ளார்.
- ❖ இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை கூட்டப்படும் இம்மாநாட்டை முதல் தென் அமெரிக்க நாடாக அர்ஜென்டினா நடத்த உள்ளது.
- ❖ WTO அமைச்சர் மாநாடானது WTO-வின் உச்ச முடிவு எடுக்கும் அமைப்பாகும்.
- ❖ இம்மாநாடு வழக்கமாக இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை கூட்டப்படும்.
- ❖ WTO-வின் 164 உறுப்பு நாடுகளின் மூத்த அதிகாரிகள் மற்றும் வர்த்தக அமைச்சர் இந்த WTO அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்வர்.

- இதற்கு முந்தைய மாநாடு 2015, டிசம்பரில் கென்யத் தலைநகர் நைரோபியில் நடத்தப்பட்டது.

### ஹம்பன்தோட்டா – முறையான ஒப்படைப்பு

- இலங்கையின் தெற்கு மாகாணத்தில் அமைந்துள்ள வர்த்தக மற்றும் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த (strategic) ஹம்பன்தோட்டா துறைமுகத்தினை இலங்கை அரசு முறையான (formally) வகையில் 99 வருட குத்தகைக்கு சீனாவிடம் ஒப்படைத்துள்ளது.
- இலங்கை ஹம்பன்தோட்டா துறைமுகத்தின் மேம்பாட்டிற்கென சீனாவிடம் வாங்கிய 8 மில்லியன் கடனை திருப்பி செலுத்துவதற்காக வேண்டி இந்த குத்தகை ஒப்படைப்பை இலங்கை மேற்கொண்டுள்ளது.
- இந்த துறைமுகத்தைச் சுற்றிய முதலீட்டு மண்டலம் மற்றும் துறைமுகப் பகுதிகளை இலங்கை துறைமுக மேம்பாட்டு ஆணையமும், சீனாவின் Merchants Port Holding கம்பெனியும் இணைந்து உரிமங் கொள்ளும்.
- மேலும் கடந்த ஜீலை மாதம் 1.1 மில்லியன் டாலர்கள் அளவிலான ஒப்பந்தத்தில் ஹம்பன்தோட்டா துறைமுகத்தின் 70 சதவீதப் பங்கினை சீனாவிற்கு அளிக்க அந்நாட்டிடம் இலங்கை அரசு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- மேலும் இலங்கை அரசானது பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த (strategic) இந்த துறைமுகம் எந்த நாட்டினுடைய இராணுவத் தளமாகவும் பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டாது எனவும் உறுதியளித்துள்ளது.
- 2007ஆம் ஆண்டு முதல் சீனாவின் குவாங்சூ (Guangzhou) நகரோடு ஹம்பன்தோட்டா துறைமுக நகரமானது இரட்டை நகரமாக (Twin Cities) ஒருங்கமையும் படி உருவாக்கப்பட்டு வருகின்றது.
- புவியியல் ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் வேறுபட்ட தொலைவுடைய இரு பகுதிகளின் நாடுகள் இடையே அல்லது பிராந்தியங்கள், மாகாணங்கள், மாநிலங்கள், நகரங்கள் இடையே சமூக அல்லது சட்ட ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, அதன் வழி கட்டமைக்கப்படும் நகரங்களே இரட்டை நகரங்கள் எனப்படும்.
- அமைதி மற்றும் சமரசத்திற்கான செயல்பாடாக வேறுபட்ட கலாச்சாரங்களுடைய இந்த இரு நகரங்களுக்கிடையே நட்புறவு மற்றும் புரிந்துணர்வை வளர்ப்பதற்காகவும், வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காகவும் இத்தகு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

### உலகின் மிகப்பெரிய மிதக்கும் மின் ஆற்றல் உற்பத்தி திட்டம்

- சீனாவின் கிழக்கு மாகாணமான அன்ஹீய்-யில் உலகின் மிகப்பெரிய மிதக்கும் மின் ஆற்றல் உற்பத்தி நிலையத்தை 1 மில்லியன் யுவான் (yuan) செலவில் சீன அரசு கட்டமைத்து வருகின்றது.
- அன்ஹீய் மாகாணத்தின் சுரங்கப் பகுதிகளில் அமைந்துள்ள பயன்பாட்டில் இல்லாத நீர் பரப்பில் 150 MW மின்உற்பத்தி திறன் உடைய, உலகின் மிகப்பெரிய மிதக்கும் சோலார் நிலையம் அமைக்கப்பட உள்ளது.
- வழக்கமான நிலத்தினிலான சூரியஆற்றல் மின் உற்பத்தி நிலையங்களை ஒப்பிடுகையில் நீரின் மீதான மிதவை சூரியமின் உற்பத்தி நிலையங்களானது நீர் ஆவியாதலை குறைக்கும், நிலவள ஆதாரத்தை சேமிக்கும், மேலும் நீரின் மேற்பரப்பில் பாசிகள் வளருதலை தடுக்கும்.
- மேலும், நீரானது சோலார் அமைப்பின் இணைப்புகள் மற்றும் தகடுகளின் தொகுப்புகளை குளிர்விப்பதால், அவற்றின் உற்பத்தி திறனும் அதிகரிக்கும்.

- இதற்குமுன் சீனாவின் இதே அன்ஹீய் மாகாணத்தில் ஆசியாவின் மிகப்பெரிய மின்மாற்றி உற்பத்தியாளரான சன்குரோவ் (sungrow) எனும் நிறுவனத்தால் 40 MW உற்பத்தி திறன் கொண்ட மிகப்பெரிய மிதக்கும் சோலார் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

## உலக பொருளாதார சூழ்நிலை மற்றும் வாய்ப்புகள் அறிக்கை

- உலக பொருளாதார சூழ்நிலை மற்றும் வாய்ப்புகள் அறிக்கை (World Economic Situation and Prospects Report) ஐ.நா.வின் பொருளாதார மற்றும் சமுதாய விவகாரத்துறை (United Nations Department of Economic and Social Affairs – UN-DESA) மற்றும் ஐ.நா.வர்த்தக மற்றும் மேம்பாட்டு மாநாட்டின் (UNCTAD – United Nations Conference on Trade & Development) கூட்டிணைவால் வெளியிடப்படுகின்றது.
- 70-வது ஆண்டின் பிரசுரிப்பாக இவ்வாண்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- உலக நாடுகளின் பொருளாதார நிலையைப் பற்றி இந்த அறிக்கை விவரம் தெரிவிக்கும்.
- இந்த அறிக்கையானது 6.7 சதவீதம் என்ற நிலையில் உள்ள இந்தியாவின் நடப்பாண்டு பொருளாதார வளர்ச்சி ஆனது 2018-19-ல் 7.2 சதவீதமாகவும், 2019-20-ல் 7.4 சதவீதமாகவும் இருக்குமென கூறியுள்ளது.

### *UN-DESA*

- உலகின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளை களைவதற்கான பொறுப்புடைய ஐ.நா செயலகத்தின் ஓர் அமைப்பே UN-DESA ஆகும்.
- UN-DESA அமைப்பானது நியூயார்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் அமைந்துள்ளது.
- நீடித்த வளர்ச்சியை அடைவதற்கு வேண்டிய சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- உலக நாடுகள் தனிப்பட்ட தேசிய மேம்பாட்டு உத்திகளை வகுத்திடவும் அவற்றை செயல்படுத்திடவும் UN-DESA உலக நாடுகளுக்கு தனிப்பட்ட அளவிலும், பிராந்திய அளவிலும் உதவி புரியும்.
- மேலும் இது “நீடித்த வளர்ச்சி இலக்குகள் அறிக்கை” (Sustainable Development Goals Report) ஒன்றையும் வெளியிடுகின்றது.
- நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு உலக நாடுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் வருடாந்திர உலகளாவிய மற்றும் பிராந்திய அளவிலான முன்னேற்றங்களின் மதிப்பீடே நீடித்த வளர்ச்சி இலக்குகள் அறிக்கையாகும்

### *UNCTAD*

- UNCTAD ஆனது ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு குழுவின் (UNDG – United Nations development Group) ஓர் பகுதியாகும்.
- இதன் தலைமையகமானது சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் உள்ளது.
- வர்த்தகம், முதலீடு, மேம்பாடு போன்றவற்றினில் வளரும் நாடுகள் சந்திக்கும் பிரச்சனைகளை பிரத்யேகமாக கையாளுவதற்கென UNCTAD உருவாக்கப்பட்டுள்ளது.
- UNCTAD வெளியிடும் பிற அறிக்கைகள்
  - வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அறிக்கை (Trade and development Report)
  - உலக முதலீட்டு அறிக்கை (World Investment Report)
  - குறைவான வளர்ச்சியுடைய நாடுகள் அறிக்கைகள் (The Leased developed Countries Report)
  - தகவல் மற்றும் பொருளாதார அறிக்கை (Information and Economy Report)
  - தொழில்நுட்பம் மற்றும் படைப்பாற்றல் அறிக்கை. (Technology and Innovation Report)

- பொருட்கள் மற்றும் மேம்பாட்டு அறிக்கை (Commodities and development Report)

### IMT நெடுஞ்சாலை

- இந்தியா-மியான்மர்-தாய்லாந்து (India-Myanmar-Thailand - IMT) ஆகிய நாடுகளுக்கிடையேயான நெடுஞ்சாலை திட்டத்தை கம்போடியா மற்றும் லாவோஸ் PDR வழியே வியட்நாம் வரை விரிவுபடுத்துவதற்கு ஆசியான் நாடுகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள இந்தியா திட்டமிட்டு வருகின்றது.
- இந்தியா-மியான்மர்-தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு இடையேயான முத்தரப்பு நெடுஞ்சாலை திட்டமான IMT Highway திட்டம் தற்போது கட்டமைக்கப்பட்டு வருகின்றது.
- இந்தியாவின் கிழக்கு நோக்கிய செயற்கொள்கையின் (Act East Policy) கீழ் இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தின் மோரே (Moreh)-விலிருந்து மியான்மர் வழியாக தாய்லாந்தின் மே சோட் (Mae Sot) வரை நெடுஞ்சாலை அமைக்கப்பட்டு வருகின்றது. இதனோடு மேலும் இந்தியாவையும் கிழக்காசிய பகுதிகளையும் இணைக்க IMT மோட்டார் வாகன ஒப்பந்தம் (IMT Motor Vehicle Agreement – IMT MVA) ஒன்றையும் கொண்டு வர இந்தியா செயல்பட்டு வருகின்றது.
- IMT முத்தரப்பு நெடுஞ்சாலையின் சாலை உள்கட்டமைப்புகளை பயன்படுத்துவதற்காக இந்தியா, மியான்மர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் IMT MVA-வினை இறுதி செய்யவும், செயல்படுத்தவும் 2014ஆம் ஆண்டு பேச்சுவார்த்தையை துவங்கின என்பது குறிப்பிடத்தக்கது.
- தெற்காசியாவின் பிற பகுதிகளுடனும் இந்தியாவிற்கும் இந்தோ- ஆசிய தடையற்ற வர்த்தக பகுதிகளுக்கும் இடையே வணிகம் மற்றும் வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்காகவும் இந்த நெடுஞ்சாலை அமைக்கப்பட்டு வருகின்றது.
- இத்திட்டத்தை மியான்மரில் அமலாக்குவதில் இந்தியா பெரும் கடினங்களை சந்தித்து வருகின்றது. இதனால் 2015-ல் கட்டிமுடிக்க இலக்கிடப்பட்ட இத்திட்டமானது இன்னும் நிறைவடையாமல் உள்ளது.

### உலகின் மிகப்பெரிய தானியங்கு சரக்கு பெட்டக முனையம்

- சீனா தன்னுடைய வர்த்தக மையமான ஷாங்காயில் அமைந்துள்ள யாங்ஷன் ஆழ்கடல் துறைமுகத்தில் உலகின் மிகப்பெரிய தானியங்கி சரக்கு பெட்டக முனையத்தை முன்னோட்ட அடிப்படையில் தொடங்கியுள்ளது.
- உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு, தயாரிக்கப்பட்டுள்ள தானியங்கு பெட்டக கையாளுதல் உபகரணம் இத்திட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- மேலும் இத்துறைமுகத்தில் செயல்திறன் மற்றும் பாதுகாப்பிற்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தானியங்கு மேலாண்மை அமைப்பு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.
- தானியங்கு சரக்கு பெட்ட முனையத்தினால் துறைமுகத்தின் சரக்குகள் கையாளுதலின் செயல்திறன் அதிகரிப்பதோடு, 10 சதவீதம் என்றளவுக்கு கார்பன் உமிழ்வும் குறைக்கப்படும்.

### உலக சுற்றுலா மாநாடு

- சுற்றுலா மற்றும் கலாச்சாரம் மீதான ஐ.நா உலக சுற்றுலா நிறுவனம் மற்றும் யுனெஸ்கோவின் இரண்டாவது உலக மாநாடு அண்மையில் ஓமன் சுல்தானியத்தின் தலைநகரான மஸ்கட்டில் நடைபெற்றது.
- சுற்றுலா நிர்வாகம், சுற்றுலா மேம்பாடு, பாரம்பரிய கலாச்சார இடங்களின் பாதுகாப்பு, புத்தாக்கம் மற்றும் நகர மேம்பாட்டில் கலாச்சாரம் மற்றும் சுற்றுலாவின் பங்கு, நீடித்த வளர்ச்சிக்கான

வாகனமாக சுற்றுலாவில் கலாச்சார கூறுகளை பயன்படுத்துதல் போன்ற பல்வேறு தலைப்புகளின் மீது விவாதிப்பதற்காக இம்மாநாடு நடத்தப்படுகின்றது.

- ❖ உலக நாடுகளின் சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர்கள், தனியார் துறை பங்குதாரர்கள், நிபுணர்கள் பங்கு பெறும் இம்மாநாட்டில் சுற்றுலா மற்றும் கலாச்சார துறைகளில் அவர்களிடையே கூட்டிணைவை ஏற்படுத்தி, பின் அதனை பலப்படுத்தி அதன் மூலம் ஐ.நா.வின் 2030-ஆம் ஆண்டிற்கான நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான அவர்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்காக இம்மாநாடு நடத்தப்படுகிறது.

- ❖ இதற்கு முந்தைய முதலாவது UNWTO/UNESCO உலக சுற்றுலா மற்றும் கலாச்சார மாநாடு 2015-ல் கம்போடியாவின் சியேம் ரீப் (Siem Reap) நகரில் நடைபெற்றது.

- ❖ நீடித்த வளர்ச்சிக்காக சுற்றுலா மற்றும் கலாச்சார துறைகளில் உள்ள நற்விளைவுகளை வெளிக்கொண்டுவர கூட்டிணைந்து நல்லிணக்கத்தோடு செயல்படுவதற்கான சியேம் ரீப் பிரகடனம் (Siem Reap proclamation) ஏற்றுக் கொள்ளப்பட்டது.

***UNWTO***

- ❖ UNWTO – United Nations World Tourism Organisation ஒரு பொறுப்பான, நீடித்த, உலகளாவிய மற்றும் அணுகிடத்தக்க சுற்றுலாவை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்ட ஐ.நா.நிறுவனமாகும்.

- ❖ இதன் தலைமையகம் ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் அமைந்துள்ளது.

- ❖ இது 1975 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

- ❖ இந்தியா உட்பட 158 நாடுகள் UNWTO வில் உறுப்பினராக உள்ளன.

- ❖ மேலும் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கான சுற்றுலாவின் பங்கை அதிகரிக்கவும், சுற்றுலாவால் உண்டாகும் சாத்தியமான எதிர்மறை தாக்கங்களை குறைக்கவும், சுற்றுலாவிற்கான நெறிமுறைகளின் உலகளாவிய தொகுப்பை அமல்படுத்துவதற்கு (Global Code of ethics for Tourism) ஊக்கமளிக்கவும் UNWTO செயல்பட்டு வருகின்றது.

## நார்வே - FM நிறுத்தம்

- ❖ முழுமையான டிஜிட்டல் ரேடியோ பயன்பாட்டின் பரிமாற்றத்திற்காக உலகின் முதல் நாடாக நார்வே தனது தேசிய FM ஒலிபரப்பை (Frequency Modulation/ அதிர்வெண் பண்பேற்றி) நிறுத்தியுள்ளது.
- ❖ சிறந்த ஒலித் தரம், அதிக எண்ணிக்கையிலான சேனல்கள், FM radio வை விட எட்டு மடங்கு குறைந்த செலவு பயன்பாடு போன்றவை டிஜிட்டல் ரேடியோ வழியாக பெற இயலும் என்பதால் இப்பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேசிய ரேடியோ சேனல்களில் மட்டுமே இந்த பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ❖ பெரும்பான்மையான உள்ளூர் ரேடியோ நிலையங்கள் FM மூலமே ஒலிபரப்பை மேற்கொள்ளும்.

## உலக சமத்துவமின்மை அறிக்கை

- ❖ உலக சமத்துவமின்மை அறிக்கை (World Inequality Report) ஆனது பாரிஸின் ஸ்கூல் ஆஃப் எகானாமிக்ஸ்-ல் அமைந்துள்ள உலக சமத்துவமின்மை ஆய்வகத்தால் (World Inequality Lab) வெளியிடப்படுகின்றது.

- ❖ உலகில் நிலவும் சமத்துவமின்மையின் பரிமாணங்கள் மீதான ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதே இந்த அமைப்பின் நோக்கமாகும்.

- ❖ இந்த அறிக்கையின் படி, 1980ஆம் ஆண்டு முதல் உலகம் முழுவதும் 27 சதவீத புது வருமான பெருக்கமானது ஒரு சதவீத பணக்காரர்களால் கைக்கொள்ளப்பட்டு உள்ளது.

- அதே வேளையில் வெறும் 13 சதவீத வளர்ச்சி வருமானப் பெருக்கத்தை மட்டுமே உலகின் 50% ஏழைகள் அடைந்துள்ளனர்.
- இந்த அறிக்கையில் இந்தியாவில் நிலவும் சமத்துவமின்மையும் முன்னிலைப்படுத்தி காட்டப்பட்டு உள்ளது.
- 2014ஆம் ஆண்டு இந்தியாவின் மொத்த 56% வருமான உற்பத்தியை 10 சதவீத பெரும் பணக்காரர்கள் அடைந்துள்ளனர்.
- 1980ஆம் ஆண்டிற்கு பின் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள திறந்த சீர்திருத்தங்கள் மற்றும் கட்டுப்பாடு நீக்கமே (deregulation) கணிசமான சமத்துவமின்மை அதிகரிப்பின் காரணம் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### சீனா மற்றும் பிரிட்டின் ஒத்துழைப்பிற்கான உறுதிமொழி

- பெய்ஜிங்கின் நாணயத்தின் வெளிநாட்டு பயன்பாட்டிற்கான ஒரு மையமாக லண்டனை பயன்படுத்திட பிரிட்டனும், சீனாவும் உறுதி பூண்டுள்ளன.
- பிரிட்டன் ஐரோப்பிய யூனியனை விட்டு வெளியேறும் இந்த தருணத்தில் இவ்விரு நாடுகளும் தூய்மையான ஆற்றலிற்கான ஆய்வு மற்றும் வர்த்தக மேம்பாடு ஆகியவற்றில் ஒத்துழைக்க உறுதி பூண்டுள்ளன.
- இரு தரப்பும் இறுக்கமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ள சீனாவின் யுவான் நாணயத்தை சர்வதேச அளவில் பயன்படுத்திடவும் யுவான் சார்ந்த வியாபார நடவடிக்கைகளை லண்டனில் மேம்படுத்திடவும் ஒத்துக் கொண்டுள்ளன.
- இரு தரப்பு அதிகாரிகளும் சீனாவின் "பட்டை மற்றும் சாலை "(Belt and Road Initiative) திட்டத்தில் பிரிட்டினின் பங்கை அதிகரிப்பதற்கான வழிகளை ஆய்வு செய்வதற்கும் ஒப்புக் கொண்டுள்ளனர்.
- இத்திட்டமானது, இரயில் பாதைகள், துறைமுகங்கள் மற்றும் இதர உள்கட்டமைப்புகள் மூலமான வர்த்தகத்தை ஆசியாவிலிருந்து ஐரோப்பாவிற்கு விரிவாக்கம் செய்யும் பரந்த திட்டமாகும்.

### சிலியின் புதிய அதிபர் – செபாஸ்டியன் பினேரா

- பழமைவாத கட்சியின் செபாஸ்டியன் பினேரா சிலியின் அதிபர் தேர்தலில் வென்றுள்ளார்.
- பினேரா தன்னை எதிர்த்து போட்டியிட்ட மைய – இடது வேட்பாளர் சென் அலெஜான்ரோ குயில்லர் பெற்ற 45.4 சதவீதத்தை விட அதிகமாக 54.6 சதவீத ஓட்டுக்களைப் பெற்றார்.
- இவர் 2010 முதல் 2014 வரையிலான காலக்கட்டத்தில் சிலியின் அதிபராக இருந்தார்.
- பினேரா லத்தீன் அமெரிக்காவிலிருந்து முதல் "வளர்ச்சியடைந்த நாடு" என்ற தகுதியை பாரீசை மையமாகக் கொண்ட வளமான நாடுகளின் குழுவான பொருளாதார கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பில் (Organization for Economic Cooperation and Development - OECD) பெறுவதற்கு உறுதி பூண்டுள்ளார்.

### டிரம்பின் ஜெருசலம் முடிவின் மீதான ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானம்

- அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இஸ்ரேலின் தலைநகர் ஜெருசலேம் என்று பிரகடனப்படுத்தினார். இந்த அங்கீகாரத்தை பின்வாங்கச் செய்வதற்கான ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானத்தை அமெரிக்கா தனது வீட்டோ (தடுப்பு) அதிகாரத்தை பயன்படுத்தி நிறுத்தியுள்ளது.
- கடந்த ஆறு வருடங்களில் இது அமெரிக்காவின் முதலாவது வீட்டோ (தடுப்பு) அதிகார பயன்பாடு

ஆகும்.

- ❖ மேலும் இது டிரம்ப் நிர்வாகத்தின் முதலாவது வீட்டோ அதிகார பயன்பாடு ஆகும்.
- ❖ டிசம்பர் 6-ம் தேதியன்று டிரம்ப் ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகரமென்றும், அமெரிக்கத் தூதரகம் டெல் அவிவ் என்ற நகரிலிருந்து ஜெருசலேமிற்கு மாற்றப்படும் என்று அறிவித்து போராட்டங்களையும் வலுவான கண்டனத் தீர்மானங்களையும் தூண்டி விட்டார்.

## காபோனை (Gabon) - போலியோ அல்லாத நாடு

- ❖ மத்திய ஆப்பிரிக்க நாட்டில் புதிதாக அறிவிக்கப்பட்ட அல்லது சந்தேகிக்கப்படும் தொற்றுகள் இல்லாத காரணத்தால் காபோனை (Gabon) போலியோ அல்லாத நாடாக உலக சுகாதார நிறுவனம் (WHO) அறிவித்தது.
- ❖ போலியோவானது முக்கியமாக இளம் குழந்தைகளை பாதிப்படையச் செய்து நிரந்தர பக்கவாதத்தைக் கூட ஏற்படுத்தும் அதிகளவில் ஏற்படும் தொற்றும் வைரஸ் நோயாகும்.
- ❖ இதை குணப்படுத்துவதற்கு எந்த வழியும் இல்லை; நோய்த்தடுப்பு மருந்துகள் மூலமே இதனை வராமல் தடுக்க முடியும்.
- ❖ உலகம் முழுவதும் 125 நாடுகளில் போலியோ பரவி இருந்த போதும் 3,50,000 பாதிப்புகள் பதியப்பட்ட போதும் 1988ல் இருந்து போலியோ சம்பந்தமான பாதிப்புகள் 99 சதவிகிதம் குறைந்துள்ளது.
- ❖ தற்போது இந்தப் போலியோ நோயானது ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் மட்டுமே உள்ளது. உலக சுகாதார நிறுவனம் ஒவ்வொரு நாட்டிலும் 2 பாதிப்புகள் வீதம் மொத்தம் 4 பாதிப்புகளை பதிவு செய்துள்ளது.

## உலக புத்தாக்க குறியீடு - 2017

- ❖ கார்னெல் (Cornell) பல்கலைக்கழகம், இன்ஸீட் (INSEAD) அமைப்பு மற்றும் உலக அறிவுசார் சொத்துரிமை நிறுவனம் (World Intellectual Property Organisation) ஆகியவற்றால் வெளியிடப்படும் உலக புத்தாக்க குறியீட்டின் (Global Innovation Index) 2017ஆம் ஆண்டு பதிப்பில் இந்தியா 6 இடங்கள் முன்னேறி 130 நாடுகளில் 60-வது இடத்தைப் பிடித்து மத்திய மற்றும் தெற்கு ஆசிய நாடுகளில் உயர் இடத்தைப் பிடித்த நாடாக உயர்ந்துள்ளது.
- ❖ இக்குறியீட்டின்படி, ஆசிய நாடுகளுள் சீனா 22-வது இடத்தைப் பிடித்திருப்பினும் ஆசியாவின் வளரும் புத்தாக்க மையமாக இந்தியா உயர்ந்து வருகின்றது என்பதை இக்குறியீடு சுட்டுகின்றது.
- ❖ புத்தாக்கத்தினால் வழி நடத்தப்படும் பொருளாதாரமுடைய நாடாக இந்தியாவை உருவாக்க, நிதி ஆயோக், இந்திய தொழிற் கூட்டமைப்பு (CII – Confederation of Indian Industries) மற்றும் தொழிற் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறை (DIPP – Department of Industrial Policy & Promotion) ஆகியவை இந்திய புத்தாக்க குறியீட்டை (Indian Innovation Index) வெளியிடுகின்றன.
- ❖ நாட்டின் முதல் ஆன்லைன் புத்தாக்க குறியீட்டு இணைய வாயிலின் மூலம் இந்தியாவின் அனைத்து மாநிலங்களினுடைய புத்தாக்கங்களைப் பற்றிய தரவுகள் பெறப்பட்டு ஆராயப்பட்டு அவற்றின் மூலம் இந்திய மாநிலங்கள் தரவரிசைப் படுத்தப்படும்.
- ❖ இந்த இணையவாயிலில் இந்திய மாநிலங்களின் புத்தாக்கங்களினைப் பற்றிய தகவல்கள் உண்மை நேர அளவில் (real time) தொடர்ந்து மேம்படுத்தப்படும்.

## முன்னணி எரிபொருள் வழங்கி

- சவூதி அரேபியாவை விஞ்சி முதன்முறையாக நடப்பு ஆண்டில் இந்தியாவின் முன்னணி கச்சா எண்ணெய் வழங்கியாக (Oil Supplier) ஈராக் உருவாகியுள்ளது.
- கன கச்சா எண்ணெயை (Heavy Crude oil) சலுகை விலையில் இந்தியாவுக்கு ஈராக் விற்க முற்பட்டுள்ள வேளையில் இத்தகு நிலை சாத்தியமாகியுள்ளது.
- தன்னுடைய எரிபொருள் எண்ணெய் தேவையின் பூர்த்திக்காக கச்சா எண்ணெய் இறக்குமதியையே இந்தியா பெரிதும் சார்ந்துள்ளது. நடப்பு புள்ளி விவரங்களின்படி தன் எண்ணெய் எரிபொருள் தேவைகளில் இந்தியா 80 சதவீதத்தை இறக்குமதி மூலம் பெறுகிறது.
- தற்போதைய நிலையில் இந்தியாவிற்கு எண்ணெய் அதிகம் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஈராக் முதலிடத்திலும், சவூதி அரேபியா இரண்டாவது இடத்திலும், ஈரான் மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- இந்தியாவின் இரண்டாவது பெரிய எண்ணெய் வழங்கியாக இருந்த ஈரான் மீது 2015-ஆம் ஆண்டு அணுஆயுத சோதனைத் திட்டத்தை மேற்கொண்டமைக்காக மேற்கத்திய நாடுகள் பொருளாதார தடையை விதித்ததனால் இந்தியாவிற்கு எரிபொருள் வழங்கும் நாடுகளில் ஈரான் 7வது இடத்தை அடைந்தது.
- இருப்பினும் 2015ம் ஆண்டிற்குப் பின் மேற்கத்திய நாடுகளின் பொருளாதார தடைகள் நீக்கப் பட்டதனை அடுத்து இந்திய எரிபொருள் சுத்திகரிப்பு நிறுவனங்கள் ஈரானிடம் இருந்து இறக்குமதியை தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளன.

## கடற் வழிப்பயண வரைபடங்கள்-இந்தியா மற்றும் இலங்கை

- இந்தியக் கடற்படை இலங்கை கடற்படையுடன் இணைந்து கூட்டுப் பெருங்கடலியல் கணக்காய்வின் (joint oceanographic survey) இரண்டாவது கட்டத்தை இலங்கையின் தென்மேற்கு கடற்பகுதியில் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.
- சமீபத்திய நீரியல் அமைவு வரைபட (Hhydrographic data) தரவுகளைக் கொண்டு இலங்கையின் தென் கடற்பகுதிகளில் கடற் வழிப்பயண வரைபடங்களை (Nnavigational charts) மேம்படுத்துவதே இக்கூட்டுப் பெருங்கடலியல் கணக்காய்வின் நோக்கமாகும்.

### *கூட்டு பெருங்கடலியல் கணக்காய்வு*

- 2017ஆம் ஆண்டின் மார்ச் 30 முதல் மே 11 வரை பெருங்கடலியல் கணக்காய்வின் முதற்கட்டம் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்டது.
- உள்நாட்டுத் தொழிற்நுட்பத்தோடு வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட ஐ.என்.எஸ் தர்ஷாக் கடற்படை கப்பல் மூலம் பெருங்கடலியல் கணக்காய்வின் முதற் கட்டம் மேற்கொள்ளப்பட்டது.
- பெருங்கடலியல் கணக்காய்வின் மூன்றாம் கட்டம் 2018–ல் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## போர்ப்ஸ் பட்டியல் – சிறந்த வணிக நாடுகள்

- போர்ப்ஸ் பத்திரிக்கை வெளியிட்டுள்ள 2018-ஆம் ஆண்டின் வணிகத்திற்கான சிறந்த நாடுகளின் (best countries for business) பட்டியலில் கடந்த ஆண்டு 5வது இடத்திலிருந்த இங்கிலாந்து முதன்முறையாக முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- சொத்துரிமை (Property rights), புத்தாக்கம் (Innovational), வரிகள் மற்றும் சிவப்பு நாடா (Red Tape) போன்றவற்றை உள்ளடங்கிய 15 காரணிகளின் அடிப்படையில் மொத்தம் 153 நாடுகள் இப்பட்டியலில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- இப்பட்டியலில் இந்தியா 62 வது இடத்தைப் பெற்றுள்ளது.

- இங்கிலாந்தைத் தொடர்ந்து அடுத்த இரண்டு இடங்களில் நியூசிலாந்து மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன.

## கிம்பர்லி சான்றளிப்புத் திட்டம் - இந்தியா

- ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் நடைபெற்ற கிம்பர்லி செயல்முறையின் வருடாந்திர அமர்வில் (Kimberly Process Plenary Session) கிம்பர்லி செயல்முறை சான்றளிப்பு திட்டத்தின் செயல்முறையின் (Kimberley Process Certification Scheme) சீர்திருத்தத்திற்கான தற்காலிக மதிப்பாய்வு மற்றும் சீர்திருத்தக் குழுவின் (Ad HOC Committee on Review & Reform) தலைவராக இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இக்குழுவின் துணைத் தலைவராக அங்கோலா நாடு தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது.
- 2016 நவம்பரில் துபாயில் கடைசியாக நடைபெற்ற கிம்பர்லி வருடாந்திர கூட்டமர்வில் கிம்பர்லி செயல்முறையின் 2018 ஆம் ஆண்டிற்கான துணைத் தலைவராகவும், 2019ஆம் ஆண்டிற்கான தலைவராகவும் இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 2018ஆம் ஆண்டிற்கான தலைவராக ஐரோப்பிய யூனியன் உள்ளது.
- கிம்பர்லி செயல்முறை சான்றளிப்பு திட்டத்தின் (KPCS – Kimberly Process Certification Scheme) நிறுவன நாடுகளுள் இந்தியாவும் ஒன்றாகும்.
- தற்போது KPCSல் 28 நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய யூனியனோடு சேர்ந்து 81 நாடுகளைச் சேர்ந்த 54 உறுப்பினர்கள் உள்ளனர்.
- மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் வர்த்தக துறையின் மூலம் இந்தியாவில் இத்திட்டம் நிர்வகிக்கப்படுகிறது.
- சான்றளிப்பு (Certification) இல்லாத வைரங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியை முற்றிலுமாக KPCS தடை செய்கிறது.
- சட்டப்பூர்வமான அரசாங்கங்களுக்கு எதிரான கிளர்ச்சி மற்றும் போரினிற்கு நிதி திரட்டுவதற்காக புரட்சிக் குழுக்களால் பயன்படுத்தப்படும் கடினமான, வைரத் தயாரிப்பு செயல்முறைக்கு உட்படுத்தப்படாத சட்ட விரோத வைரங்களின் கை மாறுதலை தடுப்பதற்காக உண்டாக்கப்பட்ட, சர்வதேச வைர நிறுவனங்கள், பல்வேறு நாடுகளின் அரசுகள் மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றிற்கிடையேயான கூட்டிணைவே கிம்பர்லி செயல்முறை (Kimberly Process) ஆகும்.

## இந்தியா – ரஷ்யா பிரதிநிதிகள் சந்திப்பு

- இந்தியா மற்றும் ரஷ்யா நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை வலுப்படுத்தும் விதமாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜும், ரஷ்யாவின் துணைப் பிரதமர் டிமிட்ரி ரோகோசினும் கலந்து ஆலோசனை நடத்தினர்.
- இரு நாட்டுப் பிரதிநிதிகளும் இணைந்து 'வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கலாசார கூட்டுறவு தொடர்பான இந்தியா-ரஷ்யா சர்வதேச அரசாங்க ஆணையத்தின் [India-Russia Inter-Governmental Commission on Trade, Economic, Scientific, Technological and Cultural Cooperation (IRIGC-TEC)]'ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினர்.
- இந்த சந்திப்பில் எட்டப்பட்ட முக்கிய முடிவுகள்:
    - வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான கூட்டுப் பணிக்குழுவின் தரத்தை துணை அமைச்சர் / வர்த்தகச் செயலாளர் அளவில் உயர்த்துதல்.

- வர்த்தகத்திற்கான தடைகளை விவாதிக்கவும், நீக்கவும் வழிமுறையை உருவாக்குதல்

❖ மேலும், இரு நாடுகளுக்கும் இடையே விவசாயம் மற்றும் மருந்துத் துறைகளில் நல்லுறவை மேம்படுத்துவதற்காக செயற்குழுக்களை உருவாக்கியுள்ளன.

❖ இரு நாட்டு சுங்க நிர்வாகங்களுக்கும் இடையில் சரக்குகள் வருகை / பரிமாற்றம் குறித்த தரவுகளை எளிதாக பரிமாறிக்கொள்ளும் ஒப்பந்தத்தினை விரைந்து செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

### ஜெருசலேம் – அமெரிக்கா – ஐ.நா.பொது அவை

❖ ஜெருசலமை இஸ்ரேலின் தலைநகராக அமெரிக்க அங்கீகரித்ததனை பயனற்ற செல்லாத வெற்றாக (Null and void) அறிவிப்பதற்கான தீர்மானம் ஐ.நா. வின் பொது அவையில் பெரும்பான்மை ஆதரவோடு நிறைவேற்றப்பட்டது.

❖ 172 நாடுகளில் மூன்றில் இரு பங்கு அதாவது இந்தியா உட்பட 128 நாடுகள் இத்தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன. ஒன்பது நாடுகள் (வீட்டோ) மறுப்பை தெரிவித்தன. 35 நாடுகள் வாக்குச் செயல்முறையில் இருந்து விலகி நின்றன.

❖ ஐ.நா பாதுகாப்பு அவையில் 4 நிரந்தர உறுப்பினர்கள் மற்றும் 10 தற்காலிக உறுப்பினர்கள் என 14 உறுப்பு நாடுகளும் அமெரிக்காவின் இத்தகு அங்கீகாரத்தை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றுகையில் இத்தீர்மானத்தினை அமெரிக்கா தன் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி நிறுத்தியது.

❖ அதனைத் தொடர்ந்து அமெரிக்காவை எதிர்த்து ஓர் வரைவுத் தீர்மானம் ஐ.நா.பொது அவையில் துருக்கி மற்றும் யேமனால் அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் பிரச்சனைக்குரிய தொன்மை வாய்ந்த ஜெருசலேம் நகரை இஸ்ரேலின் தலைநகராக அறிவித்து டெல் அவிவில் உள்ள தற்போதைய அமெரிக்க தூதரகத்தை ஜெருசலேமிற்கு மாற்றுவதற்கு உத்தரவிட்டதனை தொடர்ந்து ஐ.நா.பொது அவையில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### சீனா – நில ஆய்வு செயற்கைக்கோள்

❖ சீனா தனது இரண்டாவது நில ஆய்விற்கான செயற்கைக் கோளை (LKW-2) கான்சு மாகாணத்திலிருந்து தொலை உணரும் நடவடிக்கைகளுக்கான சுற்றுவட்டப்பாதையில் செலுத்தியுள்ளது.

❖ இது கோபி பாலைவனத்தில் உள்ள ஜியுகுவான் செயற்கைக்கோள் ஏவுகணை மையத்திலிருந்து ஏவப்பட்டது.

❖ லாங் மார்ச் 2டி (இரு எரிபொருள் நிலையுடைய ராக்கெட்) ராக்கெட் இந்த செயற்கைக் கோளை விண்வெளிக்கு எடுத்து சென்றது.

❖ இந்த ஏவுதல் லாங் மார்ச் ராக்கெட் வரிசையின் 259-வது ஏவுதலாகும்.'

❖ சீனாவின் விண்வெளி தொழில்நுட்ப நிறுவனம் மூலம் மேம்படுத்தப்பட்ட இந்த LKW-2 ராக்கெட் ராணுவத்தின் ஜியான்பிங்க்-6 வரிசையின் அடிப்படையில் அமைந்த மின் ஒளி ஆராய்ச்சி செயற்கைக்கோள் ஆகும்.

❖ யாவோகான் வெய்ஜிங்க்-32 எனவும் அறியப்படும் LKW-2 என்பது நிலத்தினுள் உள்ள வளங்களை கண்டுணர உதவும் தொலையுணர் நடவடிக்கைகளுக்காக பெரிதும் பயன்படுத்தப்படும் செயற்கைக்கோள் ஆகும்.

## உலகின் மிகப்பெரிய நீர்நில விமானம்

- சீனாவின் சொந்தத் தயாரிப்பான AG-600 என்று பெயரிடப்பட்ட குன்லாங் எனப்படும் உலகின் மிகப்பெரிய நீர்நில விமானம் தெற்கு நகரமான ஜீஹாயில் பயணிக்க ஆரம்பித்து அரை மணி நேரப் பயணத்திற்குப் பின் தரை இறங்கியது.
- இந்த வெற்றிகரமான, முதல் பயணம் சீனாவை மிகப்பெரிய நீர்நில விமானங்கள் தயாரிக்கும் உலகில் மிகச்சில நாடுகளுள் ஒன்றாக தக்க வைக்கிறது.
- இந்த நீர்நில விமானம் இராணுவப் பயன்பாடுகளோடு தீயணைப்பு மற்றும் கடல் மீட்பு நடவடிக்கைகளுக்கும் பயன்படும்.
- AG 600 நீர்நில விமானம் 38.8 மீட்டர் நீளமான இறக்கைகளுடன் நீரிலிருந்து பறக்கவும் இறங்கவும் செய்யும். இது நான்கு டர்போ இயந்திரங்கள் மூலம் வலுவாக்கப்பட்டுள்ளது.
- இதை வடிவமைத்து தயாரித்தது சீனாவின் அரசு நிறுவனமான சீன வானூர்தி தொழிற்சாலை நிறுவனம் ஆகும்.

## கவுதமாலா - தூதரகம்

- கவுதமாலா நாட்டின் அதிபர் ஜிம்மி மேரெல்ஸ் இஸ்ரேலின் டெல்அவிவ் நகரில் உள்ள இஸ்ரேலுக்கான கவுதமாலா தூதரகத்தை ஜெருசலேம் நகருக்கு மாற்றுவதற்கான திட்டத்தை வெளியிட்டுள்ளார்.
- அமெரிக்காவிற்கு அடுத்து இஸ்ரேலுக்கான தங்கள் தூதரகத்தை டெல் அவிவ் நகரிலிருந்து ஜெருசலேத்திற்கு மாற்றுவதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ள முதல் நாடு கவுதமாலாவாகும்.
- ஐ.நா.பொது அவையில் அமெரிக்காவின் அறிவிப்பிற்கு எதிரான தீர்மானத்திற்கு எதிராக இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுடன் இணைந்து வாக்களித்த ஏழு நாடுகளில் கவுதமாலாவும் ஒன்றாகும்.
- ஐ.நா.பொது அவையில் பெரும்பான்மை ஆதரவோடு நிறைவேற்றப்பட்ட இந்த தீர்மானமானது பிரச்சனைக்குரிய ஜெருசலேம் நகரை இஸ்ரேலின் தலைநகராக அறிவித்த டிரம்ப நிர்வாகத்தின் அறிவிப்பை நிராகரிக்கின்றது.

## இந்தியா – ஆப்கன் 2-வது சரக்கு விமானம்

- இந்தியாவின் மும்பையையும், ஆப்கனின் காபூல் நகரையும் வர்த்தக ரீதியாக இணைப்பதற்கான 2-வது ஆப்கன் – இந்தியா சரக்கு விமான சேவை ஆப்கனின் காபூலில் உள்ள ஹமீத் கர்ஜாய் விமான நிலையத்தில் முறையாக துவங்கப்பட்டுள்ளது.
- ஆப்கனில் சமீபத்திய நிலையில், அறுவடை செய்யப்பட்ட புத்துணர்வுடைய (fresh) பழங்கள் மற்றும் மருத்துவத் தாவரங்களை ஆப்கனிலிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்வதை ஊக்குவிப்பதற்காக இந்த விமான சரக்கு சேவை தொடங்கப்பட்டுள்ளது.
- 2017-ஆம் ஆண்டின் ஜூலையில் இந்தியாவின் புதுடெல்லி மற்றும் ஆப்கனின் காபூலிற்கு இடையே துவங்கப்பட்ட இதே நோக்கமுடைய முதல் விமான சரக்கு சேவை வெற்றிகரமாக செயல்பட்டு வருவதை தொடர்ந்து, தற்போது புதிதாக இரண்டாவது விமான சரக்கு சேவை துவங்கப்பட்டுள்ளது.
- இதற்கு முன் இரு நாடுகளுக்கும் இடையே பாகிஸ்தான் வழியாக நிலத்திலான போக்குவரத்து மூலமாக நடைபெற்ற வர்த்தகத்திற்கு பாகிஸ்தான் திடீரென்று தடை விதித்ததை தொடர்ந்து அத்தடங்கல்களை வெல்லும் வகையில் இந்தியாவிற்கும் ஆப்கானிற்கும் இடையே சரக்கு விமான வர்த்தக சேவை துவங்கப்பட்டது.

## சவூதியும் சதுரங்கமும்

- இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நாட்டின் முன்னணி மதகுரு (Cleric) பலகை விளையாட்டுகளுக்கு (Board Games) மதரீதியிலான தடையாணையை (religious edict) விதித்திருப்பினும் தற்போது முதன்முறையாக சவூதி அரேபியாவில் உலக சதுரங்க (Chess) சாம்பியன்ஷிப் போட்டி நடத்தப்பட்டுள்ளது.
- இச்சதுரங்க சாம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிக்கு சவூதி மன்னர் சல்மான் உலக விரைவு மற்றும் அதிரடி சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டி (World Rapid and Blitz Chess Championship) என பெயர் சூட்டியுள்ளார்.
- முறையே நார்வே, ஆர்மேனியா மற்றும் அஜர்பைஜானைச் சேர்ந்த உலகின் முதல் மூன்று முன்னணி சதுரங்க வீரர்களும் இப்போட்டியில் பங்கெடுத்துள்ளனர்.
- நார்வே நாட்டைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டரான மாக்னஸ் கார்ல்சன் தற்போது நடப்பு உலக செஸ் சாம்பியனாக உள்ளார்.

### சீன இராணுவத்தின் புதிய கட்டுப்பாட்டாளர்

- வரவிருக்கும் 2018-ஆம் ஆண்டின் ஜனவரி ஒன்றாம் தேதி முதல் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆயுதப் படைகளினால் சீனாவின் துணை இராணுவக் காவற்படைகள் முழுமையாக கட்டுப்படுத்தப்படும் என சீனா தெரிவித்துள்ளது.
- போர் காலங்களிலும், நாட்டின் உள்நாட்டு பாதுகாப்பை பராமரிப்பதிலும் சீனாவின் இராணுவப் படைகளுக்கு துணை இராணுவக் காவற்படையானது பின்நிலை ஆதரவுப் படையாக (Back up) செயல்பட்டு வருகிறது.
- நடப்பில், 6,66,000 படைவீரர்களைக் கொண்ட வலிமையான இப்படை, சீன அரசாங்கத்தின் தேசிய கவுன்சிலின் கேபினேட், ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் இராணுவ கமிஷன் ஆகியவற்றின் இரட்டைத் தலைமையின் (Dual leadership) கீழ் செயல்படுகின்றது.

### விளையாடும் குறைபாடு – மனநல நிலைசார்ந்தவை

- 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட உள்ள 11-வது சர்வதேச நோய் வகைப்பாட்டியலின் (International Classification of Disease - ICD) படி, அதீத அளவில் விளையாடும் குறைபாட்டை (Gaming disorder) ஓர் மனநல நிலைசார்ந்த விவகாரமாக (Mental Health Condition) உலக சுகாதார நிறுவனம் வகைப்படுத்த உள்ளது.
- அமெரிக்க உளவியல் மனநல நிபுணர் சங்கத்தினால் வெளியிடப்படும், மனநல சிகிச்சை வல்லுநர்களின் பைபிள் என்றழைக்கப்படும் V-வகை நிலை மனநல குறைபாட்டுக்கான நோயறிதல் மற்றும் புள்ளியியல் கையேட்டில் ஏற்கெனவே கேமிங் குறைபாடு மனநல நிலை சார்ந்த விவகாரம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது
- நோய்களை வகைப்படுத்துவதற்காக, நோயறிதல் வழிமுறைகளின் தொகுப்பு அமைவை (system of diagnostic codes) வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட சர்வதேச ஆரோக்கிய பராமரிப்பு வகைப்படுத்து அமைப்பே ICD ஆகும்.
- உலக சுகாதார நிறுவனத்தினால் இத்தகு வகைப்படுத்துதல் அமைப்பு நிர்வகிக்கப்படுகின்றது.
- குறிப்பிட்ட கால அளவில் திருத்தியமைக்கப்படும் இந்த வகைப்பாட்டு முறையில் தற்போது 10-வது திருத்தம் மேற்கொள்ளப்பட உள்ளது.

### ஜார்ஜ் வியா – லைபீரியாவின் ஜனாதிபதி

- ❖ முன்னாள் கால்பந்து நட்சத்திரமான ஜார்ஜ் வியா லைபீரியாவின் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். அந்நாட்டு தேர்தல் ஆணையத்தின் கணக்குப்படி, அவர் 61.5 சதவிகித வாக்குகளைப் பெற்றுள்ளார்.
- ❖ ஜார்ஜ் வியா ஏற்கெனவே ஆப்பிரிக்காவின் முதல் பெண் அதிபரும் நோபல் அமைதிப் பரிசு பெற்றவரும் லைபீரியாவில் இருமுறை அதிபராயிருந்த விக்டர் எலான் ஜான்சன் சர்லீப் என்பவரிடம் அப்போதைய 2005 தேர்தலில் முதல் சுற்றில் வெற்றி பெற்று, பின் இரண்டாவது சுற்றில் தோல்வியடைந்தார்.
- ❖ ஜார்ஜ் வியா 1990-ல் லைபீரியாவின் குடிசைப் பகுதிகளில் இருந்து கால்பந்து நட்சத்திரமாக உருவெடுத்தார். அவர் குரு (kru) என்ற இனப் பிரிவைச் சேர்ந்தவர் ஆவார்.

# பொருளாதாரச் செய்திகள்

## மாருதி சுசூகி – இந்தியாவின் 6-வது மதிப்புமிக்க இந்திய நிறுவனம்


- ❖ நாட்டின் பெரும் வங்கி சேவகரான SBI-யை பின்னுக்குத் தள்ளி நாட்டின் 6-வது பெரும் சந்தை மதிப்புமிக்க இந்திய நிறுவனமாக நாட்டின் பெரிய கார் உற்பத்தியாளரான மாருதி சுசூகி நிறுவனம் உயர்ந்துள்ளது.
- ❖ 2.71 டிரில்லியன் சந்தை மதிப்புடைய SBI-ஐ காட்டிலும், 2.74 டிரில்லியன் என்ற அளவு சந்தை மூலதன மதிப்பை கொண்டு இந்த நிலையை மாருதி சுசூகி அடைந்துள்ளது.
- ❖ மும்பை பங்குச் சந்தையில் நிர்ணயிக்கப்படும் இந்த பெரும் மதிப்புமிக்க இந்திய நிறுவனங்களின் பட்டியலில் முதல் 5 இடங்களில் முறையே ரிலையன்ஸ் தொழிற்துறை நிறுவனம் , TCS, HDFC வங்கி, ITC மற்றும் இந்துஸ்தான் யூனிலீவர் போன்ற நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன.

## உலக வளமை குறியீடு (2017)

- ❖ லேகாடம் வளமை குறியீடு 2017-ன் (Legatum Prosperity Index) ஒரு பகுதியாக வெளியிடப்படும் உலகின் வளமையான நாடுகளின் பட்டியலில் 149 நாடுகளில் இந்தியா 100-வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ 2016-ஆம் ஆண்டு 104-வது இடத்திலிருந்த இந்தியா இவ்வாண்டிற்கான வளமை குறியீட்டில் (Prosperity Index) நான்கு இடங்கள் முன்னேறி, தர வரிசைப் பட்டியலில் முன்னேற்றம் கண்டுள்ள பிரிக்ஸ் அமைப்பின் ஒரே நாடாக உயர்ந்துள்ளது.
- ❖ இக்குறியீட்டின் விவரப்படி, இந்தியா ஆளுகை (Governance) மற்றும் பொருளாதார தரத்தில் சிறந்த செயல்பாடுகளை மேற்கொண்டுள்ளது.
- ❖ உலக வளமை குறியீட்டில் முதலிடம் பெற்றுள்ள நார்வேயை அடுத்து நியூஸிலாந்து, பின்லாந்து, சுவிட்சர்லாந்து, சுவீடன் போன்ற நாடுகள் உள்ளன.

### *லேகாடம் வளமை குறியீடு*

- ❖ லேகாடம் வளமை குறியீடு இலண்டனைச் சேர்ந்த லேகாடம் நிறுவனத்தால் ஆண்டிற்கு ஒரு முறை வெளியிடப்படுகின்றது.




| 2017 Rank | Country | Economic Quality | Business Environment | Governance | Personal Freedom | Social Capital | Safety and Security | Education | Health | Natural Environment |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Norway | 8 | 8 | 2 | 8 | 5 | 3 | 4 | 7 | 1 |
| 2 | New Zealand | 3 | 2 | 3 | 1 | 2 | 23 | 16 | 17 | 13 |
| 3 | Finland | 14 | 10 | 1 | 9 | 12 | 15 | 3 | 14 | 3 |
| 4 | Switzerland | 6 | 9 | 5 | 19 | 20 | 8 | 1 | 3 | 16 |
| 5 | Sweden | 1 | 13 | 4 | 12 | 19 | 13 | 14 | 6 | 8 |
| 6 | Netherlands | 4 | 14 | 6 | 6 | 11 | 9 | 2 | 8 | 46 |
| 7 | Denmark | 5 | 11 | 8 | 14 | 4 | 14 | 11 | 21 | 19 |
| 8 | Canada | 15 | 4 | 9 | 2 | 6 | 24 | 13 | 24 | 18 |
| 9 | Australia | 20 | 7 | 14 | 15 | 1 | 22 | 5 | 10 | 10 |
| 10 | United Kingdom | 7 | 5 | 10 | 18 | 16 | 17 | 8 | 19 | 9 |

- உலகம் முழுவதும் நாடுகளின் வளமைகள் எப்படி உருவாகின்றன மற்றும் அவை எப்படி மாற்றம் பெறுகின்றன என்பனவை பற்றிய உட்பார்வையை இக்குறியீடு வழங்கும்.

- பொருளாதாரத் தரம், ஆளுகை, தொழிற் சூழல், தனிநபர் சுதந்திரம், தொழிற் பாதுகாப்பு, சமூக மூலதனம், கல்வி, ஆரோக்கியம் மற்றும் இயற்கை சுற்றுச்சூழல் போன்ற வகைப்பாட்டின் கீழ் 104 அளவுருக்களின் அடிப்படையில் உலக நாடுகளின் சமூக நல்வாழ்வு மற்றும் பொருளாதார வளமை போன்றவை இந்த முன்னணி குறியீட்டில் அளவிடப்படுகின்றன.

### ஜூன் 1 முதல் நாடு முழுவதும் இணையவழி ரசீது முறை

- ஜி.எஸ்.டி (GST) குழுவானது, தகவல் தொழில்நுட்பப் பிரிவின் தயார்நிலையை பரிசீலித்த பின்னர், ஜூன் 1 முதல் நாடு முழுவதும் இணையவழி ரசீது முறையை அமல்படுத்த முடிவு செய்துள்ளது. இதன் மூலம் மாநிலங்களுக்கிடையில் சரக்குகள் கொண்டு செல்வது விரைவாகப் போகிறது.
- இது நாடு முழுவதும் சீரான நடைமுறையைக் கொண்டு வந்து மாநிலங்களுக்கிடையே சரக்குகள் தடையின்றி செல்ல வழி வகுக்கும்.
- ஒரு இணையவழி ரசீதை தயாரிக்க, சரக்குகளை வழங்குபவரும் சரக்குகளை கொண்டு செல்பவரும் அவரவர்களது விவரங்களை ஜி.எஸ்.டி (GST) இணையவழித் தகவில் பதிவேற்றம் செய்ய வேண்டும். அதன் பிறகு ஒரு தனித்த இணையவழி ரசீது எண்ணானது (EBN) சரக்கு

வழங்குபவருக்கும், பெறுபவருக்கும் மற்றும் அதைக் கொண்டு செல்பவருக்கும் பொதுவான தகவில் கிடைக்கப் பெறும்.

- இந்த நடைமுறையானது, வரிவிதிப்பு அதிகாரிகள் உள்மாநில மற்றும் மாநிலங்களுக்கிடையேயான சரக்குகள் போக்குவரத்தை கண்காணிப்பதற்கு மட்டும் உதவுவதோடு சோதனைச் சாவடிகளில் நேரம் வீணாவதையும் குறைத்து போக்குவரத்திற்கான நேரத்தையும் மிச்சப்படுத்தும்.

## பணமற்ற பரிவர்த்தனைகள் – மின்னணு தேசிய விவசாயச் சந்தை

- மின்னணு தேசிய விவசாய சந்தையின் [electronic National Agriculture Market (e-NAM)] தேசிய இணைய வாயிலோடு இணைக்கப்பட்ட 470 மண்டிகள் நேரடியான பணமற்ற பரிவர்த்தனை மேற்கொள்ள தனியார் வங்கியான ஐசிஐசிஐ வங்கியை அரசு ஈடுபடுத்தியுள்ளது.
- தற்சமயம், இந்த விவசாயச் சந்தையில் பங்கேற்பவர்கள் தங்களது பணப்பரிவர்த்தனைகளை மரபார்ந்த முறைகளான வங்கிக் கிளைகள், பற்று அட்டைகள் மற்றும் இணைய வங்கிச் சேவைகள் மூலம் செய்து வருகின்றனர்.
- ஐசிஐசிஐ வங்கி பீம் (Bharat Interface for Money) மற்றும் ஒருங்கிணைந்த பணம் செலுத்து தளம் (Unified Payments Interface - UPI) ஆகிய வசதிகளை இந்த மின்னணு தேசிய விவசாயச் சந்தையில் பணமற்ற பரிவர்த்தனைகளை மேற்கொள்ள ஈடுபடுத்தும்.
- “ஒரே தேசம் ஒரே சந்தை” என்ற நிலைக்கு முன்னேறும் வகையில் இந்த e-NAM இணைய வாயில் விவசாயிகளுக்கு தங்கள் பொருட்களுக்கு சிறந்த விலை நிர்ணயம் மற்றும் சந்தையில் போட்டியையும் வெளிப்படைத் தன்மையையும் உறுதி செய்து விவசாய சந்தைகளை புரட்சிகரமாக புதுமைப்படுத்துவதற்கு திட்டமிடுகிறது.

## உடனடி சரிபார்ப்பு நடவடிக்கை -பேங்க் ஆஃப் இந்தியா

- அதிகளவிலான வாராக் கடன்களையும் (Non-performing assets-NPA), பற்றாக்குறையான பொது சமபங்கு முதல் அடுக்கு மூலதனத்தையும் (common equity tier 1 capital -CET 1), சொத்துக்கள் மீதான எதிர்மறை வருவாயையும் (Negative Return On Assets-ROA)) கொண்டுள்ளதன் காரணமாக இந்திய ரிசர்வ் வங்கியானது பேங்க் ஆஃப் இந்தியா வங்கியை உடனடி சரிபார்ப்பு நடவடிக்கைக் கட்டமைப்பின் (Prompt Corrective Action Framework) கீழ் கொண்டுவந்துள்ளது.
- மார்ச் மாதம் முடிவுற்ற 2017-ஆம் ஆண்டின் நிதி ஆண்டிற்காக நடத்தப்பட்ட இடர் அடிப்படையிலான கண்காணிப்பு மாதிரியின் (risk based supervision model) கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆன்சைட் சோதனைகளின் (onsite inspection) தொடர்ச்சியாக இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- பேங்க் ஆஃப் இந்தியா வங்கியானது ரிசர்வ் வங்கியின் உடனடி சரிபார்ப்பு நடவடிக்கைக் கட்டமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள ஒன்பதாவது வங்கியாகும்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய உடனடி சரிபார்ப்பு நடவடிகைக் கட்டமைப்பின் கீழ், வங்கிகளின் நிகர வாராக்கடன் விகிதம் (Net NPA ratio) 6 சதவிகிதத்தை மீறி அதிகரித்தால் சம்பந்தப்பட்ட வங்கிகளின் மீது சரிபார்ப்பு நடவடிக்கை எடுக்கப்படும்.
- 2016 ஆம் ஆண்டின் மார்ச் மாத காலாண்டில் 6 சதவீதமாக இருந்த பேங்க் ஆஃப் இந்தியாவின் நிகர வாராக்கடன் விகிதமானது 2017 ஆம் ஆண்டின் மார்ச் முடிவில் 6.90 சதவீதம் என அதிகரித்துள்ளதால் பேங்க் ஆஃப் இந்தியா வங்கியின் மீது இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் பழைய உடனடி சரிப்பார்ப்பு நடவடிக்கைக் கட்டமைப்பின் கீழ் வங்கிகளின் நிகர வாராக்கடன் விகிதம் 10 சதவிகிதத்தை தாண்டினால் மட்டுமே சரிபார்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- இந்திய ரிசர்வ் வங்கியால் பரிந்துரைக்கப்படும் வாராக்கடன் மீட்பிற்கான சரிபார்ப்பு நடவடிக்கைகள் உட்பட பல்வேறு சரிபார்ப்பு நடவக்கைகளை உரிய காலத்தில் உரிய முறையில் மேற்கொண்டு வங்கிகளின் நிதியியல் ஆரோக்கியத்தை மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்கு வங்கிகளுக்கு உதவிபுரிவதே உடனடி சரிப்பார்ப்பு நடவடிக்கைக் கட்டமைப்பின் நோக்கமாகும்.

## DARPAN – கிராமப்புற நிதியியல் உள்ளடக்கம்

- மத்திய தொலைத் தொடர்பு அமைச்சகமானது வங்கிகளில்லா கிராமப்புற பகுதிகளில் மக்களை நிதியியல் வட்டத்தினுள் உள்ளடக்குவதற்காக (Financial inclusion) DARPAN எனும் திட்டத்தை தொடங்கியுள்ளது.
- புதிய இந்தியாவிற்கான டிஜிட்டல் மேம்பாட்டுத் தொழிற்நுட்பமுடைய கிராமப்புற அஞ்சல் அலுவலகம் (Digital Advancement of Rural Post office for A New India) என்பதன் ஆங்கிலச் சுருக்கமே DARPAN ஆகும்.
- இதுவரை DARPAN திட்டத்தின் கீழ் 43,171 அஞ்சல் அலுவலகங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு உள்ளன. மேலும் அஞ்சல் அலுவலகங்களின் மெயில் சேவை நடவடிக்கைகளை மேம்படுத்தவும் இத்திட்டம் நோக்கம் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில் அஞ்சல் துறையின் செயல்பாடுகள் அதிகரிக்கப்படும். மேலும், ஊரக அஞ்சல் ஆயுள் காப்பீடு, பண பரிவர்த்தனை, சேமிப்பு கணக்குகள், நிதி போன்ற அனைத்து அஞ்சல்துறை நிதிச் சேவைகளின் மீதான செயல்பாடுகளும் அதிகரிக்கப்படும்.
- தினசரி பரிவர்த்தனை அறிக்கை (daily transaction Report), சிறு அறிக்கை (Mini Statement) உயர் மதிப்பிலான பணத்தை வங்கி கணக்கிலிருந்து எடுத்தல், சேமிப்பு வைப்பு (Saving Deposit) மற்றும் தொடர் வைப்பு (Recuring Deposit) போன்றவற்றில் புதிய கணக்குகளைத் துவங்குதல், சேமிப்பு வைப்பிலிருந்து பணமெடுத்தல், சேமிப்பு மற்றும் தொடர் வைப்பு நிதிகளில் பணம் செலுத்துதல் (Cash Deposit) போன்ற முக்கிய வங்கி சேவைகளை DARPAN அஞ்சல் அலுவலக தொடக்கம் மூலம் பெறலாம்.

## கடன் சந்தைகளுக்கான நிரந்தர குறியீடுகள்

- இந்தியாவின் முதலீட்டு தகவல் மற்றும் தர மதிப்பீடு நிறுவனத்தின் கிளையான ICRA (formerly Investment Information and Credit Rating Agency of India Limited) மேலாண்மை ஆலோசனை சேவை அமைப்பு இந்திய கடன் சந்தையில் நீண்ட விரிவாக்கத்தை ஏற்படுத்த பெரு நிறுவனப் பத்திரங்கள் உள்பட நான்கு நிரந்தர வருமான குறியீடுகளை ஏற்படுத்தியுள்ளது.
- இந்த குறியீடுகளாவன – ICRA கில்ட் எனப்படும் அரசுப் பத்திரங்களுக்கான குறியீடுகள், ICRA எளிதில் மாற்றிக் கொள்ளக் கூடிய குறியீடுகள், ICRA பெரு நிறுவனப் பத்திரக் குறியீடுகள் மற்றும் கலப்பு கடன் குறியீடுகள்.
- இது சொத்து மேலாளர்களையும் முதலீட்டாளர்களையும் நிரந்தர வருமானச் சந்தைகளின் ஆபத்துகள், இலாபங்கள் மற்றும் மாற்றங்களை பயனுள்ள வரையறைகளுடன் அளப்பதற்கு உதவியாக இருக்கும்.
- இந்தக் குறியீடுகளின் உள்ளடக்கப் பொருட்கள் மிகுந்த பன்முகத் தன்மை கொண்டதாகவும், பலதரப்பட்ட துறைகளையும், பங்களிப்பாளர்களையும் கொண்டதாகவும் உள்ளன.
- இதில் சமநிலைப்படுத்துதல் என்பது சில்லறை குறியீடுகளுக்கு ஒவ்வொரு பதினைந்து நாட்களுக்கும், மற்றவைகளுக்கு மாதத்திற்கு ஒரு முறையும் ஏற்படும்.
- ICRA என்பது ஒரு இந்திய, தனிப்பட்ட மற்றும் திறம்பட்ட தொழில்முறை சார்ந்த முதலீட்டு தகவல் மற்றும் தர மதிப்பீட்டு நிறுவனம் ஆகும். இது 1991ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

- இதன் சுதந்திர இயக்குநர் மற்றும் நிர்வாகம் சாராத தலைவர் அருண் துக்கால் ஆவார்.

## தேசிய நெடுஞ்சாலைகள் முதலீடு மேம்பாடு

- நெடுஞ்சாலைகள் திட்டங்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக தேசிய நெடுஞ்சாலைகள் முதலீட்டு மேம்பாட்டுக் கழகத்தை (National Highways Investment Promotion Cell - NHIPC) இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் (National Highways Authority of India - NHAI) உருவாக்கியுள்ளது.

- சர்வதேச திட்ட முதலீட்டாளர்கள், கட்டுமான நிறுவனங்கள், திட்ட மேம்பாட்டாளர்கள் மற்றும் நிதி மேலாளர்கள் இந்திய நெடுஞ்சாலைகளின் உள்கட்டமைப்புத் திட்டங்களில் பங்குபெறுவதற்கான முயற்சிகளை இப்பிரிவு மேற்கொள்ளும்.

- பாரத்மாலா திட்டத்தின் கீழ் அடுத்த 5 ஆண்டுகளில் சுமார் 5,35,000 கோடி செலவில் 35,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு நெடுஞ்சாலைகளை கட்டமைக்க இந்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

- இத்தகைய பெரும் திட்டங்களை நிறைவேற்ற பொது மற்றும் தனியார் துறைகளில் இருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் பெருமளவு தேவைப்படுகிறது.

## உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட முதல் உயர்தர தங்க மதிப்பிற்கான குறியீட்டு மதிப்பு

- பாரதீய நிர்தேசக் திரவியா என்ற இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட முதல் உயர்தர தங்க மதிப்பிற்கான குறியீட்டு மதிப்பு மும்பையின் இந்திய அரசு அச்சகத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
- 99.99 சதவீதம் சுத்தமானது எனப்படும் 9999 என்ற உலோகங்களுக்கான உயர்தர குறியீடு BND-4201 என்பது பொதுமக்களுக்கும் நுகர்வோருக்கும் தங்கத்தின் தூய்மையை உறுதிப்படுத்த பெரிதும் உதவுகிறது.
- இந்த உயர்தர மதிப்பீடு
    - இந்திய அரசு அச்சகம், பாபா அணு ஆராய்ச்சி நிறுவனம், ஹைதராபாத்தில் உள்ள மூலப்பொருட்களின் இயைபு மற்றும் இயல்பாய்விற்கான தேசிய நிறுவனம், அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் மற்றும் புதுதில்லியில் உள்ள தேசிய இயற்பியல் நிறுவனம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- சீனாவிற்கு அடுத்தபடியான உலகின் இரண்டாவது மிகப்பெரிய தங்கத்திற்கான சந்தையாக இந்தியா உள்ள போதும், இந்தியாவில் உள்ள தங்க பொற்கொல்லர்கள் தங்க பிஸ்கட்கள், நாணயங்கள், மற்றும் நகைகள் ஆகியவற்றின் தூய்மையை உறுதிப்படுத்த இறக்குமதி செய்யப்பட்ட தங்க கட்டிகளையே சார்ந்திருந்தனர்.
- BND 4201ன் உயர்தர தூய்மையான அளவீடு சர்வதேச முறை அலகுகள் உடன் ஒப்பிடக்கூடியது. ஆகவே இதனை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் மிக அதிகம்.
- BND 4201 மதிப்பு தங்க கட்டி இறக்குமதி செய்யப்படும் தங்கக் கட்டியைத் காட்டிலும் 25 சதவிகிதம் விலை குறைந்தவை ஆகும். இதனால் மற்ற அயல் நாடுகளை சார்ந்திருப்பது தவிர்க்கப்படும் மற்றும் அன்னிய செலாவணி சேமிப்பும் ஏற்படும்.
- மும்பையின் இந்திய அரசு அச்சகம் என்பது இந்திய பத்திரங்கள் அச்சகம் மற்றும் நாணயங்கள் அச்சடிப்பு நிறுவனத்தின் ஒரு பிரிவாகும்.

### மத்திய உள்துறை அமைச்சகம் - NGO

- ஒரு அயல்நாட்டு வங்கி உட்பட மொத்தம் மத்திய அரசால் குறிப்பிடப்பட்டுள்ள 32 வங்கிகளில், அயல்நாடுகளிலிருந்து நிதியுதவிகளைப் பெறும் அனைத்து தனிநபர்களும், வர்த்தக நிறுவனங்களும் மற்றும் அரசுசாரா தொண்டு நிறுவனங்களும் ஒரு மாதத்திற்குள் ஓர் கணக்கை துவங்கிட வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.
- அவற்றினால் இந்த 32 வங்கிகளில் துவக்கப்படும் கணக்குகள் மத்திய அரசின் பொது நிதியியல் மேலாண்மை அமைப்புடன் (Public Financial Management System – PFMS) ஒருங்கிணைக்கப்படும்.
- வெளிநாடுகளிலிருந்து நிதியுதவியைப் பெறுபவர்களின் கணக்கு வழக்குகளில் உயர்மட்ட வெளிப்படைத் தன்மையையும், தடையற்ற அறிவிப்பு ஒத்திசைவையும் (Reporting Compliance) ஏற்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்கு முறைச் சட்டம் 2010-ன் [Foreign Contribution (Regulation) Act – FCRA 2010) கீழ் மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி, உள்துறை அமைச்சகத்தால் இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.
- வெளிநாடுகளிலிருந்து அளிக்கப்படும் நிதியுதவிகள் மற்றும் பிறசலுகைகளை இந்தியாவின் சில தனிநபர்கள், சங்கங்கள், நிறுவனங்கள், கம்பெனிகள் போன்றவை பெறுவதில் ஒழுங்குமுறைகளை ஏற்படுத்துவதே FCRA-ன் நோக்கமாகும்.
- இது மத்திய நிதி அமைச்சகத்தின், கணக்குகளுக்கான பொதுக் கட்டுப்பாட்டாளரின் (Controller General of Accounts) கீழ் செயல்படுகிறது.

### 100-வது இந்தியர்களின் பொருளாதார சங்க மாநாடு

- இந்தியர்களுடைய பொருளாதார சங்கத்தின் 100வது வருடாந்திர மாநாட்டை ஆந்திரப் பிரதேசத்தில் ஆச்சார்யா நாகர்ஜீனா பல்கலைக்கழகத்தில் குடியரசுத் தலைவர் துவங்கி வைத்தார்.
- 1917-ஆம் ஆண்டு இந்தியாவின் பொருளாதார தொழில்முறை வல்லுனர்களினால் (Indian Economic Professional) பதிவு செய்யப்பட்ட அமைப்பே இந்தியர்களின் பொருளாதார சங்கம் ஆகும்.
- சேவைத் துறை, தொழிற்துறை , வேளாண்துறை ஆகியவற்றின் வளர்ச்சி மற்றும் நாட்டின் பொதுவான பொருளாதார வளர்ச்சி போன்றவை தொடர்பான கொள்கை சார்ந்த பிரச்சனைகளை விவாதிப்பதற்காக மன்றத்தை ஏற்படுத்தி தருவதே இச்சங்கத்தின் நோக்கமாகும்.

### உயர் வாராக்கடன்கள் விகிதம்

- கேர் (CARE) மதிப்பீடுகள் என்ற நிறுவனத்தின் அறிக்கையின் படி, பிரிக்ஸ் நாடுகளின் மத்தியில் இந்தியா அதிக வாராக் கடன்களை (NPA-Non Performing Assets) பெற்றுள்ளதாகவும், அதிகளவிலான வாராக் கடன்களைப் பெற்றுள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- பட்டியலில் இந்தியாவிற்கு முன்னே உள்ள நாடுகள் கிரீஸ், இத்தாலி, போர்ச்சுகல் மற்றும் அயர்லாந்து ஆகியனவாகும்.
- PIIGS நாடுகளைச் சார்ந்த ஸ்பெயின் மட்டுமே பட்டியலில் இந்தியாவை விட பின் தங்கியுள்ளது.
- PIIGS எனும் அடைமொழி நிதி நெருக்கடி ஏற்பட்டு வலுகுறைந்த பொருளாதாரத்தை கொண்ட போர்ச்சுகல், இத்தாலி, அயர்லாந்து, கிரீஸ், ஸ்பெயின் என்ற ஐந்து ஐரோப்பிய நாடுகளைக் குறிப்பதாகும்.

- இந்திய அரசு, அதிக வாராக் கடன் சுமையுடைய, அரசிற்கு சொந்தமான பொதுத்துறை வங்கிகளுக்கு புத்துயிரளிக்க மறு மூலதனமளிக்கும் திட்டத்தை (Recapitalize) அறிவித்துள்ளது.
- 2019 மார்ச் முதல் நடைமுறைக்கு வரும் மூன்றாவது பசேல் (Basel-3 Norms) மூலதன நிறைவு விகிதங்களுடன் (capital adequacy standards) ஒத்துப் போவதற்கும், மோசமான கடன்களை நிவர்த்தி செய்வதற்கும், இருப்புநிலைக் குறிப்பினை தூய்மைப்படுத்துவதற்கும் வங்கிகளுக்கு உதவுவதற்காக இந்த திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செய்திகள்

### IL - 78 எரிபொருள் நிரப்பு விமானம்

- அண்மையில் இந்தியா-வில் முதன்முறையாக நடுவானில் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளது.
- IL - 78 எனும் இந்திய விமானப்படை விமானம் மூலம் எம்பரர் எனும் விமானத்திற்கு மறு எரிபொருள் நிரப்பல் நடுவானில் மேற்கொள்ளப்பட்டது.
- IL - 78 மறு எரிபொருள் நிரப்பு (Refueller) விமானமானது பல்நோக்கு நான்கு கட்ட என்ஜினுடைய டர்போ விசிறியையுடைய போர்த்திற விமானமாகும்.
- இரஷ்யாவால் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்திய விமானப் படையானது நடுவானில் எரி பொருள் நிரப்பலை மேற்கொள்ளும் விமானங்களைப் பயன்படுத்தும் உலகின் சில விமானப் படைகளுள் ஒன்று. தற்போது இந்திய விமானப் படை (IAF -Indian Air Force) இரஷ்யாவின் ஆறு IL - 78 விமானங்களை செயல்படுத்தி வருகிறது.
- "Probe and Drogue" என்ற மறுஎரிபொருள் நிரப்பல் முறையின் மூலம் நடுவானில் (Air to Air) எரிபொருள் நிரப்பல் மேற்கொள்ளப்படுகிறது.

### ஹைபிரிட் மின் உற்பத்தி திட்டம்

- ஆந்திரப் பிரதேச அரசானது மின்கல சேமிப்பு மற்றும் பின்னளிப்பு உடைய சூரிய மற்றும் காற்று ஆற்றல் இணைந்த (Hybrid) மின் உற்பத்தி திட்டத்தை அமைக்க திட்டமிட்டுள்ளது.
- இந்த வகையிலான திட்டம் இந்தியாவில் ஏற்படுத்தப்படுவது இதுவே முதல் முறையாகும். மேலும் இதுவே உலகின் முதல் மற்றும் மிகப்பெரிய சூரிய மற்றும் காற்று ஆற்றல் இணைந்த மின் உற்பத்தி பூங்கா ஆகும்.
- இது ஆந்திரப் பிரதேசத்தின் அனந்தப்பூர் மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ளது.
- இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதியுதவி வழங்க உள்ளது.
- மொத்த 160 மெகாவாட் உற்பத்தியில், 120 மெகாவாட் சோலார் மின் உற்பத்தி மூலமும், 40 மெகாவாட் காற்றாலைகள் (Wind Turbines) மூலமும் உற்பத்தி செய்யப்படும்.
- சோலார் மற்றும் காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்னாற்றலானது மின் கட்டமைப்புகளுக்கு (Grid) பரிமாற்றப்படுவதற்கு பதிலாக ஹைட்ரஜன் மின்கலன்களில் சேமிக்கப்படும்.

## எரிசக்தி அமைச்சர்கள் மாநாடு

❖ எரிசக்தி ஆற்றல் மற்றும் புதிய, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர்கள் மாநாடு புது தில்லியில் நடைபெற்றது. பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த எரிசக்தி துறை அமைச்சர்கள் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

❖ மாநாட்டின் முடிவில் ஒரு சேர எரிசக்தி துறை குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்தின் சில முக்கிய அம்சங்கள் வருமாறு,

- ✓ மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் உள்ளடக்கிய அனைத்து மின்சார வசதி இல்லாத கிராமங்களிலும் டிசம்பர் 2017க்குள் மின்சார வசதியளிக்க வேண்டும்.
- ✓ மின்சார வசதி பெற விருப்பம் தெரிவிக்கும் அனைத்து வீடுகளுக்கும் டிசம்பர் 2018க்குள் மின் இணைப்பு வழங்க வேண்டும்.
- ✓ சூரிய மின் சக்தி மேற்கூரைகளை அமைக்க ஊக்கப்படுத்துதல், மற்றும் உற்பத்தி செய்யப்படும் சூரிய சக்தி மின்சாரத்தை ஒழுங்கான முறையில் மின்சார விநியோக கட்டமைப்போடு இணைத்தல்.
- ✓ டீசலில் இயங்கும் மோட்டார் பம்புகளுக்கு பதிலாக சூரிய சக்தியில் இயங்கும் மோட்டார் பம்புகளை பயன்படுத்துதல்.
- ✓ குசும் (Kisan Urja Suraksha evam Utthaan Mahabhiyan -KUSUM)) திட்டத்தை செயல்படுத்தி 10,000 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின்சக்தி நிலையங்களை பரவலாக அமைப்பது மற்றும் உற்பத்தி செய்யப்படும். மின்சாரத்தை விநியோக கட்டமைப்புடன் இணைப்பது.
- ✓ BEE அமைப்பு வழங்கும் நட்சத்திர செயல்திறன் வாய்ந்த மோட்டார் பம்புகளை விவசாயத் துறையில் பயன்படுத்துதல்.
- ✓ நாட்டில் ஒரு நகரமேனும் 100 சதவீதம் புதுப்பிக்கத்தக்க மின் ஆற்றலில் இயங்க வழி செய்ய வேண்டும்.

## எக்ஸிடோனியம் – புதிய பொருள் நிலை

❖ 50 ஆண்டுகளுக்கு முன் கோட்பாட்டு வடிவில் (theorised) முதலில் விளக்கப்பட்ட எக்ஸிடோனியம் (Excitonium) எனும் பொருட்களின் புதிய நிலை இருப்பை (Form of matter) ஆராய்ச்சியாளர்கள் தற்போது நிருபித்துள்ளனர்.

❖ பொருட்கள் ஐந்து நிலையில் உள்ளன.

அவையாவன,

- ○ திடம்
- ○ திரவம்
- ○ வாயு
- ○ பிளாஸ்மா
- ○ போஸ் - ஐன்ஸ்டின் செறிபொருள் (Bose-Einstein condensates)

❖ எக்ஸிடோனியம் ஓர் செறிபொருள் (Condensate) ஆகும்.

❖ மீக்கடத்திகள் (super conductors) போன்று செயல்பாட்டு அம்சங்களை வெளிக்காட்டும் எக்ஸிடோனியம் எக்ஸிடோன்கள் எனும் துகள்களால் கட்டமைக்கப்பட்டவை.

❖ எக்ஸிட்டான்கள் தப்பித்த எலக்ட்ரான்களினால் உருவானவையாகும்.

- 1960-ல் பெர்ட் ஹால்பெரின் எனும் ஹார்வோர்டு இயற்பியல் கோட்பாளரால் "எக்ஸிடோனியம் " எனும் வார்த்தை உருவாக்கப்பட்டது.

### சண்டிகர் - பொலிவுறு நகர அட்டை

- யூனியன் பிரதேசமான சண்டிகர், யூனியன் பிரதேசத்தின் பல்வேறு அரசு மற்றும் வர்த்தக இடங்களில் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளின் கட்டண செலுத்துதலுக்கான பொலிவுறு நகர அட்டைகளை (Smart City Cards) வெளியிட்டுள்ளது.
- பேங்க் ஆஃப் இந்தியாவுடன் கூட்டிணைவை ஏற்படுத்தி இத்திட்டத்தை சண்டிகர் தொடங்கியுள்ளது.
- இதை செல்லத்தகு அடையாள அட்டையாகவும் பயன்படுத்த இயலும்
- சண்டிகர் நகரத்தில் ஆதார் அட்டை உடைய அனைத்து பயனாளிகளும் யூனியன் பிரதேசத்தின் e-சம்பார்க் மையம் மற்றும் பேங்க் ஆஃப் இந்தியா வங்கிகளில் பொலிவுறு நகர அட்டையை பெறலாம்.

### தாவர ஒளிர்வு

- மாசெசூட்ஸ் தொழிற்நுட்ப கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மின்மினிப் பூச்சிகளின் ஒளிர்வுக்குப் பயன்படும் ஒளிரும் வேதியியல் (Luminescent Chemical) பொருட்களை தாவரங்களில் செலுத்தி அதன் மூலம் தாவரங்களின் இலைகளை பிரகாசமாக ஒளிரச் செய்வது சாத்தியமே என நிருபித்துள்ளனர்.
- ஒளிரும் தாவரங்களை உருவாக்க ஆராய்ச்சியாளர்கள் மின்மினிப் பூச்சிகளின் ஒளிர்வுக்கு பயன்படும் "லூசிபெரேஸ் "(Luciferase) எனும் நொதியை தாவரங்களில் பயன்படுத்தியுள்ளனர்.
- இந்த "லூசிபெரரேஸ் "நொதியானது லூசிபெரின் (Luciferin) எனும் மூலக்கூறின் மேல் செயல்படுவதே இத்தகு ஒளிர்வின் வெளிப்பாட்டிற்கு காரணமாகும். இத்தகு நிலையில் துணை நொதி A ஆனது (Co enthyme A) ஒளிர்வு செயல்பாட்டின் முழு நிலைகளிலும் உதவும்.
- இது லூசிபெரேஸ் நொதியின் செயல்பாட்டிற்கு தடையாக உள்ள அனைத்தையும் நீக்கும்.
- இந்த மூன்று ஒளிர்வுக்கு பயன்படும் கூறுகளும் வெவ்வேறு அளவுடைய சிறிய சிலிக்கா நானோ பொருட்களில் அடக்கப்படும். பின் இவை தாவரங்களின் வெவ்வேறு பகுதியில் செலுத்தப்படுவதால் இம்மூன்று ஒளிர்வு கூறுகளும் தாவர இலைகளை அடையும்.
- இவை தாவரங்களில் உட்செலுத்தப்படும் அல்லது தாவரங்கள் சில மணிநேரம் இவற்றில் மூழ்கி வைக்கப்படும். இதன் மூலம் தாவரங்கள் ஒளிர்வு தன்மை பெறும்.
- இத்தொழிற்நுட்பம் மூலம் உருவாக்கப்படும் தாவரங்கள் குறை-ஒளிர்அடர்வு உடைய உள்ளரங்க (indoor) தாவரங்களாகவும், சுய ஆற்றலுடைய தெரு விளக்குகளுக்கு பதிலாக ஒளி தரும் மரங்களாகவும் பயன்படுத்தப்படும்.

### சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு பொருட்கள்

- விண்வெளியில் இருக்கும் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு (International Space Station - ISS) ஸ்பேஸ் – எக்ஸ் (SpaceX) நிறுவனம் கடந்த ஐந்து வருடங்களாக பொருட்களைக் கொண்டு சென்று வருகிறது.
- கலிபோர்னியாவை தலைமையாகக் கொண்டு இயங்கும் ஸ்பேஸ் – எக்ஸ் நிறுவனம் டிராகன் எனும் விண்கலத்தை உருவாக்கியது. அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசாவுடன் வணிக ரீதியாக ஒப்பந்தம் செய்யப்பட்டு, ஒப்பந்தத்தின் படி சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு

ஸ்பேஸ்-எக்ஸ் நிறுவனம் சரக்குகளை கொண்டு சென்று வருகிறது.

- இந்நிலையில் முதன் முறையாக ஏற்கெனவே உபயோகிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்ட ராக்கெட்டைக் கொண்டு விண்கலனை செலுத்துவதற்கு ஸ்பேஸ்-எக்ஸ் நிறுவனம் முடிவு செய்தது. அதன்படி டிராகன் விண்கலம் ஃபால்கான்-9 (Falcon-9) என்ற புதுப்பிக்கப்பட்ட ராக்கெட்டில் இணைக்கப்பட்டு விண்வெளியில் வெற்றிகரமாக ஏவப்பட்டது.
- ஆளில்லாத இந்த டிராகன் விண்கலத்தை, சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருக்கும் விண்வெளி வீரர்கள் இயந்திரக் கை போன்ற அமைப்பைப் பயன்படுத்தி பிடித்துக் கொண்டனர்.

### கெப்லர் – 90 கோள்கள் குடும்பம்

- அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் கெப்லர் -90i எனும் கிரகத்தினை கண்டறிந்துள்ளது. கெப்லர்-90 எனும் சூரியன் போன்ற நட்சத்திரத்தை சுற்றி வரும் எட்டாவது கோள் கெப்லர்-90i ஆகும். இந்த கெப்லர்-90 நட்சத்திரமானது பூமியிலிருந்து சுமார் 2545 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது.
- கெப்லர்-90i பாறைகளால் உருவான சிறிய கிரகம் ஆகும். கெப்லர்-90யின் மிக அருகாமையில் இது தனது சுற்று வட்டப் பாதையினைக் கொண்டுள்ளதால், இந்த கிரகத்தின் தட்பவெப்பம் மிகவும் அதிகமாக உள்ளது. 14 நாட்களுக்கு ஒரு முறை கெப்லர்-90 நட்சத்திரத்தைச் சுற்றி வரும் கெப்லர்-90iயின் வெப்பம் சுமார் 426 டிகிரி செல்சியஸ் இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.
- 8 கோள்களைக் கொண்டு இயங்கும் கெப்லர்/-90 கிரக குடும்பம் எண்ணிக்கை அடிப்படையில் கணக்கிடும் பொழுது நாம் வசிக்கும் சூரிய குடும்பத்துக்கு இணையாக உள்ளது. கெப்லர்-90 குடும்பமானது சூரிய குடும்பத்தின் சிறிய பதிப்பு போன்றதாகும்.
- இந்த எட்டு கிரகங்களையும் கண்டுபிடித்த ஆராய்ச்சியாளர்கள் கிரிஸ்டோபர் ஷாலூ மற்றும் வேண்டர்பெர்க் ஆவர். நாசாவின் கெப்லர் விண்வெளி தொலைநோக்கியில் இருந்து பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு, அவற்றில் கூகுள் நிறுவனம் உருவாக்கிய இயந்திர கற்றல் தொழில்நுட்பத்தை ஈடுபடுத்தி இந்த கிரகங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- இயந்திரக் கற்றல் என்பது ஒரு செயற்கை நுண்ணறிவு அணுகுமுறை ஆகும். மனித மூளையில் காணப்படும் நியூரான்களின் வலைப்பின்னல் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு இயந்திரக் கற்றல் தொழில்நுட்பமானது கோள்கள் ஆராய்ச்சியை அணுகுகின்றது.

### இந்திய பாரம்பரிய புராதன இடங்கள் மீதான காணொலிகள்

- இந்திய பாரம்பரிய புராதன இடங்களின் 360° கோணத்தையும், மெய்நிகர் உண்மை உள்ளடக்கத்தையும் (Virtual reality Content) வெளிக்காட்டுவதற்காக யுனெஸ்கோவின் அமைதி மற்றும் நீடித்த வளர்ச்சிக்காக மகாத்மா காந்தி கல்வி நிறுவனம் மற்றும் சேம்சங் இந்தியா (Samsung India) நிறுவனத்திற்கிடையே ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- ஒடிஸாவிலுள்ள கோனார்க்கின் சூரிய கோவிலினதும், உத்திரப்பிரதேசத்திலுள்ள ஆக்ராவின் தாஜ்மகாலினதும் 360° கோண காணொலிகளையும், மெய்நிகர் உண்மை உள்ளடக்கத்தையும் காட்டிட இவ்விரு நிறுவனங்களுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- சேம்சங் இந்தியா நிறுவனத்தினால் இந்தியாவின் பிற புராதன பாரம்பரிய நினைவிடங்களிலும் 360° கோண காணொலி காட்சிப் பதிவுகளும், மெய்நிகர் உண்மை உள்ளடக்கமும் மேற்கொள்ளப்படும்.
- இது நாடு முழுவதுமுள்ள மாணவர்களுக்கு அனுபவ கற்றல் உள்ளடக்கத்தை (experiential educational content) வழங்கும்.

- இத்திட்டம் மூலம் பெறப்படும் மெய்நிகர் உண்மை உள்ளடக்கங்களானது இந்தியாவின் சுற்றுலாத் துறையின் மேம்பாட்டினுடைய பயன்பாட்டிற்காக மத்திய சுற்றுலா அமைச்சகம் மற்றும் மாநில சுற்றுலா வாரியத்திற்கும் வழங்கப்பெறும்.

### தரவுகள் தேக்க கணிமை அமைப்பு (Reservoir Computing System)


- விஞ்ஞானிகள் ஒரு புதிய வகை நரம்பியல் பிணைய சில்லு (Neural Network Chip) ஒன்றை உருவாக்கியுள்ளனர். இது தரவுகள் தேக்க கணிமை அமைப்பை பயன்படுத்தி கற்பித்தல் இயந்திரங்களின் செயல்திறனை மேம்படுத்தி மனிதர்களைப் போல சிந்திக்க வைக்க பயன்படுகிறது.
- இந்த அமைப்பைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள பிணையமானது உரையாடலின் போது வார்த்தைகள் கூறப்படுவதற்கு முன்பே கணிப்பதோடு மட்டுமல்லாமல்,நடப்பு நிகழ்வுகளின்அடிப்படையில் எதிர்கால விளைவுகளை கணிக்க உதவுகின்றது.
- தரவுகள் தேக்க கணிமை அமைப்பானது கடந்த காலத்தில் மிகப்பெரிய ஒளியியல் கூறுகளைக் கொண்டு உருவாக்கப்பட்டது.
- அமெரிக்காவின் மிச்சிகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தங்களது கணினி அமைப்பை நினைவுகொள் மின்தடையை (Memristors) பயன்படுத்தி உருவாக்கியுள்ளார்கள். இந்த நினைவுகொள் மின்தடையை பொருத்த குறைவான இடவசதியே தேவைப்படும். மேலும் இது தற்போதுள்ள சிலிக்கான் அடிப்படையிலான மின்னணு சாதனங்களில் எளிதில் ஒருங்கிணைக்க முடியும்.
- நினைவுகொள் தடை (Memristors) என்பது தர்க்க (logic) மற்றும் சேமிப்பகத் தரவுகள் (store data) ஆகிய இரண்டு வேலைப்பாடுகளையும் செய்கின்ற சிறப்பு வகை மின்தடை சாதனமாகும்.
- இது வழக்கமான கணினி அமைப்புகளுடன் இருந்து முரண்படுகிறது. இதில் செயலிகள் நினைவகத் தொகுதிகளிலிருந்து தனியாக தர்க்கத்தை (logic) செயல்படுத்துகிறது.

### இந்தியாவில் பாட் டாக்ஸி

- பாட் டாக்ஸி [Pod Taxi] எனும் தனிப்பட்ட விரைவான போக்குவரத்து (Personal Rapid Transit) முறையினை இந்தியாவில் கட்டமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்பு தரநிலைகளை பரிந்துரைக்க ஐந்து பேர் கொண்ட நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது அமெரிக்காவில் கடைபிடிக்கப்படும் கடுமையான பாதுகாப்பு விதிகளை பின்பற்ற வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது.
- தானியங்கி மக்கள் போக்குவரத்து அமைப்புகளுக்கான தரம் மற்றும் விவரக் குறிப்புகளுடன் மத்திய கொள்கைக் குழுவின் (நிதி ஆயோக்) பரிந்துரைகளோடு பிற பாதுகாப்பு அளவுருக்களையும் கொண்ட புதிய ஒப்பந்தம் மேற்கொள்ளலுக்கான அறிவிப்பாணையை (expression of interest) வெளியிட பரிந்துரைத்துள்ளது.
- இத்திட்டம் பொது-தனியார் கூட்டு ஒப்பந்தத்தின் (public-private partnership) அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) அறிவுறுத்தியுள்ளது.
- இது தில்லி-ஹரியானா எல்லைப்பகுதியில் இருந்து குருகிராமத்தில் உள்ள ராஜீவ் சவுக் பகுதி வரை 12.3 கிலோ மீட்டர் தூரத்துக்கு டெல்லி-குருகிராமம் பெருவழியில் முன்முயற்சியாக அமைக்கப்படவுள்ளது.
- இவ்வகை போக்குவரத்து அமைப்பு இங்கிலாந்தில் இலண்டனில் உள்ள ஹீத்ரோ விமான நிலையத்தில் இருந்து மோர்கன் டவுன் வழியாக மாஸ்தார் நகரம் வரை இயங்குகின்றது.

### *தனிப்பட்ட விரைவான போக்குவரத்து*

- இது அதிநவீன பொது போக்குவரத்து முறையாகும். பாட் (Pod) டாக்ஸி எனப்படும் மின்சக்தியில் இயங்கும் இவை சிறிய பயணிகள் குழுவை இரு இடங்களுக்கு இடையே முன்னும் பின்னும் அழைத்துச் செல்லும். மேலும் பயணிகளின் தேவைக்கேற்ப செயல்படும்..
- இது மின்சார சக்தியில் இயங்கும். இவை ஓர் தடையற்ற பசுமை வழிப் போக்குவரத்து முறை ஆகும்.




### இந்தியாவின் முதல் பிட்காயின் வர்த்தக செயலி

- மெய்நிகர் நாணயங்களின் (virtual currencies) பரிவர்த்தனைகளுக்காக துபாயைச் சேர்ந்த "புளுட்டோ எக்ஸ்சேஞ்ச்"எனும் நிறுவனம் இந்தியாவின் முதல் பிட்காயின் (எண்ம நாணயம்) வர்த்தக செயலியை (Trading App) வெளியிட்டு உள்ளது.
- பணப்பை வசதியின் அடிப்படையிலான இந்த இந்தியாவிற்கான முதல் பிட்காயின் செயலியின் மூலம் கைபேசி எண்ணைப் பயன்படுத்தி பிட்காயின் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள இயலும். இது இந்திய சந்தைகளுக்குக்காக பிரத்யேகமாக வெளியிடப்பட்டுள்ளது.
- கட்டணம் செலுத்துதல், வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்புதல் (Remittance), இரு வணிக நிறுவனங்களுக்கிடையிலான வர்த்தகம், விநியோக சங்கிலிகளின் நிதியளிப்பு, சொத்து மேலாண்மை, வர்த்தகம் போன்றவை உட்பட பல்வேறு பரிவர்த்தனை நடவடிக்கைகளை இச்செயலி மூலம் மேற்கொள்ள இயலும்.
- பிட்காயின்கள் ஓர் சங்கேத இணையப் பணமாகும் (Crypto Currency).
- கட்டணச் செலுத்து அமைப்பாக (Payment System) பயன்படும் இவை உலகின் முதல் மையப்படுத்தப்படாத/பரவலாக்கப்பட்ட (decentralised) டிஜிட்டல் பணமாகும்.
- உலகில் பிட்காயின் நாணயமுறையை கட்டுப்படுத்த எந்த மத்திய வங்கியும், நிர்வாக முறையும் இல்லை. இரகசிய குறியாக்கத்தின் (Crypography) உதவியோடு இதன் அனைத்து பரிவர்த்தனை நடவடிக்கைகளும் இருமுனை பயன்பாட்டாளர்களின் (Peer to Peer) வழியே மேற்கொள்ளப்படுகின்றது.

### கால்நடை நோய்களுக்கான முன்னெச்சரிப்பு செயலி

- கால்நடை நோய்களைப் பற்றிய முன்னெச்சரிக்கைக்காக "LDF கைபேசி செயலி" எனும் செயலியை மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல்வாழ்வு அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- பெங்களூருவில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் (ICAR – Indian Council for Agriculture Research) கால்நடை நோயியல் மற்றும் நோய் தகவலியல் தேசிய நிறுவனத்தினால் (Ntaional Institute of Vertinary Epidomology and Disease Informatics- NIVEDI) இச்செயலி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இக்கைபேசி செயலி மூலம் கால்நடை நோய்கள் பற்றி முன்கூட்டிய எச்சரிக்கைகளைப் (early diseases warning) பெறலாம். மேலும் கால்நடை நோய்த்தொற்றுகளின் போது அவற்றின் நோயறிதலுக்கான மருத்துவ மாதிரிகள் பற்றிய தகவல்களையும் பெற இயலும். அதனால் நோய்த்தொற்று காலத்தில் வேண்டிய மருத்துவ சிகிச்சைகளை உடனடியாக மேற்கொள்ள இயலும்.
- ICAR – NIVEDI ஆராய்ச்சி நிறுவனமானது, கடந்த காலத்திய நோய்த்தொற்று நிகழ்வுகளின் அடிப்படையில் 13 முன்னணி கால்நடை நோய்களை அடையாளம் கண்டு அவற்றிற்கான வலுவான தரவுதளத்தை இச்செயலியில் கட்டமைத்துள்ளது.
- காலநிலை காரணிகள் (Clinatic Factors) மற்றும் காலநிலை அல்லாத காரணிகள் (Non-Clinatic Factors) ஆகியவற்றின் அடிப்படையில் கால்நடை நோய்க்காரணங்களை விவரிக்கும் இச்செயலி, சம்பவித்துள்ள குறிப்பிட்ட நோய்களின் தொற்றின் அடிப்படையில் நாட்டில் உள்ள மாவட்டங்கள் அனைத்தையும் மிக உயரிய ஆபத்துடையவை (Verh high Risk), உயரிய ஆபத்துடையவை (high Risk), மிதமான ஆபத்துடையவை (Moderate Risk), குறைந்த ஆபத்துடையவை (Low Risk) மிகக்குறைந்த ஆபத்துடையவை (Very low Risk) என வகைப்படுத்துவதால், வகைப்பாட்டின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பகுதிகளில் கால்நடை நோய் கட்டுப்படுத்து பங்குதாரர்களால் திறனான முறையில் திட்டமிட்டு, கால்நடை தொற்றுகளை கட்டுப்படுத்த இயலும்.

### உலகின் இரண்டாவது சோலார் நெடுஞ்சாலை

- உள்நாட்டுத் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான தனது முதல் ஒளிமின்னழுத்த நெடுஞ்சாலையை (photo voltaic highway) கிழக்கு மாகாணமான ஷன்டாங் மாகாணத்தில் சீனா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- இந்த சோலார் சாலையானது மின்காப்பு பெற்ற அடுக்கை (Insulating layer) அடிப்பாகத்திலும், சோலார் ஒளி மின்னழுத்த தகடுகளை (photo voltaic panel) இடையிலும், தெளிவாகத் தெரியத்தக்க கான்கிரீட்டை (Transparent Concrete) மேல் அடுக்காகவும் கொண்டது.
- சோதனை செய்யப்பட்டுள்ள இந்த நெடுஞ்சாலை பிரிவானது 817.2 கிலோவாட் மின் ஆற்றலை உருவாக்கத்தக்கது. மேலும் இவை ஒவ்வொரு ஆண்டும் 1 மில்லியன் கிலோவாட் மின் ஆற்றலை உருவாக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.
- இந்த சோலார் நெடுஞ்சாலையால் உற்பத்தி செய்யப்பட்ட மின் ஆற்றலானது நெடுஞ்சாலை ஒளி விளக்குகள், சமிக்ஞை பலகைகள் (Sign Boards), கண்காணிப்பு கேமராக்கள், சுரங்கப்பாதை மற்றும் சுங்க கட்டணச் சாவடிகளின் சோதனை வசதிகள் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படும்.
- இந்த நெடுஞ்சாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் உபரி மின் ஆற்றலானது அரசின் மின் கட்டமைப்பிற்கு (grid) வழங்கப்படும்.
- சூரிய மின் தகடுகள் (Solar panels) பொதியப் பெற்ற உலகின் முதல் ஒளி மின்னழுத்த நெடுஞ்சாலை முதன் முறையாக பிரான்ஸ் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.



- தற்போது இத்தகு நெடுஞ்சாலையை கட்டமைத்திருக்கும் உலகின் இரண்டாவது நாடு சீனாவாகும்.

### மனித மரபணுத் தொகுதித் (Genome) திட்டம் - சீனா

- எதிர்காலத்திற்கு துல்லிய அளவில் நோய்களை குணப்படுத்துத் தன்மையுடைய மருந்துகளை உற்பத்தி செய்வதற்கென உதவி புரிவதற்காக வேண்டி ஒரு லட்சம் மக்களின் மரபணு கட்டமைப்பை (genetic makeup) ஆவணமிடுவதற்காக (Documenting) உலகின் மிகப்பெரிய மனித மரபணுத் தொகுதி (Human Genome) ஆராய்ச்சித் திட்டத்தை சீனா தொடங்கியுள்ளது.
- ஜீவாங்க் மற்றும் ஹீய் (Zhuang ernd Hui) இனத்தவர் உட்பட 5 மில்லியனுக்கும் மேலான மக்கள் தொகையுடைய 9 இனச் சிறுபான்மையினர் (ethnic minority) மற்றும் நாடு முழுவதுமுள்ள ஹான் (Han) இனப்பெரும்பான்மையினரின் (ethnic majority) மரபணுத் தகவல்கள் பற்றிய தரவுகள் இத்திட்டத்தின் கீழ் சேகரிக்கப்படும்.
- சேகரிக்கப்பட்ட அனைத்து மரபியத் தகவல்களின் படி, மரபணு வரிசையாக்கமும் அவற்றின் மீதான ஆய்வுகளும் நான்கு ஆண்டுகளில் முடிக்கப்படும்.
- இவ்வாறு முடிக்கப்பெற்றால், இதன் மூலம் இதுவே உலகின் வேகமான மரபணுத் தொகுதி பொறியியல் திட்டமுமாகவும் (Genome Engineering) உருவாகும்.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### Clean Sea - 2017

- அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளின் போர்ட் பிளேர் கடற்கரையில் "Clean Sea 2017" எனும் மண்டல அளவிலான கடல் எண்ணெய் கசிவு மாசுபாட்டு பதிலெதிர்ப்பு பயிற்சியை இந்திய கடலோர காவற்படை நடத்தியுள்ளது.
- தேசிய அவசரகால எண்ணெய் கசிவு பேரிடர் பதிலெதிர்ப்பு திட்டத்தின் (National Oil Spill Disaster Contigency Plan (Nos-DCP) கூறுகளோடு ஒத்திசைந்து எண்ணெய் கசிவுகளின் பேரிடருக்கு பதிலெதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் உள்ள இந்திய கடலோர காவற் படை, பிற மூல ஆதார நிறுவனங்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் தயார்நிலையை வெளிக்காட்டுவதற்காக இந்த பயிற்சி நடத்தப்படுகின்றது.

- இந்திய கடலோர காவற் படையானது இந்திய கடற்மண்டலங்களின் கடற் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான முக்கிய பொறுப்பாளி ஆகும். மேலும் இது இந்திய கடற் எல்லைகளில் நிகழும் எண்ணெய் கசிவுகளுக்கான பதிலெதிர்ப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் அதிகார அமைப்பாகும்.
- எண்ணெய் கசிவு பதிலெதிர்ப்புக்கென தேசிய எண்ணெய் கசிவு அவசரகால பதிலெதிர்ப்பு திட்டத்தை இந்திய கடலோர காவற் படை வகுத்துள்ளது.
- இதன் மூன்று மாசுபாட்டு பதிலெதிர்ப்பு மையங்கள் மும்பை, சென்னை மற்றும் போர்ட் பிளேரில் உள்ளன.

## பாராட்டு சான்றிழ்

- வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் அருகி வரும் இனங்கள் மீதான சர்வதேச வர்த்தக உடன்படிக்கைக்கான (CITES – Convention on International Trade in Endangered species of with Fauna and Flora) அமைப்பானது வனஉயிரிகளின் சட்ட விரோத வர்த்தகத்தை தடுப்பதில் இந்தியா மேற்கொண்ட முயற்சிகளை பாராட்டும் வகையில் இந்தியாவிற்கு பாராட்டு சான்றிதழை (Certificate of Commendation) வழங்கியுள்ளது.
- "ஆப்ரேஷன் சேவ் குர்மா" என (Operation Save Kurma) குறியீட்டு பெயருடைய குறிப்பிட்ட வன உயிர் இனத்திற்கான பாதுகாப்பு செயற் நடவடிக்கையை ஒருங்கிணைத்து மேற்கொண்டமைக்காக வனஉயிர்கள் மீதான குற்றங்கள் தடுப்பு அமைப்பிற்கு (Wildlife Crime Control Bureau - WCCB) இச்சான்று அளிக்கப்பட்டுள்ளது.
- WCCB-ன் வனஉயிர்களின் சட்டவிரோத வர்த்தகத்தை தடுப்பதற்கான உலகளாவிய மற்றும் பிராந்திய அளவிலான முன்மாதிரி செயற் நடவடிக்கைகளை அங்கீகரித்து இந்த பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.
- அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற CITESன் 69வது நிலைக் குழு மாநாட்டில் இப்பாராட்டு சான்றிதழை உலக அளவில் இந்தியா மட்டுமே பெற்றுள்ளது.

### *ஆப்ரேஷன் சேவ் குர்மா*

- வெளிநாடுகளுக்கு இந்தியாவிலிருந்து உயிருள்ள ஆமைகள் மற்றும் அவற்றின் உறுப்புகள் சட்ட விரோதமாக வர்த்தகம் செய்யப்படுவதை தடுப்பதற்காக "ஆப்ரேஷன் சேவ் குர்மா" மேற்கொள்ளப்பட்டது.

### *WCCB*

- வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டம் 1972 –ல் (Wildlife Protection Act-1972) 2007 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஓர் சட்ட அமைப்பே WCCB ஆகும்.
- நாட்டிலுள்ள வனவிலங்குகள் தொடர்புடைய குற்றங்களை தடுப்பதற்காக இது ஏற்படுத்தப்பட்டது.

## பயோமாஸ் வர்த்தக இணையவாயில்

- இந்தியா தனது முதல் கழிவு மேலாண்மை, மாசு பரிமாற்றம் மற்றும் வர்த்தக இணையவாயிலை தொடங்க உள்ளது.
- மாசு கழிவுகள் பரிமாற்ற தொழிற்நுட்பத்தை வழங்கும் இலண்டனைச் சேர்ந்த முன்னணி நிறுவனத்தோடு C Ganga எனும் இந்தியாவின் கங்கை நதிப்படுகை மேலாண்மை மற்றும் ஆய்வு மையம் (Centre for Ganga River Basin Management and Studies) இணைந்து இந்த இணையவாயிலை தொடங்க உள்ளது.

- இது தூய்மை கங்கா திட்டத்தின் ஓர் பகுதியாகும். இதன் கீழ் கங்கை நதிப் படுகைகளில் உள்ள மாசுபாடுகள் மற்றும் அங்கு மேற்கொள்ளப்படும் கழிவு மேலாண்மை போன்றவற்றோடு தொடர்புடைய பிரச்சனைகள் களையப்படும்.

### C Ganga


- தேசிய கங்கை தூய்மைத் திட்ட அமைப்பின் (NMCG – National Mission for clean Ganga) கீழ் ஏற்படுத்தப்பட்ட ஓர் புதிய ஆலோசனை நல்கு (Think Tank) அமைப்பே C Ganga ஆகும்.
- நதி மற்றும் தண்ணீர்சார் அறிவியல் களங்களில் இந்தியாவை உலகின் முன்னணித் தலைவராக்குவதே இந்த ஆலோசனை நல்கு அமைப்பின் நோக்கமாகும்.
- நாட்டின் முன்னணி அறிவியல் மற்றும் தொழிற்நுட்ப நிறுவனங்களை பிரதிநிதிப்படுத்தும் இம்மையத்தின் தலைமையகம் கான்பூர் IIT-ல் உள்ளது.

### கங்கை நதிக் கரையை ஒட்டியுள்ள நகரங்களில் பிளாஸ்டிக் பொருட்களுக்குத் தடை

- தேசிய பசுமைத் தீர்ப்பாயம், ஹரித்துவர் மற்றும் ரிஷிகேஷ் போன்ற கங்கை நதிக்கரையில் அமைந்துள்ள நகரங்களில் பிளாஸ்டிக்காலான பைகள், தட்டுகள் மற்றும் கருவிகளை பயன்படுத்த முழுமையாகத் தடை விதித்துள்ளது.
- தேசிய பசுமைத் தீர்ப்பாயத் தலைவர் சுவதந்திர குமார் தலைமையிலான அமர்வு உத்தர காசி வரை இத்தகைய பிளாஸ்டிக் பொருட்களின் விற்பனை, உற்பத்தி மற்றும் சேமிப்பு கிடங்குகளை தடை செய்துள்ளது.
- பசுமைத் தீர்ப்பாயத்தின் இந்த உத்தரவு பசுமைப் போராளி M.C.மேத்தா என்பவரது வழக்கை விசாரிக்கும் சமயத்தில் வந்தது.

### எண்ணூர் பகுதியை பாதிக்கும் உலர் சாம்பல்

- எண்ணூர் சிற்றோடைப் பகுதியின் நீரியல், சூழலியல் மற்றும் நிலவியல் இயல்பு நிலைகளை அப்பகுதியில் உள்ள தொழிற்சாலைகளும், குறிப்பாக கரிம உலர் சாம்பல் பயன்பாடும் பெரிதும் பாதித்துள்ளதாக தேசிய பசுமை வாரியம் நியமித்த வல்லுனர் குழு கண்டறிந்துள்ளது.
- இந்த நிபுணர் குழுவானது கரிம உலர் சாம்பல் மாசுப்பாடும், எண்ணூரிலுள்ள வடசென்னை அனல்மின் நிலையமும் (NCTPS) சுற்றுச்சூழலை எந்த அளவு பாதித்துள்ளது என்பதை ஆய்ந்து அறிக்கையளித்துள்ளன.
- சுமார் இருபதுக்கும் மேற்பட்ட மீன்கள், நண்டுகள், இரால்கள் மற்றும் சிப்பிகளின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அனைத்து மாதிரிகளிலும் அளவுக்கு அதிகமான செம்பு உலோகம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது மீன்களின் செவில்களில் பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் இது நீர்வாழ் உயிரினங்கள் நீந்துவதையும், உணவு தேடும் ஆற்றலையும் பாதிக்கும்.
- எண்ணூர் சிற்றோடையிலிருந்து எடுக்கப்பட்ட மீன்களில் அளவுக்கு அதிகமாக காட்மியம் மாசுப்பாடு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இது ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிகபட்ச கட்டுப்பாட்டு அளவுகளை விட அதிகமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.
- பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள வீடுகளில் விளைவிக்கப்பட்ட காய்கறிகளும் சோதனை செய்யப்பட்டன. இதில் பாதிப்பை ஏற்படுத்துமளவு அதிகமாக நீலிரும்பு (Chromium) மற்றும் ஈயம் (Lead) இருப்பது வெளிவந்துள்ளது.




❖ இந்த மாசுப்பாடு சதுப்பு நிலக்காடுகளையும் பாதிக்கிறது என்று வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

❖ எண்ணூர் பகுதியில் வாழும் மீனவர்கள் மாசுபட்ட நீர் வளங்களை உபயோகிப்பதால், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள உடல்நல பாதிப்புகளை கண்டறிய தனியாக ஒரு ஆய்வுக் குழுவினை தேசிய பசுமை வாரியம் அமைத்துள்ளது. மேலும் இப்பகுதியில் பிடிக்கப்படும் மீன்களை உட்கொள்பவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளையும் இக்குழு ஆராயும்.

**காலேஸ்வரம் நீர்ப்பாசனத் திட்டம் – சுற்றுச்சூழல் ஒப்புதல்**

❖ மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாறுபாட்டு அமைச்சகத்தின் நிபுணர் மதிப்பீட்டுக் குழு (Expert Appraisal Committee) தெலுங்கானா மாநிலத்தின் காலேஸ்வரம் நீர்ப்பாசன திட்டத்திற்கு இசைவு வழங்கியுள்ளது.

❖ ஹைதராபாத் மற்றும் செகந்திராபாத் பகுதிகளுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தித் தருவதற்காக கோதாவரி நதியின் குறுக்கே காலேஸ்வரம் நீர்ப்பாசனத் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

❖ இத்திட்டத்தின் கீழ் தெலுங்கானாவின் மடிகாட்டா கிராமத்தின் அருகில் தன் துணைநதியான பிரானாஹிட்டாவோடு கோதாவரி நதி சங்கமிக்கும் இடத்தில் தடுப்பணை கட்டப்பட உள்ளது.

❖ பெரும்பரப்பிலான பகுதிகள் இத்திட்டத்தின் கீழ் மூழ்க உள்ளதாயினும், இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி (Environment Clearence) வழங்கியுள்ள மத்திய நிபுணர் மதிப்பீட்டுக் குழுவானது நீர்ப்பாசன திட்டத்தினால் இத்திட்டப் பகுதிகளில் ஏற்பட உள்ள நுண் – கால நிலை மாற்றங்களில் (micro-climatic conditions) கவனம் கொள்ளுமாறு தெலுங்கானா அரசிற்கு அறிவுறுத்தியுள்ளது.

❖ பிரிக்கப்படாத ஆந்திரப் பிரதேசத்தில் 2007-ல் முன் மொழியப்பட்ட பிரானஹிட்டா – செவ்வெல்லா ஏற்றுப் பாசன (Lift Irrigation) திட்டத்தின் மறு வடிவமைப்பு பதிப்பே காலேஷ்வரம் நீர்ப்பாசனத் திட்டமாகும்.

- எல்லம்பள்ளி அணைக்கட்டிலிருந்து மல்லனசாகர் நீர்த்தேக்கம் வரை இத்திட்டத்தின் கீழ் 81 km நீளமுள்ள சுரங்க நீர் வழிப்பாதை (tunnel) அமைக்கப்பட உள்ளது. இது கட்டி முடிக்கப்பட்டால் இது தான் ஆசியாவின் மிக நீண்ட நீர் கொண்டு செல்லும் சுரங்கப் பாதையாகும்.

### புதிய தவளை இனம் – அருணாச்சல பிரதேசம்

- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள தல்லே பள்ளத்தாக்கு (Talley Valley) வன உயிர் சரணாலயத்தில் புதிய தவளை இனம் ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- அருணாச்சலப் பிரதேசத்தின் தாழ்ந்த நிலப்பாங்குடைய )lower) சுபன் ஸ்ரீ மாவட்டத்தில் இப்புது தவளை இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- ஒடோர்ரனா அருணாசலேன்சிஸ் (odorrana arunachalensis) என இதற்கு பெயரிடப்பட்டுள்ளது.
- கலப்பு ஈரநிலை வெப்ப மண்டல காடுகளின் மலை நீரோடைகளுடன் பெரணிகளால் சூழப்பட்ட பாறைகளுள்ள பகுதிகளில் இத்தவளைகள் வாழ்கின்றன.
- இரு கண்களுக்கிடையே இவைகள் கொண்டுள்ள கரும்பட்டை போன்ற அடையாள குறியானது இவற்றை பிற தவளைகளிலிருந்து வேறுபடுத்தும் அம்சமாகும்.
- கிழக்கு ஆசியா மற்றும் அதனைச் சுற்றிய பிராந்தியங்களில் ஒடோர்ரனா பேரின தவளைகள் வாழ்கின்றன.
- மேலும் இவற்றின் இனங்களை ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான ஈரநிலை காலங்களில் காணலாம்.

### புதிய தேள் இனம் - திரிபுரா

- ஸ்கால்லெர்ஸ் மரத்தேள் எனப் பெயர் சூட்டப்பட்ட புதிய தேள் வகையை திரிபுராவில் உள்ள திரிஷனா வன உயிர் சரணாலயத்தில் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- மத்திய இந்தியாவின் புலிகள், இமயமலைப் பகுதிகளிலுள்ள பனிச்சிறுத்தைகள் உட்பட உலகின் பல்வேறு பகுதிகளில் வன உயிர்கள் பற்றி ஆராய்ச்சியை மேற்கொண்ட ஜார்ஜ் ஸ்கார்லெரை (George Schaller) கவுரவிக்கும் விதமாக இப்புதிய தேள் இனத்திற்கு லியோசெலெஸ் ஸ்கால்லெரி (Liocheles Schalleri) எனும் விலங்கியல் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- ஸ்கால்லெர்ஸ் மரத் தேளானது இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 11வது மரத் தேள் இனமாகும்.
- பொதுவாக காணப்படும் பெரும் தேள்களை காட்டிலும் சிறியதாக இத்தேள்கள் காணப்படுவதால் இவை குட்டைத் தேள்கள் என்றழைக்கப்படும்.
- இந்தியாவில் 125 தேள் இனங்கள் உள்ளன. மேலும் இந்தியாவிலுள்ள 11 மரத் தேள்களுள் 9 மரத் தேள்கள் இந்திய பிரதேசங்களில் மட்டும் காணப்படும் (endemic) மரத்தேள்களாகும்.
- திரிபுராவின் திரிஷனா வன உயிர் சரணாலயம் மற்றும் காட்டெருமைகளின் (bisan) தேசியப் பூங்கா உட்பட குறைந்த உயரமுடைய பகுதிகளில் காணப்படும் இம்மரத்தேள்கள், வங்கதேசத்திலும் காணப்படுகின்றன.

### “புளூ பிளாக்” திட்டம்

- நாட்டிலுள்ள கடற்கரைகளின் தூய்மையுடைமையின் தரத்தினை மேம்படுத்துவதற்காக “புளூ பிளாக் ”(Blue Flag) எனும் முன்னோட்ட சோதனைத் திட்டத்தை மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகம் தொடங்கியுள்ளது.

- கடற்கரைகளின் தூய்மைத் துப்புரவுடைமையின் தரத்தினையும், அவை பாதுகாப்பாக பேணப்படுவதையும், மேலும் கடற்கரைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதையும் இத்திட்டம் முதன்மை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் கடலோர பகுதிகளுடைய அனைத்து மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும், அவற்றினுடைய கடற்கரைகளில் தலா ஓர் கடற்கரையை தேர்ந்தெடுத்து அதனை பிரதிநிதிப்படுத்த கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.
- தற்போது நடப்பில், செயல்பாட்டில் இருக்கும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தினுடைய ஒருங்கிணைக்கப்பட்ட கடலோர மேலாண்மை திட்டத்தின் மூலம் (Integrated Coastal Management Programme) இந்திய கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட கடற்கரைகளுக்கு நிதியளிக்கப்பட்டு, அங்கு மேற்கூறிய முதன்மை நோக்கங்களை அடைவதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- இந்தியாவில் குஜராத், கர்நாடகம், கோவா, கேரளம், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், ஒடிஸா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் கடற்கரைகள் உள்ளது.
- பாண்டிச்சேரி, டையூ மற்றும் டாமன், லட்சத்தீவுகள், அந்தமான் மற்றும் நிக்கோபார் போன்ற யூனியின் பிரதேசங்களில் கடற்கரைப் பகுதிகள் உள்ளன.

## பயிர்த்தாள் எரிப்பினை கையாளுதல்

- பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியத் திட்டத்தின் (National Adoption Fund for Climate Change) கீழ் பயிர் மீதங்களின் மேலாண்மை வழியே (Crop Residue Management) விவசாயிகளிடையே பயிர் வளர்ப்பில் பருவநிலை நெகிழ்ச்சித் திறனுடைமை (Climate Resilience Building) கட்டமைத்தல் மீதான பிராந்திய திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.
- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் செயலாளரின் தலைமையில் டெல்லியில் நடைபெற்ற தேசிய வழிகாட்டு குழுவின் (National Steering Committee) சந்திப்பில் இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- முதற்கட்டமாக இத்திட்டம் 100 கோடி ரூபாய் செலவீட்டில் பஞ்சாப், ஹரியானா, உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.
- வேளாண் களங்களில் அறுவடை முடிந்த பிறகு மேற்கொள்ளப்படும் பசுந்தாள் எரிப்புகளால் (Stubble burning) உண்டாகும் பருவநிலை மாற்றங்களின் தாக்கங்கங்கள், சுற்றுச்சூழல் மீதான எதிர்மறை தாக்கங்களை தணிப்பதும், வேளாண்மையில் தகவமைப்பு திறனை (Adaptive Capacity) மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.
- வேளாண் களங்களில் மேற்கொள்ளப்படும் பசுந்தாள் எரிப்பானது உலக வெப்பமய மாதலுக்கு துணைபுரிவதோடு சுற்றுச்சூழலில் மாசுபாட்டையும் உண்டாக்கும். இதனால் மனித ஆரோக்கியம், மண்வளம், காற்றின் தரம் போன்றவற்றில் பாதக விளைவுகள் ஏற்படும்.
- திறந்த வெளி பசுந்தாள் எரிப்புகளானது வளிமண்டல அடுக்கில் கார்பன் மோனாக்ஸைடு, கார்பன் டை ஆக்ஸைடு, நைட்ரஸ் ஆக்ஸைடு போன்ற வாயுக்களோடு, நுண்துகள் மாசுக்களையும் (Particular Matters) வெளியிட வல்லது.

### *பருவநிலை மாற்றத்திற்காக தேசிய தகவமைப்பு நிதியம்*

- பருவநிலை மாற்றத் தகவமைப்பு திட்டங்களை மாநில அரசுகள் தங்கள் மாநிலங்களில் செயல்படுத்துவதற்காக அவற்றிற்கு மத்திய அரசால் வழங்கப்படும் 100 சதவீத மானியத் தொகையே 2015 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியமாகும்.
- பருவநிலை மாற்றம் மீதான தேசிய செயல்திட்டத்தின் (National Action Plan on Climate Change)

குறிக்கோள்களை முழுமைப்படுத்துவதற்காகவும், பருவநிலை மாற்றம் மீதான மாநில அரசுகளின் செயற்திட்டத்தை செயல்படுத்திடவும் இந்நிதியம் தோற்றுவிக்கப்பட்டது.

- NAPCC ன் கீழ் நாடு முழுவதும் பருவநிலை மாற்றத் தகவமைப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான பொறுப்புடைமையை கொண்ட தேசிய அமலாக்க நிறுவனமாக (NIE – National Implementation Agency) நபார்டு வங்கி (NABARD – ஊரக வளர்ச்சி மற்றும் வேளாண்மைக்கான தேசிய வங்கி) செயல்படுகின்றது.

# மாநிலச் செய்திகள்

## கர்நாடகாவின் புதிய தலைமை செயலாளர்

- கூடுதல் தலைமை செயலாளராக இருந்த ரத்ன பிரபா கர்நாடகாவின் புதிய தலைமை செயலாளராக 2018 மார்ச் வரை நியமிக்கப்பட்டுள்ளார்.
- கர்நாடகாவின் நிர்வாக வரலாற்றில் இரு முக்கிய நிர்வாகப் பிரிவுகளின் தலைமையில் பெண்கள் இருப்பது இதுவே முதல் முறையாகும்.
  - ✓ தலைமை செயலாளர் – ரத்ன பிரபா
  - ✓ கர்நாடகாவின் முதல் பெண் இயக்குனர் ஜெனரல் மற்றும் இன்ஸ்பெக்டர் ஜெனரலான நீலமணி.
- ரத்ன பிரபா இதற்கு முன் அமெரிக்காவின் அமெரிக்கன் சுயசரிதை (Biographical) நிறுவனத்தின் "ஆண்டிற்கான பெண்மணி" விருதை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹார்ன்பில் திருவிழா

- நாகாலாந்து மாநிலத்தின் நாகா பாரம்பரியமுடைய கிசாமா கிராமத்தில் ஹார்ன்பில் திருவிழாவின் 18-வது பதிப்பை இந்திய குடியரசுத் தலைவர் துவங்கி வைத்தார்.



- இத்திருவிழாவானது 54-வது நாகாலாந்து நிறுவு தினத்தோடு ஒருங்கமையும் வகையில் கொண்டாடப்படுகின்றது.
- ஹார்ன்பில் திருவிழாவானது நாகாலாந்தில் "திருவிழாக்களின் திருவிழா

"என்றழைக்கப்படுகின்றது.

- இத்திருவிழா நாகா சமூகத்தின் தனித்தன்மையையும், பூர்வீக பாரம்பரிய செறிவை பாதுகாக்கவும், புத்துணர்வளிக்கவும் கொண்டாடப்படுகின்றது.
- ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் நாகாலாந்தில் ஹார்ன்பில் திருவிழா கொண்டாடப்படுகின்றது. இது இந்தியாவின் மிகப்பெரிய பூர்வீக திருவிழாக்களில் ஒன்றாகும்.
- கம்பீரமும், எச்சரிக்கை விழிப்புத் தன்மையும் கொண்டதனால், நாகா மக்களால் மதிப்பளித்து போற்றப்படும் ஹார்ன்பில் பறவைக்கு மரியாதை செலுத்தும் விதமாக இத்திருவிழா கொண்டாடப்படுகின்றது.

## காபு சமூக இடஒதுக்கீடு

- ஆந்திரப் பிரதேசத்தில் காபு சமூகத்தினருக்கு கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றில் 5% இட ஒதுக்கீடு வழங்குவதற்கான இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டு உள்ளது.
- இட ஒதுக்கீட்டை பெறுவதன் மூலம் காபு சமூகம் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் சேர்க்கப்படுவர்.
- காப்பு,தெலகா,பலிஜா மற்றும் ஒன்டாரி ஆகிய சமூகங்கள் "F" எனும் புதிய சமூக வகைப்பாட்டின் கீழ் இடஒதுக்கீட்டை பெறுவர்.
- காபு சமூகத்தினருக்கு இடஒதுக்கீடு செய்யப்பட்டால் ஆந்திரப் பிரதேசத்தில் இட ஒதுக்கீட்டின் அளவு 55% ஆகி விடும்.
- இது இட ஒதுக்கீடு உச்ச வரம்பு 50%-ஐ தாண்டக் கூடாது எனும் உச்ச நீதிமன்றத்தின் நிர்ணயத்தை விட அதிகமானது ஆகும்.
- எனவே இந்த மசோதாவை நடைமுறைப்படுத்த மத்திய அரசின் ஒப்புதலைப் பெற வேண்டியது அவசியமாகும்.
- நீதிமன்ற மறுஆய்வில் (judicial review) இருந்து காத்துக் கொள்ள ஆந்திரப்பிரதேச அரசு இம்மசோதாவை மத்திய அரசிற்கு அனுப்பி இந்த ஒட ஒதுக்கீட்டை அட்டவணை 9-ன் கீழ் சேர்க்குமாறு கோரிக்கை விடுக்க உள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தில் 27% மக்கட் தொகையுடன் காபு சமூகத்தினர் வாழ்கின்றனர்.
- 2016ல் அமைக்கப்பட்ட மஞ்சு நாத் கமிஷன் காபு சமூகத்தவருக்கு இட ஒதுக்கீடு அளிக்க பரிந்துரை அளித்தது.

## மிதக்கும் சோலார் நிலையம்

- இந்தியாவின் மிகப் பெரிய மிதக்கும் சோலார் ஆற்றல் நிலையத்திட்டம் கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் உள்ள பனசுரா சாகர் அணையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது விரைவில் துவங்கப்பட உள்ளது.
- 500 கிலோவாட் மின் உற்பத்தி திறனுடைய இந்நிலையம் நிலத்தடி கேபிள் இணைப்புகள் வழியாக கேரளாவின் மாநில மின்சார வாரியத்தின் மின் விநியோக கட்டமைப்பில் (grid) இணைக்கப்படும்.



- இம்மிதவை நிலையத்தின் சிறப்பம்சம் என்னவெனில் தண்ணீர் மட்ட மாற்றத்தோடு மிதவை நிலையம் சீராக அமைய நங்கூர அமைப்பு முறை கொண்டு இம்மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
- இதற்கு முன் கேரளாவினிலே காயம்குளம் எனும் இடத்தில் 100 கிலோவாட் மின் உற்பத்தி திறனுடைய மிதவை சோலார் நிலையத்தை NETRA (NTPC Energy Technology Research Alliance) அமைப்பானது அமைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### மாற்றுத் திறனாளிகளின் முதல் ஐ.டி. வளாகம்

- மாற்றுத் திறனாளிகளுக்கான உலகின் முதல் ஐ.டி வளாகத்தை தெலுங்கானா அரசு அமைக்க உள்ளது.
- உலக மாற்றுத்திறனாளிகள் தினமான டிசம்பர் 3 அன்று மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துவதை மையமாக கொண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான ஐ.டி. வளாகத்தை அமைக்க தெலுங்கானா மாநில அரசானது வித்யான் இ-இன்போ மீடியா எனும் தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- ஹைதராபாத் சர்வதேச விமான நிலையத்தில் அருகில் மாநில அரசால் 10 ஏக்கர் அளவில் அமைக்கப்பட்டு வரும் ஐ.டி. தொழில்நுட்ப பூங்காவில் இந்த வளாகம் அமைக்கப்பட உள்ளது.

### 6-வது சர்வதேச சுற்றுலா திருவிழா - 2017

- 6-வது சர்வதேச சுற்றுலா திருவிழாவானது அஸ்ஸாமின் கவுகாத்தியில் தொடங்கப்பட்டது.
- மத்திய சுற்றுலா மேம்பாட்டு அமைச்சகத்தோடு இணைந்து வடகிழக்கு மாநிலங்கள் இந்த திருவிழாவை ஏற்பாடு செய்துள்ளது.
- வடகிழக்கு மாநிலங்களில் சுழற்சி முறையின் அடிப்படையில் சர்வதேச சுற்றுலா திருவிழாவானது நடத்தப்படுகின்றது.
- பிராந்திய மற்றும் சர்வதேச சந்தைகளில் இந்தியாவின் வடகிழக்கு பகுதிகளின் செறிந்த மற்றும் பல்வகையான சுற்றுலா பொருட்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த திருவிழா நடத்தப்படுகின்றது.

- இந்தியாவின் வளரும் சுற்றுலா சந்தை மற்றும் உலகில் விரைவான பொருளாதார வளர்ச்சியுடைய பகுதியான கிழக்கு ஆசியப் பிராந்தியம் மற்றும் ஆசியான் நாடுகளுடனான இந்தியாவின் மலரும் உறவுகள், இந்தியாவின் "கிழக்கு நோக்கிய செயல்திட்ட" கோட்பாட்டு ஆகியவற்றின் மேல் சிறப்பு கவனத்தை உண்டாக்குவதே இதன் நோக்கங்களாகும்.

## இந்தியாவின் முதல் ஆற்றல் திறன்மிகு ரயில் நிலையம்

- 'A1 வகைப்பாட்டைச்' சேர்ந்த நாட்டின் முதல் ஆற்றல் திறன்மிகு (Energy efficient) இரயில் நிலையாக தெலுங்கானாவில் உள்ள காசேகுடா (Kacheguda) இரயில் நிலையம் புகழ் அடைந்துள்ளது.
- தென் மத்திய இரயில் மண்டலத்தின் ஹைதராபாத் பிரிவின் கீழ் செயல்படும் இந்த இரயில் நிலையம் 100 சதவீதம் திறனான ஆற்றல் பயன்பாட்டை அடைந்துள்ளது.
- காசேகுடா இரயில் நிலையம் ஆனது 100 வருட பழமையான இரயில் நிலையமாகும்.
- பிரம்மிக்க வைக்கும் இந்த இரயில் நிலையமானது 1916-இல் ஹைதராபாத்தின் ஏழாவது நிஜாமாக இருந்த மிர் உஸ்மான் அலிகான் ஆட்சி காலத்தில் நிஜாமின் உத்திரவாத மாநில இரயில்வே அமைப்பால் கட்டப்பட்டது.

## இந்தியாவின் முதல் மின்னணு பொருட்கள் உற்பத்தி குழுமங்கள்

- இந்தியாவின் முதல் மின்னணு பொருட்கள் தொழிற்சாலை உற்பத்தி குழுமங்கள் (EMC – Electronic Manufacturing Cluster) ஆந்திரப் பிரதேசத்தில் அமைய உள்ளது. இது ஆந்திரப்பிரதேச மாநிலத்தின் சித்தூர் மாவட்டத்தில் உள்ள ரேணிகுண்டாவில் அமைக்கப்பட உள்ளது.
- கைபேசி மற்றும் அதன் பயன்பாட்டு பொருட்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை வசதிகள் மற்றும் ஏற்பாடுகளை வழங்குவதற்காக மின்னணு பொருட்கள் உற்பத்தி குழுமங்கள் வடிவமைக்கப்பட்டு மேம்படுத்தப்படுகின்றன.
- ஆந்திரப் பிரதேசத்தில் இத்தகு நாட்டின் முதல் பிரத்யேக மொபைல் மற்றும் மின்னணு உற்பத்தி குழுமம் அமைப்பதற்காக ஸ்ரீ வெங்கடஸ்வரா தனியார் மொபைல் மற்றும் எலெக்ட்ரானிக்ஸ் உற்பத்தியாளர் முனையம் எனும் சிறப்பு குறிக்கோள் வாகனம் (SPV – Special Purpose Vehicle) ஒன்று துவங்கப்பட்டு உள்ளது.
- இக்குழுமத்தில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 50,000 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

## ஹிந்தி மின்னஞ்சல் சேவை – ராஜஸ்தான்

- நாட்டின் முதல் மாநிலமாக, மாநில குடிமக்களுக்கு ஹிந்தி மொழியில் இலவச மின்னஞ்சல் முகவரியை இராஜஸ்தான் மாநிலம் அளிக்க உள்ளது.
- இதன்படி முதல் மின்னஞ்சல் முகவரி மாநில முதல்வரான திருமதி. வசுந்தரா ராஜே பெயரில் துவங்கப்பட்டுள்ளது.
- ஒரு கோடிக்கும் மேலான மக்களின் பயன்பாட்டு பதிவை உடைய இராஜஸ்தானின் "ராஜஸ்தான் டிஜிகிட்" எனும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த மின்னஞ்சல் சேவை துவக்கப்பட்டுள்ளது.
- கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் "Data Mail" சேவை எனும் திட்டத்தின் மூலம் BSNL நிறுவனம் தன் அகலக் கற்றை (பிராட்பேண்ட்) பயன்பாட்டாளர்களுக்கு 8 இந்திய மொழிகளில் மின்னஞ்சல் முகவரி சேவை திட்டத்தை துவங்கியது.
- இருப்பினும் BSNL நிறுவனத்தின் இத்தகு திட்டம் போலல்லாமல், இராஜஸ்தான் அரசின் மின்னஞ்சல் முகவரி திட்டமானது அனைத்து இணைய பயன்பாட்டாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

## இராஜஸ்தான் - லோக்தந்திரா சாய்னானி

- இந்தியாவில் அவசரகால பிரகடனம் அமலில் இருந்த காலமான 1975 - முதல் 1977 வரை சிறையிலடைக்கப்பட்ட அரசியல் கைதிகளை (Political Prisoners) லோக்தந்திரா சாய்னானிகளாக (Lokthanthira Sainani) அங்கீகரிக்க இராஜஸ்தான் மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- MISA (Maintanance of Internal Security Act) எனும் உள்நாட்டு பாதுகாப்பு பராமரிப்பு சட்டம் மற்றும் DIR (Defence of India) எனும் இந்திய பாதுகாப்பு சட்டம் ஆகியவற்றின் கீழ் இராஜஸ்தானின் ஏதேனும் ஒரு சிறையில் அடைக்கப்பட்டவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமாக 12,000 ரூபாயும், மாதாந்திர செலவுப் படியாக 1200 ரூபாயும் வழங்கப்பட்டு வந்தது.
- ஆனால் தற்போது, இந்தியாவில் அவசர நிலை பிரகடனம் அமலில் இருந்த காலத்தில் சிறையில் அடைக்கப்பட்ட அனைத்து இராஜஸ்தானிய மக்களுக்கும் ஓய்வூதியம் தர முடிவெடுக்கப்பட்டுள்ளது.
- இத்தகு மக்கள், ஓய்வூதியம் பெற சிறையின் கண்காணிப்பாளரிடம் சான்று பெறத் தேவையில்லை, சுய சான்றளிப்பு மட்டுமே போதுமானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மூன்றாவது உலக தெலுங்கு மாநாடு

- தெலுங்கானாவில் உள்ள ஹைதராபாத்தில் மூன்றாவது உலகத் தெலுங்கு மாநாடு ஆரம்பித்தது.
- தெலுங்கு மொழியையும் மற்றும் அதன் இலக்கியத்தையும் ஊக்குவித்தல் மற்றும் தற்காலத்திய தலைமுறை தெலுங்கு மொழியையும் அதன் பழமையான கலாச்சார பாரம்பரியத்தையும் அறியச் செய்தல் ஆகியன இம்மாநாட்டின் நோக்கங்களாகும்.
- துணை ஜனாதிபதி வெங்கய்ய நாயுடு இந்த மாநாட்டைத் துவங்கி வைத்தார்.

## மதுராவில் கீதை ஆராய்ச்சி நிறுவனம்

- மதுரா நகரத்தில் பகவத் கீதையை ஆய்வு செய்வதற்கான ஆராய்ச்சி நிறுவனம் உத்திரப் பிரதேச அரசால் விரைவில் அமைக்கப்பட உள்ளது.
- கிருஷ்ணர் காலத்திய பாடல்கலை இசைக்கலை மற்றும் நாட்டியக் கலை ஆகியவற்றைப் பற்றிய ஆராய்ச்சிக்காக அரசு இந்த நிறுவனத்தை அமைக்க உள்ளது.
- இந்த நிறுவனம் உத்தரப்பிரதேச அரசின் கலாச்சார மற்றும் மத விவகாரங்களுக்கான துறையின் கீழ் அமைக்கப்பட உள்ளது.

## 60 மெகாவாட் துதியால் நீர் மின்சக்தி

- பிரதம மந்திரி மிசோரமில் உள்ள 60 மெகாவாட் சக்தி கொண்ட துதியால் நீர் மின்சக்தித் திட்டத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- இது மிசோரமில் உள்ள மிகப்பெரியத் திட்டமாகும்.
- இங்கு உற்பத்தியாகவுள்ள மின்சக்தி மிசோரம் மாநிலத்தின் ஒட்டு மொத்த மின் தேவைக்கு செலவிடப்படும்.
- இதன் மூலம் இந்திய அரசின் "24 X 7 அனைவருக்கும் மலிவு விலையாலான தூய்மையான சக்தி"

என்ற திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்ற மாநில அரசால் முடியும்.

- துதியால் திட்டம் மத்திய துறை திட்டமாக கட்டப்பட்டிருக்கிறது.
- மேலும், இத்திட்டம் மத்திய மின்துறை அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வடகிழக்கு மின்சக்தி கழகத்தால் நிறைவேற்றப்படும்.
- மிசோரமின் தற்போதைய மின்சக்தி தேவை 87 மெகாவாட் இத்திட்டத்தின் மூலம் கூடுதலாக கிடைப்பது 60 மெகாவாட்.
- இதன் மூலம், சிக்கிம் மற்றும் திரிபுரா மாநிலங்களுக்கு அடுத்து வடகிழக்கு இந்தியாவில் மூன்றாவது மின்மிகை மாநிலமாக மிசோரம் உருவாகும்.

### இந்தியாவின் முதல் சமூகத் தணிக்கைச் சட்டம்

- ஷில்லாங்கில் நடந்த தேசிய மாநாட்டில் மேகாலாயா, "மேகாலாயா சமூகப் பங்களிப்பு மற்றும் பொதுச் சேவைகள் சமூகத் தணிக்கை சட்டம் 2017" என்ற சட்டத்தை நடைமுறைப் படுத்த முடிவு செய்ததன் மூலம் இந்தியாவில் சமூகத் தணிக்கைச் சட்டத்தை அமல்படுத்திய முதல் மாநிலமாகிறது.
- அரசின் ஒரு வழக்கமாக அதன் நிகழ்ச்சிகளையும் திட்டங்களையும் தணிக்கை செய்வதற்கு இந்த சட்டம் உறுதுணையாய் இருக்கிறது.
- இது மேகாலயாவின் முதல் அமைச்சர் முகுல் சங்மாவினால் ஆரம்பிக்கப்பட்டது.
- அரசின் நிகழ்ச்சிகளையும் திட்டங்களையும் தணிக்கை செய்வதை அரசாங்கத்தின் ஒரு வழக்கமான நிகழ்ச்சியாக இச்சட்டம் மாற்றுகிறது.
- இச்சட்டம் ஏற்படுத்தப்படுவதற்கு முன், அரசுத் திட்டங்களின் சமூகத் தணிக்கை குடிமைச் சமூகம் அல்லது சிவில் சமூகங்கள் கொடுத்த அழுத்தத்தினால் நடத்தப்பட்டன. இந்த தணிக்கைகளுக்கு அலுவலக அங்கீகாரம் கிடையாது.
- மக்களுடன் இணைந்து நேரடியாக தணிக்கையை நடத்துவதற்கு என்று சமூகத் தணிக்கை ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்படுவார்.
- அவர் தணிக்கையின் அறிக்கைகளை கிராமசபா முன் சமர்ப்பிப்பார். கிராமசபா தனது பங்களிப்புகளை அந்த அறிக்கையில் சேர்க்கும். இந்த அறிக்கை இறுதியில் தணிக்கையாளர்களுக்கு அனுப்பப்படும்.

### கிழக்கிந்தியாவின் முதல் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு நிலையம்

- கிழக்கிந்தியாவின் முதல் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு நிலையங்களை பிரதான் மந்திரி உர்ஜா கங்கா என்ற திட்டத்தின் கீழ் புவனேஸ்வர் நகரில் சந்திரசேகர்பூர் மற்றும் பாட்டியா என்ற இடங்களில் மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் துவங்கி வைத்தார்.
- இந்த சேவை அரசுக்கு சொந்தமான இயற்கை எரிவாயு பரிமாற்ற நிறுவனமான கெயில் நிறுவனத்தால் நிறைவேற்றப்படும் நகர வாயு பகிர்மானத் திட்டத்தின் கீழ்வரும் முயற்சியாகும்.
- இந்த நிறுவனம் ஆந்திரப் பிரதேசத்தின் விஜயவாடாவிலிருந்து சாலை வழியாக அடுக்கைகள் ('cascades') எனப்படும் சிறப்பு கொள்கலன்கள் மூலம் புவனேஸ்வருக்கு இயற்கை எரிவாயுவை கொண்டு வரும்.

- பின்னர் இது, பிரதான் மந்திரி உர்ஜா கங்கா என்று அறியப்படும் திட்டமான 2655 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஜகதீஷ்பூர் – ஹால்டியா மற்றும் பொகாரோ-தம்ரா இயற்கை எரிவாயு குழாய்களின் வழியே விநியோகிக்கப்படும்.

### ஐ.ஜல் நீர சுத்திகரிப்பு நிலையம்

- தெலுங்கானா மாநிலத்தின் மேதக் மாவட்டத்தில், போடிச்சன் பள்ளி மற்றும் சங்கரம்பேட் ஆகிய இரு இடங்களில் நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க நிதியுதவி வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் சென்னையில் அமைந்துள்ள ஜப்பான் நாட்டு துணை தூதரகம் கையெழுத்திட்டுள்ளது.
- இப்பகுதிகளில் இருக்கும் நிலத்தடி நீர் அதிக புளூரைடு மற்றும் அதிக உப்புத் தன்மை கொண்டது.
- தொலை தூர கண்காணிப்பு வசதிகள், கழிவு நீர் மேலாண்மை அமைப்பு, சூரிய மின் சக்தி உற்பத்தி செய்ய சூரிய மின் தகடுகள் போன்றவை அமைக்கப்பட்டு குறைந்த செலவில் இந்நிலையங்கள் இயங்கும்.
- இந்த சுத்திகரிப்பு நிலையங்களுக்கு பொதுவாக "ஐ-ஜல்" என்று ஹிந்தி மொழியில் பெயரிடப்பட்டுள்ளது. 'ஐ-ஜல்' என்ற சொல்லுக்கு "என் நீர்" என்று பொருள்.
- பொது மக்களுக்கு மிகுந்த பயனளிக்கும் இந்த மிகப் பெரிய கடைமட்டத் திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கும் ஒப்பந்தத்தில் சென்னையில் அமைந்திருக்கும் ஜப்பானின் தலைமை துணைத் தூதரும், பாதுகாப்பான நீர் இணையம் என்ற அரசு சாரத லாப நோக்கற்ற நிறுவனமும் கையெழுத்திட்டுள்ளன.
- சென்னையில் அமைந்திருக்கும் ஜப்பான் நாட்டின் துணைத் தூதரகமானது தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகியவற்றிற்கு பொதுவானதாகும். 1990ஆம் ஆண்டு துவங்கி இது போன்ற பல திட்டங்களுக்கு இந்த துணைத் தூதரகம் ஆதரவளித்து வருகின்றது.

### வெற்றிட ஒளியிழை தகவல் தொடர்பு தொழில்நுட்பம்

- ஆந்திரப் பிரதேச அரசு கூகுள் நிறுவனத்தின் ஆல்பாபெட் குழுமத்துடன் இணைந்து வெற்றிட ஒளியிழை தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை செயல்படுத்தவுள்ளது.
- இந்த தொழில்நுட்பம் மூலம் கம்பிகள் இல்லாது, உயர்வேக இணையதள இணைப்புகளை விநாடிக்கு 20 கிகாபிட்ஸ் வேகத்தில் 20 கிலோமீட்டர் சுற்றளவுக்கு வழங்க முடியும். உலகில் இத்தகைய தொழில்நுட்பம் செயல்படுத்தப்படுவது இதுவே முதல் முறை ஆகும்.
- FSOC (Free Space Optical Communication) திட்டத்தின் நோக்கம் ஆந்திர மாநில அரசின் ஒளியிழை இணையதள கட்டமைப்பின் கீழ் மக்களுக்கு உயர்தரமான சேவைகளை மலிவான விலையில் வழங்குவதாகும்.
- FOSC தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆந்திரப் பிரதேச அரசால் பழங்குடி மக்கள் வசிக்கும் தொலைதூரப் பகுதிகள் உட்பட அனைத்து குடியிருப்புகளுக்கும் உயர் அலைவரிசை இணையதள சேவைகளை வழங்க முடியும்.

### லோசார் திருவிழா - லடாக்

- ஹிமாலயப் பகுதிகளில் புது வருட தொடக்கத்தைக் குறிப்பதற்காக ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் லடாக் பிரதேசத்தில் லோசார் பாரம்பரிய திருவிழா கொண்டாடப்படுகின்றது.

- லடாக் பிரதேசத்தின் புத்தமதத்தினரால் கொண்டாடப்படும் சமுதாய அடிப்படையிலான சமூக மற்றும் மதம் சார் திருவிழாவான லோசார் திருவிழாவானது லடாக்கில் அமைந்துள்ள 19 புத்த மடாலயங்களில் 18 மடாலயங்களில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்றது.
- திபெத்திய வார்த்தையான லோசார் என்பதன் பொருள் – புது வருடம் என்பதாகும்.
- லடாக் மற்றும் திபெத்திய பிரதேசங்களின் மிக முக்கியத் திருவிழாவாகக் கருதப்படும் இத்திருவிழாவானது திபெத்திய சந்திர நாட்காட்டியின் (lunar calender) 11-வது மாதத்தின் முதல் நாளில் கொண்டாடப்படுகிறது.

### ஹமேஷா விஜாயி இராணுவப் பயிற்சி

- இராணுவத்தின் தெற்குப் படைப்பிரிவானது (Southern Command) "ஹமேஷா விஜாயி" எனும் முக்கியப் பயிற்சியை இராஜஸ்தானின் பாலைவனங்களில் 2017ஆம் ஆண்டின் டிசம்பர் 16 முதல் 22 வரை மேற்கொண்டன.
- இராணுவப் படைகளின் போர் தயார்தன்மையை உறுதி செய்வதற்காக, எதிரிகளின் பிரதேசங்களை தாக்குவதில் இந்திய இராணுவ ஆயுதப் படைகளின் திறன்கள் மற்றும் வலிமையை மதிப்பிடுவதற்கு வேண்டி இந்த இராணுவப் பயிற்சி நடத்தப்படுகிறது.
- இராணுவத்தின் தெற்குப் படைப் பிரிவின் தலைமையகமானது புனேவில் உள்ளது. இந்திய இராணுவத்தினால் ஏற்படுத்தப்பட்ட இப்பிரிவானது 1895-ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.
- இரண்டாம் உலகக் போர் சமயத்தில் தெற்கத்தியப் பிரிவானது 1942-ல் தெற்கத்திய இராணுவமாக (Southern Army) சீரமைக்கப்பட்டது. பின் 1945ஆம் ஆண்டு மீண்டும் இராணுவத்தின் தென் படைப்பிரிவாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

### இந்தியாவின் முதல் வடிவமைப்பு பல்கலைக்கழகம்

- இந்தியாவின் முதல் மற்றும் ஒரே வடிவமைப்பு பல்கலைக்கழகமான "உலக வடிவமைப்பு பல்கலைக்கழகம் "(World University of Design) ஹரியானாவின் சோனிபட் நகரில் திறக்கப்பட்டுள்ளது.
- பஞ்சாப்பின் ஓம் பிரகாஷ் பன்சால் கல்வியியல் மற்றும் சமூக நல்வாழ்வு அறக்கட்டளையால் இப்பல்கலைக்கழகம் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியாவின் மிகப்பெரிய திட்டமிட்டு அமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த கல்விக்கான நகரமான சோனிபட்டில், தேசிய நெடுஞ்சாலை 1ல் அமைந்துள்ள ராஜீவ் காந்தி கல்வி நகரில் இப்பல்கலைக் கழகம் தற்போது அமைந்துள்ளது.
- புத்தாக்க தளத்தினில் (Creative domain) கல்விக்காக முழுவதும் அர்ப்பணிக்கப்பட்ட இந்தியாவின் முதல் பல்கலைக்கழகம் இந்த "வடிவமைப்புக்கான உலக பல்கலைக் கழகம்" ஆகும்.

### சரக்கு மற்றும் சேவை வரி வசூலில் மகாராஷ்டிரம், உத்தரப் பிரதேசம் முதலிடங்கள்

- சரக்கு மற்றும் சேவை வரிக்கு மாறிய காலத்தின் முதல் ஐந்து மாதங்களில் மகாராஷ்டிராவும் உத்தரப்பிரதேசமும் மற்ற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் மத்தியில் முதல் இரு பங்களிப்பாளர்களாக உள்ளன.
- மாநில சரக்கு மற்றும் சேவை வரி வசூலில் 18,701 கோடிகளோடு மகாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது. தமிழ்நாடு 8739 கோடிகளோடு இரண்டாமிடத்திலும் அதனைத் தொடர்ந்து கர்நாடகாவும் குஜராத்தும் உள்ளன.
- ஆடம்பர பொருட்களின் மீதான வரிவிதிப்பில் மகாராஷ்டிரா 3702 கோடியும், உத்தரப்பிரதேசம்

3549 கோடியும் வசூலித்தன.

- சரக்கு மற்றும் சேவை வரி முறை நான்கு முக்கிய வரித்திட்டங்களான 0, 5, 12, 18 மற்றும் 28 சதவிதங்களோடு ஜூலை ஒன்றாம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டன.
- புகையிலை, சிகரெட்டுகள் மற்றும் ஆடம்பர கார்கள் மீது விதிக்கப்படும் உயர்ந்த வரிவிதிப்பான 28 சதவிகிதத்தோடு சேர்த்து 1 முதல் 290 சதவிகிதம் வரை செஸ் எனப்படும் வரி விதிக்கப்பட்டது.
- இந்த செஸ் மூலம் வசூலிக்கப்பட்ட தொகை ஆனது ஜி.எஸ்.டி அமல்படுத்துவதன் மூலம் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் பற்றாக்குறையை ஈடுகட்ட பயன்படுத்தப்படும் நிவாரண நிதியில் சேர்க்கப்படும்.

## தனி அடையாள சின்னமுடைய முதல் இந்திய நகரம்

- தனக்கென ஓர் தனித்த சுய அடையாளத்தை அளிப்பதற்காகவும், தன்னுடைய உலகளாவிய தோற்றத்தை முன்னிலைப்படுத்தி காட்டுவதற்கும் ஒரு சுயமான அடையாள சின்னத்தை (logo) கொண்டுள்ள முதல் இந்திய நகரமாக பெங்களூரு நகரம் உருவாகியுள்ளது.
- பெங்களூருவில் கொண்டாடப்படும் "நம்ம பெங்களூரு ஹப்பா திருவிழாவில்" இச்சின்னம் வெளியிடப்பட்டது.
- இதன் மூலம் தனக்கென தனியே சுயமான சுற்றுலா சின்னங்களையுடைய உலக நகரங்களான மெல்போர்ன், பெர்லின், இலண்டன், சிங்கப்பூர், பாரிஸ், நியூயார்க் மற்றும் ஆம்ஸ்டர்டேம் போன்ற மெகா சிட்டிகளின் வரிசையில் பெங்களூருவும் இணைந்துள்ளது.
- "நம்மூர்" எனும் வடிவமைப்பு ஸ்டார்ட் அப் நிறுவனத்தினால் இந்த சின்னம் வடிவமைக்கப்பட்டது.
- சிவப்பு மற்றும் கருப்பு நிறமுடைய இந்த சின்னத்தில் "பெங்களூரு பீ யூ" (Bengaluru Be You) எனும் குறிச்சொற்றொடர் (Tagline) கன்னடம் மற்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது.

## டெல்லி மெட்ரோ – மெஜெந்தா வழிப் பாதை

- டெல்லி மெட்ரோவின் மெஜந்தா வழிப்பாதையின் (Megenta line) முதல் பிரிவை நொய்டாவில் பிரதமர் துவங்கி வைத்தார்.
- டெல்லியின் தாவரவியல் பூங்காவையும், கல்கஜ் மன்தீரையும் இணைக்கும் இந்த 12.64 கி.மீ. நீளமுடைய பாதையானது அடுத்த ஆண்டு ஜானக்புரி வரை விரிவுபடுத்தப்பட உள்ளது.
- இந்தியாவில் முதல்முறையாக, டெல்லியின் இந்த மெஜந்தா இரயில் வழிப்பாதையில் ஓட்டுநர் இல்லாத (driverless) மெட்ரோ இரயில்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் நடைமேடையை அடைந்த பின் மட்டுமே திறக்கும் வகையிலான தானியங்கி நடைமேடை கதவுகளும் (PSD Platform Screen doors) இந்த இரயில் மூலம் முதன்முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளன.
- தொலைத்தொடர்பு அடிப்படையிலான இரயில் கட்டுப்பாட்டு சமிக்ஞை தொழிற்நுட்பம் கொண்டதாக இந்த ரயில் இருப்பதால் ஓட்டுநர் இல்லாமல் இவற்றால் 90 முதல் 100 விநாடிகளுக்கான அதிர்வெண்ணிற்குள் இயங்க இயலும்.

## உத்திரப்பிரதேசம் – பிரகாஷ் ஹை டு விகாஷ் ஹை திட்டம்

- உத்திரப்பிரதேச அரசானது முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் பிறந்த நாளை முன்னிட்டு அனைத்து வீடுகளுக்கும் இலவச மின் இணைப்பு அளிக்கும் "பிரகாஷ் ஹை டு விகாஷ் ஹை" எனும் திட்டத்தை தொடங்கியுள்ளது.

- இதன் தொடக்கமாக மதுரா மாவட்டத்தின் லோபன் மற்றும் கவ்சானா எனும் இரு கிராமங்களில் 100 சதவீத மின்மயமாக்கல் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் உத்திரப்பிரதேச அரசானது 2018ஆம் ஆண்டிற்குள் 16 மில்லியன் மின் இணைப்பை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## தென் கொரியா – உத்திரப்பிரதேச உடன்படிக்கை

- கலாச்சாரம், வேளாண்மை, திறன் மேம்பாடு, சுற்றுலா போன்ற துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக தென்கொரியாவுடன் உத்திரப்பிரதேச அரசானது ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- 2000-ஆம் ஆண்டு உத்திரப்பிரதேசத்தின் அயோத்தியாவையும், தென்கொரியாவின் கிம்ஹே (Gimhae) நகரையும் சகோதரி நகரங்களாக (Sister cities) மேம்படுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதனைத் தொடர்ந்தே அயோத்தியாவில் ஓர் நினைவகம் கட்டப்பட்டது.
- 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்பு, கொரியாவின் மன்னர் கிம் சுரோ அயோத்திய இளவரசி ஒருவரை மணந்து கொண்டார் என தென்கொரிய மக்களால் நம்பப்பட்டு வருகிறது.
- தற்போது கொரியாவிலுள்ள குரோக் குலத்தவர்கள் (crock clan) அவர்களின் வழித்தோன்றல்களாக கருதப்படுகின்றனர்.

## பைபர் கிரிட் திட்டம்

- ஆந்திரப் பிரதேச மாநிலம் அமராவதியில் ஆந்திரப் பிரதேச அரசின் பைபர் கிரிட் (Fibre Grid) திட்டத்தை குடியரசுத் தலைவர் முறையாக தொடங்கி வைத்து நாட்டிற்கு அர்ப்பணித்தார்.
- ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவால் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தை ஆந்திராவின் மாநில பைபர்நெட் நிறுவனம் (Andhra Pradesh State Fibernet Limited-APSFL) செயல்படுத்த உள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் மாநில பைபர்நெட் நிறுவனமானது இந்தியாவின் மிகப்பெரிய, மாநில அரசினால் (state government-owned) நிர்வகிக்கப்படும் தொலைத்தொடர்பு நிறுவனமாகும்.
- மாநிலம் முழுவதும் அதிவேக இணையதள வசதியை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## ஹரிவரசனம் விருது – பாடகி சித்ரா

- கேரள அரசினால் வழங்கப்படும் கவுரமிக்க "ஹரிவரசானம்" விருதுக்கு பாடகி K.S.சித்ரா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- உலகளாவிய சகோதரத்துவம், மனஅமைதி, சமத்துவம் மற்றும் மதச்சார்பின்மை போன்றவற்றிற்கான சாராம்சங்களை வளர்ப்பதில் அவர் ஆற்றிய பங்கினை அங்கீகரிக்கும் விதமாக அவர் இவ்விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- 2012 ஆம் ஆண்டு கேரள அரசால் இவ்விருது நிறுவப்பட்டது.
- இதற்குமுன் இவ்விருது பாடகர் யேசுதாஸ், S.P.பாலசுப்ரமணியம், கங்கை அமரன் போன்றோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

### இந்திய அறிவியல் காங்கிரஸ்

- 2018-ஆம் ஆண்டின் வரலாற்று சிறப்புமிக்க இந்திய அறிவியல் காங்கிரஸ் (Indian Science Congress) மாநாடு 2018-ஆம் ஆண்டின் மார்ச் மாதம் மணிப்பூரின் இம்பாலில் உள்ள மணிப்பூர் பல்கலைக் கழகத்தில் நடைபெற உள்ளது.
- ஜனவரியின் முதல் வாரத்தில் ஹைதராபாத்தின் உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த இம்மாநாடு, பாதுகாப்பு குறித்த காரணங்களுக்காக மணிப்பூரில் நடத்தப்பட உள்ளது.
- 106 வருட பழமையுடைய இந்திய அறிவியல் காங்கிரஸ் மாநாடு முதல்முறையாக கடைசி நேரத்தில் காலந்தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

### மேற்கூரை சூரிய மின் உற்பத்தி – உத்திரப் பிரதேசம்

- அரசுக்குச் சொந்தமான கெயில் இந்தியா (GAIL India) நிறுவனம் நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய மேற்கூரை சூரியமின் உற்பத்தி நிலையத்தை (Solar Roof-top Station) ஆரம்பித்துள்ளது.
- உத்தரப் பிரதேசத்தின் பாடாவில் தனது பெட்ரோ கெமிக்கல் நிலைய வளாகத்தில் 65,000 சதுர மீட்டர்களை உள்ளடக்கிய வகையில் 5.76 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின் உற்பத்தி இயந்திரத்தை இந்நிறுவனம் நிறுவியுள்ளது.
- கெயில்-ன் சூரியசக்தி கைப்பற்றும் திட்டம் ஆண்டொன்றிற்கு 6300 டன்கள் அளவிற்கு கார்பன் வெளியீட்டினைக் குறைக்கவும், இந்தியாவிற்கு அதன் பருவநிலை தொடர்பான இலட்சியங்களை அடையவும் உதவும்.
- கெயில்-ன் இந்த மேற்கூரை சூரிய மின் உற்பத்தித் திட்டம் உற்பத்தி, மற்றும் தயாரித்து வழங்கல் ஆகியவற்றில் இணைந்து உள்ள இந்திய உற்பத்தியாளர்களை கொண்டுள்ள இந்தியாவில் தயாரிப்போம் (Make in India) என்ற திட்டத்தின் கீழ் வரும் ஒரு பகுதியாகும்.
- நாட்டின் மிகப் பெரிய மேற்கூரை சூரியமின் உற்பத்தி நிலையம் 12 மெகாவாட் திறன் கொண்ட டாடா சோலார் பவர் நிலையத்தால் அமிர்தசரஸில் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்த நிலையம் ஆண்டொன்றிற்கு 150 லட்ச அலகுகள் என்ற அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்து, ஆண்டொன்றிற்கு 19,000 டன்கள் அளவிற்கு கார்பன் வெளியீட்டினை (Carbon Emission) தணிக்கின்றது.

## பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### கதாகர்-சர்வதேச கதை சொல்லிகள் திருவிழா

- புதுடெல்லியில் உள்ள இந்திரா காந்தி தேசிய கலை மையம் (Indra Gandhi National Centre for the Arts - IGNCA) ஆனது மூன்று நாள் நடைபெற உள்ள 'கதாகர் சர்வதேச கதை சொல்லிகள் திருவிழாவின்' ஏழாவது பதிப்பை தொடங்கியுள்ளது.
- மத்திய கலாச்சார அமைச்சகத்தோடு இணைந்து இந்திராகாந்தி தேசிய கலை மையம் (Indira Gandhi National Centre for the Arts- IGNCA) இத்திருவிழாவை நடத்துகின்றது.
- கதாகர் திருவிழாவானது இந்தியாவில் நடைபெறும் ஒரே வாய்மொழி வழியிலான கதை சொல்லும் திருவிழாவாகும்.
- இது 2010-இல் யுனெஸ்கோவின் கீழ் தொடங்கப்பட்ட கும்மக்காட் நரேன் எனும் பயண இலக்கிய திருவிழாவின் ஒரு பகுதியாகும்.

- கதை சொல்லும் கலையை பாதுகாப்பதோடு அக்கலைக்கு புதிய பார்வையாளர்களை உருவாக்குவதே இத்திருவிழாவின் நோக்கமாகும்.

## ஆலப்புழா – முன்னணி நகரம்

- ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு (UNEP – United Nations Environment Programme) "கழிவுகளுக்கு திடமான அணுகுமுறை ; எப்படி 5 நகரங்கள் மாசுபாட்டை தோற்கடிக்கின்றன" (solid approach of waste ; how 5 cities are beating pollution) என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- திட கழிவு மேலாண்மையை வெற்றிகரமாக கையாளும், UNEP-ஆல் அங்கீகரிக்கப்பட்ட ஐந்து உலக நகரங்களுள் இந்தியாவின் கேரளாவிலுள்ள ஆலப்புழா நகரமும் இடம் பெற்றுள்ளது.
- பிற நான்கு உலக நகரங்கள்
  - ✓ ஒசாகா (ஜப்பான்)
  - ✓ ஜீப்ல் ஜானா (Ljubljana) – ஸ்லோவேனியா
  - ✓ பெனாங் (மலேசியா)
  - ✓ கஜிகா (கொலம்பியா)
- காயல் மற்றும் கடல் கழிமுகங்கள் உடையதால் "கிழக்கின் வெனிஸ்" என்றழைக்கப்படும் ஆலாப்புழா நகரமானது மையக்குவிப்பற்ற (அ) பரவலாக்கப்பட்ட கழிவு மேலாண்மை முறையை (Decentralised Waste Management System) மேற்கொண்டு வருகின்றது.
- நகரத்தின் வார்டுகள் அளவிலேயே உயிர்மட்கு கழிவுகள் பிரித்தெடுக்கப்பட்டு ஆங்காங்கே இருக்கும் சிறிய குப்பை உரமாக்கு நிலையங்களில் மட்கிடச் செய்து அதன் மூலம் பெறப்படும் உயிர் – எரிவாயு ஆனது குடியிருப்பு வாசிகளுக்கு அளிக்கப்படுகின்றது.
- 2016-ல் ஆலப்புழா நகரமானது அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பின் "தூய்மையான நகரம்" என்ற விருதினைப் பெற்றுள்ளது.

## பிரசார் பாரதி – சூர்ய பிரகாஷ்

- பொது ஒலிபரப்புத்துறை அமைப்பான பிரசார் பாரதியின் தலைவராக முன்னாள் இதழியலாளரான A. சூர்ய பிரகாஷ் இரண்டாவது முறையாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- பிரசார் பாரதி அமைப்பானது தூர்தர்ஷன் தொலைக்காட்சி சேனலையும், அனைத்திந்திய (All India Radio) வானொலியையும் நடத்துகின்றது.
- இதற்கு முன் முதல் முறையாக சூர்ய பிரகாஷ் 2014ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டு இந்த ஆண்டு அக்டோபர் மாதம் ஓய்வு பெற்றிருந்தார்.
- இந்த அமைப்பிற்கு மீண்டும் தலைவராக பிப்ரவரி 2020 வரை இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- துணை குடியரசுத் தலைவரான வெங்கையா நாயுடுவை தலைவராக கொண்ட மூன்று பேர் குழு இவரை நியமிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.

### *பிரசார் பாரதி*

- பிரசார் பாரதி அமைப்பானது பிரசார் பாரதி சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட தன்னாட்சியுடைய சட்ட அமைப்பாகும்.
- இது மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- இது 1997 ஆம் ஆண்டு செயல்பாட்டிற்கு வந்தது.

❖ இது நாட்டின் ஒலிபரப்பு சேவையை வழங்கும் பொதுத்துறை நிறுவனமாகும்.

### உலக எல்லை கடந்த அழகி - 2017

❖ போலந்து நாட்டில் நடைபெற்ற மிஸ் சூப்ராநேஷனல் – 2017 போட்டியில் தென் கொரியாவின் ஜென்னி கிம் 2017ஆம் ஆண்டிற்கான உலக எல்லை கடந்த அழகியாக (Miss Supranational) வாகை சூடப்பட்டுள்ளார்.

❖ 2016-ஆம் ஆண்டின் உலக எல்லை கடந்த அழகியான இந்தியாவின் ஸ்ரீநிதி ரமேஷ் ஷெட்டி இவருக்கு கிரீடம் சூட்டினார்.

❖ இந்தியாவின் சார்பாக பங்கேற்ற பீடென் ஒங்மு நம்கியால் 15-வது இடத்தைப் பிடித்தார்.

### ஹலோ கிட்டி – சிறப்பு தூதர்

❖ 2017-ன் கருப்பொருளான நீடித்த சுற்றுலா மேம்பாட்டிற்கான சர்வதேச ஆண்டின் (International Year of Sustainable Tourism Development 2017) சிறப்பு தூதராக ஹாலோ கிட்டி (Hello Kitty) எனும் கற்பனை கதாபாத்திரத்தை (Fictional Character) ஐ.நா.வின் உலக சுற்றுலா அமைப்பு (World Tourism Organization) நியமித்துள்ளது.

❖ நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதிலுள்ள சுற்றுலா துறையின் பங்களிப்பை முன்னிலைப்படுத்தி காட்டுவதற்கும், "பயணம் மகிழ்ச்சி மரியாதை" எனும் உலக சுற்றுலா அமைப்பின் பிரச்சாரத்தை ஊக்கவிக்கவும் ஹலோ கிட்டி பயன்படுத்தப்படும்.

#### *உலக சுற்றுலா நிறுவனம் (WTO – World Tourism Organisation)*

❖ நீடித்த,பொறுப்புடைய, உலகளாவிய அணுகத்தக்க, சுற்றுலாவை மேம்படுத்துவதனை பொறுப்பாக கொண்ட ஐ.நா. நிறுவனமே உலக சுற்றுலா நிறுவனமாகும்.

❖ இந்நிறுவனம் 1975-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

❖ இதன் தலைமையகம் மாட்ரிட் நகரில் அமைந்துள்ளது.

### நடிகர் சசிகபூர் மறைவு

❖ இந்தியாவின் இந்தி திரைப்பட நடிகரான சசிகபூர் நாள்பட்ட உடல் நலக்குறைவின் காரணமாக இயற்கை எய்தியுள்ளார்.

❖ 1961 ஆம் ஆண்டு 'தரம்புத்ரா' எனும் திரைப்படத்தின் மூலம் திரையுலகில் அறிமுகமான இவர் 2011ஆம் ஆண்டு இந்திய அரசின் பத்மபூஷன் விருதைப் பெற்றுள்ளார்.

❖ மேலும் திரைப்படத் துறையின் உயரிய விருதான தாதா சாகேப் பால்கே விருதையும் இவர் பெற்றுள்ளார். அவரது குடும்பத்திலிருந்து இவ்விருதை பெறும் மூன்றாவது நபர் சசிகபூர் ஆவார்.

### மெட்-டெக் மாநாடு

❖ 11-வது வருடாந்திர மெட்டெக் மாநாடு உயிரி - வடிவமைப்பு திட்டத்தின் (Bio Design Programme) கீழ் டெல்லியில் அண்மையில் நடத்தப்பட்டது.

❖ எய்ம்ஸ், டெல்லி ஐஐடி மற்றும் சர்வதேச பங்கேற்பாளர்களோடு இணைந்து மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் வரும் மத்திய உயிர் தொழில்நுட்பத் துறை ஆனது உயிரி வடிவமைப்பு திட்டத்தை செயல்படுத்துகின்றது.

### இத்திட்டத்தின் நோக்கங்களாவன

- இந்தியாவில் இல்லாத மருத்துவ சாதனங்களின் தேவைகளுக்கு ஏற்ப மலிவான மற்றும் புதுமையான மருத்துவ சாதனங்களை உருவாக்குதல்.
- இந்திய மருத்துவ உலகிற்கு புதிய மருத்துவ சாதனங்களை கொண்டு வருவதற்கு அடுத்த தலைமுறை மருத்துவ சாதனங்கள் கண்டுபிடிப்பாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.
- இந்த மாநாட்டின்போது நோசேனோ (Noxeno) எனும் சுவாச வழியிலான அயல் பொருட்கள் நுழைவதை தடுக்கும் சாதனம். வெளியிடப்பட்டது.
- இந்த சாதனம் உயிரி வடிவமைப்பு திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்ட InnAccel தொழில்நுட்பம் எனும் தனியார் நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்டது.

### தேசிய விருது

- தமிழகத்தின் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர் மற்றும் குழந்தைகள் உரிமை ஆர்வலரான செழியன் ராமுவிற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ராஜீவ் காந்தி மனவ் சேவா விருதை வழங்கினார்.
- குழந்தைகளின் நல்வாழ்விற்கு அளப்பரிய பங்களிக்கும் தனிநபர்களை கவுரவிக்கும் வகையில் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் இவ்விருது நிறுவப்பட்டது.
- நாடு முழுவதும் இவர் உட்பட மொத்தம் 3 பேர் இவ்விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர்.
- இவர் திருவண்ணாமலையில் 1994-ஆம் ஆண்டு குழந்தைகள் மீட்பு மற்றும் கல்விக்காக டெர்ரி தேஸ் ஹோம்ஸ் குழந்தைகள் நிறுவனத்தையும் 1998-ல் ஓர் லைப்லைன்-ஐயும் அமைத்துள்ளார்.
- மேலும் இவர் மாநிலம் முழுவதும் 16 காப்பக இல்லங்களில் 900 குழந்தைகளை கவனித்து வருகின்றார்.

### டைம்ஸ் - ஆண்டின் சிறந்த மனிதர்கள்

- முன்பு பாலியல் துன்புறுத்தல்களுக்குள்ளாகி தற்போது மவுனத்தை கலைத்து அதை பகிரங்கப்படுத்தியவர்களை (The silence Breakers) இந்த ஆண்டின் சிறந்த மனிதர்கள் என டைம்ஸ் நாளிதழ் அறிவித்துள்ளது.
- “நானும்” (#MeToo) என்ற ஹேஷ்டேக் இயக்கத்தில் அமெரிக்காவில் சக்தி வாய்ந்த பொது நபர்களினால் அனுபவித்த பாலியல் தொல்லைகள் மற்றும் வன்புறுத்தல்களை பொதுவெளியில் முன்வந்து வெளிகாட்டிய தனி நபர்களை, குறிப்பாக பெண்களை இந்த ஆண்டின் சிறந்த மனிதர்கள் என்று டைம்ஸ் இதழ் குறிக்கின்றது.
- பத்து ஆண்டுகளுக்கு முன்பு பாலியல் வன்முறைகளுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக டரானா பர்கே என்ற சமூக ஆர்வலரால் #MeToo எனும் பிரச்சாரம் நிறுவப்பட்டது.
- மேலும் ஆண்டின் சிறந்த மனிதர்களாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் இரண்டாவது இடத்தையும், சீன அதிபர் ஜி ஜின்பிங் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளனர்.
- ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் ஆண்டிற்கான சிறந்த மனிதர்கள் அறிவிப்பு புகழ்பெற்ற டைம்ஸ் நாளிதழால் வெளியிடப்படுகின்றது.
- இது 1927 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

### குழந்தைகளுக்கான சர்வதேச அமைதிப்பரிசு

- ❖ சிரியா நாட்டைச் சேர்ந்த குழந்தை அகதிகளின் உரிமைகளை உறுதி செய்வதில் முயற்சிகளை மேற்கொண்டமைக்காக, 16 வயது முகமது அல் ஜவுன்டே எனும் சிரிய நாட்டு குழந்தைக்கு சர்வதேச குழந்தைகளுக்கான அமைதிப்பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ சிரியாவின் உள்நாட்டு போரால் அகதியான அல் ஜவுன்டேவுக்கு, பெண் குழந்தைகளின் உரிமைக்காக போராடி, 2014 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மலாலா யூசுப் சாய் பரிசினை வழங்கினார்.
- ❖ இச்சிறுவன் தன் குடும்பத்தினருடன் சேர்ந்து லெபனான் அகதிகள் முகாமில் பள்ளியினை ஏற்படுத்தி உள்ளான். தற்போது சுமார் 200 குழந்தைகள் இங்கு கல்வி கற்று வருகின்றனர்.
- ❖ 2005-ஆம் ஆண்டு முதல் "கிட்ஸ் ரைட்ஸ்" எனும் அறக்கட்டளை ஆனது ஆண்டு தோறும் இவ்விருதை வழங்கி வருகின்றது.
- ❖ உலகம் முழுவதும் குழந்தைகளின் உரிமைகளைக் காப்பதற்காக தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இந்த அறக்கட்டளை செயல்படுகின்றது.

### பேலன் தோர் விருது

- ❖ ஐந்தாவது முறையாக சிறந்த வீரருக்கான 'பேலன் தோர்' விருதினை வென்றார் ரொனால்டோ.
- ❖ 2017-ஆம் ஆண்டின், சிறந்த வீரருக்கான 'பேலன் தோர் கால்பந்து விருது' போர்ச்சுக்கலின் ரியல் மாட்ரிட் அணியினுடைய வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த விருதினை ஐந்தாவது முறையாக தற்போது வென்றுள்ள ரொனால்டோ, அர்ஜென்டீனா வீரர் லயோனல் மெஸ்ஸியின் சாதனையை சமன் செய்துள்ளார். (மெஸ்ஸியும் இந்த விருதினை ஐந்து முறை வென்றுள்ளார்)
- ❖ பாரீஸில் உள்ள ஈபிள் கோபுரப்பகுதியில் நடைபெற்ற விழாவில் 'பிரான்ஸ் ஃபுட்பால்' பத்திரிக்கையின் சார்பில் ரொனால்டோவுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- ❖ 115 கோல்களுடன் சாம்பியன்ஸ் லீக் வரலாற்றில் தொடர்ந்து ரொனால்டோ முன்னிலை வகித்து வருகிறார்.

### பாரா விளையாட்டு அமைப்பு

- ❖ சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று புகழ்பெற்ற தகவல் தொடர்பு நிபுணரான சர்வேஷ் குமார் திவாரி, பாரா விளையாட்டு அமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ பாரா விளையாட்டு அமைப்பானது மாற்றுத் திறனாளிகளின் சமூக நலத்திற்கும் அவர்கள் முன்னேற்றத்திற்கும் சமூக தொண்டாற்றும் இலாப நோக்கமில்லா அமைப்பாகும்.
- ❖ இந்த பாரா விளையாட்டு அமைப்பானது பிரதீப் ராஜ் எனும் சர்வதேச மாற்றுதிறன் தடகள வீரரால் நிறுவப்பட்டது ஆகும். இவர் குடியரசு தலைவரிடம் சிறந்த தேசிய இளைஞர் விருது பெற்றவர் ஆவார்.

## இந்தியாவின் முதல் பெண் புகைப்பட பத்திரிக்கையாளர்

- உலகின் முன்னணி இணைய தேடு பொறியான கூகுள் இந்தியாவின் முதல் பெண் புகைப்பட பத்திரிக்கையாளரான (Photo Journalist) ஹோமய் வியரவல்லாவின் (Homai Vyarawalla) 104-வது பிறந்த நாளைக் கொண்டாடும் விதமாக அவருக்கு சிறப்பு டூடுளை வெளியிட்டுள்ளது.
- “பாம்பே கிரானிகில்” எனும் பத்திரிக்கையில் இவர் தன் புகைப்படங்களை வெளியிட்டார். டால்டா 13 (Dalda 13) எனும் பெயரிலே தன் பெரும்பான்மையான புகைப்படங்களை இவர் பத்திரிகைகளில் பிரசுரித்தார்.
- இந்திய விடுதலை போராட்ட காலத்திலேயே தனக்கென ஓர் இடத்தை புகைப்பட இதழியல் துறையில் பதித்த ஹோமய் வயரவல்லா, தன் புகைப்பட இதழியல் பயணவாழ்வை இரண்டாம் உலகப்போர் சமயத்தில் துவக்கினார்.
- சுதந்திரமடைந்த பிறகு, இந்தியாவில் முதல் முறையாக மூவர்ணக் கொடியை ஏற்றுதல், மவுண்ட் பேட்டன் பிரபு இந்தியாவை விட்டு கிளம்புதல், சுதந்திரத்திற்கு பின் மக்கள் கூட்டத்தில் நேரு உரையாற்றுதல் போன்ற நிகழ்வுகளின் பல புகைப்படங்களை இவர் எடுத்துள்ளார்.
- மேலும் நாட்டின் 2-வது உயரிய விருதான பத்ம விபூஷண் விருது 2011-ல் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## ஏர் அறிஞர் – எம்.எஸ் சுவாமிநாதன்

- சென்னையில் நடைபெற்ற வேளாண்துறை சார் விழாவில் பேராசிரியர் எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு இந்திய துணை குடியரசுத் தலைவர் “ஏர் அறிஞர் விருதை” வழங்கி கௌரவித்தார்.
- வேளாண் துறைக்கு அவர் வழங்கிய பசுமையான பங்களிப்பினை அங்கீகரிக்கும் விதமாக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
- வேளாண் துறையில் உலகத்தர ஆராய்ச்சி மற்றும் புரட்சிகர கண்டுபிடிப்புகளை மேற்கொண்டமையால் அறியப்படும் வேளாண் மேதையான எம்.எஸ்.சுவாமிநாதன் “இந்தியாவின் பசுமைப் புரட்சியின் தந்தை” எனவும் அழைக்கப்படுகின்றார்.
- இலண்டன் ராயல் சொசைட்டி மற்றும் அமெரிக்காவின் தேசிய அறிவியல் அகாடமி உட்பட பல சர்வதேச மற்றும் இந்தியாவின் முன்னணி அறிவியல் கல்வி நிறுவனங்களில் சிறப்பு பிரதிநிதியாக (Fellow) M.S. சுவாமி நாதன் உள்ளார்.

## இந்தியாவின் டி.என்.ஏ. கைரேகை தொழில்நுட்பத் தந்தை

- இந்தியாவின் புகழ்பெற்ற ஆராய்ச்சியாளர் மற்றும் இந்தியாவின் டி.என்.ஏ கைரேகை தொழில்நுட்பத் தந்தையுமான (DNA Finger Printing) லால்ஜி சிங் மாரடைப்பு காரணமாக இயற்கை எய்தினார்.
- ஆராய்ச்சி கள அளவிலும், தடயவியல் பயன்பாட்டின் அளவிலும், DNA கைரேகை தொழில்நுட்பத்தை இந்தியாவில் மேம்படுத்துவதில் முக்கிய கருவியாக இருந்த தலைவர்களில் லால்ஜி சிங்-கும் ஒருவராவார்.
- அனைத்து உயிர் இனங்கள் மற்றும் பல்வேறு நோய்களின் DNA கைரேகை (DNA Finger Printing) மற்றும் DNA கண்டறிதலுக்கான (diagnostics) முதன்மை மையமாக DNA கைரேகை மற்றும் கண்டறியும் மையத்தை (CDFC – Centre for DNA Finger Printing and diagnostics) உருவாக்குவதற்கான பணி 1990-களில் இவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
- ஹைதராபாத்தில் உள்ள செல்லுலார் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தின் நிறுவனரான இவர் அதன் இயக்குநராகவும் 1998 முதல் 2009 வரை பணியாற்றியுள்ளார்.

- இவர் 2001-முதல் 2014 வரை இந்து பனாரஸ் பல்கலைக்கழகத்தின் 25-வது துணைவேந்தராகவும் பணிபுரிந்துள்ளார்.
- இவர் நலிவடைந்த பிரிவு மக்களை குறிப்பாக ஊரக மக்களை பாதிக்கும் மரபியற் குறைபாட்டு நோய்களை கண்டறியவும், சிகிச்சையளிக்கவும் நோக்கம் கொண்டு செயல்பட்ட ஜினோம் பவுண்டேஷன் எனும் அரசு சாரா தொண்டு நிறுவனத்தின் ஓர் அங்கமாகவும் பணிபுரிந்துள்ளார்.
- மேலும் இவர் கவுரவமிக்க பத்மஸ்ரீ விருதையும் பெற்றுள்ளார்.

### சர்வதேச புத்தமதக் கூட்டமைப்பு – பொது செயலாளர்

- சர்வதேச புத்த கூட்டமைப்பின் (International Buddhist Confederation) புதிய பொதுச் செயலாளராக திரிபுராவைச் சேர்ந்த புத்த மத துறவியான தம்மபியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- சர்வதேச புத்தமதக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளராக இவர் இரண்டாவது முறையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இந்தியாவிலும், உலகின் பிற பகுதிகளிலும் அமைந்த புத்த மத பாரம்பரிய சின்னஙகளையும், பாரம்பரிய இடங்களையும் பாதுகாப்பதற்காகவும், மேம்படுத்துவதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட உலகளாவிய புத்த மத மன்றமே சர்வதேச புத்தமத கூட்டமைப்பாகும்.

### பிரியங்கா சோப்ரா - அன்னை தெரசா விருது

- அகதிகளுக்கு உணவு**,** உடை மற்றும் கல்வி அளித்து உதவியமைக்காக நடிகை பிரியங்கா சோப்ராவுக்கு சமூக நீதிக்கான அன்னை தெரசா நினைவுப் பரிசு வழங்கி கவுரவிக்கப்பட்டுள்ளது**.**
- பல்வேறு மனிதநேய செயல்பாடுகளுக்கு ஆதரவளித்து வரும் பிரியங்கா சோப்ரா யுனிசெப் அமைப்பின் நல்லெண்ண தூதராகவும் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது**.**
- இதற்கு முன் சமூக நீதிக்கான அன்னை தெரசா விருது மலாலா யூசுப்சாய், அண்ணா ஹசாரே**,** கிரண் பேடி**,** சுஷ்மிதா சென் போன்றோருக்கும் வழங்கப்பட்டுள்ளது**.**
- பெரும் சமூக சீர்திருத்தவாதியான புனித அன்னை தெரசாவின் நினைவாக அவரை கவுரவிக்கும் விதமாக அவர் பெயரில் இவ்விருது வழங்கப்படுகிறது**.**
- **2005-**இல் ஹார்மோனி பவுண்டேஷனால் இவ்விருது நிறுவப்பட்டது**.**
- மும்பையில் ஆப்ரஹாம் மதாய் என்பவர் இந்த அமைப்பை நிறுவினார்**.** அன்றிலிருந்து ஆண்டிற்கு ஒருமுறையோ அல்லது இருமுறையோ இவ்விருது வழங்கப்படுகின்றது**.**
- அமைதி**,** சமத்துவம்**,** சமூகநீதி ஆகியவற்றிற்கு பங்காற்றும் தனி நபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது**.**

### இந்திய ஒலிம்பிக் சங்க தலைவர் - நரேந்திர பத்ரா

- சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் தலைவராக பதவி வகித்து வரும் நரேந்திரா பத்ரா இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் **(IOA - Indian Olympic Association)** தலைவராக நான்கு ஆண்டு கால பதவிக்கு நியமிக்கப்பட்டு உள்ளார்**.**
- **I0A**வின் தற்போதைய பொதுச் செயலாளரான ராஜீவ் மேத்தா**,** இரண்டாவது முறையாக மீண்டும் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்**.**

- மேலும் பொருளாளராக இந்திய கைப்பந்து கூட்டமைப்பைச் சேர்ந்த அனந்தேஷ்வர் பாண்டே தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

### இந்தியாவில் துருவப் பயணம் - நியோக்

- பிஜாலராவன் போலார் என்பது உலகம் முழுவதுமிருந்து மேற்கொள்ளப்படும் சாகசப் பிரயாணிகளின் துருவப் பயணமாகும்.
- இது 1997ல் இருந்து ஸ்வீடன் நிறுவனமான பிஜாலரவென் என்ற நிறுவனத்தால் ஆண்டு தோறும் நடத்தப்படும் பயணமாகும்.
- கேரளாவின் கொல்லம் மாவட்டத்திலிருந்து 26 வயது நிரம்பிய நியோக் எனும் சாகசப் பிரயாணி இந்த பிஜாலரவென் துருவப் பயணத்தில் பங்கு பெறும் முதல் இந்தியர் ஆவார்.
- ஏப்ரல் 2018ல் நடைபெற உள்ள இந்தப் பயணத்தில் பங்கு பெறும் பிரயாணிகள் நார்வே மற்றும் ஸ்வீடனில் காணப்படும் ஆர்க்டிக் வனாந்தரத்தில் மைனஸ் $30^{0}$ செல்சியஸ் தட்ப வெப்ப நிலையில் 300 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கும்.

### உலகத்தை தனியே வலம் வரும் கடற்பயணம்

- கடற்பயண மேதையான பிரான்சைச் சேர்ந்த பிரான்கோயிஸ் காபர்ட் தனது முதல் முயற்சியில் வேகமான, எங்கும் நிற்காத, தன்னந்தனியான உலகத்தை வலம்வரும் பயணத்தை நிறைவு செய்து உலக சாதனை புரிந்துள்ளார்.
- இவர் தனது பயணத்தை 42 தினங்கள், 16 மணிகள், 40 நிமிடங்கள், 35 விநாடிகள் என்ற கால அளவில் முடித்து உள்ளார்.
- பிரான்கோயிஸ், 2013 வெண்டி குளோப் மற்றும் 2014 ரூட் டி ரும் யாச்ட் [Route de Rhum Yacht] போன்ற பயணங்களின் வெற்றியாளர் ஆவார்.

### பிபிசியின் சிறந்த விளையாட்டு ஆளுமைக்கான விருது – மோ பாரா

- பிபிசியின் இந்த ஆண்டிற்கான சிறந்த விளையாட்டு ஆளுமைக்கான விருதிற்கு சர் மோ பாரா (Mo Farah) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- மோ பாரா சூப்பர் பைக்ஸ் உலக சாம்பியனான ஜோனவுன் ரியா மற்றும் மாற்றுத் திறனாளி ஒலிம்பிக் வீரரான ஜானி பீகாக் ஆகியோரை விட அதிக ஓட்டுக்களைப் பெற்றார்.

**HOW VOTING FIGURES HAVE FALLEN**

| 2014 | | 2016 | |
|---|---|---|---|
| **1 Lewis Hamilton** | **209,920** | **1 Andy Murray** | **247,419** |
| 2 Rory McIlroy | 123,745 | 2 Alistair Brownlee | 121,665 |
| 3 Jo Pavey | 99,913 | 3 Nick Skelton | 109,197 |
| **2015** | | **2017** | |
| **1 Andy Murray** | **361,446** | **1 Mo Farah** | **83,524** |
| 2 Kevin Sinfield | 278,353 | 2 Jonny Rea | 80,567 |
| 3 Jessica Ennis-Hill | 79,898 | 3 Jonnie Peacock | 73,429 |

### தேசிய வடிவமைப்பு விருது

- பெருமைமிகு தேசிய வடிவமைப்பு விருதானது பாதுகாப்பு மந்திரிக்கு அறிவியல் ஆலோசகராகவும், ஏவுகணைகள் மற்றும் யுக்திசார்ந்த ஆயுதங்களுக்கான இயக்குநர் ஜெனரலாகவும் உள்ள ஜி. சதீஷ் ரெட்டிக்கு வழங்கப்பட்டது.
- சதீஷ் ரெட்டி நேவிகேஷன் (வழி செலுத்துதல்) துறையில் மிகுந்த நிபுணராக அறியப்படுகிறார். மேலும் இங்கிலாந்தின் லண்டன் மற்றும் வானூர்தி சங்கமான இராயல் நேவிகேஷன் நிறுவனத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே இந்தியர் என்ற பெருமையையும் கொண்டுள்ளார்.
- இந்தியாவில் வானூர்தி தொழில் நுட்பங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் மேம்பாட்டிற்கு நீடித்த முயற்சிகள் எடுத்தமைக்காகவும், தனது முக்கிய தேசிய பங்களிப்புகள் மூலம் உள்நாட்டு வடிவமைப்பு, பலதரப்பு ஏவுகணை மேம்பாடுகள், கட்டுப்படுத்தப்பட்ட ஆயுதங்கள் மற்றும் மின்னணுவியல் தொழில் நுட்பங்கள் ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு முயற்சிகள் எடுத்தமைக்காகவும் இந்த விருதினை அவர் பெறுகிறார்.
- சதீஷ் ரெட்டி, பல்வேறு வகையான தந்திரமான மற்றும் யுக்திவாய்ந்த ஏவுகணைகளை வடிவமைத்து மேம்படுத்தும் "இந்தியாவின் ஏவுகணைகள் மையமான" டாக்டர். A.P.J. அப்துல்கலாம் ஏவுகணை வளாகத்தின் தலைவராக உள்ளார்.

### ஜோய் கோஷ்வாமி – மூர்த்திதேவி விருது 2017

- புகழ்பெற்ற பெங்காளி கவிஞரான ஜோய் கோஷ்வாமிக்கு 2017ஆம் ஆண்டிற்கான 31வது மூர்த்திதேவி விருது வழங்கி கவுரவிக்கப்பட்டுள்ளது.
- இவ்விருதினை பெறும் முதல் பெங்காலி கவிஞர் இவரேயாவார்.
- அனந்த புரஸ்கார், கேந்திரியா மற்றும் வங்காள சாகித்ய அகாடமி விருதுகளைப் பெற்றுள்ள இவர் முதல் டாட்டா வாழும் இலக்கிய கவிஞர் விருதையும் பெற்றுள்ளார்.
- தன் செல்ல வளர்ப்பு பூனை உட்பட தன் வாழ்வின் நெருக்கமானவர்களை பாத்திரமாக்கி இவர் படைத்த வாழ்க்கை சுயசரிதையான "டு டோன்டோ போவாரா மாட்ரோ" எனும் கவிதை தொகுப்பிற்காக கோஷ்ஸ்வாமிக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

#### *மூர்த்தி தேவி விருது*

- வாழ்வை ஆட்கொள்ளும் சிந்தனைகள் மற்றும் பகுத்தறிவு கொண்ட இலக்கிய வேலைப்பாடுகளை (Contemplative and Perceptive work) படைக்கும் ஆசிரியர்களுக்கு இலக்கியம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனமான பாரதீய ஞானபீட அமைப்பால் ஆண்டுதோறும் வழங்கப்படும் உயரிய இலக்கிய விருதே மூர்த்தி தேவி விருதாகும்.
- இந்திய மொழிகளில் எழுதும் இந்திய இலக்கியவாதிகளுக்கு அவர்களின் சிறந்த படைப்பிற்காக இவ்விருது வழங்கப் பெறுகிறது.
- பட்டாமாஹாதேவி சாந்தாலா தேவி எனும் நாவலுக்காக கன்னட எழுத்தாளரான C.K.நாகராஜராவிற்கு முதன் முதலாக 1983ல் இவ்விருது வழங்கப்பட்டது.
- சரஸ்வதி சிலையும், சான்றுப் பதக்கமும், 4 லட்ச ரூபாய் ரொக்கமும் இவ்விருதில் வழங்கப் பெறும்.

### சாகித்திய அகாடமி விருதுகள்

- இந்திய இலக்கிய படைப்புகளின் தேசிய அகாடமியான சாகித்திய அகாடமி அமைப்பு நடப்பாண்டின் 24 இந்திய மொழிகளின் சிறந்த படைப்புகளின் ஆசிரியர்களை அங்கீகரிக்கும் வகையில் வருடாந்திர சாகித்திய அகாடமி விருதுகளை அறிவித்துள்ளது.

- தமிழ் கவிஞரான மறைந்த திரு. இன்குலாப் அவர்களுக்கு தமிழுக்கான சாகித்திய அகாடமி விருது வழங்கப்பட்டுள்ளது.
- கவிஞர் இன்குலாப் அவர்களின் 'காந்தள் நாட்கள்' என்ற கவிதைத் தொகுப்புக்காக அவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.
- கீழக்கரையில் பிறந்த இன்குலாப்பின் இயற்பெயர் சாகுல் அமீது .
- வெள்ளை இருட்டு, சூரியனைச் சுமப்பவர்கள், ஒவ்வொரு புல்லையும் பெயர்சொல்லி அழைப்பேன் உட்பட பல நூல்களை இவர் எழுதியுள்ளார்.

***மொழி பெயர்ப்புக்கான சாகித்திய அகாடமி***

- தமிழில் மொழி பெயர்ப்புக்கான சாகித்திய அகாடமி விருது எழுத்தாளர் யூமா வாசுகிக்கு வழங்கப்பட்டுள்ளது.
- எழுத்தாளர் ஓ.வி.விஜயனின் 'கசாக்கிண்ட இதிகாசம்' என்ற மலையாள மொழி நாவலை, 'கசாக்கின் இதிகாசம்' என்ற பெயரில் யூமா வாசுகி தமிழில் மொழிபெயர்த்துள்ளார். 'காலச்சுவடு' பதிப்பகம் இந்நாவலை வெளியிட்டுள்ளது.
- பட்டுக்கோட்டையில் பிறந்த யூமா வாசுகியின் இயற்பெயர் மாரிமுத்து. அமுதபருவம் வலம்புரியாய் அணைந்ததொரு சங்கு, இரவுகளின் நிழற்படம் உள்ளிட்ட 3 கவிதை நூல்கள், உயிர்த்திருத்தல் எனும் சிறுகதை நூல், ரத்த உறவு, மஞ்சள் வெயில் என 2 நாவல்கள் ஆகிய படைப்புகளை எழுதியுள்ளார்.

### 7-வது சர்வதேச காபி திருவிழா

- 7-வது சர்வதேச இந்திய காபி திருவிழா 2018 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 16 முதல் 19 வரை பெங்களூருவில் நடைபெற உள்ளது.
- இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் காப்பிகளை உலகம் முழுவதும் பிரபலப்படுத்திடுவதற்காக நடத்தப்படும் இந்நான்கு நாள் திருவிழா இந்திய காபி அறக்கட்டளை (Indian Coffee Trust) மற்றும் இந்திய அரசின் காபி வாரியம் (Coffee Board) ஆகியவற்றால் ஒருங்கிணைக்கப்படுகிறது.
- 7-வது சர்வதேச காபி திருவிழாவானது 2020 ஆம் ஆண்டு இந்தியாவின் பெங்களூருவிலேயே நடைபெறவுள்ள சர்வதேச காபி நிறுவனத்தின் (International Coffee Organisation) உலக காபி மாநாட்டின் முன் நிகழ்வாகும்.
- காபியா அராபிகா வகை காபித் தாவரங்களுக்கு பிரச்சனைகளை உண்டாக்கும் வெள்ளைத் தண்டு துளைப்பான் (White Stem Borer) போன்ற பூச்சிகளின் அச்சுறுத்தல்களுக்கு உயிர்தொழில்நுட்பவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் தீர்வு காண்பதற்காக காபி வாரியம் செயல்படுகின்றது.
- காபி வெள்ளைத் தண்டு துளைப்பான் பூச்சிகளானது இந்தியாவின் அனைத்து காபி வளர்ப்பு இடங்களிலும் அராபிகா வகை காபிகளை தாக்கி அதன் உற்பத்தியை 40 சதவீதம் வரை குறைக்கும் தன்மையுடைய பூச்சியினங்களாகும்.

### தேசிய மாணவர் படை – இயக்குநர் ஜெனரல்

- தேசிய மாணவர் படையின் (National Cadet Corps) புதிய இயக்குநர் ஜெனரலாக லெப்டினன்ட் ஜெனரல் B.S. ஷரவத் பதவியேற்றுள்ளார்.
- ஈராக் மற்றும் குவைத்தில் ஒரு வருடம் இந்தியாவின் இராணுவ பார்வையாளராக (Military Observer) பணியாற்றியுள்ள இவர், இது உட்பட இந்தியாவின் பல்வேறு பகுதிகள் மற்றும் வெளிநாடுகளின் பல்வேறு இராணுவப் படைப் பிரிவுகளில் பணியாற்றியுள்ளார்.

- இவர்க்கு 2008 ஆம் ஆண்டு, பீகாரின் கோசி நதி வெள்ளத்தின் போது சிறப்பாக செயல்பட்டமைக்காக சேனா பதக்கம் (SENA Award) வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### *தேசிய மாணவர் படை*

- NCC (National Cadet Corps) என்று அழைக்கப்படும் தேசிய மாணவர் படை புது தில்லியை தலைமை இடமாக கொண்டு இயங்குகிறது.
- இதன் தோற்றத்திற்கு 1948 ஆம் ஆண்டின் இந்திய தேசிய மாணவர் படைச் சட்டம் (National Cadet Corps Act of 1948) காரணமாக அமைந்தது. இது 1948 ஜூலை 15 இல் துவங்கப்பட்டது.
- நாட்டிலுள்ள இளைஞர்களை ஒழுக்கம் மற்றும் தேசபக்தி கொண்ட குடிமக்களாக உருவாக்குவதற்காக இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு முப்படை கழகம் தேசிய மாணவர் படை ஆகும்.
- இந்தியாவில் உள்ள தேசிய மாணவர் படை தன்னார்வ அமைப்பு ஆகும். இது இந்தியா முழுவதும் உள்ள உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் இருந்து மாணவர்களை தேர்வு செய்து பயிற்சி அளிக்கிறது.
- குறிக்கோள் - ஒற்றுமை மற்றும் ஒழுக்கம் (Unity and Discipline).

## தங்க மயில் விருது - 2017

- முருகப்பா நிறுவ குழுமத்தின் சோழ மண்டலம் M.S பொது காப்பீட்டு நிறுவனத்திற்கு 2017ஆம் ஆண்டின் இடர் மேலாண்மைக்கான (Risk Management) தங்க மயில் (Golden Peacock) விருது வழங்கப்பட்டுள்ளது.
- அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற பெரு நிறுவன நெறிமுறைகள் (Corporate Ethics) மற்றும் இடர் மேலாண்மை (Risk Management) மீதான உலக மாநாட்டில் பொது காப்பீடு (Insurance General) வகைப் பிரிவில் இவ்விருது சோழமண்டலம் காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.
- உலகளவில் பெரு நிறுவனங்களுக்கான சிறப்பு உன்னதத்தின் அடையாளம் எனக் கருதப்படும் இவ்விருது (Corporate excellence) இயக்குநர்களின் நிறுவனம் (Institute of Directors) எனும் நிறுவனத்தால் 1991 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

## உலகின் சிறந்த கால்பந்தாட்ட வீரர்

- 2017-ஆம் ஆண்டின் உலகின் சிறந்த கால்பந்தாட்ட வீரருக்கான விருது தொடர்ந்து இரண்டாவது முறையாகவும், மொத்தத்தில் நான்காவது முறையாகவும் போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த உலக கால்பந்து நட்சத்திரமான கிறிஸ்டியானா ரொனால்டோவிற்கு வழங்கப்பட்டுள்ளது.
- கால்பந்து முகவர்களின் ஐரோப்பிய சங்கம் (European Association of football Agents) மற்றும் ஐரோப்பிய கால்பந்து கிளப்களின் சங்கத்தால் (European Club Association) வழங்கப்படும் இவ்விருதை இதற்கு முன் ரொனால்டோ முறையே 2011, 2014, 2016 ஆகிய வருடங்களில் பெற்றுள்ளார்.

## தீவிர மோசடி புலனாய்வு அலுவலகம்

- மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரியான அமர்தீப் சிங் பாட்டியா தீவிர மோசடிகளுக்கான புலனாய்வு அலுவலகத்தின் (Serios Fraud Investigation Office – SFIO) புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### *SFIO*

- டெல்லியில் தலைமையிடத்தைக் கொண்டுள்ள இந்த அலுவலகம் மத்திய பெரு நிறுவன விவகார

அமைச்சகத்தின் (Ministry of Corporate Affairs) கீழ், மோசடி விவகாரங்களில் புலனாய்வுகளை மேற்கொள்ளும் ஓர் நிறுவனமாகும்.

- நாட்டின் முக்கிய மோசடி விசாரணைகளில் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இந்த அலுவலகம் மத்திய வருமான வரித்துறை மற்றும் மத்திய புலனாய்வு துறையின் விசாரணை நடவடிக்கைகளுக்கும் துணைபுரியும் ஒருங்கிணைப்பு நிறுவனமாகும்.
- பெருநிறுவன ஆளுகை (Corporate Governance) மீதான நரேஷ் சந்திரா கமிட்டியின் பரிந்துரையின் அடிப்படையில் 2003 இல் இந்த அலுவலகம் ஏற்படுத்தப்பட்டது.

### இந்திய வரலாறு மாநாடு

- மூன்று நாட்கள் நடத்தப்படும் 78-வது இந்திய வரலாறு மாநாடு (Indian History Congress) கல்கத்தாவின் ஜாதவ்பூர் பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்டது.
- இந்திய வரலாறு மாநாடு ஆறு பகுதிகளாக நடத்தப்பட்டது. அவை பண்டைய இந்தியா, மத்திய அல்லது இடைக்கால இந்தியா, நவீன இந்தியா, இந்தியாவைத் தவிர மற்ற நாடுகள், அகழ்வாராய்ச்சி மற்றும் சம காலத்திய இந்தியா.
- இந்த மாநாட்டின் நோக்கம் இந்திய வரலாற்றின் மீதான அறிவியல் பூர்வமான ஆய்வை ஊக்குவித்து மேம்படுத்துதல், மாநாடுகளை நடத்துதல், மற்றும் ஆய்வு முறைகள், செய்திகள், பத்திரிக்கைகள் மற்றும் இதர விஷயங்களை வெளியிடுதல் ஆகியவையாகும்.

### ICCR-புதிய தலைவர்

- கலாச்சார உறவுகளுக்கான இந்திய கவுன்சிலின் (Indian Council for Cultural Relation-ICCR) புதிய தலைவராக, மாநிலங்களவை உறுப்பினர் மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் தேசிய துணைத் தலைவருமான வினய் சஹஸ்ரபுத்தே நியமிக்கப்பட்டுள்ளார்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வ சமூக பணியாளர்களுக்கான தெற்காசியாவின் ஒரே பயிற்சி மற்றும் ஆராய்ச்சி அகாடமியான ராம்பாவ் மஹால்கி பிரபோதினி (Rambhau Mhalgi Prabodhini) அமைப்பின் துணைத் தலைவராகவும் சஹஸ்ர புத்தே உள்ளார்.

#### *கலாச்சார உறவுகளுக்கான இந்திய கவுன்சில்*

- சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சரான மௌலானா அபுல்கலாம் ஆசாத்தினால் 1950-ஆம் ஆண்டு ICCR அமைக்கப்பட்டது.
- அபுல் கலாம் ஆசாத்தே இதன் முதல் தலைவருமாவார்.
- இந்தியாவின் கலாச்சார வெளியுறவுகளோடு தொடர்புடைய திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை வகுத்திடுவதிலும், அவற்றை செயல்படுத்திடுவதிலும் மிகுந்த செயற்தன்மையோடு பங்கேற்பதும், மேலும் இந்தியாவிற்கும், பிற உலக நாடுகளுக்கும் இடையே பரஸ்பர புரிதலையும், அவற்றினிடையேயான கலாச்சார உறவுகளை வளர்த்திடுவதும் வலுப்படுத்திடுவதும் இந்த கவுன்சிலின் நோக்கங்களாகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆசிய வில்வித்தை சாம்பியன் ஷிப்

- ❖ வங்கதேசத்தின் டாக்கா நகரில் நடைபெற்ற ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீரர்கள் மூன்று தங்கம், நான்கு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.
- ❖ இந்திய வில்வித்தை வீரர் அபிஷேக் வர்மா தென் கொரியாவின் ஜோங்கோ கிம்மை வீழ்த்தி தங்கம் வென்றுள்ளார்.
- ❖ ஜோதி சுரேக்ஷா வெண்ணம், திரிஷா தேப் மற்றும் பர்வீனா ஆகியோர் அடங்கிய இந்திய மகளிர் கூட்டு அணி தங்கம் வென்றுள்ளது.
- ❖ ஆண்களுக்கான வளை வில்வித்தை (Recurve) பிரிவில் இந்திய வீரர் ஆகாஷ் தங்கம் வென்றுள்ளார்.
- ❖ ஹரியானாவின் 15 வயதான ஹிமானி குமாரி மற்றும் 14 வயதான ஆகாஷ் ஆகியோர் 2018-ல் அர்ஜெண்டினாவில் நடைபெற உள்ள இளையோர் வில்வித்தை ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

## ஆசிய பனிச் சறுக்கு (Luge) சாம்பியன் ஷிப்

- ❖ இந்திய குளிர் கால ஒலிம்பிக் வீரரான சிவ கேசவன் ஜெர்மனியில் ஆல்டென்பர்க்கில் நடைபெற்ற ஆசிய லூஜ் (பனிச்சறுக்கு) சாம்பியன் ஷிப் போட்டியில் தங்கம் வென்றுள்ளார்.
- ❖ இவர் இந்தியாவிலிருந்து பங்கேற்ற ஒரே ஒரு வீரராவார். மேலும் இவர் ஆசிய லூஜ் போட்டிகளின் நடப்பு சாம்பியனுமாவார்.
- ❖ இவர் 2018 ஆம் ஆண்டு தென் கொரியாவின் பியாங்சங்-கில் நடைபெற உள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் இந்தியா சார்பாக பங்கெடுக்க உள்ளார். இது அவர் பங்குபெறும் ஆறாவது குளிர்கால ஒலிம்பிக் போட்டியாகும்.
- ❖ ஜப்பானின் நகானோ நகரில் நடத்த திட்டமிடப்பட்டு இருந்த ஆசிய லூஜ் சாம்பியன் ஷிப் போட்டியானது சில தொழிற்நுட்ப பிரச்சனைகளால் ஜெர்மனியில் நடத்தப்பட்டுள்ளது.

## விராட் கோலி சாதனை

- ❖ சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 6 இரட்டைச் சதங்களை அடித்த முதல் கேப்டன் என்ற சாதனையை இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் விராட்கோலி படைத்துள்ளார். இந்த சாதனையை 63 டெஸ்ட் போட்டிகளில் படைத்துள்ளார்.
- ❖ கேப்டனாக 5 இரட்டை சதங்களை அடித்த பிரைன் லாராவின் சாதனையை கோலி முறியடித்துள்ளார்.
- ❖ மூன்று டெஸ்ட் தொடர்களில் ஹாட்ரிக் முறை சதமடித்த முதல் கேப்டன் என்ற சாதனையையும் விராட் கோலி நிகழ்த்தியுள்ளார்.
- ❖ வினோத் காம்பிளிக்கு அடுத்து தொடர்ந்து இருமுறை இரட்டைச் சதம் விளாசிய வீரர் என்ற சாதனையைப் புரியும் இரண்டாவது இந்திய கிரிக்கெட் வீரர் இவராவார்.

### குளிர்கால ஒலிம்பிக் 2018

- ❖ அரசு உடந்தையோடு மேற்கொள்ளப்பட்ட ஊக்க மருந்து பயன்பாடு விவகாரத்தால் 2018 ஆம் ஆண்டு தென்கொரியாவில் நடைபெற உள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் இரஷ்யா பங்கேற்க சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தடை விதித்துள்ளது.
- ❖ இருப்பினும் போதை மருந்து விவகாரத்தில் சிக்காத பிற இரஷ்யா ஒலிம்பிக் வீரர்கள் "இரஷ்யாவிலிருந்து வந்துள்ள ஒலிம்பிக் தடகள வீரர்கள்" என்ற பெயரின் கீழ் ஒலிம்பிக் அமைப்பின் சார்பில் பங்கு பெறுவர்.
- ❖ மேலும், 2018 குளிர்கால ஒலிம்பிக்கின் எந்த நிகழ்ச்சிகளிலும் இரஷ்யாவின் கொடி பறக்க விடக்கூடாது எனவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.
- ❖ தென்கொரியாவின் பியாங்சங் நகரில் இன்னும் இரு மாதங்களில், குளிர்கால ஒலிம்பிக் தொடங்க உள்ள நிலையில் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் (International Olympic Committee) ஊக்க மருந்து மோசடிக்கு இதுவரை வழங்கப்பட்ட தண்டனைகளில் இதுவே மிகவும் கடுமையானதாகும்.
- ❖ அரசு ஆதரவுடன் இரஷ்ய தடகள வீரர்கள் விரிவான ஊக்க மருந்து பயன்பாட்டு மோசடியில் ஈடுபட்டதையும், குறிப்பாக உச்ச அளவில் 2014 ஆம் ஆண்டு சோச்சி நகரில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக்கில் ஊக்க மருந்து பயன்படுத்தியதையும் உலக ஊக்க மருந்து தடுப்பு அமைப்பின் (WADA – Word Anti – Doping Agency) அறிக்கையும், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் இரு விசாரணைகளும் உறுதிபடுத்தியுள்ளன.
- ❖ சோச்சி ஒலிம்பிக் போட்டியின் போது இரஷ்ய விளையாட்டு அமைச்சராக இருந்த, தற்போது துணைப் பிரதமராக உள்ள விடாலே முட்கோவிற்கு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி வாழ்நாள் தடை விதித்துள்ளது.
- ❖ 2018-ல் இரஷ்யாவில் நடைபெற உள்ள பிஃபா உலகக் கோப்பை கால்பந்து போட்டி ஏற்பாட்டு அமைப்பின் தலைவராக விடாலே முட்கோ உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### உலக பாரா-நீச்சல் சாம்பியன்ஷிப்

- ❖ மெக்சிகோவில் நடைபெற்ற உலக பாரா-நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் நாக்பூரைச் சேர்ந்த கண் பார்வையற்ற இந்திய வீராங்கனை காஞ்சனா மாலா பாண்டே தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- ❖ உலக பாரா-நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை இவரே ஆவார்.
- ❖ இப்போட்டியில் 200 மீட்டர் மெட்லே நீச்சலில் எஸ் 11 பிரிவில் கலந்து கொண்டு முதலாம் இடத்தினைப் பிடித்துள்ளார்.
- ❖ இவர் இந்திய ரிசர்வ் வங்கியில் பணியாற்றி வருகிறார்.
- ❖ கடந்த ஜூலையில், ஜெர்மனியின் பெர்லினில் நடைபெற்ற பாரா நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்று மிகச் சிறந்த ஆட்டத்தினை வெளிப்படுத்தியதன் மூலமாக, இந்தியாவின் சார்பாக இப்போட்டியில் விளையாடுவதற்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

### இந்தோனேசிய ஓபன் நீர் விளையாட்டு சாம்பியன் ஷிப்

- ❖ இந்தோனேசியாவின் ஜகர்தாவில் நடைபெற்ற 2017ஆம் ஆண்டின் இந்தோனேசிய ஓபன் நீர் விளையாட்டு சாம்பியன் ஷிப் போட்டியில் இந்திய டைவிங் அணி 1 தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளது.

### உலக ஹாக்கி லீக் – ஒடிஸா

❖ ஒடிஸாவின் புவனேஸ்வரில் நடைபெற்ற உலக ஹாக்கி லீக் போட்டியில் ஜெர்மனியை 2-1 என்ற கணக்கில் வீழ்த்தி இந்திய ஆடவர் ஹாக்கி அணி வெண்கலப் பதக்கம் வென்றுள்ளது.

❖ புவனேஸ்வரின் கலிங்கா விளையாட்டரங்கில் நடைபெற்ற உலக ஹாக்கி இறுதி போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் அர்ஜெண்டினாவை வீழ்த்தி ஆஸ்திரேலியா அணி உலக ஹாக்கி லீக் சாம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்டது.

### ஆசிய ஏர்கன் துப்பாக்கி சுடுதல் போட்டி

❖ 2020ஆம் ஆண்டின் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ள ஜப்பானின் வாகோ சிட்டியின் அசாகா சுடுதல் பகுதியில் அண்மையில் நடைபெற்ற 10வது ஆசிய ஏர்கன் துப்பாக்கி சுடுதல் போட்டியில் 6 தங்கம், 8 வெள்ளி, 7 வெண்கலம் என மொத்தம் 21 பதக்கங்களை இந்திய அணி வென்றுள்ளது.

❖ இதில் முக்கியமான நிகழ்வாக, 2018ல் அர்ஜென்டினாவின் பியூனோஸ் ஏரேஸ் நகரில் நடைபெற உள்ள இளையோர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிக்கு இந்தியாவின் நான்கு ஜீனியர் துப்பாக்கி சுடுதல் வீரர்களான துஷார் மானே, மெஹுலி கோஷ், சவரப் சவுத்ரி, மனு பாகேர் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

### 10வது ஆசிய ஏர்கன் சாம்பியன்ஷிப்

❖ ஜப்பானின் வாகோ சிட்டியில் நடைபெற்று வரும் ஆசிய இளையோர் ஒலிம்பிக் தகுதி போட்டியில் **10** மீட்டர் கைத்துப்பாக்கி சுடுதல் போட்டியின் ஜீனியர் பிரிவில் இந்தியாவின் சவுரப் சௌத்ரி உலக சாதனை படைத்துள்ளார்**.**

❖ மேலும் தங்கம் வென்றதன் மூலம் **2018-**இல் அர்ஜென்டினாவின் பியூரேஸ் ஏரேஸ்ஸில் நடைபெற உள்ள இளையோர் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்**.**

### ABC – சிறந்த இளையோர் குத்துச் சண்டை வீரர்

❖ உலக இளையோர் குத்துச்சண்டை சாம்பியனான சச்சின் சிவாச் இந்த ஆண்டிற்கான ஆசிய குத்துச்சண்டை சம்மேளனத்தின் (Association of Boxing Commissions-ABC) சிறந்த இளையோர் குத்துச்சண்டை வீரராக தேர்வு செய்யப்படுள்ளார்.

❖ கடந்த ஆண்டு உலக இளையோர் குத்துச்சண்டை சாம்பியனான சச்சின் சிவாச், இந்த ஆண்டின் ஆசிய இளையோர் குத்துச் சண்டை சாம்பியன்ஷிப்பில் வெள்ளி பதக்கமும், இளையோர் காமன்வெல்த் குத்துச் சண்டை போட்டியில் தங்கமும் வென்றுள்ளார்.

### 2022 பனிக்கால ஒலிம்பிக் சின்னங்கள்

❖ 2022 பெய்ஜிங் பனிக்கால ஒலிம்பிக் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிக்கான சின்னங்களை சீனா வெளியிட்டுள்ளது. இதற்கான உத்வேகம் சீனாவின் கையெழுத்து வேலைப்பாட்டிலிருந்து வந்துள்ளது.

❖ 2008 ஒலிம்பிக் போட்டியை நடத்திய பெய்ஜிங் முதன் முறையாக கோடைக்கால மற்றும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை நடத்திய முதல் நகரம் என்ற பெருமையை பெற உள்ளது.

❖ லின் கன்ஜென் என்ற கலைஞரால் வடிவமைக்கப்பட்ட இந்த சின்னம் சீனக் கலாச்சாரத்தின் பழைமையான மற்றும் புதுமையான மூலக்கூறுகளை ஒருங்கிணைப்பதோடு, பனிக்கால

விளையாட்டுகளின் முக்கியத்துவம் மற்றும் உணர்வுகளை வெளிக்காட்டும் விஷயங்களையும் ஒருங்கிணைக்கிறது.

- பனி அல்லது குளிர் எனப் பொருள்படும் சீன எழுத்தில் (冬) ஆன இந்தச் சின்னம், மேற்பகுதியில் பனிச்சறுக்கு விளையாட்டு வீரரையும் அடிப்பகுதியில் வானில் பறப்பரையும் பிரதிபலிக்கிறது.




- மேற்பகுதிக்கும் அடிப்பகுதிக்கும் நடுவில் உள்ள பறக்கும் நாடா என்ற மையக் கருத்து, சீனாவின் உருண்டு திரண்ட மலைகளையும், ஒலிம்பிக் நடக்கும் இடங்களையும், பனிச்சறுக்கு கட்டைகளையும், பனிச் சறுக்கு வவளையங்களையும் குறிப்பிடுகிறது.
- மேலும் இந்த சின்னம், ஒலிம்பிக் போட்டி ஆரம்பிக்கும் காலம் சீனாவின் புத்தாண்டு ஆரம்பிப்பதோடு ஒத்துப் போவதையும் குறிப்பிடுகிறது.

### காமன்வெல்த் மல்யுத்த சாம்பியன்ஷிப்

- தென்னாப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க்கில் நடந்த காமன்வெல்த் மல்யுத்த போட்டியில் சுஷில் குமார் தங்கப்பதக்கம் வென்றார்.
- இது 2014 கிளாஸ்கோ காமன்வெல்த் போட்டிகளுக்குப் பிறகு அவர் வெல்லும் முதல் சர்வதேசப் பதக்கமாகும்.
- 74 கிலோ எடைப்பிரிவில் போட்டியிட்ட அவர், நியூசிலாந்தின் ஆகாஷ் குல்லாரை வீழ்த்தி இந்தியாவிற்காக தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.
- இதேப் பிரிவில் உள்ள மற்றொரு இந்திய மல்யுத்த வீரர் பர்வீன் ராணா வெண்கலப் பதக்கம் வென்றார்.

### உலக சூப்பர் சிக்ஸ் போட்டி – P.V. சிந்து வெள்ளிப் பதக்கம்

- இந்தியாவின் தலைசிறந்த பாட்மிண்டன் மட்டையாளர் P.V. சிந்து துபாய் உலக சூப்பர்சீரிஸ் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- தரவரிசையில் உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான ஜப்பானின் யமகுச்சியிடம் தங்கப் பதக்க வாய்ப்பை **அ**வர் இழந்தார்.
- 2016 ஒலிம்பிக்ஸ் மற்றும் 2017 உலக சாம்பியன்ஷிப் போட்டிகளுக்குப் பிறகு வெள்ளிப் பதக்கத்தோடு அவர் போட்டியை நிறைவு செய்வது இது மூன்றாவது பெரிய நிகழ்வாகும்.
- கொரிய சூப்பர் சீரிஸ், இந்திய ஓபன் மற்றும் துபாய் உலக சூப்பர்சீரிஸ் இறுதியில் வெள்ளி ஆகியவற்றோடு சிந்து இவ்வருடத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார்.

### இந்திய இளையோர் குத்துச் சண்டை வீரர்கள் – ஜெர்மனியில் ஆறு தங்கப்பதக்கங்கள்

- இந்திய இளையோர் குத்துச் சண்டை வீரர்கள் ஜெர்மன் நகரமான சீவரின் என்ற நகரத்தில் நடைபெற்ற ஐந்தாவது சர்வதேச ஸ்வென் லாஞ் நினைவுப் போட்டியில் ஆறு தங்கம், நான்கு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கங்களை வென்று ஒட்டு மொத்த சாம்பியன்களாக போட்டியை நிறைவு செய்துள்ளனர்.
- 52 கிலோ எடைப்பிரிவில் பாவேஷ் கட்டமனி தனது தங்கப்பதக்கத்தை சிறந்த குத்துச்சண்டை வீரருக்கான கோப்பையோடு சேர்த்து வென்றார்.
- இந்திய குத்துச்சண்டை வீரர்களின் இத்திறமை போட்டியின் சிறந்த அணி என்ற விருதையும் பெற்றுத் தந்தது.

### தேசிய ஜீனியர் பேட்மிண்டன் சாம்பியன் ஷிப்

- அசாமின் குவஹாத்தியில் நடைபெற்ற 42வது தேசிய ஜீனியர் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப்பில் 17 வயதுக்குட்பட்டோர் மற்றும் 19 வயதுக்குட்பட்டோர் ஆகிய இரண்டிலும் மகளிர் ஒற்றையர் பட்டத்தை ஆகார்ஷி கஷ்யப் வென்றுள்ளார்.
- மிதுலா 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் பெண்கள் இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் ஆகிய இரண்டிலும் பதக்கம் வென்றுள்ளார்.
- விஷ்ணுவர்தன் கௌத் என்ற வீரர் நடைபெற்ற சாம்பியன் ஷிப்பில் 17வயதுக்குட்பட்டோர் மற்றும் 19 வயதுக்குட்பட்டோர் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் ஆண்கள் இரட்டையர் பிரிவில் பட்டத்தை வென்றுள்ளார்.

### 9வது சர்வதேச இளையோர் பாய்மரப் படகோட்ட சாம்பியன்ஷிப்

- 2017ஆம் ஆண்டின் டிசம்பர் 27 முதல் 31 வரை ஆந்திரப் பிரதேசத்திலுள்ள நெல்லூரின் கிருஷ்ணப்பட்டினம் துறைமுகத்தில் 9வது சர்வதேச இளையோர் பாய்மரப் படகோட்ட (Sailing) சாம்பியன்ஷிப் போட்டி நடத்தப்பட உள்ளது.
- இதுவே இந்தியாவின் மிகப்பெரிய பாய்மரப் படகோட்டப் போட்டியாகும்.
- இந்திய பாய்மரக்கப்பற் சங்கம் (Yachting Association of India – YAI) மற்றும் ஆசிய கடற் படகோட்ட கூட்டமைப்பு (Asian Sailing Federation – ASAF) ஆகியவற்றின் கீழ் செயல்படும் தமிழ்நாடு பாய்மர படகோட்ட சங்கம், நவயுகா பாய்மர படகோட்ட அகாடமி மற்றும் ஆந்திரப் பிரதேச பாய்மரக் கப்பற் சங்கம் ஆகியவற்றால் இச்சர்வதேச போட்டி நடத்தப்படுகிறது.
- இத்துறைமுகத்தில் YAI சீனியர் மற்றும் தேசிய இளையோர் படகோட்ட சாம்பியன்ஷிப் போட்டிகளும் நடத்தப்படுகின்றது.
- இதற்கு முந்தைய 8வது சர்வதேச இளையோர் சாம்பியன்ஷிப் போட்டி சென்னையில் நடைபெற்றது.

### ஓரியன்டல் மற்றும் ஆசிய / பசுபிக் குத்துச்சண்டை

- இந்திய குத்துச்சண்டை வீரர் விஜேந்தர் சிங் உலக குத்துச்சண்டை அமைப்பின் (World Boxing Organization - WBO) ஓரியன்டல் மற்றும் ஆசிய-பசுபிக் இடை எடைப் பிரிவு (Oriental and Asia Pacific super middleweight) பட்டங்களை தக்க வைத்துக் கொண்டார்.

- இதற்காக "ராயல் ரம்பில்" என்ற தலைப்பில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில் ஆப்பிரிக்க நாட்டு குத்துச்சண்டை வீரரான எர்னஸ்ட் அமுசுவை ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த 32 வயதான விஜேந்தர் சிங் வீழ்த்தினார்.
- இந்த வெற்றியானது தொழில்முறை குத்துச்சண்டை போட்டிகளில் விஜேந்தர் சிங் பெறும் பத்தாவது தொடர் வெற்றியாகும்.

### புரோ மல்யுத்த லீக் -சுஷில் குமார்

- தில்லியில் நடைபெற்ற புரோ மல்யுத்த லீக் ஏலத்தில் இரண்டு முறை ஒலிம்பிக் பதக்கம் வென்ற வீரரான சுஷில் குமார் அதிகபட்ச விலையான ரூ. 55 லட்சத்திற்கு டெல்லி சுல்தான்ஸ் அணியால் வாங்கப்பட்டார்.
- இதன்மூலம் அதிகபட்ச ஏல விலையைப் பெற்று இந்தப் போட்டியின் வரலாற்றில் சுனில் குமார் மிக அதிக விலையுயர்ந்த வீரரானார்.
- பெண்கள் வரிசையில், ஹரியானா ஹாமர்ஸால் அணியால் 44 இலட்சத்துக்கு வாங்கப்பட்ட அமெரிக்காவைச் சேர்ந்த உலகச் சாம்பியன் தங்கப் பதக்க வீராங்கனையான ஹெலன் மரொலிஸ் (57 கி. எடைக்குட்பட்டோர் பிரிவு) அதிக விலைக்கு ஏலம் எடுக்கப்பட்டார்.
- அடுத்து வரவிருக்கும் புரோ மல்யுத்த லீக் (PWL) போட்டியானது அதன் மூன்றாவது பதிப்பாகும். இதன் முதல் பதிப்பை ரெவன்டா மும்பை கருடாவும் இரண்டாவது பதிப்பை என்சிஆர் பஞ்சாப் ராயல்ஸ் அணியும் வென்றுள்ளது.
- இரண்டு பதிப்புகளிலும் ஹரியானா ஹாமர்ஸ் இறுதிப்போட்டி வரை சென்றது. ஆனால் வெற்றி இலக்கை தொடர்ந்து தவறவிட்டது.

### உலக சதுரங்க சாம்பியன்ஷிப் 2017

- சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் நடைபெற்ற உலக விரைவு மற்றும் அதிரடி சதுரங்க (Blitz and Rapid) சாம்பியன்ஷிப் போட்டியில், பலமுறை உலக சதுரங்க சாம்பியன் ஷிப் பட்டத்தை வென்றுள்ள இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் ரஷ்யாவின் விளாடிமிர் பெடோசீவ்வை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
- பெண்கள் பிரிவில் சீனாவைச் சேர்ந்த ஜு வென்ஜுன் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

### 61வது தேசிய துப்பாக்கிச் சுடுதல் சாம்பியன்ஷிப்

- திருவனந்தபுரத்தில் நடைபெற்ற 61வது தேசிய துப்பாக்கிச் சுடுதல் சாம்பியன் ஷிப் போட்டியில் பெண்களுக்கான 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் புதிய சாதனையைப் படைத்து அனிசா சையத் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- இளையோருக்கான மகளிர் 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் புதிய தேசிய சாதனை படைத்து ஹரியானாவின் சின்கி யாதவ் தங்கம் வென்றுள்ளார்.

# முக்கிய தினங்கள்

## எல்லைப் பாதுகாப்பு படை நிறுவன தினம்

- எல்லைப் பாதுகாப்பு படை நிறுவன தினம் ஆண்டுதோறும் டிசம்பர் 1-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது
- எல்லை பாதுகாப்பு படையானது (Border Security Force) ஒரு துணை இராணுவப் படையாகும் (பாரா மிலிட்டரி).
- இந்தியாவின் நில எல்லைகளை காத்தல் மற்றும் எல்லைத் தாண்டிய குற்றங்களைத் தடுத்தல் இதன் முக்கியப் பொறுப்புகளாகும்.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இது செயல்படுகிறது.
- BSF உலகின் மிகப்பெரிய எல்லைப் பாதுகாப்புப் படையாகும்.
- மிகப்பெரும் படை அளவும், செயல்பாட்டையும் கொண்டிருப்பதன் காரணமாக, தனக்கென தனி வான், கடல் மற்றும் பீரங்கிப் படைப்பிரிவை கொண்ட ஒரே மத்திய ஆயுதக் காவற்படை (Central Armed Police Force -CAPF), எல்லைப் பாதுகாப்பு படை ஆகும்.
- இது ஐந்து மத்திய ஆயுதக் காவற் படைகளுள் ஒன்றாகும்.
- இதன் தற்போதைய தலைவர் இயக்குநர் ஜெனரல் கே.கே. ஷர்மா ஆவார்.
- மேற்கே பாகிஸ்தான் தொடங்கி கிழக்கே வங்கதேசம் வரை 6000 கி.மீ எல்லையை 656 எல்லைச் சாவடிகளைக் கொண்டு எல்லைப் பாதுகாப்பு படை ஆனது இந்திய எல்லைகளைக் காக்கின்றது.

## உலக எய்ட்ஸ் விழிப்புணர்வு தினம் - டிசம்பர் 1

- உலகளாவிய பொது சுகாதாரப் பிரச்சினையாக எச்.ஐ.வியை கொண்டு அதன் மீதான புரிதலையும், விழிப்புணர்வையும் அதிகரிக்க ஆண்டுதோறும் உலகம் முழுவதும் டிசம்பர்-1 ஆம் தேதி உலக எய்ட்ஸ் விழிப்புணர்வு தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.
- இந்த ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தின் இத்தினத்திற்கான கருத்துரு “என் ஆரோக்கியம் என் உரிமை”.
- உலக எய்ட்ஸ் விழிப்புணர்வு தினம் 1988-ஆம் தோற்றுவிக்கப்பட்டது. உலக அளவில் பொது சுகாதாரத்திற்கான தினமென்று தோற்றுவிக்கப்பட்ட முதல் தினம் உலக எய்ட்ஸ் விழிப்புணர்வு தினமாகும்.

## சர்வதேச அடிமைகள் ஒழிப்பு தினம் – டிசம்பர் 2

- உலக மக்களிடையே அடிமைத்தனத்தைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கவும், அடிமைத்தனத்தால் சமுதாயத்தில் உண்டாகும் தாக்கத்தைப் பற்றி எடுத்துரைக்கவும் ஆண்டுதோறும் உலகம் முழுவதும் டிசம்பர் 2ஆம் தேதி சர்வதேச அடிமைகள் ஒழிப்பு தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.
- 1949-ஆம் ஆண்டு டிசம்பர் 2-ஆம் தேதி அன்று ஆள்கடத்தலை ஒடுக்குதல் மற்றும் பிறர் விபச்சாரத்திற்குட்படுத்தப்பட்டு சுரண்டப்படுவதை தடுப்பதற்கான உடன்படிக்கை ஐ.நா.சபையின் பொது அவையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதை குறிக்கும் விதமாக (United nations conventions for the suppression of the Traffic in person and of the exploitations of the prostitution of others) இத்தினம் கொண்டாடப்படுகின்றது.

### *அடிமைத்தன குறியீடு*

- ❖ ஆண்டுதோறும் வால்க் ப்ரீ பவுண்டேஷன் எனும் அமைப்பால் உலக அடிமைத் தன குறியீடு (Global Slavery index) வெளியிடப்படுகின்றது.
- ❖ 2017-ஆம் ஆண்டிற்கான இந்தக் குறியீட்டில் இந்தியா உலகின் 167 நாடுகளில் 4வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ இந்த குறியீட்டின்படி 2016-ல் இந்தியாவில் 18.3 மில்லியன் அளவிற்கு அடிமைத்தனத்தில் சிக்கிய மக்கள் உள்ளனர்.

### *நவீன அடிமைத்துவத்தின் உலகளாவிய மதிப்பீடுகள்*

- ❖ வால்க் ப்ரி பவுண்டேஷன் அமைப்பானது சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (International labour Organisation) சார்பாக "நவீன அடிமைத்துவத்தின் உலகளாவிய மதிப்பீடுகள் "(Global Estimates of modern slavery) என்ற அறிக்கையை வெளியிடுகின்றது.
- ❖ இவற்றில் நாடுகள் வாரியான மதிப்பீடுகள் வெளியிடப்படுவதில்லை.
- ❖ இந்த அறிக்கையின் படி, உலகம் முழுவதும் 40.3 மில்லியன் அளவிற்கு நவீன அடிமைத்தனத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளனர்.

## சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் – டிசம்பர் 3

- ❖ உலகம் முழுவதும் ஆண்டுதோறும் டிசம்பர்-3 ஆம் தேதி இயலாமைக் குறைபாடுகளைப் பற்றிய புரிதலை மக்களிடையே மேம்படுத்தவும், இயலாமைக் குறைபாடு உடைய நபர்களின் நல்வாழ்வு, உரிமைகள் மற்றும் கண்ணியத்திற்கு ஆதரவை திரட்டவும் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.
- ❖ 2017-ஆம் ஆண்டின் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தின் கருத்துரு "அனைவருக்குமான மீள்திறனும் நீடித்த தன்மையும் உடைய சமுதாயத்தை நோக்கிய மாற்றம் "(Transformation towards sustainable and resilent soceities for all).
- ❖ இந்தியாவில் 2011-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 2.21 சதவீத மக்கள் இயலாமைக் குறைபாடுடையவர்கள்.
- ❖ உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி, ஏதேனும் ஒரு விதக் குறைபாடோடு உலகம் முழுவதும் 15.3 சதவீத மக்கள் வாழ்கின்றனர்.

## இந்திய கடற்படை தினம் - டிசம்பர் 4

- ❖ 1971-ஆம் ஆண்டு நடந்த இந்தோ-பாகிஸ்தான் போரின்போது பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்தை தாக்குவதற்கு இந்தியா மேற்கொண்ட "ஆப்ரேஷன் டிரைடென்ட்"-ஐ நினைவு கூறும் விதமாக ஆண்டுதோறும் டிசம்பர் 4-ஆம் தேதி தேசிய கடற்படை தினம் கொண்டாடப்படுகிறது.
- ❖ இந்திய கடற்படையானது உலகின் ஐந்தாவது பெரிய கடற்படையாகும்.
- ❖ தற்போது இது 46-வது கடற்படைதினம் ஆகும்.
- ❖ இந்திய கடற்படையானது மூன்று மண்டலப் பிரிவுகளை (command) கொண்டுள்ளது.
    - ✓ கிழக்கு மண்டலக் கடற்படைப் பிரிவின் தலைமையகம் விசாகப்பட்டினத்தில் உள்ளது.
    - ✓ மேற்கு மண்டலக் கடற்படைப் பிரிவின் தலைமையகம் மும்பையில் உள்ளது.
    - ✓ தென் மண்டலக் கடற்படைப் பிரிவின் தலைமையகம் கொச்சியில் உள்ளது.

- இம்மூன்று மண்டலங்களின் கீழ் இந்திய கடற்படை 66 கடற்படைத் தளங்களை நிர்வகிக்கின்றது.




### உலக மண் தினம் – டிசம்பர் 5

- உலக மண் தினம் ஆண்டுதோறும் உலகம் முழுவதும் டிசம்பர்-5 ஆம் தேதி ரோம் நகரை தலைமையிடமாகக் கொண்ட ஐ.நா. உணவு மற்றும் வேளாண் அமைப்பால் [UN – FAO] கொண்டாடப்படுகின்றது.
- 2017-ஆம் ஆண்டிற்கான உலக மண் தினத்தின் கருத்துரு ⇒ "நிலத்திலிருந்து தொடங்கி பூமியின் மீது அக்கறை கொள்ளல்" [Caring for the Planet starts from the ground].
- மனித நல்வாழ்வு, உணவுப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமான சுற்றுச்சூழல் போன்றவற்றிற்கு தரமுடைய மண் வளத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இத்தினம் கடைபிடிக்கப் படுகின்றது.
- மனித நல்வாழ்வினிற்கு முக்கிய பங்கெடுப்பாளராகவும், இயற்கை சுற்றுச்சூழல் முறையின் முக்கிய பகுதியாகவும் உள்ள மண்ணின் முக்கியத்துவத்தை கொண்டாடுவதற்காக 2002 ஆம் ஆண்டு டிசம்பர் 5-ஆம் தேதியை உலக மண் தினமாக கொண்டாட மண் அறிவியலுக்கான சர்வதேச சங்கத்தில் [International Union for Soil Science-IUSS] தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- பின் 2013-ல் UN-FAO மாநாட்டில் உலக மண் தினத்திற்கு ஒருமனதாக ஆமோதிப்பு அளிக்கப்பட்டு 68-வது ஐ.நா. பொது அவை மாநாட்டிற்கு அதிகாரப்பூர்வமாக பரிந்துரைக்கப்பட்டது.
- பின் 68-வது பொது அவை மாநாட்டில் டிசம்பர் 5 ஆனது உலக மண் தினமாக அறிவிக்கப்பட்டது.

### படைவீரர் கொடிநாள் தினம் – டிசம்பர் 7

- நாட்டையும், நாட்டின் கௌரவத்தையும் காக்க எல்லைகளில் போரிடும் இந்தியாவின் முப்படை வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக 1949-ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும், டிசம்பர்-7 ஆம் தேதி இந்திய படைவீரர் கொடிநாள் கொண்டாடப்படுகின்றது.

- பொது மக்களுக்கு சிறு கொடிகள் விநியோகித்து, அதன் வழி நன்கொடைகளைப் பெறுவதற்காக இத்தினம் கொண்டாடப்படுகின்றது.
- இவ்வாறு படைவீரர் கொடி நாளில் திரட்டப்படும் நிதியானது,
    - ஓய்வு பெற்ற இராணுவத்தினர் மற்றும் அவர்களின் நலவாழ்வு மற்றும் மறு குடியேற்றம்,
    - பணியிலுள்ள நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் நலவாழ்வு
    - போர் இழப்புகள் மற்றும் புனரமைப்பு

  போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படும்.

### சர்வதேச விமான சேவை தினம் – டிசம்பர் 7

- சர்வதேச விமான சேவைக்கான உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டு ஐம்பது ஆண்டுகள் நிறைவுற்றதை குறிக்கும் வகையில் 1994 ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 7 ஆம் தேதி உலகம் முழுவதும் ஆண்டுதோறும் சர்வதேச சிவில் விமான சேவை நிறுவனத்தால் [International Civil Aviation Organisation-ICAO] சர்வதேச விமான சேவை தினம் கொண்டாடப்படுகின்றது.
- உலகின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டில், விமான சேவைகளுக்கு, குறிப்பாக சர்வதேச விமான சேவைகளுக்கு உள்ள முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்காக இத்தினம் கடைபிடிக்கப்படுகின்றது.
- 2015-முதல் 2018-ஆம் ஆண்டு வரையிலான சர்வதேச விமான சேவை தினத்தின் கருத்துரு “அனைத்து நாடுகளிலும் விமான சேவையை ஏற்படுத்த ஒன்றாக செயல்படுதல்” **(**Working Together to Ensure No Country is Left Behind**)**.

### சர்வதேச ஊழல் ஒழிப்பு தினம் – டிசம்பர் 9

- ஆண்டுதோறும் உலகம் முழுவதும் டிசம்பர் 9ஆம் தேதி ஊழலைப் பற்றியும், அவற்றை எதிர்த்து போராடுவதற்கான வழிகளைப் பற்றியும் விழிப்புணர்வை உண்டாக்க ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச ஊழல் ஒழிப்பு தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.
- 2017ஆம் ஆண்டிற்கான சர்வதேச ஊழல் ஒழிப்பு தினத்தின் கருத்துரு “வளர்ச்சி, அமைதி மற்றும் பாதுகாப்பிற்காக ஊழலுக்கு எதிராக ஒன்றுபடுதல்” (Uniter against Comuption for development, Peace & Secuity).
- 2003 அக்டோபர் 31ஆம் தேதி ஐ.நா.பொது அவை ஐ.நா.வின் ஊழலுக்கு எதிரான உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டது.
- மேலும் இந்த உடன்படிக்கையின் உறுப்பினர் நாடுகளுக்கான செயலகமாக போதை பொருட்கள் மற்றும் குற்றங்களுக்கான ஐ.நா.அலுவலகத்தை (United Nations Office on Drugs and Crimes) நியமிக்கவும் பொதுச் செயலாளருக்கு பரிந்துரை அளிக்கப்பட்டது.
- ஐ.நா.மேம்பாட்டு திட்டம் (United Nations Development Programme) மற்றும் போதை மற்றும் குற்றங்களுக்கான ஐ.நா.அலுவலகம் ஆகியவை ஊழல் ஒழிப்பு முயற்சிகளுக்கான முன்னணி சர்வதேச அமைப்பாகும்.

### மனித உரிமைகள் தினம் – டிசம்பர் 10

- ஆண்டுதோறும் உலகம் முழுவதும் டிசம்பர் 10-ஆம் தேதி உலக மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுகின்றது.

- உலகின் முதல் மனித உரிமைகளைப் பற்றிய விளக்க கூற்றான உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் (UNHR – United National Human Rights) 1948-ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் தேதி ஐ.நா.அவையின் பொது அவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதனை குறிக்கும் விதமாக இத்தினம் கொண்டாடப்படுகின்றது.
- 2017ஆம் ஆண்டிற்கான உலக மனித உரிமைகள் தினத்தின் கருத்துரு – சமத்துவம், நீதி மற்றும் மனித கண்ணியத்திற்கு ஒன்றுபட்டு எழுவோம் (Let's stand up for equality, justice and human dignity).
- இவ்வருடம் ஐ.நா.வின் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் 70-வது ஆண்டு நிறைவை குறிக்கும் விதமாக ஆண்டு முழுவதுமான மனித உரிமைகள் விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்கப்பட்டுள்ளது.
- மேலும் பாரம்பரிய வழக்கமாக ஆண்டுதோறும் டிசம்பர் 10-ஆம் தேதி தான் ஐந்தாண்டு இடைவெளிகளில் வழங்கப்பெறும் மனித உரிமைகள் தொடர்பான களத்தின் ஐ.நா.விருதும், நோபல் அமைதிப் பரிசும் வழங்கப்படுகின்றது.

### சர்வதேச மலைகள் தினம் – டிசம்பர் 11

- 2003 ஆம் ஆண்டிலிருந்து உலகம் முழுவதும் ஆண்டுதோறும் டிசம்பர் 11ஆம் தேதி சர்வதேச மலைகள் தினம் ஐ.நா.பொது அவையில் கொண்டாடப்படுகின்றது.
- மனித நல வாழ்வில் மலைகள் வகிக்கும் பங்கின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தவும், அவற்றினால் உண்டாகும் வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் மலைகளின் மேம்பாட்டில் உள்ள இடர்களை முன்னிலைப் படுத்திக் காட்டுவதற்கும், உலகம் முழுவதும் மலைவாழ் மக்களிடையேயும், சுற்றுச்சூழல் பகுதிகளிலும் நேர்மறையான மாற்றங்களை கொண்டு வர ஆக்கப்பூர்வ கூட்டிணைவை ஏற்படுத்துவதற்கும் இத்தினம் கொண்டாடப்படுகின்றது.
- 2017ஆம் ஆண்டிற்கான சர்வதேச மலைகள் தினத்தின் கருத்துரு "அழுத்தத்தில் மலைகள்: பருவநிலை, பட்டினி, குடியேற்றம்" (Mountain under Pressure: climate, hunger, migration) ஆகும்.
- இந்த வருடம் சர்வதேச மலைகள் தினத்தின் கருத்துரு இந்த ஆண்டு டிசம்பர் 11 முதல் 13 வரை இத்தாலியின் ரோம் நகரிலுள்ள உலக உணவு அமைப்பின் தலைமையகத்தில் நடைபெறும் (FAO – Food and Agriculture organisation) மலைகள் கூட்டிணைவின் உலக மாநாட்டோடு இணைக்கப்பட்டு அதன் மீது மாநாட்டு கருத்தரங்கு நடத்தப்படும்.

### உலகளாவிய சுகாதார பாதுகாப்பு தினம் – டிசம்பர் 11

- ஆண்டுதோறும் உலகம் முழுவதும் உலகளாவிய சுகாதார பாதுகாப்பு தினம் டிசம்பர் 11ஆம் தேதி (Universal Health Coverage Day) கொண்டாடப்படுகின்றது.
- உலகின் அனைத்துப் பகுதிகளிலும், அனைத்து மக்களுக்கும் மலிவான, தரமுடைய சுகாதார சேவைகளை உலக நாடுகள் வழங்குவதற்கு அழைப்பு விடுக்கும் ஐ.நா.அமைப்பின் முதல் ஒருமனதான சுகாதார தீர்மானத்தின் ஆண்டு அனுசரிப்பே உலகளாவிய சுகாதார பாதுகாப்பு தினமாகும்.
- நிதிச் சுமைகள் இன்றி, தங்களுக்கு வேண்டிய தரமுடைய சுகாதாரமான ஆரோக்கிய சேவைகளை அனைத்து மக்களும் அணுகும் நிலையே உலக சுகாதார பாதுகாப்பு ஆகும்.
- உலகளாவிய சுகாதார பாதுபாப்பு ஆனது ஐ.நா அவையால் புதிய நீடித்த வளர்ச்சி இலக்குகளுள் ஒன்றாக சேர்க்கப்பட்டுள்ளது.

### தேசிய ஆற்றல் பாதுகாப்பு தினம் - டிசம்பர் 14

- மத்திய மின்சக்தி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஆற்றல் செயல்திறன் அமைப்பினால் (BEE - Bureau of Energy Efficiency) ஆண்டுதோறும் டிசம்பர் 14-ஆம் தேதி தேசிய ஆற்றல் பாதுகாப்பு தினம் கொண்டாடப்படுகின்றது.
- ஆற்றல் செயல்திறன் மற்றும் பாதுகாப்பில் இந்தியா அடைந்துள்ள சாதனைகளை முன்னெடுத்துக் காட்ட இத்தினம் கொண்டாடப்படுகிறது.

### சர்வதேச தேயிலை தினம் – டிசம்பர் 15

- உலகம் முழுவதும் ஆண்டுதோறும் டிசம்பர் 15-ஆம் தேதி சர்வதேச தேயிலை தினம் கொண்டாடப்படுகிறது.
- தேயிலை உற்பத்தியாளர்கள், தேயிலை தோட்டப் பணியாளர்கள் போன்றோரின் மீது உலக தேயிலை வர்த்தகம் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றி குடிமக்களிடமும் அரசிடமும் உலகளாவிய கவனத்தை ஏற்படுத்த இத்தினம் கொண்டாடப்படுகின்றது.'
- 2004 மற்றும் 2005ல் முறையே இந்தியாவின் மும்பை மற்றும் பிரேசிலின் போர்டோ அலெக்ரி போன்ற இடங்களில் நடைபெற்ற உலக சமூக மன்றத்தில் பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வர்த்தக சங்கங்களுக்கிடையேயான பேச்சு வார்த்தையை தொடர்ந்து 2005-ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 15-ஆம் தேதி சர்வதேச தேயிலை தினம் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

### விஜய் தினம்

- விஜய் தினம் 1971 இந்தியா பாகிஸ்தான் யுத்தத்தின் போது உயிரிழந்த படை வீரர்களின் நினைவாக அனுசரிக்கப்படுகிறது.
- அமர் ஜவான் ஜோதியில் கிழக்கு கடற்படைப் பிரிவு 47வது விஜய் தினத்தை அனுசரித்தது.
- இந்த தினம் 1971ம் டிசம்பர் 16ம் தேதி, இந்தியா பாகிஸ்தான் யுத்தத்தின் போது, கிழக்கு இராணுவக் கமான்டரான ஜெனரல் ஜகத் சிங் அரோரோ உள்ளடங்கிய கூட்டணிப் படைகளிடம் பாகிஸ்தான் இராணுவத்தின் 93000 படை வீரர்களோடு அதன் தலைமை அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் ஏ.ஏ.கே.நியாஸி சரணடைந்ததைக் குறிப்பிடுகிறது.

### பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான சர்வதேச வன்முறை தடுப்பு தினம் – டிசம்பர் 18

- பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான சர்வதேச வன்முறை தடுப்பு தினம் ஆண்டுதோறும் டிசம்பர் 17ம் தேதியன்று பாலியல் தொழிலாளர்கள், அவர்களது ஆதரவாளர்கள், நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் அவர்களது கூட்டாளிகளால் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த தினம்
    - உலகம் முழுவதும் உள்ள பாலியல் தொழிலாளர்களுக்கு எதிராக நடத்தப்படும் வெறுக்கத்தக்க குற்றங்கள்
    - தங்கள் சார்ந்த சமுதாயத்தில் காட்டப்படும் வேறுபாடுகள் மற்றும் அவர்கள் மீது வன்முறை செலுத்துவதற்கு காரணமாக உள்ள சமூகக் களங்கத்தையும் பாரபட்சத்தையும் நீக்குவதற்கான தேவைகள்

  ஆகியவற்றை பற்றி கவனம் செலுத்துகிறது.

- முதன் முதலில் 2003-ல் அனுசரிக்கப்பட்ட இத்தினம் டாக்டர் அன்னி ஸ்பிரிங்கிள் மற்றும் அமெரிக்காவின் பாலியல் தொழிலாளர்களுக்கான உரிமைகள் நலச் சங்கமான செக்ஸ் வொர்க்கர்ஸ் அவுட்ரீச் புராஜக்ட், யுஎஸ்ஏ (Swop-USA) ஆகியோரால் நிறுவப்பட்டது.

- 2005-ல் ஐரோப்பாவின் பாலியல் தொழிலாளர்களின் உரிமைகளுக்கான சர்வதேசக் குழு சிவப்பு குடையை பாகுபாட்டின் எதிர்ப்புக்கான குறியீடாக ஏற்றுக் கொண்டது.

### ரைட் சகோதரர்கள் தினம்

- உலகின் முதல் விமானம் கண்டுபிடிக்கப்பட்டு 114 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி டிசம்பர் 17ஆம் தேதி ரைட் சகோதரர்கள் தினமாக கொண்டாடப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

- கடந்த 1903ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் தேதி வடக்கு கரோலினாவில் உள்ள கிட்டி ஹாக் கடற்கரை பகுதியில், ஓர்வில் ரைட் மற்றும் வில்பர் ரைட் சகோதரர்கள், தாங்கள் உருவாக்கிய விமானத்தின் மூலம் முதல் முதலில் வானில் பறந்து சாதனை படைத்தனர். பெட்ரோலை எரிபொருளாக கொண்ட அந்த விமானத்தின் மூலம் 12 விநாடிகளில் 120 அடி தொலைவு வானில் பறந்தது.

- அமெரிக்காவுக்கு புகழ் சேர்த்த ஓஹையோ மாகாணம் டெய்டன் நகரில் பிறந்த ரைட் சகோதரர்களை பெருமைப்படுத்தும் விதமாக டிச.17 "ரைட் சகோதரர்கள் தினமாக' கடைபிடிக்கப்படுகிறது.

### கோவா விடுதலை தினம் – டிசம்பர் 16

- கோவா விடுதலை தினம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 19 அன்று கொண்டாடப்படுகிறது. 450 ஆண்டுகள் போர்ச்சுகீசியரின் காலனியாதிக்க ஆட்சியில் இருந்து கோவா விடுபட்டதை கொண்டாடும் விதமாகவும், “விஜய் நடவடிக்கை” என்று குறிப்பிடப்படும் கோவா மீதான இந்தியாவின் படையெடுப்பின் போது உயிரிழந்த இராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும் இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

- டிசம்பர் 16, 1961 அன்று இந்திய இராணுவம் கோவா மீது படையெடுத்து போர்ச்சுகீசிய ஆட்சியிடம் இருந்து கோவாவை கைப்பற்றியது.

- கோவாவிற்கு 1987ஆம் ஆண்டு தனி மாநில அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன்பின் கோவா செழிப்பான மாநிலமாகவும், அதிக தனிநபர் வருமானம் கொண்ட மாநிலமாகவும் விளங்கி வருகின்றது.

- இவ்வருடம் கோவா விடுதலை தினத்தின் 56வது ஆண்டு ஆகும்.

### சர்வதேச மனித ஒற்றுமை தினம் – டிசம்பர் 20

- ஒற்றுமையின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கவும், உலகின் வேற்றுமையால் ஒன்றுபட்ட தன்மையைக் கொண்டாடவும் ஆண்டுதோறும் உலகம் முழுவதும் டிசம்பர் 20-ஆம் தேதி ஐ.நாவின் சர்வதேச மனித ஒற்றுமை தினம் (International Human Solidarity Day) கொண்டாடப்படுகின்றது.

- உலகம் முழுவதும் வறுமையை ஒழிக்கவும், வளரும் நாடுகளில் குறிப்பாக அவற்றினுடைய மக்கள் தொகையின் மிக வறுமையுற்ற பிரிவினரிடையில் மனிதம் மற்றும் சமூக மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காகவும் இத்தினம் கொண்டாடப்படுகின்றது.

## தேசிய கணித தினம் – டிசம்பர் 22

- இந்தியாவின் புகழ்பெற்ற சுயகற்றுணர்வி (Autodidact) மற்றும் பெரும் கணிதவியலாளருமான (Mathematician) சீனிவாச ராமானுஜன் அவர்களின் பிறந்த நாளை கொண்டாடும் விதமாக ஆண்டுதோறும் டிசம்பர் 22 ஆம் தேதி தேசிய கணித தினம் கொண்டாடப்படுகின்றது.
- சீனிவாச இராமானுஜனின் 130 வது பிறந்த ஆண்டை காணும் இவ்வாண்டில் இராமானுஜரின் பிறந்த நாளை “மாநில தகவல் தொழிற்நுட்ப தினமாக“ (State IT Day) தமிழ்நாடு கொண்டாடுகின்றது.
- எண்ணியல் கோட்பாடு (Number Theory) கணிதப் பகுப்பாய்வு (Mathematical Analysis), முடிவிலாத் தொடர் வரிசைகள் (Infinite Series), புதிய சூத்திரங்கள் மற்றும் சமன்பாடுகளை வகுத்தல் போன்றவற்றில் அளப்பரிய பெரும் பங்காற்றிய இவர், இராமானுஜ பகா எண்கள் (Ramanujam Prime) மற்றும் இராமானுஜம் தீட்டா (Ramanujam Theta) போன்றவற்றையும் கண்டுபிடித்துள்ளார்.
- சாஸ்திரா இராமானுஜம் பரிசானது தமிழகத்தின் சாஸ்திரா பல்கலைக்கழகத்தினால் இராமானுஜத்தினால் ஆட்கொள்ளப்பட்டு கணிதத்தின் பல்வேறு துறைகளில் சிறந்த பங்களிப்பை வழங்கிய 32 வயதினை மிகாத கணிதவியலாளர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றது.
- இராமானுஜத்தின் 125 வது பிறந்த நாள் ஆண்டை கொண்டாடும் விதமாக முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களால் இராமனுஜரின் பிறந்த நாள் தினமானது தேசிய கணித தினமாக நிறுவப்பட்டது.
- மேலும் 2012ஆம் ஆண்டு தேசிய கணித ஆண்டாகவும் அறிவிக்கப்பட்டது.
- பிரிட்டிஷ் கணிதவியலாளரான காட்பிரே ஹரோல்டு ஹார்டியுடன் இணைந்து 1729ன் இரு கன முப்படி மூலங்களின் கூடுதலின் (Sum of two cubes 1729) சிறிய மதிப்பை கண்டுபிடித்தார். இந்த சிறு மதிப்புடைய எண்ணானது ஹார்டி-இராமானுஜம் எண்1729 (Hardy Ramanujam - Number 1729) என்றழைக்கப்படுகிறது.

## தேசிய விவசாயிகள் தினம்

- முன்னாள் இந்திய பிரதமர் சௌத்ரி சரண் சிங்கின் பிறந்தநாளான டிச. 23ம் தேதி ஒவ்வொரு வருடமும் தேசிய விவசாயிகள் தினமாக கொண்டாடப்படுகிறது.
- உத்தரப்பிரதேச மாநிலம், மீரட் மாவட்டத்தில் விவசாய குடும்பத்தில் பிறந்தவர் முன்னாள் பிரதமர் சரண் சிங்.
- 1979-ம் ஆண்டு ஜூலை மாதம், நாட்டின் 5-வது பிரதமராக பதவியேற்றார், சரண் சிங். 1980-ம் ஆண்டு ஜனவரி 14-ம் தேதி வரை 7 மாதங்கள் ஆட்சியில் இருந்த சரண் சிங் 'ஜமீன்தாரி ஒழிப்புமுறை சட்டத்தை’ கொண்டு வந்தார்.
- அதேசமயம் நில உரிமையாளர்கள், வட்டிக்கு பணம் வழங்குவோர் மீது கடும் எதிர்ப்புகளையும், கண்டனங்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தவர் சரண்சிங்.
- அவருடைய ஆட்சியின்போது தான் விவசாயிகளின் விளைபொருள் விற்பனைக்காக 'வேளாண் விளைபொருள் சந்தை மசோதா'வையும் அறிமுகப்படுத்தினார்.

## நல் ஆளுகை தினம் – டிசம்பர் 25

- இந்தியாவின் முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் பிறந்த நாளானது ஆண்டுதோறும் நாடு முழுவதும் தேசிய நல் ஆளுகை (Good Governance) தினமாக கடைபிடிக்கப்படுகின்றது.
- நாடு முழுவதும் வெளிப்படையான, பொறுப்புடைய நிர்வாகத்தை வழங்குவதில் அரசாங்கத்திற்கு உள்ள நிர்வாக அர்ப்பணிப்பை பற்றி மக்களுக்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், அரசாங்கத்தின் செயல்பாடுகளை தரநிலைப்படுத்துவதற்காகவும், நாட்டின் மக்களுக்கு அதிகத்

திறனுடைய, பொறுப்புடைய நிர்வாகத்தை வழங்கிடும் வகையில் அரசாங்கத்தை உருவாக்குவதற்காகவும் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

- நிர்வகிப்பில் அரசுக்கு உள்ள பொறுப்புடைமையைப் பற்றி மக்களுக்கிடையே விழிப்புணர்வை அதிகரித்து அதன் மூலம் வாஜ்பாய் அவர்களுக்கு மரியாதை செலுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டு இத்தினம் தோற்றுவிக்கப்பட்டது.
- நாட்டின் உயரிய குடிமக்கள் விருதான பாரத ரத்னா விருதைப் பெற்றுள்ள வாஜ்பாய் நான்கு வெவ்வேறு மாநிலங்களிலிருந்து (உத்திரப்பிரதேசம், குஜராத், மத்தியப் பிரதேசம், டெல்லி) வெவ்வேறு காலங்களில் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே நாடாளுமன்ற மக்கள் பிரதிநிதியாவார்.

# இதரச் செய்திகள்

## ஒக்கி புயல்

- வலுவான காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் வங்கக்கடலில் கேரள எல்லையை ஒட்டிய கன்னியாகுமரி மாவட்டத்தின் அருகில் உருவானதைத் தொடர்ந்து 'ஒக்கி' எனப் பெயர் சூட்டப்பட்ட புயலாக தீவிரமடைந்தது.
- இப்புயலுக்கு இடப்பட்டுள்ள 'ஒக்கி' எனப்படும் பெயரானது வங்கதேசத்தினால் வழங்கப்பட்ட பெயராகும். இதன் பொருள் 'கண்' ஆகும்.

### சுறாவளி ***(Cyclone)*** பெயரிடல்

- உலக வானிலை ஆய்வு மையம் மற்றும் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக குழு ஆகிய இரண்டும் இணைந்து (United Nations Economic and Social Commission for Asia and the Pacific –UN-ESCAP)) 2000 ஆம் ஆண்டு வெப்பமண்டல புயல்களுக்கு பெயரிடல் முறையை தொடங்கின.
- புயல்களைப் பற்றிய முன்னறிவிப்புகள், கண்காணிப்புகள் மற்றும் எச்சரிக்கைகள் தொடர்பான தகவல்களை அளிப்பதற்கு முன்னறிவிப்பாளர்கள் மற்றும் பொதுமக்களிடையேயான தொலைத் தொடர்பை எளிமைப்படுத்துவதற்காக புயல்களுக்கு பெயரிடப்படுகின்றன.
- உலகம் முழுவதும் உண்டாகும் புயல்களுக்கு 9 பிராந்தியப் பகுதிகளினால் பெயரிடப்படுகின்றன.
- அவையாவன
  - ✓ வட அட்லான்டிக், வட பசிபிக்கின் கிழக்குப்பகுதி, மத்திய வட பசுபிக், தென்மேற்கு இந்தியப் பெருங்கடல், ஆஸ்திரேலிய கடற்பகுதி, தென் பசிபிக், தென் அட்லாண்டிக்.
- வட இந்தியப் பெருங்கடல் படுகைகளில் (Indian Ocean Basin) ஏற்படும் புயல்களுக்கு இந்திய வானியல் துறையினால் ( IMD-Indian Meteorological Department) பெயரிடப்படுகின்றன.
- ஒனில் என்று 2004-ல் பெயரிடப்பட்ட புயலே இந்தியாவால் பெயரிடப்பட்ட முதல் வெப்பமண்டலப் புயலாகும். ஒனில் எனும் வார்த்தை வங்கதேசத்திலிருந்து பெறப்பட்டது.
- வட இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள நாடுகளான வங்கதேசம், இந்தியா, மாலத்தீவுகள், மியான்மர், ஓமன், பாகிஸ்தான், இலங்கை, தாய்லாந்து ஆகிய எட்டு நாடுகள் தங்கள் சார்பில் ஒவ்வொன்றும் தலா 8 பெயர்களை வழங்கும். இப்படி பெறப்பட்ட 64 பெயர்கள் பட்டியலாகத் தொகுக்கப்படும்.
- பின் வட இந்தியப் பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்கு பட்டியலிலிருந்து ஒவ்வொரு முறையும் ஒரு நாட்டின் பெயரென வரிசையாக இடப்படும்.

- இதற்கு முன் இந்த ஆண்டு மே மாதத்தில் வடகிழக்கு இந்தியப் பகுதியில் பெரும் வெள்ளத்தை ஏற்படுத்திய புயலுக்கு "மோரா" என பெயரிடப்பட்டது. இந்த வார்த்தை தாய்லாந்தில் இருந்து பெறப்பட்டது.
- வட இந்தியப் பெருங்கடலில் உண்டாகும் அடுத்த புயலுக்கு பட்டியல் வரிசைப்படி இந்தியா வழங்கிய பெயரான 'சாகர்' எனும் பெயர் சூட்டப்படும்.

### *புயல் எச்சரிக்கை நிலைகள்*

- புயல் எச்சரிக்கையானது 4 நிலைகளாக மத்திய வானிலை ஆய்வு நிறுவனத்தால் மாநில அரசு அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்படும்.
- முதல் நிலை எச்சரிக்கையானது 'புயலுக்கு முன்பான கண்காணிப்பு' (Pre Cyclone Watch) ஆகும். இது புயல் இடையூற்றின் (Cyclonic Disturbance) உருவாக்கத்தைப் பற்றிய எச்சரிக்கையை அளிக்கும்.
- இரண்டாம் நிலை எச்சரிக்கையானது 'புயல் விழிப்பு' (Cyclone Alert) ஆகும் - இவை புயலின் தீவிரம் (Intensity) மற்றும் புயல் மையம் கொண்டுள்ள இடம் (Location) பற்றிய தகவல்களை அளிக்கும். மேலும் பாதகமான புயல் வானிலையால் பாதிக்கப்படக் கூடிய கடலோர மாவட்டங்கள் எவை என்றும் அப்பகுதி மீனவர்கள், பொதுமக்கள், ஊடகம் மற்றும் பேரிடர் மேலாண்மை நிர்வாகிகளுக்கு அளிக்க வேண்டிய அறிவுறுத்தல்களையும் இந்த நிலை கொண்டிருக்கும்.
- மூன்றாவது எச்சரிக்கை நிலையானது 'புயல் எச்சரிக்கை' (Cyclone warning) எனப்படும். இது புயலால் உண்டாகும் மழையின் அளவையும், இடத்தையும் மழை காலத்தையும் முன்னறிவிக்கும்.
- நான்காவது எச்சரிக்கை நிலையானது 'மழைப்பொழிவிற்கு பின்சார் கண்ணோட்டம்' (Post Cyclonic Oulook) எனப்படும். இது மழைப் பொழிவு எதிர்பார்க்கப்படும் நேரத்தை முன்அறிவிப்பு செய்யும்.

### தாஜ்மகால் – 2 வது இடம்

- ஆக்ராவில் அமைந்துள்ள இந்தியாவின் புராதன வெள்ளைப் பளிங்குச் சின்னமான தாஜ்மகால் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரிய இடங்களில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- "டிரிப் அட்வைஸர்" [Trip Adviser] என்னும் ஆன்லைன் சுற்றுலா இணையதளம், உலகம் முழுவதும் சுற்றுலாப் பயணிகளிடம் மேற்கொண்ட கணக்கெடுப்பின் மதிப்பீட்டின் அடிப்படையில் யுனெஸ்கோவின் கலாச்சார மற்றும் இயற்கை பாரம்பரிய இடங்களை வரிசைப்படுத்தியது.
- இதில் கம்போடியாவின் அங்கோர் வாட் கோயில் முதலிடத்தைப் பிடித்தது.
- இந்தியாவின் தாஜ்மகால் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- சீனப் பெருஞ்சுவர் மற்றும் பெரு நாட்டின் மச்சு பிச்சு ஆகியவை முறையே மூன்றாவது மற்றும் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளன.
- இத்தாலியின் சஸ்ஸி ஆப் மட்டேரா, இஸ்ரேலில் உள்ள பழைய ஜெருசலேம், துருக்கியின் இஸ்தான்புல் வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதிகள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகள் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

### மவுண்ட் ஹோப் – இங்கிலாந்தின் புதிய உயரமான மலை

- இங்கிலாந்தின் மிக உயரமான மலையென கருதப்பட்டு வந்த மவுண்ட் ஜேக்சனை காட்டிலும் 400 மீட்டர் அதிகமான உயரம் கொண்டு இங்கிலாந்தின் மிக உயரமான மலையாக மவுண்ட் ஹோப் உள்ளதென இங்கிலாந்து செயற்கைக்கோளின் புதிய தகவல் தரவுகள் வெளிக்காட்டியுள்ளன.
- அண்மையில் பிரிட்டனின் அட்லாண்டிக் பிராந்தியப் பகுதியில் அமைந்துள்ள மவுண்ட் ஹோப் மலையின் உயரம் மறு உயர கணக்கீடு செய்யப்பட்டதில் முந்தைய கணக்கீட்டை விட 377 மீட்டர் அதிகமான உயரமுடையதாக கண்டறியப்பட்டுள்ளது.

- மொத்தத்தில் 3239 மீட்டர் உயரமுடைய மவுண்ட் ஹோப் மலையானது தற்போதைய உயரமான மலையாக கருதப்படும் மவுண்ட் ஜேக்சன் மலையை விட உயரமுடையது என அறிவிக்கப்பட்டுள்ளது.

### கைபேசி இணைய வேக தரவரிசை

- பல்வேறு நாடுகளின் கைபேசி மற்றும் வீட்டு பிராட்பேண்ட் இணைய சேவைகளின் சராசரி இணைய வேகத்தை தரவரிசைப்படுத்தும் "உலகளாவிய வேக பரிசோதனை குறியீட்டின்" (Speed Test Global Index) நவம்பர் மாத பதிப்பினை புகழ்பெற்ற இணைய வேக சோதனை சேவை நிறுவனமான ஊக்லா (Ookla) வெளியிட்டுள்ளது.
- கைபேசி இணைய வேகத்தின் அடிப்படையில் 122 நாடுகளில் இந்தியா 109 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.
- 62.66 Mbps சராசரி இணைய வேகத்தைக் கொண்டு கைபேசியில் அதிவேக இணைய சேவையுடைய முதல் நாடாக நார்வே உள்ளது.
- பிராட்பேண்ட் வேகத்தின் அடிப்படையில் இந்தியா 133 நாடுகளில் 76 வது இடத்தில் உள்ளது.
- 153.85 Mbps சராசரி இணைய வேகம் கொண்டு பிராட்பேண்ட் அதிக இணைய வேக சேவையுடைய முதல் நாடாக சிங்கப்பூர் உள்ளது.

### உலகின் புதிய தீவு

- "ஹீங்கா டோங்கா ஹீங்கா ஹாபாய் "எனும் உலகின் புதிய தீவு பசுபிக் பெருங்கடலின் உட்பகுதியில் ஆஸ்திரேலியாவின் அருகில் மூன்று ஆண்டுகளுக்கு முன் எரிமலை வெடிப்பின் காரணமாக உருவானது.
- பசுபிக் பெருங்கடலில் உள்ள டோங்கா தீவின் தலைநகரான நுகுவா அலோவிற்கு 65 கி.மீ தொலைவில் வட மேற்கு திசையில் கடற்படுகைகளின் மேல் இத்தீவு உருவாகியுள்ளது.
- இத்தீவினுடைய நெகிழ் திறனின் காரணமாக 6 லிருந்து 30 வருடங்களில் பசுபிக் பெருங்கடலின் ஏதேனும் ஒரு பகுதியில் இத்தீவு மறைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- வெப்ப சீதோஷண கடல் நீரானது கடல் எரிமலை வெடிப்பின் போது அவற்றால் உண்டாகும் சாம்பல்களோடு இணைவதால் TUFF எனும் இலகு நுண்துவாரங்களுடைய பாறைகள் போன்ற கான்கிரிட் அமைப்பு உருவாகுவதே இதற்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.
- மேலும் இவை செவ்வாய் கிரகத்தின் எரிமலைகள் போன்று பல எரிமலைகளை கொண்டுள்ளதால் இத்தீவின் வாழ்க்கை சுழற்சியினைப் பற்றிய ஆய்வானது செவ்வாய் கிரகத்தின் சுற்றுச்சூழலைப் பற்றிய தெளிவான உட்பார்வையை தரும் என ஆராய்ச்சியாளர்களால் கண்டறியப்பட்டு உள்ளது.

### சிறிய டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கான வணிகர் தள்ளுபடி விகிதம்

- டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஊக்குவிக்கும் நோக்கில், பற்று அட்டை, பீம் UPI மற்றும் ஆதார் இணைக்கப்பட்ட கட்டண செலுத்து முறைகள் மூலம் மேற்கொள்ளப்படும் 2000 ரூபாய் வரையிலான பரிவர்த்தனைகள் மீதான வணிக தள்ளுபடி விகித கட்டணங்களை அரசே ஏற்றுக் கொள்வதாக மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
- 2018, ஜனவரி முதல் தேதியிலிருந்து இரண்டு வருட காலத்திற்கு இந்த கட்டண விகிதங்களை வங்கிகளுக்கு ஈடு செய்து விடும் விதமாக அரசே அதனை ஏற்றுக் கொள்ளும்.

- வணிகர்கள் தமது கடைகளிலில் வாடிக்கையாளர்கள் ஒவ்வொரு முறையும் பணம் செலுத்துவதற்காக கடன் மற்றும் பற்று அட்டைகளை பயன்படுத்தி பணம் வழங்கும் சேவைகளின் பொருட்டு வங்கிகளுக்கு செலுத்தும் கட்டண விகிதமே வணிகர் தள்ளுபடி விகிதம் எனப்படும்.
- இந்தியாவில் ரிசர்வ் வங்கி ஒவ்வொரு அட்டைகள் மூலமான பரிவர்த்தனைக்கான அதிகபட்ச கட்டண விகிதங்களை நிர்ணயிக்கிறது.
- இத்தகைய பரிவர்த்தனைகளின் தொழில்துறை அமைப்பு மற்றும் விலை விகிதங்களை ஒரு மத்தியக் குழு ஆராயும்.
- இப்பரிவர்த்தனைகள் ஈடுகட்டப்படும் அல்லது திருப்பிக் கொடுக்கப்படும் சலுகைகளின் விகிதங்களுக்கான அடிப்படையாகும்.
- இந்த குழு நிதிச் சேவைகள் துறையின் செயலாளர், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சகத்தின் செயலாளர், இந்திய தேசிய பணம் செலுத்து நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

## யூக்குவேக் – வருடத்தின் வார்த்தை

- "யுக்குவேக் "என்பது இளைஞர்கள் செயல்கள் மூலம் ஏற்படும் குறிப்பிடத்தக்க கலாச்சார, அரசியல் சமூக மாற்றங்களை குறிப்பதாகும்.
- இவ்வார்த்தை 2017ம் வருடத்திற்கான வார்த்தையாக ஆக்ஸ்போர்ட் அகராதியால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- பொதுவாக வருடத்திற்கான வார்த்தை என்பது ஆக்ஸ்போர்ட் அகராதியில் சேர்க்கப்படும் வார்த்தையாகும். ஆனால் யுக்குவேக் வார்த்தை ஏற்கெனவே பட்டியலிடப்பட்டுள்ளது.
- இது முதன் முதலாக 1960களில் எவ்வாறு பிரிட்டிஷ் இளைஞர்கள் உலகத்தில் ஆடைக் கலாச்சாரத்தையும் இசையையும் மாற்றிக் கொண்டிருந்தனர் என்பதைக் குறிப்பதற்காக யானா விரிலேண்ட் என்ற அக்காலத்திய பதிப்பாசிரியரால் உச்சரிக்கப்பட்டது.

## உலகின் மிகப்பெரிய புலம்பெயர்ந்தோர் வம்சம்

- உலகின் மிகப்பெரிய புலம்பெயர்ந்தோர் மக்கள் தொகையை இந்தியா பெற்றுள்ளது.
- ஐ.நா. சபையின் இடப்பெயர்ச்சியின் போக்குகளுக்கான அறிக்கையின் படி 16 மில்லியன் இந்தியர்கள் தங்கள் பிறந்த நாட்டை விட்டு வெளியே வசிக்கின்றனர் எனத் தெரிவிக்கின்றது.
- ஐ.நா.வின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்களுக்கான துறையின் மூலம் எடுக்கப்பட்ட இந்த ஆராய்ச்சியானது உலகில் தங்கள் பிறந்த நாட்டை விட்டு வேறு நாட்டில் வசிப்பவர்கள் என்ற வகையில் 224 மில்லியன் மக்கள் சர்வதேச புலம்பெயர் மக்களாக வசிக்கின்றனர் எனக் கண்டறிந்துள்ளது.
- இந்தியாவின் செழிப்பான புலம்பெயர் மக்கள்தொகை அமெரிக்காவில் இருப்பதாகவும், 2015-ல் இவர்கள் மூன்றாவது மிகப்பெரிய தனி இனமாகவும், அமெரிக்காவின் மொத்த மக்கள் தொகையில் ஒரு சதவீதத்தை உடையதாகவும் உள்ளனர்.
- 12 மில்லியன் புலம்பெயர் மக்கள் தொகையைக் கொண்டு மெக்ஸிகோ இரண்டாவது இடத்திலும், அதற்கடுத்த இடங்களில் ரஷ்யாவும், சீனாவும் உள்ளன.
- இந்திய புலம்பெயர் மக்கள் தொகை, அதாவது தங்கள் பிறந்த இடத்தை விட்டு வேறு நாட்டில் வசிக்கும் இந்திய மக்கள் தொகை உலகின் ஒட்டு மொத்த புலம்பெயர் மக்கள் தொகையில் 6 சதவீதத்தை உடையதாகவும், 2015ல் இது 243 மில்லியன் மக்கள் தொகை எனவும் கணக்கிடப்பட்டது.

## GULF TOP DESTINATION

**Top 7 destination countries for global diaspora**

| | | No of international migrants (in million) |
|---|---|---|
| 1 | US | 46.6 |
| 2 | Germany | 12.0 |
| 3 | Russia | 11.6 |
| 4 | Saudi Arabia | 10.0 |
| 5 | UK | 8.5 |
| 6 | UAE | 8.0 |
| 7 | Canada | 7.8 |

**Top 7 countries of origin for global diaspora**

| | | No of international migrants (in million) |
|---|---|---|
| 1 | India | 15.6 |
| 2 | Mexico | 12.3 |
| 3 | Russia | 10.6 |
| 4 | China (+ Hong Kong) | 10.5 |
| 5 | Bangladesh | 7.2 |
| 6 | Pakistan | 5.9 |
| 7 | Ukraine | 5.8 |

**Home away from home:** Where Indians go

| Rank | Country | No of Indians (in million) | % of total Indian diaspora |
|---|---|---|---|
| 1 | UAE | 3.5 | 22.4 |
| 2 | US | 2.0 | 12.8 |
| 3 | Saudi Arabia | 1.9 | 12.1 |
| 4 | Kuwait | 1.0 | 6.4 |
| 5 | Oman | 0.7 | 4.5 |
| 6 | UK | 0.7 | 4.5 |
| 7 | Qatar | 0.6 | 3.8 |

Total 15.6 million

TOI FOR MORE INFOGRAPHICS DOWNLOAD TIMES OF INDIA APP

### குஜராத் மற்றும் இமாச்சல் பிரதேஷ் தேர்தல் முடிவுகள்

- குஜராத்தின் மொத்தமுள்ள 182 சட்டமன்ற தொகுதிகளில் 99 தொகுதிகளை வென்று பாரதிய ஜனதா கட்சி ஆட்சி அமைக்கவுள்ளது.
- காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் 80 இடங்களில் வெற்றிபெற்றுள்ளன.
- 92 அல்லது அதற்கு மேற்பட்ட சட்டமன்ற தொகுதிகளை வென்றால் மட்டுமே குஜராத்தில் ஆட்சி அமைக்க முடியும்.
- இமாச்சலப் பிரதேசத்தின் மொத்தமுள்ள 68 சட்டமன்ற தொகுதிகளில் 44 தொகுதிகளை வென்று பாரதிய ஜனதா கட்சி ஆட்சி அமைக்கவுள்ளது.
- காங்கிரஸ் கட்சி 21 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.
- 35 அல்லது அதற்கு மேற்பட்ட சட்டமன்ற தொகுதிகளை வென்றால் மட்டுமே இமாச்சலப்பிரதேசத்தில் ஆட்சி அமைக்க முடியும்.
- குஜராத்தில் தொடர்ந்து ஆறாவது முறையாக வென்றுள்ளது பிஜேபி. இமாச்சல பிரதேசத்தில் ஆளும் கட்சியான காங்கிரஸ் தனது அரசை பிஜேபியிடம் தோற்றுள்ளது.

### குஜராத் – இமாச்சலப் பிரதேசம் - முதல்வர்கள்

- விஜய் ரூபானி தலைமையிலான புதிய பாஜக அரசு குஜராத் தலைநகர் அகமதாபாத்தில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் புதிய அரசை அமைக்க பதவியேற்றுக் கொண்டது.
- குஜராத் ஆளுநர் ஓம் பிரகாஷ் கோஹ்லி பதவியேற்பு மற்றும் இரகசிய காப்புறுதி உறுதி மொழியை முன்னின்று மொழிய முதல்வர் விஜய் ருபானி, துணை முதல்வர் நிதின் படேல் உட்பட

20 அமைச்சர்கள் அதனை வழிமொழிந்தனர்.

### இமாச்சலப் பிரதேசம்

- இமாச்சலப் பிரதேச சட்டசபை தொகுதியில் மூன்றில் இரு பங்கு தொகுதிகளை வென்று இமாச்சலத்தின் 13வது முதல்வராக ஜெய்ராம் தாகூரின் தலைமையிலான பாஜக அரசு பதவியேற்றுள்ளது.

### காற்று மாசுபாடு – பனிப்புகை எதிர்ப்பு துப்பாக்கி

- டெல்லி முழுவதும் நிலவும் காற்று மாசுபாடு பிரச்சனையை எதிர்கொள்வதற்காக டெல்லியின் வடக்கு பகுதியில் உள்ள ஆனந்த் விஹார் பகுதிகளில் பனிப்புகை எதிர்ப்பு துப்பாக்கிகளை டெல்லி மாசு கட்டுப்பாட்டு வாரியம் பரிசோதனை செய்துள்ளது.
- பனிப்புகை எதிர்ப்பு துப்பாக்கிகள் (Anti-Smog Guns) என்பது நுண் மூடுபனி நீர்த்திவலை (mist) தெளிப்பு பீரங்கிகளாகும்.
- மழைபொழியும் போது, மழைத்துளிகளானது எவ்வாறு வளிமண்டலத்தில் நிலவுகின்ற காற்று மாசு மூட்டத்தின் நுண் தூசிகளை (particulates) தன்னோடு கொண்டு வந்து நிலத்தில் வீழ்படியச் செய்து மாசுபாட்டை மட்டப்படுத்துமோ அவ்வாறே இப்பீரங்கிகளால் பீய்ச்சப்படும் நீர்த்திவலைகளானது மாசின் தூசிகளோடு சேர்ந்து அவற்றை வளிமண்டலத்திலிருந்து நீக்கும்.

### போர்ப்ஸ் 2017ன் அதிக வருமானம் ஈட்டிய திரைப்படத்தின் நடிகர்கள்

- பிரபல ஹாலிவுட் நடிகர் வின் டீசல் (Vin Diesel) நடித்த "பேட் ஆஃப் பியூரியஸ்" (Fate of furious) திரைப்படம் உலக அளவில் 1.6 பில்லியன் டாலர்களை வசூலித்ததை அடுத்து, போர்ப்ஸ் இதழின் 2017- ஆம் ஆண்டின் அதிக வருமானம் ஈட்டிய திரைப்படத்தின் (Top grossing actor) நடிகராக வின் டீசல் அறிவிக்கப்பட்டுள்ளார்.
- இவ்வரிசையில் "தி ராக் "என்றறியப்படும் டுவைன் ஜான்சன் நடித்த ஓர் ஹாலிவுட் திரைப்படம் 1.5 பில்லியன் டாலர்கள் வசூலித்ததை தொடர்ந்து அவர் இந்த இதழின் வெளியீட்டில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.
- ஹாலிவுட் நடிகை கால் கடோட் (Gal Gadot) நடித்த "வொண்டர் உமன் "(Wonder Woman) திரைப்படம் உலகளவில் 1.4 பில்லியன் வசூலித்ததைத் தொடர்ந்து அவர் இப்பட்டியலில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

-------------